1267

தமிழ் நாடு
சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

VOL - 13 APR - 1939 NO - 1

D
V211,31'N59
N85.13.1
14[illegible]

வெளியீடு 14-9-1989 Issued 14-9-1989

தமிழ்நாடு ... 14 ... எழும்பூர், சென்னை-600008.

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 26, 1989–தொகுதி 13–எண் 1
Wednesday, the 26th April, 1989–Volume 13–No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

# உள்ளடக்கம்

*26–4–1989*


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i–iii |
| Personnel of the Government of Tamil Nadu | v–vii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி) .. | ix–xi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி.) .. | xiii–xxii |
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1–29 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சந்த் மீதான வழக்கை வாபஸ் பெற வேண்டுமென்ற கோரிக்கை.. .. | 30 |
| (ஆ) கைத்தறி மற்றும் பட்டு கூட்டுறவுச் சங்கங்களை அரசு கலைத்திருப்பது குறித்து .. .. .. .. | 30–33 |
| (இ) நெய்வேலி அனல் மின் நிறுவனத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தால் ஏற்பட்டுள்ள நிலை .. .. | 33–37 |
| (ஈ) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாணவர்கள் வேலை நிறுத்தம் குறித்து .. .. .. | 37–38 |
| (உ) காவலிலுள்ள உறுப்பினர் எஸ்.டி. உகம்சந்த் உண்ணாவிரதம் முடித்தது குறித்த தகவல்கள் .. .. | 46–49 |
| **3. ஒத்தி வைப்புத் தீர்மானம்—** | |
| வேதாரண்யம் நகரத்தில் காங்கிரஸ் தொண்டரைச் சிலர் கொலை செய்துள்ளதாகக் கூறப்படுவது குறித்து .. | 38–45 |
| **4. உரிமைப் பிரச்சினை—** | |
| சென்னை வானொலி நிலையத்தின் மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு .. | 45–46 |
| **5. கவன ஈர்ப்பு—** | |
| (அ) மதுரை மாவட்டத்தில் பல அரிசி ஆலைகள் மூடப்பட்டுள்ளது குறித்து: | 49–51 |
| (ஆ) சென்னையில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க தண்ணீர் தொட்டிகள் அமைக்க வேண்டியது குறித்து .. | 52–56 |


53–97—A

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. 57-152

(அ) கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் .. ..

(ஆ) கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. ..

(இ) கோரிக்கை எண். 11—மாவட்ட நிருவாகம் .. .. .. ..

(ஈ) கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.

(உ) கோரிக்கை எண். 43—பல்வகை ..

(ஊ) கோரிக்கை எண். 58—பல்வகை மூலதனச் செலவு .. .. ..

(எ) கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.

*மாண்புமிகு திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்). 134-147
*திரு. வெ. இராசு. 62-66
திரு. பி. எச். பாண்டியன். 66-69, 71-74
திரு. என். தங்கவேல். 75-78
திரு. எம். இராமச்சந்திரன் 78-83
திரு. கே. ஆர். சுந்தரம். 83-89
திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர். 89-99
திரு. சம்சுதீன். என்கிற கதிரவன் 99-102
திரு. ரா. சொக்கர். 102-107
திரு. ஆர். எட்டியப்பன். 107-109
திரு. பா. அப்துல் சமத். 110-111, 114-117
திரு. வெ. பெரியசாமி. 117-120
திரு. சோ. அழகர்சாமி. 121-126
திரு. மா. சுந்தரதாஸ். 126-134
மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி. 145, 147-148

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள். 153-154

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### ஆளுநர்—டாக்டர் பி.சி. அலெக்சாண்டர்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1 முதலமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :— பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மது விலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட) மற்றும் ஆயத் துறை. |
| 2. கல்வி அமைச்சர் .. | மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட), ஆட்சி மொழி, சட்ட மன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தமிழ் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் இயல். |
| 3. சட்ட அமைச்சர் .. | மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றிய சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைபற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வக்ஃப். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் .. | மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம். |

5. போக்குவரத்துத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

6. அறநிலையத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: அறநிலையத் துறை, வீட்டு வசதி, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள், மற்றும் சின்கோனா.

7. வேளாண்மைத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கோ. சி. மணி: வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி.

8. உணவு அமைச்சர்... — மாண்புமிகு ஆற்காடு நா. வீராசாமி: உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர் பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளி விவரங்கள்.

9. செய்தி—தொழிலாளர் நலத்துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. பொன்முத்துராமலிங்கம்: செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

10. ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை.



11. பொதுப்பணித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. துரைமுருகன்: பொதுப்பணிகள், சிறு பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உள்பட), திட்டப்பணிகள்.

12. சமூக நலம்—ஊரகத் தொழிற்துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: சமூகநலம் (குழந்தைகள், மகளிர் நலம் உள்பட), பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்பட), கதர் வாரியம், பூமி தானம் மற்றும் கிராம தானம்.

13. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர். — மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

14. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். — மாண்புமிகு டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மக்கள்நல் வாழ்வு, மருந்துகள், நகர அமைப்பு, குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

15. மின்துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கே. என். நேரு: மின்சாரம் மற்றும் பால்.

16. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர். — மாண்புமிகு டாக்டர் க. சந்திர சேகரன்: கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம்.

17. கைத்தறித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. எஸ். தங்கவேலு: கைத்தறி, நெசவாலைகள், நகர்ப்புற மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

முதலமைச்சரின் பேரவைச் செயலர். — திரு. எல். கணேசன்

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

GOVERNOR OF TAMIL NADU—Dr. P. C. ALEXANDER

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. Chief Minister .. .. | **The Hon. Dr. M. KARUNANIDHI :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise. |
| 2. Minister for Education .. | **The Hon. Prof. K. ANBAZHAGAN :** Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Servicemen and Archaeology. |
| 3. Minister for Law .. .. | **The Hon. Thiru S. J. SADIQ PASHA:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money-lending and Legislation on Chits and Wakf. |
| 4. Minister for Revenue .. | **The Hon. Thiru NANJIL K. MANOHARAN :** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration and Stamp Act. |
| 5. Minister for Transport .. | **The Hon. Thiru M. KANNAPPAN :** Transport , Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways. |
| 6. Minister for Hindu Religious and Charitable Endowments. | **The Hon. Thiru K. P. KANDASAMY:** Hindu Religious and Charitable Endowments, Housing, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona. |

7. Minister for Agriculture ... **The Hon. Thiru KO. SI. MANI :** Agriculture, Agricultural Re-finance, Agricultural Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex level including the Federation and Food Production.

8. Minister for Food .. ... **The Hon. Thiru Arcot N. VEERASAMY :** Food, Price Control and Civil Supplies, Co-operation and Statistics.

9. Minister for Information and Labour. **The Hon. Thiru Pon. MUTHU-RAMALINGAM :** Information and Publicity, Film Technology, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indian Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

10. Minister for Rural Development and Local Administration. **The Hon. Thiru VEERAPANDI S. ARUMUGAM :** Municipal Administration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness.

11. Minister for Public Works .. **The Hon. Thiru DURAIMURUGAN:** Public Works, Minor Irrigation including Special Minor Irrigation, Programme Works.

12. Minister for Social Welfa and Rural Industries. **The Hon. Thirumathi SUBBU-LAKSHMI JAGADISAN :** Social Welfare including Children and Women's Welfare, Beggers, Home, Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village, Cottage and Small Industries, Khadi Board, Bhoodan and Gramadan.



13. Minister for Adi-Dravidar Welfare. ... **The Hon. Dr. E. RAMAKRISHNAN:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

14. Minister for Public Health .. **The Hon. Dr. K. PONMUDI** *alias* **DEIVASIGAMANI :** Public Health, Medicines, Town Planning, Water Board and Environmental Pollution Control.

15. Minister for Electricity .. **The Hon. Thiru K. N. NEHRU :** Electricity and Milk.

16. Minister for Animal Husbandry. **The Hon. Dr. K. CHANDRA-SEKARAN :** Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation.

17. Minister for Handlooms .. **The Hon. Thiru S. THANGAVELU :** Handlooms, Textiles, Urban Development, Slum Clearance Board and Accommodation Control.

Parliamentary Secretary to Chief Minister. Thiru L. GANESAN

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன்.

பேரவைத் துணைத் தலைவர்

திரு. பி. துரைசாமி.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. மு. இராமநாதன்.

திரு. என். கணபதி.

திரு. பெ. சீனிவாசன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திரு. சி. கோவிந்தராஜன்.

செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

(அகர வரிசைப்படி.)

| | |
|---|---|
| சீனிவாசன், திரு. சா., பி.எஸ்ஸி., .. | முதுநிலை குழு அலுவலர். |
| சாமிநாதன், திரு. பொ. க. .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சீதாராமன், திரு. வெ., பி.காம்., பி.ஜி.எல்., | துணைச் செயலாளர். |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல்., | துணைச் செயலாளர். |
| ஜானகிராமன், திரு. செ. சு., பி.ஏ., பி.எல்., | துணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு. கு.அ., பி.ஏ., .. | குழு அலுவலர். |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| கனகசபாபதி, திரு. பெ. ச., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| கேசவராம், திரு. சு., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர். |
| முனிர் உன்னிசா, திருமதி., பி.எஸ்ஸி., | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி.சி., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ .. | சார்புச் செயலாளர். |
| ஜான், திரு. வ. சா., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. டி., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |



| | |
|---|---|
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல்., | தலைமை நிருபர் (பேரவை). |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ., | தலைமை நிருபர் (குழுக்கள்). |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் அகர வரிசைப்படி.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 'அ' | | |
| 1 அங்கமுத்து, திரு. கே. | .. | உளுந்தூர்பேட்டை (செ. வ.) |
| 2 அசேன், திரு. ஜெ. | .. | இராணிப்பேட்டை |
| 3 அண்ணாதுரை, திரு. கே. | .. | பட்டுக்கோட்டை |
| 4 அண்ணாதுரை, டாக்டர் கே. | .. | வரகூர் (செ.வ.) |
| 5 அண்ணாநம்பி, திரு. ஆர். | .. | அவிநாசி (செ.வ.) |
| 6 அண்ணாமலை, திரு. எம். | .. | அரூர் (செ.வ.) |
| 7 அதியமான், திரு. ஆ. | .. | சேடப்பட்டி |
| 8 அப்துல்சமத், திரு. பா. | .. | வாணியம்பாடி |
| 9 அப்துல் லத்தீப், திரு. எம். | .. | சேப்பாக்கம் |
| 10 அர்ஜுனன், திரு. கே. | .. | தாரமங்கலம் |
| 11 அழகர்சாமி, திரு. சோ. | .. | கோவில்பட்டி |
| 12 அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13 அறிவழகன், திரு. ஆ. | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 14 அன்பழகன், பேராசிரியர் க. | .. | அண்ணா நகர் |
| 15 அன்பழகன், திரு. வ. | .. | செய்யாறு |
| 16 அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 'ஆ' | | |
| 17 ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 18 ஆண்டி அம்பலம், திரு. மெ. | .. | நத்தம் |
| 19 ஆறுமுகம், திரு. த. | .. | அரியலூர் |
| 20 ஆறுமுகம், திரு. வீரபாண்டி சோ. | .. | சேலம்-2 |
| 'இ' | | |
| 21 இரகுமான்கான், திரு. அ. | .. | பூங்கா நகர் |
| 22 இராசமாணிக்கம், திரு. இரெ. | | குத்தாலம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| ' இ '—தொடர்ச்சி. | |
| 23 இராசமாணிக்கம், திரு க.வெ.வீ. | மேலூர். |
| 24 இராசன், திரு. வி.பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 25 இராசு, திரு. வி.கே. .. | அரக்கோணம் (செ.வ.) |
| 26 இராசு, திரு. வெ. .. | குளத்தூர் (செ.வ.) |
| 27 இராசேந்திரன், திரு. அ. .. | போளூர் |
| 28 இராதா, திரு. எஸ்.ஆர். .. | மதுரை கிழக்கு |
| 29 இராதாகிருஷ்ணன், திரு. டி. .. | சோழவந்தான் |
| 30 இராமகிருஷ்ணன், டாக்டர் எ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 31 இராமகிருஷ்ணன், திரு. நா. .. | கம்பம் |
| 32 இராமச்சந்திரன், திரு. எம். .. | திருவோணம் |
| 33 இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. | விளாத்திகுளம் |
| 34 இராமச்சந்திரன், திரு. ந. .. | செஞ்சி |
| 35 இராமசாமி, திரு. ஏ.எம். .. | ஆத்தூர் |
| 36 இராமசாமி, திரு. கே.வி. .. | கரூர் |
| 37 இராமசாமி, திரு.வி. .. | திருச்செங்கோடு |
| 38 இராமசாமி, திரு. கே. ஆர். .. | திருவாடானை |
| 39 இராமநாதன், திரு. மு. .. | கோவை (மேற்கு) |
| 40 இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர் |
| 41 இராஜேந்திரன், திரு. கே.ஆர். | பர்கூர் |
| 42 இராஜேந்திரன், திரு. பி.வி. | வேதாரண்யம் |
| 43 இளம்வழுதி, திரு. .. | எழும்பூர் (செ.வ.) |
| ' ஈ ' | |
| 44 ஈஸ்வரன், திரு. ஆர். .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| ' உ ' | |
| 45 உகம்சந்த், திரு. எஸ்.டி. .. | மதுராந்தகம் |
| 46 உதயசூரியன், திரு. தா. .. | சின்னசேலம் |
| 47 உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | தஞ்சாவூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| ' எ ' | |
| 48 எட்டியப்பன், திரு. ஆர். .. | பேரணமல்லூர் |
| ' ஏ ' | |
| 49 ஏகாம்பர ரெட்டி, திரு. எ. .. | பள்ளிபட்டு |
| ' க ' | |
| 50 கண்ணப்பன், திரு. மு. .. | பல்லடம் |
| 51 கண்ணன், திரு. எஸ்.பி. .. | அணைக்கட்டு |
| 52 கணபதி, திரு. என். .. | குறிஞ்சிப்பாடி |
| 53 கணேசமூர்த்தி, திரு. என் .. | மயிலாப்பூர் |
| 54 கணேசமூர்த்தி, திரு. ஏ. .. | மொடக்குறிச்சி |
| 55 கணேசன், திரு. எல். .. | ஒரத்தநாடு |
| 56 கணேசன், திரு. க.சொ. .. | ஜெயங்கொண்டம் |
| 57 கணேசன், திரு. சா. .. | தியாகராயநகர் |
| 58 கணேசன், திரு. வே. .. | மங்களூர் (செ.வ.) |
| 59 கந்தசாமி, திரு. கே. .. | கிணத்துக்கடவு |
| 60 கந்தசாமி, திரு. கே.பி. .. | திருச்செந்தூர் |
| 61 கரீம், திரு. எம்.கே. .. | கூடலூர் |
| 62 கருணாநிதி, டாக்டர் மு. .. | துறைமுகம் |
| 63 கருப்பசாமி, திரு. எஸ்.எஸ். | சாத்தூர் |
| 64 கருப்பையா மூப்பனார், திரு. ஜி. | பாபனாசம் |
| 65 கன்னையன், திரு. க. .. | தொட்டியம் |
| 66 கஜபதி, திரு. டி.ஆர். .. | ஆற்காடு |
| 67 காஞ்சனா, டாக்டர் க. .. | கிருஷ்ணகிரி |
| 68 காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. | முதுகுளத்தூர் |
| 69 காளியப்பன், திரு. பி. .. | ஒட்டன்சத்திரம் |
| 70 கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து. | சிதம்பரம் |
| 71 கிருஷ்ணன், திரு. சி. .. | ஓமலூர் |
| 72 குணசேகரன், திரு. எஸ். .. | தலைவாசல் (செ.வ.) |
| 73 குமரி அனந்தன், திரு. .. | சாத்தான்குளம் |
| 74 குருநாதன், திரு. சு. .. | பாளையங்கோட்டை |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **'க'—தொடர்ச்சி.** | |
| 75 குருமூர்த்தி, திரு. ஜி.ஜி. .. | பவானி |
| 76 கோதண்டம், திரு. ஏ. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 77 கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | மேட்டுப்பாளையம் |
| 78 கோவிந்தசாமி, திரு. சி. .. | திருப்பூர் |
| 79 கோவிந்தசாமி, திரு. வி.சி. .. | காவேரிப்பட்டினம் |
| 80 கோவிந்தராஜன், திரு. சி. .. | நெல்லிக்குப்பம் |
| 81 கோவிந்தன், திரு. வெ. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| **'ச'** | |
| 82 சண்முகம், திரு. சி. .. | ஆலந்தூர் |
| 83 சந்திரசேகர், திரு. வி.பி. .. | பொள்ளாச்சி |
| 84 சந்திரசேகரன், டாக்டர் க. .. | ஆலங்குடி |
| 85 சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. | கடையநல்லூர் |
| 86 சம்பத், திரு. ஏ.ஜி. .. | முகையூர் |
| 87 சற்குணம், திருமதி எஸ்.பி. .. | இராதாகிருஷ்ணன் நகர் |
| 88 சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன், டாக்டர் மு. | இளையான்குடி |
| 89 சாதிக்பாட்சா, திரு. எஸ்.ஜே. | உடுமலைப்பேட்டை |
| 90 சாந்தகுமாரி, டாக்டர் த. .. | தாராபுரம் (செ.வ.) |
| 91 சாமிநாதன், திரு. ஆர். .. | திருமங்கலம் |
| 92 சிங்காரம், திரு. ஆர். .. | பேராவூரணி |
| 93 சிவசுப்பிரமணியன், திரு. சா. | ஆண்டிமடம் |
| 94 சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. | பனைமரத்துப்பட்டி |
| 95 சிவலோகம், திரு. எஸ். .. | புவனகிரி |
| 96 சின்னசாமி, திரு. கே. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 97 சின்னசாமி, திரு. ரா. .. | தர்மபுரி |
| 98 சின்னசாமி, திரு. வி.கே. .. | பவானிசாகர் |
| 99 சீரங்கன், திரு. எம். .. | மேட்டூர் |
| 100 சீனிவாசன், திரு. பெ. .. | சிவகாசி |
| 101 சுந்தர், திரு. கே. .. | உத்திரமேரூர் |
| 102 சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவன்கோடு |
| 103 சுந்தரம், திரு. க. .. | பொன்னேரி (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ச—தொடர்ச்சி.** | |
| 104 சுந்தரம், திரு. கே.ஆர். .. | குடியாத்தம். |
| 105 சுந்தரம், திரு. ப. .. | திருப்பத்தூர். |
| 106 சுந்தரராஜ், டாக்டர் எஸ். . | பரமக்குடி (செ.வ.). |
| 107 சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே. | கன்னியாகுமரி. |
| 108 சுப்பிரமணியம், திரு. தூ.க. | சத்தியமங்கலம். |
| 109 சுப்பிரமணியன், திரு. அ.லெ. | திருநெல்வேலி. |
| 110 சுப்பிரமணியன், திரு. வே.நா. | பெருந்துறை. |
| 111 சுப்பு, திரு. ஏ. .. | ராசிபுரம். |
| 112 சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | ஈரோடு... |
| 113 சுப்பையா, திரு. வ. .. | திருமயம். |
| 114 செங்குட்டுவன், திரு. ஏ. .. | மயிலாடுதுறை. |
| 115 செங்கை சிவம் திரு. | பெரம்பூர் (செ.வ.). |
| 116 செங்கோட்டையன், திரு. கே.ஏ. | கோபிச்செட்டிபாளையம். |
| 117 சேட்டு, திரு. எம். .. | செங்கம் (செ.வ.). |
| 118 சொக்கர், திரு. ரா. .. | விருதுநகர். |
| 119 சௌந்திரபாண்டியன், திரு. ந. | சமயநல்லூர் (செ.வ.). |
| **'ட'** | |
| 120 டேனியல் ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம். |
| **'த'** | |
| 121 தங்கபாண்டியன், திரு. வே. | அருப்புக்கோட்டை. |
| 122 தங்கம், திரு. அ. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 123 தங்கராஜன், திரு. எஸ். ஏ. .. | திண்டுக்கல். |
| 124 தங்கராஜு, திரு. ஏ. .. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.). |
| 125 தங்கவேல், திரு. எம். .. | முசிறி. |
| 126 தங்கவேல், திரு. என். .. | குன்னூர் (செ.வ.). |
| 127 தங்கவேலு, திரு. ச. .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.). |
| 128 தம்புசாமி, திரு. வி. .. | திருவாரூர் (செ.வ.). |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | **த—தொடர்ச்சி.** | |
| 129 | தமிழ்மணி, திரு. வீ. .. | செங்கல்பட்டு. |
| 130 | தயாளன், திரு. ஏ. சி. .. | ஆரணி. |
| 131 | தனபாலன், திரு. கே. ஆர். ஜி. . | சேலம்-1. |
| 132 | தனராஜ், திரு. வி. .. .. | வந்தவாசி (செ.வ.). |
| 133 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி. |
| 134 | திருமூர்த்தி, டாக்டர் து. | திருப்போரூர் (செ.வ.). |
| 135 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 136 | துரை சந்திரசேகரன், திரு. | திருவையாறு. |
| 137 | துரைசாமி, திரு. பி. .. | நாமக்கல் (செ.வ.). |
| 138 | துரைபாண்டி, திரு. பெ. .. | மானாமதுரை (செ.வ.). |
| 139 | துரைமுருகன், திரு. .. | காட்பாடி. |
| 140 | துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 141 | தென்னரசு, திரு. எஸ். எஸ். | திருப்பத்தூர். |
| 142 | தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர். |
| | **ந** | |
| 143 | நஞ்சப்பன், திரு. ந. .. | பெண்ணாகரம். |
| 144 | நடராசன், திரு. ஆ. .. | பேரூர். |
| 145 | நடராசன், திரு. பொ. .. | திருத்தணி. |
| 146 | நடேச உடையார், திரு. எகால் மு. .. | ரிஷிவந்தியம். |
| 147 | நடேசன், திரு. ஆர். .. | திருவட்டாறு. |
| 148 | நந்தகோபால கிருட்டிணன், டாக்டர் கோ. | பண்ருட்டி. |
| 149 | நாராயணன், திரு. ராம. .. | காரைக்குடி. |
| 150 | நூர்முகமது, திரு. செ. .. | பத்மநாபபுரம். |
| 151 | நேரு, திரு. கே. என். .. | லால்குடி. |
| | **ப** | |
| 152 | பஞ்சாட்சரம், திரு. ஆர். | மேல்மலையனூர். |
| 153 | பழனிச்சாமி, திரு. டி. கே. | திருவொற்றியூர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | **ப—தொடர்ச்சி.** | |
| 154 | பழனிச்சாமி, திரு. ஜி. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 155 | பழனிசுவாமி, திரு. க. .. | எடப்பாடி. |
| 156 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ. வ.). |
| 157 | பன்னீர்செல்வம், திரு. மா. .. | சீர்காழி (செ.வ.). |
| 158 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 159 | பாப்பா உமாநாத், திருமதி | திருவரம்பூர். |
| 160 | பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை. |
| 161 | பால்ராஜ், திரு. எஸ். .. | மதுரை (மத்திய). |
| 162 | பாலசுப்பிரமணியன், திரு. அ. வே. | திருநாவலூர். |
| 163 | பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். | பொங்கலூர். |
| 164 | பாலையா, திரு. ஆ. .. | கொளச்சல். |
| 165 | பிச்சாண்டி, திரு. கே. .. | திருவண்ணாமலை. |
| 166 | பிச்சைமுத்து, திரு. ரெ. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 167 | பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா. | தென்காசி. |
| 168 | புகழேந்தி, திரு. இ. .. | கடலூர். |
| 169 | பூவராகன், திரு. கோ. .. | விருத்தாசலம். |
| 170 | பெரியசாமி, திரு. என். .. | தூத்துக்குடி. |
| 171 | பெரியசாமி, திரு. ஐ. .. | ஆத்தூர். |
| 172 | பெரியசாமி, திரு. வே. .. | அந்தியூர் (செ.வ.). |
| 173 | பெரியண்ணன், திரு. அ. .. | புதுக்கோட்டை. |
| 174 | பெருமாள், திரு. செ. .. | ஏற்காடு (ஆ.வா.). |
| 175 | பொன்முடி, திரு. டி. .. | தண்டராம்பட்டு. |
| 176 | பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, டாக்டர் க. | விழுப்புரம். |
| 177 | பொன். முத்துராமலிங்கம் | மதுரை (மேற்கு). |
| 178 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 179 | பொன்னுசாமி, பேராசிரியர், கே. | மருங்காபுரி. |
| 180 | பொன்னுபிள்ளை, திரு. ஜி. .. | தேனி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| ' ம ' | |
| 181 மகேந்திரன், திரு. ஆர். .. | நாட்ராம்பள்ளி. |
| 182 மணி, திரு. ஆச்சியூர், எம். .. | நாங்குநேரி. |
| 183 மணி, திரு. கே. ஏ. .. | கபிலர்மலை. |
| 184 மணி, திரு. கோ. சி. .. | கும்பகோணம். |
| 185 மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.). |
| 186 மதிவாணன், திரு. இரா. .. | ராயபுரம். |
| 187 மலர்மன்னன், திரு. அ. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 188 மனோகரன், திரு. நாஞ்சில் கி. | திருவல்லிக்கேணி. |
| 189 மனோகரன், திரு. பா. .. | சிவகங்கை. |
| 190 மாசிலாமணி, டாக்டர் சி. ரா. | திண்டிவனம். |
| 191 மாசிலாமணி, திரு. தி. ரா. | பூந்தமல்லி. |
| 192 மாதப்பன், திரு. கொ. .. | பாலக்கோடு. |
| 193 மாரப்பன், திரு. பி. .. | காங்கேயம். |
| 194 மாரிமுத்து, திரு. அ. .. | வலூர் (செ.வ.). |
| 195 முகமது சித்திக், திரு. எம். | பூம்புகார். |
| 196 முத்துசாமி, திரு. ப. .. | வேடசந்தூர். |
| 197 முத்தையன், திரு. எம். .. | சங்கராபுரம். |
| 198 முத்தையா, திரு. எம். .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 199 முருகேசன், திரு. பொ. .. | காஞ்சிபுரம். |
| 200 முல்லைவேந்தன், திரு. வ. .. | மொரப்பூர். |
| 201 முனிரத்தினம், திரு. ஆ. மு. | சோளிங்கர். |
| 202 முனிரத்தினம், திரு. எஸ். ஆர். | திருவள்ளூர். |
| 203 மூக்கன், திரு. ஆர். .. | உப்பிலியர்புரம் (ஆ.வா.). |
| 204 மூக்கையா, திரு. எல். .. | பெரியகுளம். |
| 205 மோகன், திரு. இரா. .. | சிங்காநல்லூர். |
| 206 மோசஸ், திரு. எம். .. | நாகர்கோவில். |
| ' ய ' | |
| 207 யசோதா செல்லப்பா, திருமதி .. | வலங்கைமான் (செ.வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| " ர " | |
| 208 ரமணி, திரு. கே. .. .. | கோவை (கிழக்கு). |
| 209 ரமணி நல்லதம்பி, திருமதி. .. | ராதாபுரம். |
| 210 ரவி அருணன், திரு. .. | அம்பாசமுத்திரம். |
| 211 ராமச்சந்திர ரெட்டி, திரு. ந. | ஓசூர். |
| 212 ராமச்சந்திரன், திரு. கே. .. | மன்னார்குடி. |
| 213 ராமச்சந்திரன், திரு. சி. .. | திருப்பரங்குன்றம். |
| 214 ராமசாமி, திரு. மொஞ்சனூர், ப. | அரவக்குறிச்சி. |
| 215 ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | ஆலங்குளம். |
| 216 ராஜு, திரு. எச். எம். .. | உதகமண்டலம். |
| 217 ராஜேந்திரன், திரு. எம்.எஸ். கே. | இராமநாதபுரம். |
| " ல " | |
| 218 லட்சுமி, திருமதி. பி. .. | வால்பாறை (செ.வ.). |
| " வ " | |
| 219 வரதராஜன், திரு. ஆர். .. | சங்கரி (செ.வ.). |
| 220 வரதராசன், திரு. உ. ரா. .. | வில்லிவாக்கம். |
| 221 வல்லரசு, திரு. பி. என். .. | உசிலம்பட்டி. |
| 222 விஜயராகவன், திரு. பொன். | கிள்ளியூர். |
| 223 விஜயேந்திரையா, திரு. டி. சி. | தளி. |
| 224 வீராசாமி, திரு. ஆற்காடு நா. | புரசைவாக்கம். |
| 225 வீரையன், திரு. கோ. .. | நாகப்பட்டினம். |
| 226 வெங்கடாசலம், திரு. பெ. .. | வீரபாண்டி. |
| 227 வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய். .. | ஸ்ரீரங்கம். |
| 228 வெள்ளிங்கிரி, திரு. பூ. கே. .. | தொண்டாமுத்தூர். |
| 229 வேணு, திரு. கி. .. .. | கும்மிடிப்பூண்டி. |
| 230 வைத்தியலிங்கம், திரு. மீ. அ. | தாம்பரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| " ஸ " | |
| 231 ஸ்டாலின், திரு. மு. க. .. | ஆயிரம் விளக்கு. |
| " ஜ " | |
| 232 ஜெயலலிதா, செல்வி, ஜெ. .. | போடிநாயக்கனூர். |
| " ஹ " | |
| 233 ஹமீது இப்ராகிம், திரு. அ.மு. | கடலாடி. |
| " ஸ்ரீ " | |
| 234 ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். .. | சைதாப்பேட்டை. |
| 235 ஆஸ்கார் சி. நிக்லி, திரு. | நியமன உறுப்பினர். |

"பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்".

| | |
|---|---|
| திரு. கு. அழகிரிசாமி .. | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989, ஏப்ரல் 26, புதன்கிழமை.

சித்திரை 13, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான்என் றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை".

அறநெறி உணர்ந்தவனாய், அறிவுச் செறிவுடைய சொல்லை உடையவனாய், எக்காலத்திலும் தொய்வின்றிச் செயலாற்றும் திறன் அறிந்தவனாய் உள்ளவனே ஆராய்ந்து கூறும் அரிய துணையாவான்.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### வ. உ. சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்.

129—(*வினா எண். 784)—திரு. எம். முத்தையா, மற்றும் திரு. என். பெரியசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வ.உ. சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): அரசின் ஆய்வில் உள்ளது. துணை வினாக்கள் கேட்க வேண்டும் என்று விரும்புகிற மாண்புமிகு உறுப்பினர்கள் எவ்வளவு கேள்விகளை வேண்டுமானாலும் கேட்கலாம் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். தயவு செய்து பழி சுமத்தாதீர்கள் என்று உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 26

திரு. எம். முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வில் உள்ளது என்று சொன்னார்கள். இதற்கான இடம் தயார் செய்யப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தைப் பிரித்து தூத்துக்குடியைத் தலைமை இடமாகக்கொண்ட புதிதாக அமைக்கப்பட்ட சிதம்பரனார் மாவட்டம் 20–10–1986 முதல் செயல்பட்டு வருகிறது. மேற்படி சிதம்பரனார் மாவட்ட தலைமை இடமான தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், இதர மாவட்ட அலுவலகங்கள், அலுவலர் குடியிருப்புகள் மற்றும் பொது வசதி கட்டிடங்கள் கட்ட மீளவிட்டான் என்ற கிராமத்தில் சிப்காட் நிறுவனத்திற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களிலிருந்து 300 ஏக்கர் நிலங்களை வருவாய்த் துறைக்கு சிப்காட் நிறுவனம் அளிக்க அரசு ஏற்கெனவே ஆணையிட்டுள்ளது.

இதற்குப் பதிலாக வருவாய்த் துறை 300 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தி சிப்காட் நிறுவனத்திற்கு அளிக்கவும் ஆணையிட்டுள்ளது. மேலும் சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடங்கள் கட்ட மற்றும் நில எடுப்புப் பணிக்கு என முதல் கட்டமாக ரூபாய் 1 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேலே குறிப்பிட்ட கட்டிடங்கள் கட்ட பெரும் திட்டம் ஒன்றை உருவாக்க சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் தலைமையில் பெரும் திட்டக் குழு ஒன்று உருவாக்கப்பட்டது. மேற்படி குழு தயாரித்த சிதம்பரனார் மாவட்ட பெரும் திட்டத்தை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அரசுக்கு ஒப்புதலுக்கு அனுப்பி வைத்துள்ளார். அதில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும் இடம் குறித்து சில விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன. அந்த விவரங்கள் கிடைக்கப் பெற்றதும் பெரும் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்ட உரிய மதிப்பீடுகள் மற்றும் வரைபடங்கள் பெறப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்ட உரிய ஆணைகள் வெளியிடப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். முத்தையா வேறு ஏதும் கேட்கிறீர்களா?

திரு. எம். முத்தையா : இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....



1989 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் ஒரு வேலையை ஒப்படைத்துவிட்டு நீங்கள் இடையில் மற்றொரு வேலையைப் பார்க்கலாமா?

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடம் சிப்காட்டிற்கு சொந்தமான இடம். 300 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி இருப்பதாகச் சொன்னார்கள். இது ஏற்கெனவே மதுரையிலிருந்து தூத்துக்குடிக்குச் செல்கின்ற ரோட்டிற்கு மேற்குப் பக்கத்தில் தூத்துக்குடிக்கு கொஞ்சம் தூரமாக இருக்கக்கூடிய ஒரு இடமாகும். ரோடுக்கு கிழக்குப் பகுதியில் நிறைய இடம் அரசுடையபுறம்போக்கு நிலமாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் சமுத்திரத்தினுடைய பக்கத்திலே இருக்கிற, காற்றோட்டமுள்ள இடம் சரியான இடமாக இருக்குமே. ஆகவே அப்படிப்பட்ட இடங்களை விட்டுவிட்டு இந்த மாதிரியான ஒரு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலை முடிந்து விட்டதா? இடமெல்லாம் கையகப்படுத்தப்பட்டு அதற்கான சகல காரியங்களும் முடிந்து பணி துவங்கி விட்டதா அல்லது நிலங்கள் கையகப்படுத்துவது சம்பந்தமாக ஏதாவது தாவாக்கள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகர் சாமி அவர்கள் தந்த தகவல்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். விளக்கமாகப் பதில் சொல்வதற்கு தனிக் கேள்வி போட்டால் நன்றாக இருக்கும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய நெல்லை மாவட்டம் வருவாய்த் துறைக்காக சிதம்பரனார் மற்றும் நெல்லை மாவட்டங்கள் என்று பிரிக்கப்பட்டாலும், நீதி மன்றங்கள் இன்னும் பிரிக்கப்படவில்லை. இப்போதுள்ள நீதி மன்றக் கட்டிடங்கள் பொது மருத்துவமனையையொட்டி உள்ளன. பொது மருத்துவ மனையை விரிவு படுத்தும்போது அந்த நீதி மன்றக் கட்டிடங்களை எடுத்துக் கொண்டு அதற்குப் பதிலாக நீதி மன்றக் கட்டிடங்களையும் கலெக்டர் அலுவலகத்தையும் ஒருங்கிணைத்து கட்டிடங்கள் கட்டுவதற்கான ஒரு திட்டம் இருந்ததாகச் சொன்னார்களே, அது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. எஸ். டேனியல்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம தனியாகப் பிரிக்கப்பட்டு கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் ஆகின்றன. தூத்துக்குடியைச் சுற்றிலும் 16 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு யாருக்கும் பட்டா வழங்க வேண்டாம் என்று கடந்த 5 ஆண்டுக் காலமாக அரசு தடை விதித்து இருக்கிறது. அந்தத் தடையை நீக்கி ஏழை எளிய மக்களுக்கு பட்டா வழங்குவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்கு பட்டா வழங்குவதற்கு இந்த அரசு நிச்சயம முன் வரும்.

**திரு. கோ. வீரையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தகவல்கள் கொடுப்பதற்கு என்னிடம் தகவல்கள் எதுவும் இல்லை. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தகவல் தெரிந்து கொள்வதற்காக இதைக் கேட்கிறேன். 'சிப்காட்'-லிருந்து நிலம் எடுக்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது எப்போது எடுக்கப்படும், எவ்வளவு காலம் ஆகும் என்பதையும் அந்த மாவட்ட அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்கான மதிப்பீடு எவ்வளவு ஆகிறது என்பதையும் அதற்கு இந்த ஆண்டு ஏதாவது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வீரையன் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். நில எடுப்புப் பணிக்கென முதற்கட்டமாக ஒரு கோடி ரூபாய்க்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு) கட்டிடங்களுக்கென்று ஏற்கெனவே முதல் கட்டமாக ஒரு கோடிக்கு நிதி ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது என்று நான் ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறேன். மற்றைய விவரங்கள் குறித்து, நீங்கள் தகவல் சேகரிக்க, நானும் தகவல் சேகரிக்க இரண்டு பேரும் உட்கார்ந்து முடிவு செய்யலாம். (சிரிப்பு).

**திரு. எச். எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலுள்ள ஆட்சியர் அலுவலகம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட ஒரு பங்களாவில், அறைகளாகத் தடுக்கப்பட்டு அங்கே அலுவலகம் இயங்கிக் கொண்டு வருகின்றது. ஆகவே அதற்குப் புதிதாக ஒரு கட்டிடத்தைக் கட்டி அதிலே மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலகம் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கேள்வி ஊட்டியைப் பற்றி என்று கருதுகிறேன். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் 130 மற்றும் 131 இரண்டும் ஒரே பொருள் தொடர்புடையவை. எனவே இரண்டு வினாக்களுக்கும் சேர்த்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம்.

### தலைக்கவசம் அணிதல்

*130—(*வினா எண். 83)*—**திரு. மா. மணிமாறன்** மற்றும் **திரு. அ. இராசேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோட்டார் சைக்கிள் ஓட்டும்போது தலைக் கவசம் அணியவேண்டும் என்ற சட்டத்தின் மூலம் பயன் ஏற்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : ஆம். இரண்டு சக்கர வாகன ஓட்டுநர்களும், அவர்களுக்குப் பின்னால் அமர்ந்து செல்பவர்களும் தலைக் கவசம் அணிந்து செல்வதால், சாலைப் போக்குவரத்து விபத்து நேரிடும் போது அவர்களது தலை, தலைக்கவசத்தின் மூலம் பாதுகாக்கப் படுகிறது. தலைக் கவசம் அணிவதால் இறப்பு விகிதம் குறைந்துள்ளது.

*131—(*வினா எண். 324)*—**திரு. மு. இராமநாதன், திரு. அன்பில் பொய்யாமொழி,** திரு. ஆர். சிங்காரம், திரு. என். பழனிவேல், திரு. கோ வீரையன், திரு. யூ. கே. வெள்ளிங்கிரி, திரு. ஆ. நடராசன், திரு. கா. கந்தசாமி, திரு. மு. க. ஸ்டாலின், திரு. பெ. சு. திருவேங்கடம், திரு மொஞ்சனூர் . ராமசாமி மற்றும் திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கணட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரு சக்கர மோட்டார் வாகனங்கள் ஓட்டுபவர்களும் பின் இருக்கையில் அமர்பவர்களும் தலைக்கவசங்கள் அணிந்து தான் செல்ல வேண்டும் என்று மோட்டார் வாகனங்கள் சட்டப்படி அரசு முன்பு பிறப்பித்துள்ள ஆணையை இன்றைய அரசு மறு பரிசீலனை செய்ய முன்வருமா ?

(ஆ) தலைக்கவசம் (ஹெல்மெட்) அணிவதினால் ஏற்படும் சிரமத்தைப் பற்றி அரசு ஆய்வு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1989 ஏப்ரல் 26

(முற்பகல் 9–10)

**திரு. மா. மணிமாறன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைக் கவசம் அணிவதிலே ஆண்களுக்கும் பெண்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. இரண்டு சக்கர வண்டியை ஓட்டுகின்ற பெண்கள் மட்டும் தலைக்கவசம் அணிந்தால் போதும்; பின்னால் இருப்பவர்கள் அணியத் தேவையில்லை என்ற இந்த வித்தியாசம் இருக்கிறது. ஆனால், ஆண்களுக்கு மட்டும் இரண்டு பேரும் அணிந்துகொள்ள வேண்டுமென்பது கட்டாயமாக இருக்கிறது. இப்படிக் கட்டாயப்படுத்துவதன் மூலம் சிலர் மண் கவசத்தை அணிந்து காவல் துறையினரை ஏமாற்றியதாக பத்திரிகையிலே கூட செய்தி வந்ததைப் பார்த்திருக்கிறோம். இறப்பு, வாழ்வு என்பது அவரவர் வாழ்க்கையில் அவர்களுடைய நடைமுறைகளினால் மற்ற காரணங்களினால் ஏற்படக் கூடிய ஒரு நிகழ்ச்சி என்பதால் தலைக்கவசம் அணிவது வாகனம் ஓட்டுபவர்களுடைய விருப்பத்திற்கு விடப்படுமா? தலைக் கவசம் அணிவதால் சில நேரங்களில் பின்னால் வரும் வாகனங்களின் ஒலி கேட்காமல், விபத்து ஏற்படும் நிலைமையும் இருக்கிறது. ஆகவே, இதைக் கட்டாயப் படுத்தாமல் விட்டுவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இரண்டு சக்கர வாகனங்களை ஓட்டிச் செல்பவர்கள் தலைக்கவசம் அணிந்துகொள்ள வேண்டும். பெண்ணாக இருந்தாலும் இரண்டு சக்கர வாகனத்தை ஓட்டும்போது அணிந்துகொள்ள வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. ஆனால், பின்னால் உட்கார்ந்துச் செல்லக்கூடிய பெண்கள் அணிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஏன் ஆண்களை மட்டும் கட்டாயப்படுத்துகிறீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கிறார்கள். அவர்களும் சடை பின்னி, பூ வைத்துச் செல்வதாக இருந்தால் தலைக் கவசம் அணியாமல் செல்லலாம் (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் பெணகள்பால் அக்கறை கொண்டு பூச் சூடிய பூவையர் பற்றிக் குறிப்பிட்டதையும் இப்போது நினைவுக்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. அ. இராசேந்திரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹெல்மெட் அணிந்துகொண்டிருக்கிறபோது பின்னால் வருகின்ற வாகனங்களின் சத்தம் கேட்காமல் சில நேரங்களில் அதனால் விபத்து ஏற்படுகிறது. மேலும், ஹெல்மெட் அணிபவர்களுக்கு தலையில் வியர்வை வந்து, அதனால் தலைவலியும் வருகிறது. ஆகவே, ஹெல்மெட் அணிவதனால் பலன் அதிகம் இல்லை. இது சம்பந்தமாக அரசு உரிய நடவடிக்கை ...க்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கி



றார்கள். இருந்தாலும் ஹெல்மெட் அணிவதனால் பலன் அதிகப் இல்லை, சிரமங்கள்தான் அதிகம் என்பதால் உடனடியாக இந்தச் சட்டத்தை நீக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : : தலைவரவர்களே, தலைக் கவசத்தைப் பற்றி இரண்டுவிதமான வேறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. ஏற்கெனவே அரசுக்குச் சில பொது நிறுவனங்களும் பொதுமக்களும் இந்த ஹெல்மெட் அணியும் முறை கூடாது, அதை எடுத்துவிட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்த பிறகு, அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்தது. மருத்துவக் கல்லூரியினுடைய இயக்குநர், ஐ.எஸ்.ஐ. நிறுவனத்தின் இயக்குநர், மற்றும் அரசு அதிகாரிகளுடன் கலந்து ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வின் அடிப்படையில் மருத்துவக் கல்லூரி இயக்குநர், நரம்பியல் நிபுணர் அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருக்கிற தகவல்படி, தலைக்கவசமின்றி வாகனங்களை ஓட்டுவது ஆபத்தான ஒன்று. எனவே, தலைக்கவசம் அணிந்துகொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதைப்போல பின்னால் வரக்கூடிய வாகனங்களின் ஒலி காதில் விழாமல் முழுமையாக அடைத்துக்கொள்கிறது என்ற கருத்தையும் ஆராய்ந்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் காதுக்குப் பக்கத்தில் தலைக்கவசம் இருக்கிற இடத்தில் சிறிய துவாரங்கள் போட்டு, பின்னால் வரக்கூடிய வாகனங்களின் ஒலி ஓட்டுபவர்களுக்குக் கேட்கின்ற முறையில் தயார் செய்யப்படும். அத்தகைய தலைக் கவசங்களுக்கு ஐ.எஸ்.ஐ. முத்திரை இடப்பட வேண்டும் என்று சொல்லி, அவ்வாறு செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் இன்னொரு கருத்தையும் இங்கே தெரிவித்தார்கள். தலையில் வியர்வை ஏற்பட்டு, அதனால் தலைவலியும் உடல் கெடுதலும் வருகிறது என்று சொன்னார்கள். அடுத்தபடியாக திருமண விழா போன்ற இடங்களுக்குச் செல்லுகின்றபோது இந்தத் தலைக்கவசத்தை கையிலே ஓட்டை ஏந்திச் செல்வதுபோல் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது என்ற கருத்தும் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட கருத்துக்கள் இருந்தாலும் நன்மை பயக்கும் என்ற நிலைமை இருக்கின்ற காரணத்தால் ஹெல்மெட்டை அணிந்துகொள்ள வேண்டுமென்ற கருத்தை அரசு கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. இராமநாதன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நரம்பியல் நிபுணர்களுடைய கருத்திற்காக அவர்களுடைய பரிந்துரைக்காக இந்தப் பிரச்சினை அனுப்பப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். பொதுவாக ஹெல்மெட் அணிவது மக்களுடைய உயிருக்குப் பாதுகாப்பானதுதான் என்ற விவாதம் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய விவாதம்தான். என்றாலும் கூட இதே போல் மருத்துவ நிபுணர்கள் மது குடித்தால் உயிருக்குக் கேடு

ஏற்படும் என்று அறிவித்திருந்தாலும்கூட, குடி குடியைக் கெடுக்கும் என்று போர்டைப் போட்டுவிட்டு சாராயக் கடைகளை நடத்திய அனுபவம் நம்முடைய நாட்டிலே இருக்கிறது. எனவே, இதனை மக்களுடைய விருப்பத்திற்கு விடக்கூடிய வகையில் விருப்பம் உள்ளவர்கள் ஹெல்மெட் அணிந்துகொள்ளலாம், மற்றவர்கள் அணியத் தேவையில்லை என்று அறிவிக்கலாம்.

ஓட்டுநர் லைசென்ஸ் வாங்கும்போது ஆக்ஸிலேட்டருக்கும், கியருக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் கூட வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறார்கள். இதனைத் தடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதுதான் சிறப்பாக இருக்கும். கோடிக்கணக்கான மக்கள் வாழக்கூடிய நமது நாட்டில் உயிரைப் பாதுகாக்கிறோம் என்ற பெயரால் இப்படி பல்லாயிரக் கணக்கான மக்களுடைய எதிர்ப்பை........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் ''வினா'' என்ற பெயரால் ஓர் ஆலோசனை வழங்குகிறீர்களா ?

**திரு. மு. இராமநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை 14 பேர்கள் கேட்டிருக்கிறார்கள் என்பதிலிருந்தே இது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இந்த அவை அறியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த 14 பேர்களுக்கும் வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**திரு. மு. இராமநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே ப்ரெஸ்டிஜ் பார்க்காமல் விருப்பம் உள்ளவர்கள் ஹெல்மெட் அணியலாம் என்ற வகையில் ஆலோசனை செய்து விரைவில் இந்தச் சட்டத்தை எடுத்துவிடுவார்களா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே அரசுக்கு ப்ரெஸ்டிஜ் என்ற பேச்சுக்கே இடம் இல்லை. தவறு என்று சொன்னால் அதைச் சுட்டிக்காட்டியவுடன் திருத்திக்கொள்ளக்கூடிய அரசுதான் இன்றைக்கு பொறுப்பேற்று இருக்கிறது. லைசன்ஸ் கொடுக்கப்படுகிற நேரத்தில் கவனக்குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று கேள்வியோடு கேள்வியாக ஒரு குற்றச்சாட்டையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கடந்த காலத்தில் நிலைமைகள் எப்படி இருந்தாலும் — சில இடங்களில் ட்ரையல் காட்டாமல் கூட பேருந்துகள் ஓட்டுவதற்கு அல்லது கார்களை ஓட்டுவதற்கு சில பயிற்சிப் பள்ளிகளாலே லைசன்ஸ் வாங்கிக் கொடுக்கப்படுகிறது என்ற தகவல்கள் எல்லாம் இந்த அரசாங்கத்திற்கு வந்த பிறகு அப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது



என்ற வகையில்—கட்டாயமாக ஓட்டச் சொல்லி முழுமையாக அவர்கள் பயிற்சி பெற்றிருப்பார்களேயானால் அப்படிப்பட்டவர்களுக்கு லைசன்ஸ் வழங்கலாம் என்று அதிலே பணிபுரியக்கூடிய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது.

இந்த ஹெல்மெட்டைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே சொன்னதுபோல் இருவேறு கருத்துக்கள் இருக்கின்றன. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இரண்டு கருத்துக்களும் பரிசீலிக்கப்பட்டு தகுந்த ஒரு முடிவு விரைவில் மேற்கொள்ளப்படும்.

**திரு. அன்பில் பொய்யாமொழி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மருத்துவத்துறை அறிக்கையைப் பற்றிச் சொன்னார்கள். கடந்த ஆண்டு ஹெல்மெட் போட்டும் அதனால் விபத்துக்குள்ளாகி மூளையின் பின்னால் இருக்கிற நரம்புகள் எல்லாம் துண்டிக்கப்பட்டு அதனால் ஒருவர் மரணம் அடைந்தார் என்று ஒரு செய்தியும் வந்திருக்கிறது. இன்னொரு கேள்வியும் சேர்த்தே கேட்டுவிடுகிறேன்.ஏனென்றால் பேரவைத் தலைவர் அவர்கள் எனக்கு ஒரு கேள்விதான் கேட்க அனுமதி அளிப்பார்கள். (குறுக்கீடு) ஆகவே இந்த முறையை மாற்ற வேண்டும். காவல்துறை அதிகாரிகள் ஹெல்மெட் போடாமல் செல்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறேன் என்ற பெயரால் பல்வேறு தொந்தரவுகளைக் கொடுப்பது அரசுக்குத் தெரியுமா ? ஐ.எஸ்.ஐ. முத்திரையிட்ட அந்த ஹெல்மெட்டைத்தான் அணிய வேண்டும் என்று அரசாங்கம் கட்டாயமான ஆணை பிறப்பிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஹெல்மெட் போடுகிற காரணத்தால் முழுமையாக விபத்திலிருந்து தப்பித்துவிடுகிறார்கள் என்று சொல்ல முடியாது. 1986 ஆம் ஆண்டு சென்னை நகரத்தில் இரண்டு சக்கர வாகனங்களால் நடந்த விபத்துக்கள் 764. ஹெல்மெட் அணியாத காரணத்தால் இறந்துபோனவர்கள் 70 பேர். 42 பேர், ஹெல்மெட் அணிந்திருந்தாலும் பலமாக அடிபட்ட காரணத்தால் இறந்து போய் இருக்கிறார்கள். 1987-ல் 879 பேர் விபத்துக்கு ஆளாகி இருக்கிறார்கள். ஹெல்மெட் போடாத காரணத்தினாலே 104 பேர்கள் இறந்துபோயிருக்கிறார்கள். 67 பேர்கள் ஹெல்மெட் போட்டு இருந்துங்கூட பயங்கரமான விபத்துக்கு ஆளாகி இறந்து போயிருக்கிறார்கள். இந்தக் கணக்கிலே பார்ப்போமேயானால்

ஹெல்மெட் போட்டவர்கள் விபத்திலே பாதிக்கப்பட்டு இறந்திருப்பது குறைவாகவும், போடாதவர்கள் இறப்பு எண்ணிக்கை அதிகமாகவும் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, ஹெல்மெட் போடுவது நடைமுறை அனுபவத்தில் கடந்த மூன்று ஆண்டுக் காலத்தில் விபத்துக்களிலிருந்து பலபேர்களைப் பாதுகாத்து இருக்கின்றது என்கின்ற காரணத்தினாலேதான் இதைப் போட வேண்டும் என்ற எண்ணத்தை அரசு கருத்தில் கொண்டிருக்கிறது.

காவல்துறையைச் சார்ந்தவர்கள் சில இடங்களிலே தவறு செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அத்தகைய புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்ற காரணத்தினாலே அந்த அம்சங்களைக் கருத்திலே கொண்டு ஹெல்மெட் பிரச்சினையை எதிர்காலத்திலே எப்படி அணுகுவது என்பது பற்றி விரைவில் முடிவெடுத்து அரசு அறிவிக்கும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹெல்மெட் போடவேண்டும் என்று சொல்கின்ற சட்டமே ஒரு தனி நபருடைய லாபத்திற்காகத்தான் போடப்பட்டது என்று சொல்லப்படுகிறதே, அதைப் பற்றி அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹெல்மெட் போடக்கூடியவர் ள் உயிருக்கு பாதுகாப்பு என்பதே தனி நபருடைய லாபம்தான்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹெல்மெட் அணிவதால் மக்களுடைய உயிர் பாதுகாக்கப்படுகிறது என்று இங்கே அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மருத்துவ நிபுணர்களுடைய ஆலோசனையின் பேரில் இம்மாதிரி சட்டம் இயற்றப்பட்டுள்ளதாகவும் சொல்கிறார்கள். மனிதன் காலில் செருப்பு இல்லாமல் நடந்து போனாலும் கூட தொத்துநோய் ஏற்படுவதற்கான ஒரு சந்தர்ப்பம் இருக்கின்றது என்று அதையும் மருத்துவர்கள் சொல்கின்றார்கள். அதற்காக செருப்புப் போட்டுத்தான் நடக்க வேண்டும் என்று சட்டம் போடுவது மக்களுக்கு இடையூறாக இருக்கும் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இந்தமாதிரி ஒரு சட்டம் எல்லா மாநிலங்களிலும் இருக்கிறதா ? இல்லை என்றுதான் சொல்கிறார்கள். இதையெல்லாம் பரிசீலித்து உடனடியாக வாபஸ் பெற்றுக்கொண்டால் மக்களுக்கு உதவிகரமாக இருக்கும். அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயமாக ஹெல்மெட் அணிய வேண்டும் என்ற சட்டம் வேறு மாநிலங்களிலேயும் இருக்கிறது. குறிப்பாக பஞ்சாப் மாநிலத்திலே சீக்கிய சமுதாயத்தைச் சேர்ந்



வர்கள், ஏற்கெனவே அவர்கள் தலைப்பாகை அணிந்துகொண்டிருக்கின்ற காரணத்தினாலே இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு வேண்டுமென்று கேட்டு, அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போல, நம்முடைய தமிழ்நாட்டில் மெய்வழிச்சாலை என்கின்ற அந்தக் கருத்தைப் பின்பற்றுகின்றவர்கள்கூட 'சிவப்பு டர்பன்' அணிந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களும் தங்களுக்கு விதிவிலக்கு வேண்டுமென்று கேட்டு, அரசாங்கத்திலே அந்தக் கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : பேரவைத் தலைவர் அவர்களே........(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்கார வேண்டும். ஐயா வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்களுக்குச் சொல்கிறேன். இன்னும் 20 பேர்கள் இருக்கின்றார்கள் தலைக் கவசத்தை வைத்துக்கொண்டு. உங்கள் தலைக் கவசம் பற்றி அன்றைக்கே பேசி ஒரு முடிவு எடுத்துவிட்டோம்.

திரு. சோ. வீரைபன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புவது, இந்தக் கேள்வியிலே இதுவரைக்கும் இல்லாத அளவுக்கு இவ்வளவு பேர்கள் இந்த குறிப்பிட்ட கேள்வியை கேட்டு இருப்பதே. அவசியம் இது நீக்கப்படவேண்டுமென்று எந்த அளவுக்கு கீழ்மட்டத்தில் இருந்து, பொதுமக்களிடமிருந்து நிர்பந்தம் வருகிறது என்பதை நம்முடைய அரசு கவனித்து அதை ரத்து செய்து, 'கட்டாயம் தலைக் கவசம் அணியவேண்டுமென்ற' அந்த அரசு உத்தரவை ரத்து செய்ய அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். அதோடு முன்னாலே மருத்துவர்கள் சொல்லக்கூடிய ஆலோசனைகளினை முழுவதும் ஏற்று நாம் சட்டங்கள் ஆக்க முடியாது. புகை பிடிப்பதும்கூட உடம்புக்குக் கேடு, அதனால் வியாதிகள் வருகின்றன என்று மருத்துவர்கள் சொன்னாலும், புகை பிடிப்பதையே சட்ட விரோதமாக்கி நாம் சட்டமாக்கி விட முடியாது. மருத்துவர்கள் ஆலோசனைகளை வைத்து அதற்குரிய சட்டங்களை நிறைவேற்றுவது சரியாக இருக்காது. எனவே இதை ரத்து செய்வதோடு, அப்படியே இரண்டு கருத்துக்களும் வலிவாக இருந்து அது தவிர்க்கமுடியாது என்ற நிலைமை இருக்குமானால், தலைமுடியில்லாதவர்கள் வைத்துக்கொள்ளலாம், தலைமுடி இருப்பவர்கள் வைத்துக்கொள்ள வேண்டியதில்லை என்றாவது அரசு தெரிவிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய நிலைமையை எதிலே சேர்க்கவேண்டும். அது போக்குவரத்துத் துறை அமைச்சருக்கே சொல்கிற மாதிரி இருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைக்கு வரக்கூடிய ஆபத்து தலை மூடியோடு போய்விட்டால் பரவாயில்லை. அப்படிப் போகவில்லை. ஆகவேதான் ஹெல்மெட் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை அரசு கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் ஏராளமாக இதைப்பற்றிக் கேள்விகளைக் கேட்டிருக்கின்றார்கள். உறுப்பினர்களுடைய கருத்து, பொது மக்களுடைய எண்ணங்களை பிரதிபலிக்கக் கூடிய ஒன்று என்பதை நாங்களும் ஏற்றுக்கொண்டு, விரைவாக இதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்து முடிவெடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெங்கடேஸ்வர திட்சிதர் உட்கார வேண்டும். இன்னும் கேள்வி கேட்பவர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைக்கவசம் அணிவது சம்பந்தமாக ஏராளமான சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே கேள்விகளை எழுப்புகிறார்கள். அப்படி என்றால் கீழே இருக்கிற அனைத்துப் பகுதி மக்களும் இதை உடனடியாக நீக்க வேண்டும், எடுத்து விட வேண்டுமென்று நிர்பந்திக்கிற காரணத்தால்தான் இவ்வாறு ஏராளமான பேர் கேள்வி கேட்கிறார்கள். இதுகுறித்து நானே நேரில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை சந்தித்துப் பேசியிருக்கிறேன். இன்றையதினம் இங்கே தலைக்கவசம் அணிதல் பற்றிய கேள்வி வந்து அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலும் அளித்திருக்கிறார்கள். விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்ற கருத்தும் இங்கே பேசப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மகாராஷ்டிரா மாநிலம் போன்று பல்வேறு மாநிலங்களில் இது எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. அது குறித்து எனக்கு கரெக்டாகத் தெரியவில்லை. ஆனால் இந்தியா முழுமையும் இது கடைபிடிக்கப்படவில்லை என்பது எனக்குத் தெரியும். அந்த வகையில் அனுதாபத்தோடு இதனைப் பரிசீலித்து உடனடியாக நீக்க வேண்டும். முதற்படியாக குறைந்தபட்சம் 50 சி.சி., 100 சி.சி., உள்ள வண்டிகளுக்கு பல மாநிலங்களில் தலைக்கவசம் அணிவதிலிருந்து விதிவிலக்கு அளித்திருக்கிறார்களே, அதையாவது இங்கேயும் உடனடியாக நடைமுறைக்கு இந்த அரசு கொண்டு வருமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கேள்விகளை எழுப்பியிருப்பதால் நான் இதுகுறித்து ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். விபத்து என்பது எந்த இலக்கணத்திற்கும் உரியது அல்ல. ஆனால் இந்த விபத்தினால் ஏற்படுகிற சில விளைவுகள் இலக்கணத்திற்கு உரியதாகப் பேசப்படுகின்றன. விபத்து



ஏற்படுகிறபோது, விபத்து எப்படி இருந்தாலும் அது இன்ன விளைவைத்தான் தரும் என்று சொல்லிவிடமுடியாது. ஆனால் விபத்துக்கு ஆளானவர்களை காப்பாற்றுகின்ற பொறுப்பிலே இருப்பவர்கள்—அதாவது விபத்தினால் தலையிலே அடிபடுகிறவர்களை, பாதிக்கப்படுகிறவர்களைக் கவனித்து சிகிச்சை அளிக்கின்ற நியூரோ சர்ஜன் என்று சொல்லப்படுகிற நரம்பியல் மருத்துவ நிபுணர்கள் வழங்குகிற ஆலோசனைதான் விபத்து விளைவைக்குறைக்க இப்படிப்பட்ட ஹெல்மெட் அணிய வேண்டுமென்பது. இம்மாதிரி, அவர்கள் சொல்வதுமாதிரி தலைக்கவசம் அணிந்தால் நூற்றுக்கு 80 பேருக்கு நிச்சயமாக விபத்து ஏற்படும்போது உயிர் போவதைத் தடுக்க இது துணையாக இருக்கும் என்பது அவர்கள் சொல்கின்ற ஆலோசனை. விபத்துக்கு ஆளாகாதவர்களால் சொல்லப்படுகிற கருத்துதான் இங்கே இந்த அவையில் பெரும்பாலோர் சொல்லிய கருத்து. ஆனால் விபத்துக்கு ஆளானவர்களைப் பரிசீலனை செய்து வண்டி ஓட்டுகிறவர்கள் ஹெல்மெட் அணிய வேண்டுமென்று சொல்வது மருத்துவ நிபுணர்களின் கருத்து. வேகமாகப் போகின்ற வண்டியில் செல்லும்போது பெரும்பாலும் தலைக்கவசம் அணிவதுதான் பாதுகாப்பான ஒன்றாகும். குறைந்த வேகத்தில் செல்லுகின்ற வண்டிகளாக இருக்குமானால் 50 சி.சி.க்கு மேற்படாத வண்டிகளாக இருக்குமானால் விபத்து ஏற்பட்டாலும் தூக்கி எறியப்பட்டாலும், அடிபட்டாலும் தலைக்கவசம் அணியாவிட்டாலும் அப்படிப்பட்டவர்களுக்கு நேரடியாக அவ்வளவு அதிகம் பாதிப்பு இல்லை. இதிலும் விதிவிலக்காக சில சமயங்களில் உயிர் போவது உண்டு. சில சமயங்களில் விபத்தில் கீழே விழுந்து, ஹெல்மெட் உடைந்து, தலைக்கவசம் சிதறி ஆபத்து ஏற்படுவதும் உண்டு. ஆனாலும் கூட புரப்போர்ஷன் என்று வருகிறபோது நூற்றுக்கு 80 பேருக்கு தலைக்கவசம் அணிந்துகொண்டு போவதால் ஏற்படுகிற பாதிப்பை விட, உயிர் இழப்பை விட தலைக்கவசம் அணியாமல் போவதால் ஏற்படுவதுதான் அதிகம். மருத்துவ நிபுணர்களின் ஆலோசனையும் இதுதான். வேகமாகப் போகாத வண்டிகளில் போகும்போது அவர்கள் கீழே விழுந்து அடிபடுவதற்கான சந்தர்ப்பம் குறைவாக இருக்கிறது. விபத்துக்கு ஆளானவர்கள் குறைவு. ஆனால் வேகமாகப் போகின்ற வண்டிகளில் விபத்து ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகம். ஆக, ஹெல்மெட் அணியாமல் வண்டிகளில் செல்வதால் பாதிப்பு அதிகம் இருக்கும் என்பது மருத்துவ நிபுணர்களின் கருத்து. இங்கே இதற்கு எதிர்ப்பு அதிகம் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுகுறித்துஆய்வு செய்யக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் கருத்தை அறிந்துதான் இந்த அரசு இதுகுறித்து முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விளக்கத்திற்குப் பிறகும் கேள்வி கேட்க விரும்புகிறவர்கள் கேட்கலாம், இல்லையென்றால் விட்டுவிடலாம். மூன்றாவது கேள்வியில் இருக்கிறோம் இன்னும் 7 இருக்கின்றன.

[1989 ஏப்ரல் 26

திரு. அ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி பரிசீலிப்பதாக அறிவித்திருப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது ஹெல்மெட் அணியாதவர்களுக்கு அபராதத் தொகையாக 50 ரூபாய் போடப்படுகிறதே பரிசீலனை முடியும்வரை அது 5 ரூபாயாகக் குறைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் பரிசீலிக்கப்படும் என்றுசொல்லியிருக்கின்ற காரணத்தால் குறைக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி மனிதனின் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் கருதுகிறார்களாதலால் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டுமென்ற திட்டத்தை மாற்றுகின்ற அல்லது தளர்த்துகின்ற எண்ணம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்கொலை செய்து கொள்பவர்களுக்குக்கூட, உயிரை போக்கிக் கொள்ள விரும்புகிறவர்களுக்குக் கூட தனி மனிதனின் உரிமை தேவையென்ற இயக்கம் ஒன்று இருக்கிறது. எனவே அதையொட்டி இந்த இயக்கமும் கருதப்படலாம்.

*திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்டி ஓட்டுகிறவர்களின் பாதுகாப்பு கருதி தலைக்கவசம் அணியும் முறை நடைமுறையில் இருப்பதாகவும், தற்போது அதுசம்பந்தமாக பரிசீலனை செய்ய குழு ஒன்று போடப்பட்டுள்ளதாகவும் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பெரும்பாலும் வண்டி ஓட்டுகிறவர்கள்தான் சட்டமன்ற உறுப்பினர்களை அணுகி இது எங்களுக்கு தொல்லையாக, சிரமமாக இருக்கிறது. ஆகவே அரசுக்கு ஆலோசனை சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்தக் குழுவானது ஹெல்மெட் அணிந்துகொண்டு வண்டி ஓட்டுகிறவர்களின் சிரமங்களையும், தொல்லைகளையும் கேட்டறிந்து அவர்கள் சொல்கிற ஆலோசனைப்படி முடிவு செய்வதுதான் பொருத்தமாக இருக்கும். ஹெல்மெட் அணியாதவர்களிடம் ஆலோசனை கேட்டால் ஹெல்மெட் அணிபவர்களுக்கு சாதகமாக பதில் வராது, பாதகமாகத்தான் வரும் என்பதை இந்த அரசு அறியுமா?

(முற்பகல் 9-30)]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்களுக்கு ''Helmet'' போடும் வழக்கமுண்டா ? நீங்கள் எப்படி அவர்கள் சார்பில் பேசுகிறீர்கள் ?



1989 ஏப்ரல் 26]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, நாங்களே கூட சில நேரங்களிலே கிராமங்களுக்குச் செல்கிறபோது எங்களுக்கு வசதி, வாய்ப்பு இல்லாத காரணத்தால், ஒரு மோட்டார் சைக்கிளில் தொகுதிக்குச் செல்லும்போது, கல்யாண நிகழ்ச்சி, நல்லது, கெட்டது போன்றவைகளில் கலந்துகொள்ளச் செல்லும்போது எங்களுக்கும் ஹெல்மெட் தேவைப்படுகிறது. என்னையே கூட ஒரு அதிகாரி மடக்கி, 50 ரூபாய் கொடுங்கள் என்று கேட்கிறார். இதையெல்லாம் அரசு ஆலோசிக்க வேண்டும். மக்கள் குரலே மகேசன் குரல் என்று சொன்ன அண்ணா அவர்கள் வழியில் வந்த இந்த அரசு, காலம் கடத்தாமல் உடனடியாக இதை எடுக்க நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மக்கள் குரல் ஒரே குரலாக இருந்தால் உடனடியாக ஏற்றுக் கொள்ளலாம். இங்கே ஒரே குரலாக இருந்துகொண்டிருக்கிறது. எனவேதான் அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கிறோம்.

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு ஹெல்மெட் அணிபவர்கள் கீழே விழுந்து அடிபட்டவர்கள் விகிதாச்சாரம் எவ்வளவு என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஹெல்மெட் அணிவதால் ஓட்டுகிற நுட்பம் குறைகிறதென்பதை அரசு அறியுமா ? அப்படி என்றால் வல்லுநர்களை வைத்து ஆய்வு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஹெல்மெட் அணிகின்ற காரணத்தாலே ஓட்டுகின்ற திறமை எப்படிக் குறையுமென்பது எனக்குப் புரியவில்லை. நீங்கள் ஓட்டியிருக்கிறீர்கள், நானும் மோட்டார் சைக்கிள் ஓட்டியிருக்கிறேன். ஹெல்மெட் போடுவதால் திறமை எப்படிக் குறையும் என்பதை மதிப்பிட முடியவில்லை.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஹெல்மெட் ஒரிஜினலாக இல்லாமல், பிளாஸ்டிக்கில் செய்தவை முக்கால்வாசிக்குமேல் இருக்கிறது. இதனால் விபத்துக்கள் ஏற்படும்போது அதனால் பாதிக்கப்பட்டவர்கள்—இங்கே காவல் துறை அமைச்சர் அவர்கள் இருப்பதால் கேட்கிறேன்—விபத்திலே அடிபட்டு உயிர் போகிற நிலையில் இருந்தால்கூட பொதுமக்கள் அவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடத் தயங்குகிறார்கள். காரணம், அப்படிக் காப்பாற்றும்போது அவர்களைக் கொண்டுபோய் மருத்துவமனையில் சேர்க்கும்போது, அவருடைய உயிர் போய்விட்டால், நாம் குற்றவாளி ஆகிவிடுவோம் என்ற கவலை காரணமாக அவர்களைக் காப்பாற்ற முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே விபத்தில் அடிபட்டவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் பொதுமக்கள் ஈடுபடும்போது அவர்கள்மீது காவல்துறை வழக்கு போடாமல் இருக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே விபத்திலே அடிபட்டவர்களைக் காப்பற்றும்போது, நிச்சயமாக அவர்கள் மீது காவல் துறை வழக்கு போடாது. அப்படி ஏதாவது குறிப்பான சம்பவங்கள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் தாராளமாகச் சொல்லலாம். பொதுவாக ஹெல்மெட்டைப் பொறுத்தவரையில் ஐ. எஸ். ஐ. முத்திரை பெற்றவைகள்தான் ஒழுங்காகத் தயாரிக்கப்பட்டு, பின்னாலே வரும் வாகனங்களுடைய ஒலி கேட்கும் அளவுக்கு அவைகள் செய்யபபட்டு, வெளியே விற்பனை செய்யப்படுகின்றன. அப்படியில்லாமல், தரம் குறைந்த ஹெல்மெட்டுகளை வாங்கி அணியும் காரணத்தால் கூட விபத்துக்கள் ஏற்படுவது உண்டு. ஆரம்பத்திலே ஹெல்மெட் போட வேண்டுமென்று அரசாங்கம் வலியுறுத்திய நேரத்தில், 2 ஆண்டுகளுக்கு முன்பு ஹெல்மெட்டுக்கு நிறைய கிராக்கி இருந்தபோது, கிடைக்காதவர்கள் மண் சட்டியை வாங்கி, அதிலே பெயின்ட் செய்து, அதைக்கூட வைத்துக்கொண்டு போலீசாரை ஏமாற்றினார்கள் என்பதெல்லாம் நமக்குத் தெரிந்த ஒன்றாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பின் இருக்கையில் இருக்கின்ற பூவையர்கள் சார்பில் திருமதி காஞ்சனா கமலநாதன் அவர்கள்.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹெல்மெட் அணிவது ஹெட் இன்ஜுரியைத் தடுக்கும். ஆனால் பெண்கள் தலைக்கவசம அணிவதால் தலை அலங்காரம், பூ சூடிக்கொள்ளுதல் போன்றவற்றின் அழகு குலைகிறது. (சிரிப்பு) ஆகையால் பெண்கள் ஹெல்மெட் அணிவதற்கு ஏற்றவகையில் பெண்களுக்கு ஏற்றதாக அமையும் வகையில் தலை அலங்காரத்திற்கான யோசனைகளைச் சொல்லக்கூடிய அழகு சாதன நிபுணர்கள், ஹெல்மெட் அணிவதால் ஏற்படும் தலைவலி, கழுத்து, நரம்பு வலி போன்றவற்றுக்கு யோசனை கூறும் நரம்பியல் நிபுணர்கள் ஆகியோரைக் கொண்ட . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலை அலங்காரத்திற்கு நாங்களே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கூறுகிறீர்களா ?

டாக்டர் க. காஞ்சனா : No, No. Beauticians and Neuro Surgeons கொண்ட ஒரு கமிட்டி அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தலை இருந்தால்தான் அலங்காரம் செய்துகொள்ள முடியும், ஆகவே தலையைக் காப்பற்றத்தான் இத்தகைய ஏற்பாடு. இருந்தாலும்கூட மகளிர் இரண்டு சக்கர வாகனங்களை ஓட்டிச் செல்லும்போது அவர்களுக்கென்று விசேஷமான முறையில இந்த ஹெல்மெட்டுகளைத் தயாரிக்க முடியுமா என்பது பற்றியும் யோசிக்கலாம்.



ஸ்ரீரங்கம் கோவிலில் வடக்குப் பகுதியில் கோபுரம் கட்டுதல்.

132.—(*வினா எண்) 412,—திரு. பொன் விஜயராகவன் மாண்புமிகு இந்துசமய அறநிலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீரங்கம் கோவில் நிர்வாகம் அந்தக் கோவிலின் வடக்குப் பகுதியில் கோபுரம் கட்டுவதற்கு அரசிடம் அனுமதி கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அக்கோரிக்கை மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவரங்கம் திருக்கோயிலின் வடக்குப் பகுதியில், முன்காலத்தில் கட்டப்பட்டு, கல்காரத்துடன் முற்றுப் பெறாது நின்று போன மொட்டை கோபுரத்தின் மீது ஏழு நிலைகள் கொண்ட வடக்கு ராஜகோபுரம் கட்டுவதற்கு அனுமதி கோரி அஹோபிலமடம் தவத்திரு ஜீயர் சமர்பித்த விண்ணப்பம் தற்போது அறநிலையத் துறை ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் திருக்கோயில் 4 பகுதி சுற்றுப் பிரகாரம் உள்ள ஒரு கோயில். அதன் கடைசி பிரகாரத்தில் நான்கு மொட்டை கோபுரங்கள் இருந்தன. அதில் ராஜ கோபுரத்தை ஸ்ரீ ஜீயர் சுவாமிகள் கட்டிமுடித்துவிட்டார். அதில் கூட அமைச்சர் அவர்கள் ஏதோ தவறுதல் இருக்கிறது என்று அறிக்கை மூலம் சொன்னார். நான்கூட பதிலில் சொன்னேன். அதைத் தவிர்த்து 3 கோபுரங்கள் இப்போது மொட்டைக் கோபுரங்களாக இருக்கின்றன. அதில் ஒரு கோபுரத்தைக் கட்டுவதற்காக எல்லோரும் சேர்ந்து ஸ்ரீ ஜீயரை அணுகி 'நீங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று கேட்டதற்கு, இப்போது அனுமதி கேட்டிருக்கிறார். அதைத்தவிர்த்து பாக்கியாக உள்ள கிழக்கு வாசல் மற்றும் மேற்கு வாசல் கோபுரங்கள் மொட்டைக் கோபுரங்கள் என்ற நிலையிலேயே இருக்கின்றன. அவற்றையும் சேர்த்துக் கட்டுவதற்காக அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெற்கு கோபுரம் கட்டுவதில் தவறு நடந்ததாக நான் இங்கே சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர்

திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். நான் அதை மீண்டும் சொல்லுகிறேன். அங்கே ஒரு கோடியே 9 லட்சம் ரூபாய் செலவில் அந்தத் தெற்குக் கோபுரம் கட்டுவதற்கு ஆணையர் அனுமதி அளித்தார். அதற்குத் தமிழக அரசும் பணம் கொடுத்தது. ஆந்திர அரசு மற்றும் கருநாடக அரசிடமிருந்தும் பணம் வந்தது. பொதுமக்களும் நன்கொடையாகக் கொடுத்தார்கள். ஆனால், அந்தக் கணக்கு இன்னும் ஆணையருக்குக் கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து கொண்டே இருக்கிறது. அதற்குப் பிறகு வடக்கு கோபுரம் கட்டுவதற்கு ஏறக்குறைய 20 லட்சம் ரூபாய் செலவில் அனுமதி தரப்பட்டிருக்கிறது. அதைக் கட்டி முடித்த பிறகு, கிழக்கு மற்றும் மேற்கு கோபுரங்களைப்பற்றி யோசிக்கலாம்.

(திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து கேள்விகள் எழுப்ப வாய்ப்பில்லை. இது விவாதம் அல்ல.

விவசாயிகளுக்கு நிவாரண நிதி.

133—*வினா எண். 801)—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்,— திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வறட்சி, வெள்ளம், புயல் போன்றவைகளினால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும்போது அந்த இழப்பை ஈடு செய்வதற்கு விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இயற்கை சீற்றங்களினால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டு, கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கடன்கள் வசூல் செய்ய இயலாமல் போனால், அக்கடன் நிலுவைகளை தள்ளுபடி செய்து நிவாரணம் அளிக்கும் வகையில் வேளாண்மைக் கடன் நிவாரண நிதி ஒன்றினை அரசு 31–10–1964 முதல் நிர்வகித்து வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; நாம் ஏற்கெனவே அவர்களுக்குக் கொடுத்த கடன்களைத் தள்ளுபடி செய்திருக்கிறோம். ஆனால், புயல், வெள்ளம் போன்ற இம்மாதிரியான இயற்கை சீற்றங்கள் காரணமாகப் பாதிக்கப்படுகிறபோது—அதாவது புயல் வந்தால் ஏழை எளிய விவசாயிகளின் கூறை பிய்ந்து போய்விடுகிறது—வறட்சி வந்தால் மரங்கள் எல்லாம் பட்டுப்போய் விடுகின்றன—





வெள்ளம் வந்தால் மணல் அடித்துப் போய் விவசாயிகளின் நிலங்கள் எல்லாம் மணல் மேடிட்டுப் போய்விடுகின்றன—எனவே இப்படிப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த அரசு என்ன செய்வதாக உத்தேசித்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படிப்பட்டவர்களுக்கு ஏற்கனவே அவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடன்பெற்றிருப்பார்களானால்— அவர்களுக்கு ஒரு இன்குரன்ஸ் திட்டம் இருந்தது. இருந்தாலும் கடன் வாங்கியவர்களின் நிலைமையை அரசாங்கம் பரிசீலித்துதான் இப்படிப்பட்ட ஓர் ஏற்பாட்டை 30—10—1964 முதல் செய்து வருகிறது. இந்த நிதியிலிருந்து ரூ. 12,72,000 இதுவரை கடன் தள்ளுபடிக்காகச் வசலவிடப் பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மையார் அவர்கள் கேட்டதைப் போல இன்னும் இதை அனைத்து விவசாயிகளுக்கும் பயன்தரும் வகையில் வேளாண்மைக் கடன் நிவாரண நிதி மத்திய-மாநில அரசுகளால் நிறுவப்பட வேண்டும் என அனைத்திந்திய ஊரகக் கடன் ஆய்வுக் குழுவினரால் பரிந்துரைக்கப்பட்டு, மத்திய அரசால் இதுவரையில் இந்த நிதி நிறுவப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசாங்கத்தில் இதை விரைவுபடுத்தி, இதற்கு ஏற்பாடு செய்வார்களானால் எல்லா விவசாயிகளும் பயன் பெறத்தக்க வகையில் இது அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9–40)

திருமதி ஏ. எஸ்- பொன்னம்மாள் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்களிடமிருந்துஉண்மையிலேயேநான் இந்த பதிலை எதிர்பார்க்கவில்லை. அங்தே விவசாயம் பாதிக்கப்பட்டு மணல் அடித்துக்கிடக்கிறது. அவன் ஏழை. அவன் வாழ ஒரு வழியுமே இல்லை. இந்த நிலத்தை வைத்துத்தான் அவர்கள் விவசாயம் செய்யவேண்டும். அப்பேர்பட்ட நிலைமையில்இப்போதுஅமைச்சர் அவர்கள் சொன்ன பதிலை எல்லாம் மாற்றி பரிசீலனை செய்து எங்கெங்கெல்லாம் ஏழைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்களோ அவர்களுக்கு அரசாங்கமே அதன் டிபார்ட்மெண்ட் மூலமாக அந்த மணலை எல்லாம் புல்டோசர் வைத்து தள்ளிவிட்டு, பிறகு இந்தப் பணத்தை நீங்கள் மானியமாகக் கூட கொடுக்க வேண்டாம், ஆண்டுதோறும் கொஞ்சங் கொஞ்சமாகத் திருப்பி வசூல் செய்யக்கூடிய ஒரு நிலைமையிலாவது இந்த திட்டத்தை அரக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே இந்த மாதிரி வெள்ளத்தாலே எங்கேயாவது நிலங்கள் பாதிக்கப்பட்டு இருக்குமேயானால் அந்த நிலங்கள் வெள்ளத்தாலே

பாதிக்கப்பட்டது என்று அரசு முடிவு செய்யும் நேரத்தில் வேளாண்மைத் துறையும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு அதை சீர் செய்து கொடுக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்தை இந்த அரசாங்கம் அனுதாபத்தோடு பரிசீலிக்கும்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. ஆனால் பாதுகாப்பு இருக்கின்ற ஏனைய தொழில்களுக்கு இழப்பு மானியம் வழங்கப்படுகிறது. அதுபோல் இயற்கைப் பாதுகாப்புகளால் திடீரென்று ஏற்படுகின்ற இழப்புகளுக்கு அரசு மானியம் வழங்கவேண்டும். அந்த மானிய செலவுத் தொகை என்பது விவசாயக் கல்லூரிகளிலே விவசாய செலவுக்கு எவ்வளவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் அவர்களுக்கு அந்த இழப்பு மானியம் வழங்க அரசு திட்டம் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்போதுள்ள நிலையில் நான் அறிவித்த இந்தத் திட்டத்தைத் தவிர வேறு திட்டம் எதுவும் கொண்டுவர வாய்ப்பு இல்லை.

திருப்பத்தூரில் கடைகள் கட்டி வாடகைக்கு விடுதல்.

*134*—(*வினா எண். 152)— திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள பாஞ்சாலை மைதானம் என்னும் இடத்தில் அரசு மூலம் கடைகள் கட்டி வாடகைக்கு விடும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே ஏழைகளும் அன்றாடம் காய்கறிகள் விற்றுப் பிழைக்கும் ஏழை எளியவர்கள் 75 குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஏழைக் குடும்பங்களுக்கு வாழ்வுகிடைக்கின்ற வகையிலே நான் ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது இரண்டு முறை இந்தக் கேள்வியை கேட்டேன். இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அது போன்ற ஏழை எளியவர்கள், போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கின்ற காரணத்தால் அவர்கள் காலி செய்ய வேண்டுமென்று சொல்கின்றார்கள். அதற்குப் பாஞ்சாலை மைதானம் என்ற இடத்திலே கடைகளைக் கட்டி குறைந்த வாடகைக்கு விட்டால் அந்த



ஏழைகளுக்கு உதவும் வகையிலே, அவர்களை வாழவைக்கும் வகையிலே இருக்குமென்று எண்ணுகின்ற காரணத்தாலேதான் இதை உடனடியாகக் கட்டுவதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகராட்சியில் நகராட்சி பாஞ்சாலை மைதானம் என்ற இடம் நகர அளவு எண். 364 அமைந்துள்ள அரசு புறம்போக்கு கிராம நத்தம் சுமார் 0.32 ஏக்கர் ஆகும். இந்த நிலத்தை ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நாளங்காடி அமைக்க திருப்பத்தூர் நகராட்சி மன்றம் முடிவு செய்தது. ஆனால் மேற்படி நிலத்தினை நகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்யவோ, குத்தகைக்கு விடவோ இயலாது என வட ஆற்காடு மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததை அடுத்து நாளங்காடி அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் கூறுகின்ற இடம் அந்த இடமல்ல. நான் கூறுகின்ற இடம் கோயிலுக்குச் சொந்தமான இடம், கோயிலில் இருக்கின்ற அறங்காவலர்கூட அங்கு காய்கறி கடைகள் வைத்துத் தான் அன்றாடம் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த வசூல் யாருக்கோ போவதைவிட அந்த ஏழை எளிய மக்களுக்கு உதவும் வகையிலே அந்தக் கடைகளைக் கட்டித் தந்தால் அந்தக் கடைகள் மூலம் அரசுக்கு வருமானமும் வரும்; அவர்களும் பிழைக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கக்கூடிய ஒரு நல்ல காரியத்தை செய்ய முடியும்; எனவே அந்தக் காரியத்தை அரசு உடனடியாக நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, பாஞ்சாலை மைதானம் என்பது கிராம நத்தம், புறம்போக்கு. நகர் அளவு எண். 364. பாஞ்சாலை என்ற இடத்தில் இது ஊர் நத்தம் என்ற குறிப்புத்தான் என்னிடத்திலே வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் வேறு தகவல் விரும்புவார்களேயானால் தனிக் கேள்வி போடவும் அல்லது என்னிடத்திலே எழுதிக் கொடுத்தால் மாவட்ட ஆட்சியரோடு தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊராட்சி மன்றங்களில் தெரு விளக்குகள்
அமைக்க நிதியுதவி.

*135*—(*வினா எண். 612)—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தெரு விளக்குகளை பராமரிக்கவும், புதிய தெரு விளக்குகள் அமைக்கவும், ஊராட்சி மன்றங்களுக்கு நிதி உதவ அரசிடம் திட்டம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஊராட்சி நிர்வாகத்தில் இருக்கிற தெரு விளக்குகளெல்லாம் எங்குமே எரிவது கிடையாது என்பது அனைவருக்குமே தெரிந்த ஒட்டுமொத்தமான கருத்தாகும். ஆகவே, அந்த விளக்குகளைப் போட வேண்டுமென்ற கோரிக்கைகள் வருகின்றபொழுது அவர்கள் நிதி இல்லை. ஆதாரம் இல்லை என்றெல்லாம் சொல்கிறார்கள். அதை மறுபரிசீலனை செய்து, நிதியாதாரம் கொடுத்தால்தான் அந்த விளக்குகள் எரிய முடியும். நம்முடைய திட்டமெல்லாம் மின்சார விளக்குகள் எரிய வேண்டுமென்பதுதான். ஆனால் அந்தத் திட்டம் கிராமங்களிலே செயல்படுவதற்கு போதிய நிதியாதாரம் இல்லாத காரணத்தினால் அது செயல்பட முடியவில்லை. ஆகவே, நிதியாதாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு தலைவரவர்களே, ஊராட்சி மன்ற எல்லைக்கு உட்பட்ட பகுதியில் தெரு விளக்குகளைப் பராமரிக்கின்ற பொறுப்பு ஊராட்சி மன்றத்திற்குச் சேர்ந்தது. அப்படி ஊராட்சி மன்றம் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டால் கூட, உடனடியாக ஊராட்சி ஒன்றியத்திலேயிருந்து பல்புகளை வாங்கி, பழுதடைந்த பல்புகளை மாற்றிவிட்டு, பிறகு ஊராட்சி மன்றத்திற்கு நிதி வந்தால் பிடித்துக் கொள்ளலாம் என்றும் சமீபத்தில் அரசு உத்தரவிட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல தமிழகமெங்கும் தெரு விளக்கு எரியவில்லை என்ற குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்னதைப் போல ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்துகூட அவர்கள் கடன் பெறுகின்றார்கள். ஆனால் வருமானமேயில்லாத ஊராட்சி மன்றம் எங்கு செல்வது என்பதுதான் பிரச்சனை, ஏனென்றால், அந்த கடனை திருப்பி அடைக்க வேண்டுமல்லவா ? அதற்கு வேறு வழி கிடையாது. ஆகவே தான், நான் சொன்னேன். அப்படியில்லாவிட்டால், மின்சாரத் துறையிடம் மூலமாக அதை ஒப்படைத்துவிட்டால்கூட அதைப் பராமரிப்பதற்கு சௌகரியமாக இருக்குமென்று நான் தெரிவித்து, அது பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியம் ஆயிரக்கணக்கான கோடி கடன்பெரும் சங்கடத்திற்கு அது ஆளாக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள். பொதுவாக, இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. கிராமங்களில் அல்லது நகரங்களில், தெரு விளக்குகளைப் பராமரிக்கின்ற பொறுப்பு உள்ளாட்சி நிர்வாகத்திடமே இருக்க வேண்டுமென்பது ஒன்று. இன்னொன்று, மின்சார வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்ற கருத்து. இந்த இரண்டு கருத்துக்களையும் பரிசீலித்துத்தான் பிறகு முடிவு செய்ய வேண்டும்.

## கீழ் பவானி பாசனப் பகுதி.

136—(*வினா எண். 252)—**திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், கோபி வட்டம் சந்திராபுரம் புங்கங்காட்டு கிராமம் கீழ் பவானி பாசனத் திட்டத்தில் இருந்து கழிவுநீர் பாசனத்தில் பாசனப் பகுதி சேர்க்கப்பட்டுள்ளதை மாற்றி மீண்டும் கீழ் பவானி பாசனப் பகுதியில் சேர்க்க வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** (அ) ஆம்.

(ஆ) அந்த மனுக்கள் மீது தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களுடைய பரிசீலனையில் இருக்கின்றன.

**திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தலைமைப் பொறியாளருடைய பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். கீழ் பவானி பாசனத் திட்டத்திலேயிருந்து எந்த ஆண்டு கழிவுநீர் கசிவுநீர்ப் பாசனத் திட்டத்தில் இணைக்கப்பட்டது ? இப்பொழுது குறிப்பிட்ட நாளுக்குள்ளேயே மீண்டும் கீழ் பவானி பாசனத் திட்டத்திலே இணைத்துக் கொள்ளுகின்ற பரிசீலனையைச் செய்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, நான் காண்டுக் காலத்திற்கு முன்னால் இது கீழ் பவானியாற்றின் பாசனத் திட்டத்திலேயிருந்து எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரி

கிறது. மீண்டும் இதை அதே திட்டத்தில் கொண்டு வருவதற்கு கீழ் பவானித் திட்டத்தை நவீனப்படுத்தும் நேரத்தில் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளலாம் என்று அரசு கருதுகிறது.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீண்ட நெடுங்காலமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் கடை கோடியிலே இருக்கின்ற காரணத்தினாலே அந்தக் கழிவு நீர்ப்பாசனங்களில் சரியான முறையிலே விவசாயம் செய்ய முடியாத நிலை இருக்கிறது. அமைச்சரவர்கள் பதில் சொல்கின்ற நேரத்தில், கீழ் பவானி பாசனத் திட்டத்தை சீரமைக்கின்ற நேரத்திலே அதை எடுத்துக் கொள்வதாகக் குறிப்பிட்டார்கள். எப்பொழுது அதைச் சீரமைக்க இருக்கிறார்கள் ? எப்பொழுது அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு நல்லமுறையிலே, சீரான முறையிலே, தண்ணீர் வழங்க இருக்கின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, கடைகோடிப் பகுதியிலே இருக்கின்ற அந்தப் பகுதிக்கு நீர் கிடைக்கவில்லை. கிடைக்காமலிருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. கீழ்பவானி அணைக்குச் சென்ற நான்கைந்தாண்டுக் காலமாகப் போதிய நீர் வரவில்லை. ஆகையினாலே இந்தக் கால்வாயிலே தண்ணீரை விட முடியவில்லை.
இரண்டாவது காரணம் பாண்டியபாளையம் கசிவுநீர்த் திட்டத்திற்கு உட்பட்டு இருப்பதுதான் இந்த சந்திராபுரம் புங்கங்காட்டு கிராமம். அந்த அணைக்கு வருகிற வழியில் பள்ளத்தாக்குப் பகுதியில் குறுக்கே பலர் சட்டத்திற்குப் புறம்பாக பம்ப் செட் போட்டு விவசாயம் செய்து வருகிறார்கள். அப்படி சட்டத்திற்குப் புறம்பாகத் தண்ணீர் எடுப்பது குற்றம். அவைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆனால் எதை எப்படி பார்த்தாலும் இப்போது அணையிலும் நீர் இல்லை, வாய்க்காலிலும் நீர் இல்லை. எனவே, இவைகளையெல்லாம் கட்டுப்படுத்தி நீர் வருகிற காலத்தில் விரைவில் அரசு துரித நடவடிக்கையெடுத்து ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொகுதிக்காரர் என்ற முறையில் திரு. வி. கே. சின்னசாமி அவர்களுக்குத் துணை வினா எழுப்ப வாய்ப்பளிக்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வது இந்த எஸ்.ஐ.எம்.பி. என்பதில் கீழ்பவானி பாசனத்தில் ஆயக்கட்டுகள் சேர்ந்த பூமியில் பாய்கிற தண்ணீர் வீணாகச் செல்கிறது. அதைத் தடுத்து இந்த கசிவுநீர்க் குட்டை கட்டி



அதன் மூலமாக பாசனம் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தார்கள். ஆனால் வரி விதிப்பதை எல்லா ஆயக்கட்டுகளுக்கும் சேர்த்து மதகுகளில் வரும் தண்ணீருக்கும், இந்த எஸ்.ஐ.எம்.பி.-க்கும் இரண்டிற்கும் ஒரே சீரான வரிவிதிப்பை விதிக்கிறார்கள். ஆனால் சில நேரங்களில் தண்ணீர் வராத காரணத்தால் அது வறண்டு காய்ந்து விடுகிறது. கிட்டத்தட்ட 20 ஆயிரம் ஏக்கர்கள் புதியதாக ஆயக்கட்டுகள் சேர்க்கப்படும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகளிடமிருந்து அரசுக்கு பரிந்துரை வரப்பெற்றதாக தகவல் அறிகிறோம். அப்படி சேர்க்கப்படுகிற காலக்கட்டத்தில் இந்த எஸ்.ஐ.எம்.பி.-யில் சேர்ந்திருக்கிற பூமிகளும் அதோடு சேர்க்கப்படுமா ? அதற்கு தனியாக மதகு வைத்து நீர்ப்பாசனம் பெறுவதற்கு வழிவகைகளை அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே தெரிவித்து இருக்கிறார்கள். பொதுப்பணித்துறையிலிருந்து எங்களுக்கு பரிந்துரை தான் வந்திருக்கிறது. அது அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. ஆய்வு முடிந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இந்த அவைக்கும் தெரிவிக்கப்படும். :

## திருவையாறு பேரூராட்சியில் பாதாள சாக்கடை அமைத்தல்.

137—(*வினா எண். 219)—திரு. துரை சந்திரசேகரன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருவையாறு பேரூராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்பெறும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. துரை சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் திருவையாறு பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு ஆய்வு செய்யும் பணிக்காக ரூ. 20,000 பேரூராட்சி நிதியிலிருந்து 1971 ஆம் ஆண்டு அளிக்கப்பட்டு, ஆய்வுப் பணிகள் முடிந்தும் அந்தத் திட்டம் நிறைவேறுவதில் நீண்ட காலதாமதத்திற்கு காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக முன்னுரிமை அடிப்படையில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முதலாவதாக அந்த நகரம் மாவட்டத்தின் தலைநகராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அது சுற்றுலாப் பயணிகள் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருக்க வேண்டும். மூன்றாவதாக அதன் மக்கள் தொகை ஒரு இலட்சத்திற்கு மேல் இருக்குமானால் அதற்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. திருவையாறு நகரின் மக்கள் தொகை 12,013 தான். அங்கே அது சுற்றுலா மையமாகவும் கருதப்படவில்லை. மாவட்டத் தலைநகராகவும் இல்லை. ஆகவே முன்னுரிமை வழங்குவதில் சில தடைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரை சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுலா மையமாக இல்லையென்று சொல்கிறார்கள். உலக அளவில், இந்திய அளவில் போற்றப்படுகிற ஒரு விழா ஆண்டுதோறும் நடைபெறுகிறது. பல அயல்நாட்டு நபர்கள் அந்த விழாவில் கலந்து கொள்கிறார்கள். மேலும் 12,000-க்கும் மேற்பட்ட மக்கள் ஈக்களாலும் கொசுக்களாலும் பாதிக்கப்பட்டு குறிப்பாக யானைக்கால் நோயால் அவதிப்படுகிறார்கள். எனவே, இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விழா நடக்கிற ஊர்களை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் ஒரு ஊர் கூட மிஞ்சாது. இருந்தாலும்கூட, சுற்றுலாப் பயணிகள் மையமாக இருப்பது என்பது வேறு, விழா நடைபெறும் ஊராக இருப்பது என்பது வேறு என்ற அடிப்படையில் அந்த நகரத்தின் முன்னுரிமை சிறிது தள்ளி இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துக்களை கருத்திற் கொண்டு அரசாங்கம் இந்த நகரத்திற்கு உடனடியாக ஏதேனும் செய்ய முடியுமா என்பதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறு நகரத்தில் தியாக பிரம்மம் உற்சவம் ஆண்டிற்கு ஒருமுறை சிறப்பாக நடைபெறுகிற நிகழ்ச்சி அங்கே உண்டு. வெளிநாடுகளிலிருந்து கூட ஏராளமானவர்கள் அங்கே வந்து போகிற காரணத்தாலும், அந்தப் பேரூராட்சிப் பகுதியில் மழை பெய்தால் ஏராளமான தண்ணீர் தேங்கி கொசு உற்பத்தி அதிகமாகி அதனால் பல நோய்கள் வருகிற காரணத்தாலும், அரசாங்கத்திற்கு முன்னால் 20,000 ரூபாய் பணம் செலுத்தியிருக்கிற காரணத்தாலும், இவற்றையெல்லாம் மனதில் வைத்து உடனடியாக அந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை அங்கே கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்,

### ஜனதா கைத்தறிச் சேலைகள் தேக்கம்.

138—(*வினா எண்-273)— **திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேங்கிக் கிடக்கும் ஜனதா கைத்தறிச் சேலைகளை அரசே கொள்முதல் செய்யும் செயற் குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜனதா கைத்தறி சேலையை உற்பத்தி செய்கிறவர்கள் படுகின்ற அவதியைக் கணக்கில் கொண்டாவது, அவர்களுடைய வறுமையைப் போக்குவதற்கு இந்தத் திட்டத்தை அமல்படுத்துவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா துணி உற்பத்தியைப் பொறுத்த வரையில், கைத்தறி வளர்ச்சி ஆணையாளர் அவர்களால் மகா ஆப்டெக்ஸ் மூலம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்த உற்பத்தித் திட்டம் அறிவிக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் சில சங்கங்கள் தரம் குறைவான ஜனதா துணிகளை உற்பத்தி செய்வதாலும், கொடுக்கின்ற உற்பத்தித் திட்டத்திற்கு அதிகமாக உற்பத்தி செய்வதாலும், துணித் தேக்க நிலை ஏற்படுகிறது. தரமான துணியாக இருந்தால் அதை அரசு கொள்முதல் செய்ய பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 26

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜனதா சேலையை உற்பத்தி செய்வதற்கு ஆகின்ற செலவு எவ்வளவு? அதற்கு மாநில அரசும், மத்திய அரசும் எவ்வளவு மானியம் அளிக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா துணி ரகத்திற்கு மத்திய அரசு சதுர மீட்டருக்கு 2.75 காசு வழங்குகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த ஜனதா ரகத் துணிகளும், தரமாக உற்பத்தி செய்யப்பட்ட துணிகளும் காமராசர் மாவட்டத்தில் உள்ள அனைத்து நெசவாளர் சங்கங்களில் இன்றைக்கு பல கோடி ரூபாய்க்கு தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே ஒரு சிறப்புத் திட்டமாகக் கருதி, இதை கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்தால், நெசவாளர்களுடைய கண்ணீரைத் துடைக்க முடியும். ஆகவே அரசு அவசரகால நடவடிக்கையாக இதை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்ன அரிய கருத்தை ஏற்று, அந்தத் துணிகளுடைய ரகத்தைப் பார்த்து, தரமான துணியாக இருந்தால், அரசு கொள்முதல் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜனதா கைத்தறிச் சேலைகள், வேட்டிகள தயாரித்து விற்பனை செய்வதிலே மத்திய அரசு ஒரு ஜோடிக்கு 29.50 பைசா கொடுப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறதே, ஆகவே 89 ரூபாய் 50 பைசாவிற்கு அடக்கமாகிற இந்த ஜவுளிகளை 60 ரூபாய்க்கு பொது மக்களுக்கு வேட்டி சேலை கொடுக்கக் கூடிய ஒரு ஏற்பாடாக இருப்பதன் காரணமாக, சாதாரணமாக ஏழை எளியவர்கள், அதுவும் குறிப்பாக கிராமப் புறத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள வாங்கக் கூடிய இந்தத் துணிகளை அதிகமாக உற்பத்தி பண்ணுவதற்கு ஏற்பாடு செய்வதோடு, மத்தியஅரசு இதற்காக ரூ. 17.50 பைசா சேலைக்கும், 12 ரூபாய் வேஷ்டிக்கும் கொடுக்கக்கூடிய அந்த மானியத் தொகையை அதிகமாகப் பெறுவதற்கு அரசு முயற்சிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன் மேலும் மானியமாக மத்திய சர்க்கார் கொடுப்பதற்கு ஏதாவது லிமிட் இருக்கிறதா அல்லது எவ்வளவு நாம் உற்பத்தி செய்தாலும், அதற்கு ஈடாக மத்திய அரசு மானியம் அளிக்கிறதா என்ற விவரத்தையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, மத்திய அரசு கொடுக்கின்ற நிதியை அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று கைத்தறித் துறையின் மூலமாகக் கேட்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 26]

திரு. இரா. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா கைத்தறி சேலைகள் மட்டுமல்ல, கைத்தறித் துணிகள் தமிழ்நாட்டிலே ஏராளமான கோடிக்கு தேங்கிக் கிடக்கின்றன. எந்த அளவிற்கு, எத்தனை கோடிக்கு கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. :......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றி ஏற்கெனவே விரிவாகப் பேசி அதற்கு புள்ளி விவரங்கள் எல்லாம் தரப்பட்டு இருக்கின்றன. ஜனதாவிலே நில்லுங்கள்.

திரு. இரா. மோகன் : கேள்வி கேட்பதற்கு அனுமதித்தால் தான், தலைவர் அவர்களே, நாங்கள் கேள்வி கேட்க முடியும். ஆகவே இப்படிப்பட்ட கைத்தறித் துணிகள் தேக்கத்தை நீக்குவதற்காக எந்தெந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. மத்திய அரசோடு தொடர்பு கொண்டு நிதியாதாரங்களைப் பெறுவதற்கான திட்டங்களும், இந்தத் தேக்கத்தைப் போக்குவதற்கான திட்டங்களும் என்னென்ன இருக்கின்றன என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, கைத்தறித் துணி, தமிழகத்தில் கோ-ஆப்டெக்ஸ் மூலமாக 115 கோடிக்கும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக 75 கோடிக்கும் தேக்கம் உள்ளது. துணித் தேக்கத்தை விரைவில் போக்குவதற்காக துரிதமான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். தள்ளுபடி சம்பந்தமாக மாநில அரசு மத்திய அரசுக்கு பல கடிதங்களை எழுதியிருக்கிறது. மத்திய ஜவுளி அமைச்சரை நேரில் சந்தித்து, இது சம்பந்தமாக, தள்ளுபடித் தொகை அதிகம் கிடைப்பதற்கு நாங்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1989 ஏப்ரல் 26

(முற்பகல் 10.00)

## 2. தகவல் கோரல்.

**(அ) உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சந்த் மீதான வழக்கை வாபஸ் பெற வேண்டுமென்ற கோரிக்கை.**

* **திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றக் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கிற போது சட்டமன்ற நிகழ்ச்சிகளிலே கலந்து பங்கேற்க முடியாத அந்த வகையில் துர்ப்பாக்கியவசமாக மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் கைது செய்யப்பட்டு, கடலூர் ஜெயிலில் அடைக்கப்பட்டிருக்கிறார். ஆக இரண்டு தரப்பு விவாதங்களும்,—போலீஸ் தரப்பின் சார்பிலே சொன்ன விவாதங்களை முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எதிர்கட்சியின் சார்பிலே சட்டமன்ற உறுப்பினர் பற்றிய நிகழ்ச்சிகளை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.—இந்த நிகழ்ச்சிகள் எப்படி இருந்தாலும், சட்டமன்ற நிகழ்ச்சிகளிலே சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இந்தக் கூட்டத் தொடரிலே 15 நாட்கள் அவர் ஜெயிலில் இருந்தால், அவர் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியாது. இது பிரைவேட் கேஸ் அல்ல. தனி வழக்கு அல்ல. அரசியல் ரீதியாக அத்தோடு சம்பந்தப்பட்ட வழக்கு என்கின்ற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் மீது இருக்கின்ற வழக்கை வாபஸ் பெற அரசியல் ரீதியாக அதில் நடவடிக்கை எடுத்து, சட்டமன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தருவார்களா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியிலுள்ள திரு. உகம்சந்த் அவர்கள் மாத்திரமல்ல, எல்லா உறுப்பினர்களும் சட்டப் பேரவை நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்ள வேண்டுமென்பது தான் இந்த அரசினுடைய விருப்பம். திரு. உகம்சந்த் அவர்கள்மீது போடப்பட்டுள்ள வழக்கின் தன்மைகளை ஆராய்ந்து அவரும் இந்த அவை நிகழ்ச்சிகளில் இந்தக் கூட்டத் தொடரில் கலந்துகொள்கின்ற அளவிற்கு ஆவன செய்ய அரசு முயற்சி எடுக்கும்.

**(ஆ) கைத்தறி மற்றும் பட்டு கூட்டுறவுச் சங்கங்களை அரசு கலைத்திருப்பது குறித்து.**

***திரு. சா பீட்டர் ஆல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தென் மாவட்டங்களில் ஒரு பழமொழி உண்டு. 'மகன் இறந்தாலும் பரவாயில்லை, மருமகள் தாலி அறுத்தால், அதாவது விதவையானால் சரி' என்று சொல்வார்கள். (குறுக்கீடு)



1989 ஏப்ரல் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பழமொழிகள் நாடு முழுவதற்கும் சொந்தம். திடீரென்று தென் மாவட்டத்திற்கு மட்டும் அதை உடமை ஆக்கக் கூடாது.

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** எனவே மாமியாரைப் போன்ற ஒரு மனப்பான்மை இந்த அரசுக்கு இருக்கிறதோ என்று தான் ஐயப்படுகிறேன். நேற்றைய தினம் அரசு எல்லா கைத்தறி, பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் குழுவை கலைத்திருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஜனநாயக அடிப்படையில் தேர்தல் நடத்த வேண்டுமென்பதிலே எங்களுக்கு எந்தவிதமான அபிப்பிராய பேதமும் இல்லை. ஆனால் ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுக்களைக் கூட கலைக்க வேண்டிய அவசியம் எந்த வகையில் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை.

தஞ்சையிலே குறிப்பாக திருப்புவனம் கூட்டுறவுச் சங்கத்தைப் பற்றி அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. 1955 ஆம் ஆண்டு காங்கிரஸ் சர்க்காரால் பெறப்பட்ட மிக அழகான குழந்தை அது. 1955–56-லே ரூ. 1,200 மூலதனத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்த சொசைட்டி இன்றைக்கு ரூ. 4½ கோடி அளவிற்கு வருஷத்திற்கு. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காங்கிரஸ் கட்சி என்று சொல்லும்போது அழகான பெண் என்கின்றீர்கள். அழகான குழந்தை என்கின்றீர்கள். அதில் என்ன ஒரு தனிச் சிறப்பு ?

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** அழகாக இருப்பதினால் அழகாக என்று சொன்னேன். (சிரிப்பு)

1987-88-ல் ரூ. 4½ கோடிக்கு அந்தக் கூட்டுறவுச் சங்கம் வியாபாரம் செய்திருக்கிறது. ரூ. 70 இலட்சம் லாபம்சம் பாதித்து இருக்கிறது. நான் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. ராஜகோபாலன் அவர்கள் 32 ஆண்டுகள் தலைவராக இருந்து, கூட்டுறவு இயக்கம் எப்படி இருக்கவேண்டுமென்று தமிழ்நாடு முழுவதற்கும் சொல்லிக் கொடுக்கக் கூடிய அளவிற்கு அந்தச் சங்கத்தை நடத்தியிருக் கிறார்கள். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவிலே இருக்கக் கூடிய அந்த சங்கத்தைக்கூட இன்று கலைத்திருக்கிறார் கள். காங்கிரஸ்காரர்கள் கையிலே கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கக் கூடாது என்கின்ற உணர்வின் காரணத்தால் கூட்டுறவு உணர்வு களை அழித்துவிடக் கூடிய ஒரு சூழ்நிலை வரக் கூடாது என்று நான் மிகப் பணிவோடு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே நியமனம் செய்யப்பட்ட குழுக்களை நீங்கள் கலையுங்கள். அதற்குத் தேர்தல் நடத்துங்கள். ஆனால் ஜனநாயக முறையில் நடைபெறக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களே தமிழ்நாட்டில் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிலேதான் இருக்கின்றன.

அந்தக் கூட்டுறவுச் சங்கங்களாவது செயல்படக் கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுக்க இந்த அரசின் கவனத்தை நான் ஈர்க்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்டக் சங்கம் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், தலைவராக இருக்கிறார் என்பதற்காகக் கலைக்கப்படவில்லை. தமிழ்நாட்டிலேயே வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல ஒரு காங்கிரஸ்காரர் நல்ல முறையிலே அந்தச் சங்கத்தை நடத்திக் கொண்டு வரலாம். ஆனால் 1976 ஆம் ஆண்டு சுமார் 15 ஆயிரம் சங்கங்கள் அரசியல் காரணங்களுக்காக, ஒரே நாளில் எந்த விதமான காரணமும் சொல்லாமல் அன்றைய அவசர காலச் சட்டத்தை அமல்படுத்தி தி.மு.க. ஆட்சியைக் கலைத்தபோது—எல்லாச் சங்கங்களையும்—கலைத்தார்கள். அதற்காக இந்தச் சங்கத்தை இப்போது நாங்கள் கலைக்கவில்லை.

இப்போது தமிழ்நாட்டிலே சில சங்கங்கள் தேர்ந்து எடுக்கப்பட்ட சங்கங்கள் என்ற பெயராலே 10 ஆண்டுக் காலமாக தேர்தலே நடத்தாமல், தொடர்ந்து இயங்கிக் கொண்டு வருகின்றன. இந்த அரசாங்கம் குறிப்பாக தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். இந்த ஆணையை ஏற்று சட்ட திட்டங்களைத் திருத்தி இந்தக் கூட்டுத் தொடரிலேயே . சட்ட திட்டங்கள் வர இருக்கின்றன. அதற்கிடையில் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு இப்போது இருக்கக்கூடிய சங்கங்கள் இடையூறாக இருந்து கொண்டிருக்கின்றன. வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சங்கம் இடையூறு இல்லாமல் இருக்கலாம். அதற்காக இப்போது ஒரு சங்கத்தை மட்டும் விட்டு விட்டு மற்ற சங்கங்களை கலைக்க முடியாது. எனவே எல்லாச் சங்கங்களையும் கலைத்து, புதிய உறுப்பினர்கள் எல்லா சங்கங்களிலும் இடம் பெறக்கூடிய அளவுக்கு ஏற்பாட்டைச் செய்து விரைவிலே தேர்தல் நடத்த இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தத் தலைவர் அவர்கள் மக்களிடத்திலே செல்வாக்கு பெற்றவர்களாக இருப்பார்களேயானால் மீண்டும் அவருக்கு அந்தச் சங்கத்திலே தலைவராக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. என். கணபதி :** பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்திலே டாக்டர் கலைஞர் கருணாநிதி பட்டு கைத்தறி கூட்டுறவுச் சங்கம் என்கிற ஒரு சங்கம் இருக்கிறது. அந்தப் பெயரை மாற்ற வேண்டுமென்று சென்ற ஆட்சியாளர்கள் முயன்ற நேரத்தில் உயர்நீதி மன்றத்தில் வழக்கு போட்டு அந்தப் பெயரை நிலை நிறுத்தினோம். தேர்தலே நடக்காமல் இருந்த அந்தச் சங்கத்திற்கு 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தேர்தல் நடத்தி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கிருஷ்ணன்



என்கிற தலைவர் ஜனநாயக ரீதியிலே தேர்ந்து எடுக்கப்பட்டார். தேர்ந்து எடுக்கப்பட்டவரின் பதவிக் காலம் இன்னும் 2 ஆண்டுக் காலம் இருக்கிறது. அப்படி இருக்கிற நேரத்தில் ஒட்டு மொத்தமாகச் சங்கங்களைக் கலைக்கிற இந்த உத்தரவை வைத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட, அதுவும் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெயராலே இருக்கிற சங்கத்தின் நிர்வாகக் குழுவைக் கலைப்பது எப்படிச் சரியாகும்? அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கணபதி அவர்கள் எடுத்துச் சொன்னதிலேயிருந்து கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு நோக்கத்திற்காகத்தான் இந்த அரசு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதை காங்கிரஸ் உறுப்பினர்கள் அறிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** இந்தக் கேள்வி, ''நீ அடிக்கிறது போல் அடி, நான் அழுவது போல் அழுகிறேன்'' என்று சொல்வது போல் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தின் முதலமைச்சராக இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே முதலமைச்சராக இருந்தபோது இதே கூட்டுறவுச் சங்கம் 10 ஆண்டுக் காலம் இதே தலைவர் மூலம் இயங்கி வந்தது. அப்போது நாங்கள் அதைக் கலைக்க விரும்பவில்லை, கலைக்கவும் இல்லை என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(இ) நெய்வேலி அனல் மின் நிறுவனத் தொழிலாளர்கள் வேலை நிறுவனத்தால் ஏற்பட்டுள்ள நிலை.**

***திரு சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் மின் பற்றாக்குறையால் தத்தளித்துக் கொண்டு இருப்பதை அனைவரும் அறிவார்கள். இந்தச் சூழ்நிலையில் நேற்று நள்ளிரவு முதல் நெய்வேலியில் உள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதன் விளைவாக மேலும் இந்தப் பிரச்சினை சிக்கலாகி இருக்கிறது, என்பதை நாம் அனைவரும் அறிய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒரு வேலை நிறுத்தம் வராமல் இருப்பதற்காக, தடுப்பதற்காகத்தான் நேற்றைக்கு முன் தினமே நான் ஒரு அவசர ஒத்தி வைப்புத் தீர்மானம் 56-வது விதியின் கீழ் கொடுத்திருந்தேன். நேற்றைக்கே அது வந்திருந்தால் இந்த வேலை நிறுத்தம் கூட வராமல் இருந்திருக்கும். இந்த வேலை நிறுத்தத்திற்கு அடிப்படையான காரணங்கள் 2. ஒன்று அங்கே ஊதிய ஒப்பந்தம் முடிந்து கிட்டத்தட்ட 23

ஆண்டுகள் ஆகிவிட்டன. 31—8—1986-ல் அந்த ஊதிய ஒப்பந்தம் முடிந்து விட்டது. இதர பொது நிறுவனங்களில் எல்லாம் ஸ்டீல், கோல், ஐ.ஓ.சி., பி.எச்.இ.எல். போன்ற எல்லா இடங்களிலும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு ஒப்பந்தம் முடிந்துவிட்ட சூழ்நிலையில், அங்கிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு தங்களுடைய பிரச்சினை தீரவில்லை என்ற எழுச்சியும் கொந்தளிப்பும் இருந்து கொண்டிருக்கிறது.

(முற்பகல் 10.10)

இன்னொரு முக்கியமான காரணம் ஆரம்பத்திலேயிருந்து அங்கே இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய சங்கம், அந்தச் சங்கத்திற்கு நானே தலைவராக இருந்து கொண்டிருக்கிறேன். 1953 லேயிருந்து. இதர சங்கங்களையெல்லாம் அழைத்துப் பேசுகிறார்கள். 900 பேர்களை, 1000 பேர்களை, 500 பேர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கக் கூடிய சங்கங்களை எல்லாம் அழைத்துப பேசுகிறார்கள். அந்தச் சங்கம் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருப்பது. அதே மாதிரி எச்.எம்.எஸ். சங்கம் அது மூவாயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருக்கக்கூடியது. 8 ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்டிருக்கக்கூடிய இந்த இரண்டு சங்கங்களையும் அழைக்காமல் அங்கு பேச்சு வார்த்தை நடத்தப்படுகிறது. நான் இந்தச் சமயத்திலே கூற பிரியப்படுகிறேன். இப்படிப்பட்ட வேலை நிறுத்தக் காலங்களில் ஆரம்பக் காலத்திலிருந்தே எங்களுடைய சி.ஐ.டி.யு. சங்கம் தான் அங்கு தொழில் உறவை நிலைநாட்டுவதற்கும் அமைதியை நிலைநாட்டுவதற்கும் உறுதுணையாக இருந்திருக்கிறது என்பதை இந்தச் சமயத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1967 ஆம் ஆண்டிலே அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே அங்கே ஒரு வேலை நிறுத்தம் நடைபெற்றது. அந்த வேலை நிறுத்தத்தை முடித்து வைப்பதற்காக—அந்தச் சங்கத்தினுடைய தலைவராக அனந்த நம்பியார் அங்கே இருந்தார்கள். இங்கே இருந்து நான் துணைத் தலைவர் என்ற முறையிலே சட்ட மன்றத்திலேயிருந்து அங்கு அனுப்பப்பட்டு ஒரு நாளிலேயே அந்த வேலை நிறுத்தம் முடிக்கப்பட்டது.

இன்னொன்றும் நான் இந்தச் சமயத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். 1970ஆம் ஆண்டு ஒரு பெரிய அமளி துமளி கொந்தளிப்பும் நெய்வேலியிலே ஏற்பட்டது. அதை நம்முடைய கலைஞர் அவர்கள் கூட 'நெஞ்சுக்குநீதி' என்ற அவருடைய நூலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னையும் பிரத்யேகமாகக் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள். கோவிந்தராஜன் அவர்கள் அங்கு சென்று இன்னும் மற்ற காட்டூர் கோபால் உட்பட அனைவருடனும் சேர்ந்து அமைதியை நிலை நாட்டுவதற்குப் பாடுபட்டிருக்கிறார்கள் என்று கலைஞர் அவர்களால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சங்கம் பெருவாரியான உறுப்பினர்



களைக் கொண்டிருக்கக்கூடிய சங்கம் இந்தச் சமயத்திலே புறக்கணிக்கப்பட்டு இருக்கக்கூடிய சூழ்நிலையின் காரணமாக அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்கள் மேலும் கொந்தளித்து எழுந்து இருக்கிறார்கள். நேற்றுக்கு முந்திய தினம் 4,000, 5,000 பேர்களுக்கு மேலே தொழிலாளர்களைக் கொண்ட சைக்கிள் ஊர்வலம், ஒன்றும் நடத்தப்பட்டது. மைனாரிட்டி சங்கங்கள் என்று எப்படித் தெரிகிறது என்று சொன்னால்—நேற்று நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் அத்தனை தொழிலாளர்களும், அனைத்து கட்சியைச் சேர்ந்த, அனைத்து தொழிற் சங்கங்களைச் சேர்ந்த அவர்கள் அழைத்துக் பேசக்கூடிய தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் உட்பட பூராவும் சேர்ந்து பங்கு எடுப்பதன் விளைவாகத்தான் இந்த வேலை நிறுத்தம் இவ்வளவு வெற்றிகரமாக நடக்கிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வேலை நிறுத்த அறைகூவல் நோட்டீஸ் 31—3—89ல் கொடுக்கப்பட்டது. ஆனால் அங்கே மத்திய அரசுக்கும் பொறுப்பான அதாவது சென்ட்ரல் ஸ்பியரிலே இருக்கக்கூடிய ரீஜினல் லேபர் கமிஷனர் 3 தடவை அழைத்துப் பேசியிருக்கிறார்கள். நெய்வேலியில் 3ல் ஒரு பகுதிதான் அவர்களுக்கு பொறுப்பு. 3-ல் 2 பகுதியாக ஸ்டேட் ஸ்பியரில் இருக்கக்கூடிய நம்முடைய லேபர் கமிஷனர் அதைப்பற்றிக் கவலைப்படவே இல்லை. ஒரு தடவை கூட அழைத்துப் பேசவில்லை. இப்படிப்பட்ட மனப்பான்மையை, தொழிலாளர்சம்பந்தமான கொள்கையை வைத்திருக்கக்கூடிய தமிழக அரசில் இருக்கக்கூடிய சில அதிகாரிகளுடைய மனப்பான்மையாக இருக்கின்ற காரணத்தினால்தான் இந்தப் பிரச்சினை முற்றி இந்தச் சூழ்நிலைக்கு வந்திருக்கிறது. அவர்களை அழைத்து பேசுவதே இல்லை என்ற நிலைமையில் 22 ந் தேதியிலிருந்து சி.ஐ.டி.யு. சங்கத்தைச் சேர்ந்த பொதுச் செயலாளர் ராமகிருஷ்ணன் அவர்களும், எச்.எம்.எஸ். சங்கத்தைச் சேர்ந்த பொதுச் செயலாளர் கோபாலன் அவர்களும் அவர்களுடைய தலைமையின்கீழ் 16 தொழிலாளர்களும் தொடர்ந்து உண்ணாவிரதம், இருந்து 5, 6 நாட்களாக அவர்கள் வாடிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே இந்த உண்ணாவிரதம், வேலை நிறுத்தம் என்பதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அதற்கு முக்கியமான காரணம் அந்தச் சங்கங்களைப் புறக்கணிப்பது, போன்றயை தொழிலாளர்களின் பிரச்சனையை நீடிக்க விடுவது என்ற காரணத்தினால்தான். இது பத்திரிகையில் வந்திருக்கக்கூடிய விஷயம். இந்த விஷயத்தில் உரிய முடிவெடுத்து அதை முடிப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை மாநில முதல்வர் அவர்களும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, கடுமையான மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், நெய்வேலியிலே அனல் மின் நிலையத்தில் தொழிலாளர்கள் இன்றைய தினம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்

டிருக்கிறார்கள். இதற்கான காரணத்தை இங்கே தோழர் கோவிந்தராஜன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நாம் அவர்கள் என்ன காரணத்திற்காக உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்று பார்ப்பதை விட, அந்தப் போராட்டம் உடனடியாக முடித்து வைக்கப்பட வேண்டிய ஒன்று என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. கோவிந்தராஜன் அவர்களுடைய தலைமையில் இருக்கக்கூடிய சி.ஐ.டி.யு. வும் எஸ்.சி.சி. அந்தோணிபிள்ளை தலைமையிலே இருக்கின்ற இந்து மஸ்தூர் சபாவும் போராட்டத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்தத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் கட்சி வேறுபாடு இல்லாமல் அனைத்துத் தரப்பினரும் ஒன்று சேர்ந்து தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று போராடிக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்திற்கு உண்மையான காரணம் அங்கே நிலவுகின்ற தொழிலாளர் விரோதப் போக்கு. தமிழக அரசு இந்த தொழிலாளர் விரோதப் போக்கை ஆதரிக்காமல் இந்தப் போராட்டத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்ய வேண்டும். குறிப்பாக 16 தோழர்கள் 5 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள் சாகும்வரை. இதை உடனடியாக முடித்து வைக்க தமிழக அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் 638 மெகாவாட் மின்சார உற்பத்தியாகிக்கொண்டிருந்த இடத்திலே இன்றோடு 100 மெகாவாட்டுக்குக் கீழே போய்விடும் என்று சொல்கிறார்கள். அப்படி என்று சொன்னால் 530 மெகாவாட் குறையப்போகிறது. எனவே இது அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அரசு இதுவரை என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். உடனடியாக இந்தப் போராட்டத்தை முடித்து வைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான பிரச்சனை. இந்த மன்றத்திலே எழுப்பப்பட்டு இருக்கின்ற காரணத்தினாலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எங்களுடைய கருத்துக்களை நாங்கள் இணைத்துக் கொள்கின்றோம். மின் வெட்டு ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் தொழிலாளர் மத்தியிலே ஏற்பட்டிருக்கின்ற இந்தப் போராட்டம், அதைவிட உண்ணாவிரதம் ஆகியவற்றை எல்லாம் நீக்குகின்ற விதத்திலே, உற்பத்தி பாதிக்காமல் இருக்கின்ற விதத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தலையிட்டு, தொழிற்சங்கத் தலைவர்களையும், அந்த நிர்வாகத்தினரையும் அழைத்து நேரிடையாகப் பேச்சுவார்த்தை நடத்தி இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு கண்டு மின் உற்பத்தியைப்





பெருக்கிட இந்த அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாங்கள் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் நான் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன். தொழிலாளர்கள் சில கோரிக்கைகளை முன் வைத்து, சி.ஐ.டி.யூ., அதைப்போலவே, அந்தோணிப்பிள்ளை அவர்கள் தலைமையிலே உள்ள தொழிற் சங்கத்தினர் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. நிர்வாகத்தின் சார்பாக இன்று வந்துள்ள தகவலின்படி, அப்படி ஒன்றும் அதிகமாக மெகாவாட் குறைந்துவிடவில்லை. கிட்டத்தட்ட 600 மெகாவாட்டை எட்டியிருக்கிறோம் என்று தகவல் வந்திருந்தாலும், இதிலே நான் வீம்புப் பேச்சுக்கு இடம் கொடுக்க விரும்பவில்லை. அது என்னுடைய இயல்பும் அல்ல என்பது இந்தப் பிரச்சினையை எழுப்பிய நண்பர்கள் அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். நிர்வாகம், போராடிக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்களுடைய, உண்ணா நோன்பில் ஈடுபட்டு இருக்கின்ற தொழிலாளர்களுடைய உணர்வுகளை மதிக்கின்ற வகையில் இந்த அரசின் சார்பில் நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் வாயிலாகவும், தேவைப்பட்டால் என் மூலமாகவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இப் பிரச்சினையை எழுப்பியவர்களே, இன்றைக்கு இருக்கின்ற மின் பற்றாக்குறையினால் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள அவதிகளைப் பற்றி எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அதையும் தொழிலாளர்கள் கவனத்திலே வைத்துக்கொண்டு, மேலும் அவதி ஏற்படுவதற்கு தொழிலாளர்களும் காரணமாக இருந்தார்கள் என்கின்ற பழியைச் சுமக்காமல், என் வேண்டுகோளை ஏற்று உண்ணாநோன்பையும், வேலைநிறுத்தத்தையும் கைவிட்டு விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அரசின் சார்பில் நிர்வாகத்தோடு தக்க முறையிலே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

### (ஈ) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் மாணவர்கள் வேலை நிறுத்தம் குறித்து

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நோயாளி ஒருவர் கொடுத்த தகவலை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னால் வைக்கவேண்டும் என்பதற்காக நான் எழுந்து நிற்கின்றேன். அனுமதித்ததற்கு நன்றி. தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே இன்று 'ஹவுஸ் சர்ஜன்ஸ்' என்று சொல்கிற பயிற்சி டாக்டர்கள் எல்லாம் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அதனாலே

நோயாளிகள் கவனிக்கப்படுவது மிகவும் பாதிக்கப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். நான் விவரம் கேட்டபோது, சின்னசாமி என்று சொல்கின்ற ஒரு மாணவருக்கு 'இன்டர்னல் அசெஸ்மென்ட்' என்று சொல்கின்ற குறிப்பினை அனுப்பாத காரணத்தினாலே அவர் திருப்பித் திருப்பி இரண்டு தடவை பரீட்சை எழுதியும், தேர்விலே தோல்வியுற்றிருக்கிறார். அவரே யூனிவர்சிட்டியிலே வந்து பார்த்த போது, 'இன்டர்னல் அசெஸ்மென்ட்' அனுப்பாத அந்தக் குறை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. யாரோ ஒரு எழுத்தர் வேண்டுமானால் அந்தத் தவறைச் செய்திருக்கலாம்; வேண்டுமென்றே செய்ததாக நான் கருதவில்லை. இருந்தாலும் இரண்டு முறை அவர் தோற்றுப் போன காரணத்தால், அவருடைய வாழ்க்கை மிகவும் பாதித்து விட்டது என்று அங்கே வேலை நிறுத்தத்திலே (குறுக்கீடு) ஆமாம், மற்ற சப்ஜெக்ட்ஸிலே எல்லாம் பாஸ் பண்ணியவர்; இதிலே மட்டும் பாஸ் பண்ணாத காரணத்தி னாலே அவருடைய வாழ்க்கையிலே பெரிய பாதிப்பு ஏற்பட்டு விட்டதாகக் கருதி, மற்றவர்கள் வேலைநிறுத்தம் செய் கிறார்கள். வேலைநிறுத்தம் செய்கின்ற காரணத்தினாலே நோயாளிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதனாலே ஏதோ ஒரு வகையிலே அவர்களுக்கு ஒரு ஆறுதல் சொல்கின்ற வகையிலே பதில் கிடைக்குமானால் வேலைநிறுத்தம் நின்று, அந்த மாணவருக்கும் ஆறுதல் கிடைத்து, நோயாளிகளும் பயன் பெறுவார்களே என்பதற்காக இதைச் சொல்கிறேன்

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் எடுத்துக் கூறியதைக் கவனத்திலே கொள்கிறோம். ஆனால் தங்களிடத்திலே அனுமதி பெற்று அவர்கள் இங்கே அதைக் கூறியிருக்கின்றார்கள். எதற்கு அனுமதி கொடுத்திருக் கிறீர்கள் என்ற விவரமாவது எங்களுக்கு முன்கூட்டித் தெரிந் திருந்தால் அதைப்பற்றி ஏதாவது ஒரு விவரம், ஒரு மின்னல் வேகத் தொலைபேசி மூலமாகவாவது தஞ்சைக்குத் தொடர்பு கொண்டு நாங்கள் பெற்றிருக்க முடியும், கேள்வி நேரத்தின் போது, அதைப் பெற இயலவில்லை. என்ன விவரம் என்று அறிந்து எது நியாயமோ அதைச் செய்வதற்கு இந்த அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**வேதாரண்யம் நகரத்தில் காங்கிரஸ் தொண்டரைச் சிலர் கொலை செய்துள்ளதாகக் கூறப்படுவது குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், சா. பீட்டர் ஆல்போர்ன்ஸ். பி.வி. இரா ஜேந்திரன் ஆகியோர், ''தஞ்சை மாவட்டம் வேதாரண்யம்



நகரில் 20–4–1989 மாலை காங்கிரஸ் கட்சியினைச் சார்ந்த உப்புத் தொழிலாளி வேலுத் தேவர் மகன் சுப்பிரமணியத் தேவர் என்பவரை, ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்கள், போலீசார் முன்னிலையில் அடித்துக் கொலை செய்திருக்கிறார்கள்; அதைத் தொடர்ந்து காங்கிரஸ் மற்றும் அ.இ.அ.தி.மு.க. வினரின் கடைகளும், வீடுகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. அந்தப் பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாக கூறும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். திரு. பி.வி. இராஜேந்திரன். (குறுக்கீடு).

(முற்பகல் 10–20.)

**திரு. பெ. சீனிவாசன் :** ஒத்திவைப்புத் தீர்மானத்தில் ''ஆளும் கட்சிக்காரர்கள் கொலை செய்து'' என்று சொல் கிறார்கள். இது அவ்வளவு பொருத்தமானது அல்ல. '' The case might be under Police investigation. ஆளும்கட்சிக் காரர்கள் கொலை செய்து'' என்றால் அவர்களே அப்போது நடவடிக்கை எடுத்து இருக்கலாமே! அந்த அலிகேஷன் சரியில்லை. யாரோ கொலை செய்து இருக்கிறார்கள். அப்படி தான் அந்த வார்த்தை இருக்கவேண்டும். அதை மாற்றச் சொல்லவேண்டும்.

**Thiru M. Sundara doss :** The F. I. R. is line that—

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** The hon. Member.s stand is wrong. It Is only an allegation, we allege that such an incident has happened. It is for the Governmen to come forward and .........

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி உறுப்பினர்கள் குறிப்பிடும்போது அவர்கள் பேசுகின்ற நேரத்தில் குறிப்பிடுவது என்பது வேறு; ஆனால் தலைவராக இருக்கக்கூடிய தாங்கள் அறிவிக்கின்ற நேரத்தில் ஏதோ ஆளுங்கட்சியின் மீது ஒருபழியைச் சுமத்துகின்ற வகையில் அந்தச் சொற்றொடர் அமைந்து இருக்கின்ற காரணத்தால், இனிமேல் அப்படிப்பட்ட வார்த்தைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இவை அனைத்தும் கவனத்தில் வைக்கப்படும்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20-4-1989 மாலை 4-40 மணி அளவில் என்னுடைய சட்டமன்றத் தொகுதி வேதாரண்யம் நகரத்தில் நடுக்கடை வீதியில் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த தொண்டர் சுப்பிரமணிய தேவர் என்பவரை ஆளுங்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் அடித்து, கழுத்தை நெரித்துக்கொலை செய்து இருக்கிறார்கள். அராஜகத்திலிருந்து அப்பாவி மக்களைப் பாதுகாக்கவேண்டிய காவல் துறையினர் அருகிலேயே அவர்கள் நிற்கின்றபோது ஆளுங்கட்சி நண்பர்கள் இந்த மிகப்பெரிய கொடுமையை அரங்கேற்றியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக கொலை செய்த ஆளுங்கட்சி நபர்களைக் கைது செய்து போலீஸ் வேனில் ஏற்றும்போது ஆளுங்கட்சி நண்பர்கள் சேர்ந்து போலீஸ் வேனை மறித்து கைது செய்யப்பட்ட ஒருவரை மீட்டுவிட்டு இருக்கிறார்கள். நகர திராவிட முன்னேற்றக் கழகம் இந்த கொலையை மறைத்து சைக்கிளிலிருந்து சுப்பிரமணிய தேவர் கீழே விழுந்து இறந்து விட்டார் என்றும் போலீசார் தி.மு.கவினர் மீது பொய் வழக்குபபோடுகிறார்கள் என்றும் மேலும் இதனை விசாரிக்க நீதி விசாரணை தேவை என்றும் எஸ்.ஐ. அலுவலகத்திற்கு முன்னால் போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னால், தாலுக்கா அலுவலகத்திற்கு முன்னால் அன்றைக்கே துண்டுப் பிரசுரத்தை அடித்து விட்டு, ஆர்ப்பாட்டத்தை நடத்தி இருக்கிறார்கள். அந்தத் துண்டு அறிக்கையை உங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இன்றைக்கு நான் கொண்டு வருகிறேன்.

(துண்டு அறிக்கை மாண்புமிகு பேரவைத்தலைவர்அவர்களிடம் கொடுக்கப்பட்டது.) விசாரணை செய்கின்ற போலீசாரை ஆளுங்கட்சியினர் இன்றைக்கு மிரட்டிக்கொண்டு இருக்கிறார்கள். பொய்வழக்கு போடாதீர்கள், ஜோடிக்காதீர்கள் என்ற கோஷங்களை எல்லாம் போட்டு அங்கே ஆர்ப்பாட்டத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அதை அனுமதிக்க மாட்டேன் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தேர்தல் வெற்றிக்குப் பின்னால் கூட வெற்றி விழா என்ற பெயரில் வெறியாட்டங்கள் வேண்டாம் என்று பகிரங்கமாக அறிக்கை எல்லாம் கூட விட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதற்கும் அங்கே நடப்பதற்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது என்பதை நான் இன்றைக்கு அரசின் கவனத்திற்கு கொண்டு வரக்கடமைப்பட்டிருக்கிறேன். முதலமைச்சரின் சொந்த மாவட்டமான தஞ்சையில் அதிலும் திருக்குவளைக்கும் திருமறைக் காட்டுக்கும் சுமார் 25 கல் தொலைவில் இப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் நடக்கின்றன என்றால் அதனை நான்



மீண்டும் ஒரு முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு இருக்கின்ற பதட்ட நிலைகளை எல்லாம் எண்ணுகின்ற போது கடந்த கால அரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்களையும், தொண்டர்களையும் கத்தி வைத்துக்கொள்ளவேண்டும் என்ற ஒரு ஆலோசனையைச் சொன்னார்கள். இன்றைக்கு இருக்கின்ற ஆந்திர அரசு அங்கே இருக்கின்ற மக்களை வன்முறைகளிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு படைகல உரிமைகளை எல்லாம் கொடுத்து மக்களுக்குப் பாதுகாப்புத் தருகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். இப்போது எங்களுக்கு இந்த அரசு என்ன ஆலோசனை தர இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் வினாவாக எழுப்புகிறேன். மேலும் இதுபோன்ற வன்முறைச் சம்பவங்கள் கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் எஸ்.பி. ஒருவர் இல்லாததால் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இரண்டு மாதமாக அங்கே எஸ்.பி. இல்லை. வேதாரண்யம் ஸ்டேஷனில் ஒரு எஸ்.ஐ. கிடையாது. அன்று சம்பவம் நடந்த நேரத்தில் எஸ்.ஐ. இராமநாதபுரத்திற்கு மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் பந்தோபஸ்த்துக்கு சென்று இருந்தார்கள். அவர் கூட கிரேடு 1 போலீசிலிருந்து எலிவேட் ஆனவர். இன்றைக்கு அங்கே எஸ்.ஐ. கிடையாது. புரோ எஸ்.ஐ. இருக்கிறார். மற்றபடி கிரைம் எஸ்.ஐ. இருக்கிறார், 3, 4 எஸ்.ஐ. இருக்கிறார்கள். இந்த விவகாரம் நடந்து இருக்கிறது. மேலும் அன்றைக்கு அந்தச்சம்பவம் நடந்த காலை 11-30 மணியிலிருந்தே வேதாரண்யத்தில் பதட்ட நிலை இருந்து இருக்கிறது. அங்கே அதிகமாக விற்கப்படுகின்ற எரி சாராயத்தின் மூலமாகத் தான் இந்தச் சம்பவம் முளைத்து இருக்கிறது. அந்தச் சம்பவத்திற்கு ஆணி வேரே அங்கே எங்கே இருக்கிறது என்று பார்த்தால் அந்த எரி சாராயத்தில் தான் ஆரம்பித்து இருக்கிறது. அதை எல்லாம் குடித்த பிறகு தான் காலை 11-30 மணியிலிருந்தே வீதியில் கலாட்டா. அங்கே இருக்கின்ற இன்ஸ்பெக்டர் ராமசாமி என்பவரும், மற்றும் 17 காவலர்களும் அங்கே இருக்கிறார்கள், மேலும் வீதியில் நின்று இருக்கிறார்கள். அவர்களுடைய கண்ணுக்கு முன்னால் தான் இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. உடனடியாக அந்த, இறந்தவருடைய உடலைக் கூட அந்தப் போலீஸ் வேனில் தான் தூக்கிக்கொண்டு சென்று இருக்கிறார்கள். ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு உடனடியாக எடுத்துக்கொண்டு சென்று இருக்கிறார்கள்.

எனவே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக இந்த அரசைக் கேட்டுக் கொள்வது, மேலும் மேலும் 10 சுப்பிரமணியத் தேவர்கள் விழுந்து விடுவதற்கு முன்னால், காங்கிரஸ் தொண்டர்களுக்கும் மற்ற மக்களுக்கும் பதட்டங்கள் ஏற்படுவதற்கும் அச்சங்கள் ஏற்படுவதற்கும் முன்னால், நல்ல பொறுப்பான எஸ்.பி.-யையும், எஸ்.ஐ-க்களையும்

அந்த இடத்திற்கு நியமித்துத் தாருங்கள் என்று இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாகக் கேட்டுக்கொண்டு, இன்றைக்கு எழுந்திருக்கின்ற இந்தப் பதட்ட நிலைமை குறித்து இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று உங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர், -நான் சொந்தம் பாராட்டுவதற்காக தாங்கள் தடுக்கக்கூடாது— தம்பி இராஜேந்திரன் கொண்டு வந்துள்ள இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது, போலீசார் சார்பாக எனக்குத் தந்துள்ள தகவலை முதலில் படித்து விடுவது நலம் என்று கருதுகிறேன். ஏனென்றால், அங்கே வெளியிடப்பட்டுள்ள நகர திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது ஒன்றியக் கழகத்தினுடைய துண்டு அறிக்கைக்கும் போலீசார் நடவடிக்கைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. துண்டு அறிக்கையே, போலீசார் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்பதை ஆட்சேபித்துத்தான் போடப்பட்டு இருக்கிறது. அதிலிருந்து போலீசார் நடுநிலையோடு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்கின்ற உண்மை தெளிவாகப் புரிகிறது.

வேதாரண்யம் பகுதியில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சுப்பிரமணியம் என்பவர் மரணம் அடைந்ததையொட்டிக் காவல் துறை மூலமாகப் பெறப்பட்ட தகவலை முதலில் படிக்கிறேன்.

''பல மாத காலமாகத்தொடர்ந்து வேதாரண்யம் நகரத்தில் இது போன்ற சம்பவங்கள், வன்முறைச் சம்பவங்கள் நீடித்து வருகின்றன. 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வேதாரண்யத்தில், நடைபாதையிலே ஆக்கிரமிப்புச் செய்திருந்த சிறு கடைகளையும் குடிசைகளையும் நெடுஞ்சாலைத்துறை மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் காவல் துறையினரின் பாதுகாப்போடு அப்புறப்படுத்தினர். அதன் பின்னர் காங்கிரஸ் கட்சி அனுதாபிகளான சிலர், அதாவது நடைபாதை கடை வியாபாரிகள் தற்காலிகமாக அங்கே கடைகளை அமைத்தனர். கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழக அனுதாபிகளான ஆறுமுகத் தேவர் மகன் ராஜேந்திரன், தம்புசாமித் தேவர் மகன் கந்தசாமி ஆகியோர் ராஜாஜி பூங்காவையொட்டி மரத்தால் செய்யப்பட்ட சிறு கடைகளைத்தொடங்கினர். இவைகளை பஞ்சாயத்துத் தலைவரின் அனுமதியோடு தொடங்கியதாக அவர்கள் கூறிக் கொண்டார்கள். மேலும் அந்தக் கடைகள் மீது வேதாரண்யம் பேரூராட்சி என்று வெள்ளை வர்ணத்திலே எழுதப்பட்டிருந்தது. இது குறித்து பிரச்சினை எழுந்ததால் அந்த எழுத்துக்கள், தி. மு. கழகத்தார் வைத்த அந்தக் கடைகளிலேயிருந்து அழிக்கப்பட்டன. மீண்டும் சில நாட்களில் அந்த இரு கடைகளும் ராஜாஜி பூங்காவிலேயிருந்து அகற்றப்பட்டு, பேரூராட்சி அலுவலகத்திலே கொண்டுபோய்



வைக்கப்பட்டு அதன் பின்னர் அந்தக் கடைகள் மேற்படி நபர்களிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் காங்கிரஸ் கட்சி அனுதாபிகளான தட்சிணாமூர்த்தி மற்றும் பழனிவேல் ஆகியோருடைய பெட்டிக் கடைகளையும் அப்புறப்படுத்தும்படி தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் பேரூராட்சி மன்றத் தலைவரிடமும் நிர்வாக அலுவலரிடமும் கூறியபோதிலும் எந்த நடவடிக்கையும் இது குறித்து எடுக்கவில்லை. அந்த வருத்தம் தி. மு. க. விடம் இருந்து வந்தது.

இதன் தொடர்பாக 20–4–1989 அன்று ஏற்கனவே அப்புறப்படுத்தப்பட்ட இரண்டு பெட்டிக் கடைகளையும் திரும்பக் கொண்டு வந்து ராஜாஜி பூங்கா அருகிலே மேல வீதியும் திருத்துறைப்பூண்டி சாலையும் சந்திக்கும் இடத்தில் தடையாக வைத்தார்கள். அந்த நேரத்தில், காங்கிரஸ் அனுதாபிகளுக்கு ஆதரவாக வேலையா என்பவரது மகன் சுப்பிரமணியத் தேவர் என்பவர் அங்கே சைக்கிளில் வந்தார். இந்த நபர், அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இல்லத்திலே வேலை செய்து வருபவர் என்று கூறப்படுகிறது. அவரைப் பார்த்தவுடன் பக்கிரிசாமி, குமாரவேலு, பூவரசன் மற்றும் மதியழகன் ஆகியோர், அவரை சைக்கிளிலேயிருந்து கீழே இழுத்துத் தள்ளி கைகளாலே அடித்தும் உதைத்தும் இருக்கிறார்கள். அதன் காரணமாக சுப்பிரமணியத் தேவர் மயக்கம் அடைந்தார். தகவல் அறிந்த திருத்துறைப்பூண்டிக் காவல்துறை ஆய்வாளர் தன்னுடைய குழுவோடு சென்று காயம்பட்ட சுப்பிரமணியத் தேவரை உள்ளூர் ஆரம்பச் சுகாதார நிலையத்துக்கு எடுத்துச் செல்ல, அங்கே அவர் இறந்துவிட்டதாக மருத்துவ அதிகாரி தெரிவித்தார். இதையொட்டி அகஸ்தியம்பள்ளி ராமர் தேவன் மகன் கார்த்திகேயன் என்பவர் எழுத்துமூலமாகக் கொடுத்த புகாரின் பேரில் திருத்துறைப்பூண்டி காவல்நிலைய குற்ற எண். 270/89, பிரிவுகள் 302 மற்றும் 34, இந்திய தண்டனைச் சட்டப்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கில் சம்பந்தப்பட்ட 4 எதிரிகள் கைது செய்யப்பட்டு காவலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். புகார் கொடுத்தவர் இந்த வழக்கில் வேதாரண்யம் வீரபத்திரன் மகன் சரவணன் மற்றும் நடேச மருத்துவர் மகன் நற்குணம் என்பவர்களும் இக்குற்றத்துக்கு உடந்தை என்று கூறிஉள்ளார்கள். இது குறித்தும் விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சம்பவங்கள் நடந்ததும் நகரில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேற்படி கொலை போலீசார் முன்னிலையிலே நடந்ததாக கூறப்படுவது உண்மையல்ல. காங்கிரஸ் மற்றும் அ.இ.அ.தி.மு.க. கட்சிகளைச் சேர்ந்தவர்களுடைய கடைகளும் வீடுகளும் கொள்ளையடிக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டன என்று கூறுவதும் உண்மையல்ல'' என்று போலீசார் தெரிவித்துள்ளார்கள்.

(முற்பகல் 10-30)

பிரேத பரிசோதனைக்குப் பிறகு உடலை ஊர்வலமாக நகரிலே எடுத்துச் செல்ல வேண்டுமென்று காங்கிரஸ் நண்பர்கள் வலியுறுத்தினார்கள். சட்டம், ஒழுங்குப் பிரச்சனையைக் கருதி சம்பவம் நடந்த இடம் மற்றும் சில இடங்களைத் தவிர ஊர்வலமாகச் செல்ல கேட்டுக்கொண்ட பிறகும் அதற்கு அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. எனினும் மிக விரிவாகப் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டு அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் பார்த்துக் கொள்ளப்பட்டு ஊர்வலம் நடந்தது. இறந்தவர்க்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் அவர்களுடைய ஆதரவாளர்கள் கடைகளை மூடினார்கள். அதே நேரத்தில் கடைகளைத் திறந்து வைக்க வேண்டுமென்று விரும்பியவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு தரப்பட்டது. இப்போது அமைதியான நிலையில் நகரம் உள்ளது.

இதனுடைய பின்னணி ஒன்றை நான் இங்கே கூற விரும்புகிறேன். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் இராஜேந்திரன் அவர்கள் அங்கே வெற்றிபெற்று இந்த அவைக்கு வந்திருக்கிறார்கள். தொடர்ந்து நான் அந்த வேதாரண்யம் தொகுதியைக் கவனித்துக் கொண்டு வருபவன். அங்கே இந்தத் தகராறு கட்சி அடிப்படையிலே என்று வெளியிலே மேல் முலாம் பூசப்பட்டாலும் கூட இதிலே அடிபட்டவர்கள் எல்லாம்—அடித்தவர்கள் அடிபட்டவர்கள், இந்த விவகாரத்திலே கலந்து கொண்டவர்கள் எல்லாமே அநேகமாக ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்பதை நாம் காண முடியும். எப்படியோ ஒரு தனி காழ்ப்பு உணர்வு அந்தப் பகுதியிலே ஏற்பட்டிருக்கின்றது. அது இன்றுள்ள இளைஞர்களுடைய குற்றமாக எனக்குத் தெரியவில்லை. ஒரு தலைமுறை மாறி இருக்கிற நேரத்தில் அரசியல் ரீதியான காழ்ப்பு உணர்வுகள் இன்று மிகுந்திருக்கின்றன. அவருடைய தந்தையார் கருப்பன் மகன் வெங்கடாசலத் தேவர் நல்ல தீவிர காங்கிரஸ்காரரர். அதைப் போல எனக்கு தீவிர நண்பர். இன்னும் சொல்லப் போனால் 1957 ஆம் ஆண்டு தி. மு. க. முதல் தடவையாக பொதுத் தேர்தலில் நிற்பதாக முடிவு எடுத்த போது நான் எங்கே நிற்பது என்று ஆலோசிக்க தஞ்சை மாவட்டம் சென்று, நாகப்பட்டினம் தொகுதியிலே நிற்பது என்று முடிவு எடுப்பதற்கு முன்பு வேதாரணியத்திலே கருப்பன் மகன் வெங்கடாசலத்தைத்தான் சந்தித்தேன். காட்டூர் இராமையா—தம்பிக்கு நன்றாகத் தெரியும்—அவர் தான் என்னைக் கருப்பன்மகன் வெங்கடாசலத்திடம் அழைத்துச் சென்றார். பழுத்த காங்கிரஸ்காரரான அவர் அன்றைக்கு எனக்கு விருந்தளித்து—விருந்து என்றால் அங்கே மான் கறிதான் போடுவார்கள்; வேட்டை நடத்தித்தான் விருந்தே நடைபெறும்—என்னை உற்சாகப்படுத்தி, ''தம்பி! நீ இங்கேயே நில்'' என்றார். நான் சொன்னேன் சாமியப்பமுதல்யார் மகன் என்.எஸ். ராமலிங்கம் நிற்கிறாரே காங்கிரசில் நான் நின்றால் வெற்றி பெற முடியுமா என்று நான் கேட்டேன். உன்னை ஜெயிக்க வைத்துக் காட்டுகிறேன் பார் என்று அன்றைக்கே எனக்கு உறுதி எல்லாம் அளித்தார்கள். நான் மாலை போட்டுக் கொண்டு, நாகைத் தொகுதியில் நிற்பதாகச் சொல்லிவிட்டு, நான் வந்து



விட்டேன். வந்தால் இங்கே அண்ணா அவர்கள் என்னை, 'நீ குளித்தலையில் நிற்கிறாய்' என்று அறிவித்து விட்டார்கள். அதை மீற முடியவில்லை. எனவே குளித்தலையில் நின்றேன். அந்த அளவுக்கு நம்முடைய இராஜேந்திரன் அவர்களுடைய தகப்பனாருக்கும் எனக்கும் நட்பு இருந்தது என்றால் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு நட்பு உணர்வு இருந்தது. காலகட்டத்திலே நீடிக்கப்பட்ட உணர்வுகள் எவ்வளவுதான் கட்சி வேறுபாடுகள் இருந்தாலும் கூட அதையும் கடந்து அந்தப் பண்பான நட்புகளும் அரசியல் உணர்வுகளும் அதற்கு அப்பாற்பட்ட ஒரு பண்பான முறையிலே ஏற்பட்டபோது பழக்க வழக்கங்கள் மாறி அதிலும் குறிப்பாக வேதாரண்யம் பகுதியிலே அறவே மாறி, ஒரு விரோத காழ்ப்பு உணர்ச்சி அளவிலே வந்திருக்கிறது.

இந்தச் சம்பவங்கள் அங்கே நடைபெற்றதற்குக் காரணம் அங்கே ஒரு எஸ். பி. இல்லை என்று குறிப்பிட்டார்கள். எஸ். பீ. அல்ல, டி.ஜி.பி.யே அங்கே இருந்தாலும்கூட அங்கே ஏற்பட்டிருக்கிற காழ்ப்பு உணர்வை மனங்கள் மாறினால் அல்லாமல் அதை யாராலும் மாற்ற முடியாது. எனவே அரசியல் காரணங்களுக்காக இப்படிப்பட்ட கொலைகள் நடை பெறுவதை, வன்முறைகள் நடைபெறுவதை நிச்சயமாக இந்த அரசு விரும்பாது. அதிலே யார் ஈடுபட்டாலும் தயவு தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கிறோம் என்பதற்கு அவர் இங்கே காட்டிய அந்த தி.மு.க. நோட்டீஸ் ஒன்றே போதுமான சான்றாகும். போலீசார் எடுத்த நடவடிக்கையைக் கண்டித்து, தி.மு.க. அங்கே நோட்டீஸ் விடுகிறது என்றால் அதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை, போலீசார் நடவடிக்கையைத்தான் ஏற்றுக் கொள்கிறது என்பதை எடுத்துக் கூறி, இந்த விளக்கங்களுக்குப் பிறகும் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை, என்று தலைவரவர்களே, தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. உரிமைப் பிரச்சினை.

### சென்னை வானொலி நிலையத்தின் மீது— பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள், ''தமிழக மக்கள் நலன்கள் சம்பந்தப்பட்ட 1989–90 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் பட்ஜெட் மீது 29–3–1989 ஆம் தேதி அன்று சட்டமன்றத்தில் நடந்த பொது விவாதச் செய்தி அன்றைய தினம் மாலை 6-30 மணிக்கான மாநிலச் செய்தியில் வேண்டுமென்றே

உள்நோக்கத்துடன் முற்றிலும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது.
அந்தச் செய்திதனைக் கேட்ட மக்கள் மத்தியில் 29-3-1989
தேதியன்று சட்டமன்றத்தில் பட்ஜெட் பற்றி எதுவும்
விவாதிக்கவில்லை என்ற தவறான எண்ணம் ஏற்படும் வகையில்
அமைந்துள்ளது. இது சட்டமன்றத்தை அவமதிப்பதாகும்''
என்று குறிப்பிட்டு அனைத்திந்திய வானொலி நிலையத்தார்
மீது அவை உரிமை மீறல் பிரச்சனை அறிவிப்பைக் கொடுத்துள்
ளார். இது குறித்து வானொலி நிலைய இயக்குநரிடம் விளக்கம்
கேட்கப்பட்டது. அதற்கு வானொலி நிலைய இயக்குநர் கீழ்க்
கண்ட விளக்கங்களை அளித்துள்ளார்.

''29-3-1989 ஆம் நாளன்று சட்டப் பேரவைத் தொடர்பான
பல்வேறு செய்திகளும், இதரச் செய்திகளும் செய்தி
அறிக்கையில், 10 நிமிட கால வரம்புக்கு அதிகமாக
இருந்ததால் நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்
மறுநாள் காலைச் செய்தியில் சேர்த்துக்கொள்ளப்
பட்டது. 10 நிமிடம் என்பது குறுகியகாலம் என்ப
தாலும், இதரச் செய்திகளையும் கொடுக்க வேண்டி
இருப்பதாலும் பொதுவாகப் பேரவைச் செய்தியின் ஒரு பகு
தியை மறுநாள் காலைச் செய்தி அறிக்கையில் கொடுப்பது மரபாக
இருந்து வருகிறது. 29-3-1989 ஆம் நாள் மாலைச் செய்தியில்
சுமார் 7 நிமிடம் அதாவது முக்கால் பகுதி சட்டப் பேரவை
செய்தியே இடம் பெற்றது. 30-3-1989 அன்று காலை 6-45
மணிச் செய்தியில் நிதிநிலை அறிக்கை மீது அதற்கு முந்தைய
நாள் நடைபெற்ற விவாதம் விவரமாகக் கொடுக்கப்பட்டது.
இதில் திருமதி பாப்பா உமாநாத் அவர்களின் விவாத விவரமும்
இடம் பெற்றது. இத்துடன் 29-3-1989 ஆம் நாள் மாலை
7 மணியிலிருந்து 10 நிமிடம் ஒலி பரப்பாகும் சட்டப்பேரவை
நடவடிக்கை பற்றிய விமர்சனத்தில் பேரவையின் இதர நடவடிக்
கைகள் பற்றிய செய்திகளோடு நிதிநிலை அறிக்கை விவாதமும்
தொடர்ந்து இடம் பெற்றது. இதிலும் திருமதி பாப்பா உமா
நாத் தெரிவித்த கருத்தும் இடம் பெற்றது. தொடர்ந்து
சட்டப் பேரவை நடவடிக்கைகள் வானொலி நிலையச் செய்தி
அறிக்கைகளில் ஆக்கப்பூர்வமான கோணத்தில் ஒலிபரப்பாகும்
என்பதை மிகவும் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''
என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே சென்னை வானொலி நிலைய இயக்குநரின் இந்த
விளக்கத்திற்குப் பிறகு இதில் மேலும் எந்த நடவடிக்கையும்
தேவை யில்லை என்று கருதி இந்தப் பிரச்சினையை இத்துடன்
முடித்து விடலாம் என்று பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்

தகவல் கோரல்—தொடர்ச்சி.

(உ) காவலிலுள்ள உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சந்த் உண்ணா
விரதம் முடித்தது குறித்த தகவல்.

**திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கடலூர் சிறைச்சாலையில் இருக்கிற நண்பர்
திரு. உகம்சந்த் அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டு இருக்கி



றார்கள் என்ற செய்தி வந்தது. அந்த உண்ணாவிரதத்தை
நிறுத்தி விட்டார்கள் என்று நேற்றைய தினம் மாண்புமிகு தமிழக
முதல்வர் அவர்கள் ஒரு செய்தியை இங்கே சொன்னார்கள்.
இன்றைய தினம் அந்தச் செய்தி உறுதி செய்யப்பட்டிருக்கிறது.
அதனுடைய நோக்கத்திற்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை.
ஆனால் சிறைச்சாலை விதிகள் என்ற ஒன்று இருக்கிறது. திராவிட
முன்னேற்ற கழகத் தோழர்கள் பல்வேறு போராட்டங்களில்கலந்து
கொண்டு சிறைச்சாலைக்குச் சென்று இருக்கிறார்கள். அப்போது
எங்களை அன்றைய தினம் அந்தப் பதின்மூன்று ஆண்டுக்காலத்தில்
எப்படி நடத்தினார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். திரு.
வை. கோபால்சாமி அவர்கள் பாளையங்கோட்டைச் சிறைச்
சாலையில் இருந்த போது உண்ணாநோன்பு மேற்கொண்டார்கள்.
அவரை நேரடியாகச் சந்திக்கவே விடவில்லை. அப்படிப்பட்ட
ஒரு சூழ்நிலை அன்றைய தினம் இருந்தது. ஆனால் இன்றைய
தினம் சிறைச்சாலையிலிருந்த நண்பர் உகம்சந்த் அவர்களை
எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா அவர்கள் சந்தித்து
இருக்கிறார்கள், மகிழ்ச்சி. உண்ணா விரதத்தை நிறுத்த வேண்
டும் என்று கேட்டிருக்கிறார்கள். மகிழ்ச்சி. ஆனால் சந்தித்து
அந்தச் சிறைச்சாலையின் வளாகத்திற்குள்ளே வைத்து ஆரஞ்சுப்
பழத்தைப் பிழிந்து கொடுத்தேன் என்று அவர்களே சொல்லி
இருக்கிறார்கள். இது சிறைச்சாலை விதிகளுக்கு முரணான
செய்தி என்பதை நான் உங்களிடத்தில் தெரிவித்துக்கொள்கி
றேன். இதை இந்த அரசு அனுமதிக்கிறதா? இதற்கு முன்னால்
இப்படிப்பட்ட நிலைமைகளை அந்த அரசு அனுமதிக்கவில்லையே,
இதை மட்டும் எப்படி இப்போது அனுமதித்தார்கள்? அங்கே
இருக்கிற சிறைச்சாலையினுடைய அதிகாரிகள் உடந்தையாக
இருந்திருக்கிறார்களா? இதை எல்லாம் அரசினுடைய கவனத்திற்கு
நான் கொண்டு வருகிறேன்.

***திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தி
னுடைய அரசு கொறடா அவர்கள் ஒரு தவறான தகவலை இங்கே
சொல்லி இருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
சிறைச்சாலைக்குச் சென்று சிறைத்துறை அதிகாரிகளின் அனு
மதியைப் பெற்று சட்டமன்ற உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்
களைப் பார்த்திருக்கிறார்கள். அப்படிப் பார்த்ததற்குப் பின்
னால் பத்திரிகையாளர்களிடத்தில் பேசுகிறபோது, அவர்
களுடைய கையிலே அடிபட்டு இருக்கிறது, எலும்பு முறிந்திருக்
கிறது, கையைத் தூக்க முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்
கள். பார்வையாளர்கள் யாராவது பார்க்கப்போனால் பழங்
கள், பிஸ்கட்டுகள் வாங்கிக் கொண்டு போய்க்கொடுப்பது வழக்
கம்தான். இது அனுமதிக்கப்பட்ட ஒன்று. அவற்றை முதலிலே
சிறை அதிகாரிகள் பார்த்துவிட்டுத்தான் உள்ளே விடுவார்கள்.
அப்படிக் கொண்டு போய்ப்பழத்தைக் கொடுத்தேன், அந்தப்
பழத்தைக் கொடுத்தபோது அவருடைய கையாலே வாங்க முடிய
வில்லை, கை வீங்கி இருந்த காரணத்தால் கையைத் தூக்கவே

முடியவில்லை என்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர, ஜூஸ் எல்லாம் பிழிந்து கொடுத்தேன் என்று சொன்னதாக மாண்புமிகு கொறடா அவர்கள் இங்கே ஒரு கற்பனையான செய்தியைச் சொல்வது—அது பத்திரிகையிலே வந்திருந்தாலும் கூட—தவறான செய்தி. அப்படிப் பிழிந்து கொடுக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு தடவையும் நீங்களே எழுந்து பேச வேண்டும் என்று விரும்புவது அவ்வளவு பொருத்தமற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் சொல்லிவிட்டார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். இப்போது மாண்புமிகு முதல்வர் பதில் சொல்லப் போகிறார்.

(முற்பகல் 10-40)

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சியினுடைய கொறடா திரு. கதிரவன் அவர்கள் எடுத்துச் சொன்ன செய்தியை நானும் காலையிலேயே பத்திரிகையிலே பார்த்தேன். உண்மையிலேயே சிறைச்சாலையிலே உண்ணாவிரதம் யாராவது மேற்கொண்டிருந்தால், அவர்கள் உண்ணாவிரதம் இருக்கின்ற நேரத்திலே '' இன்டர்வியு '' நேர் காணல் அனுமதி யாருக்கும் கிடையாது. அது மாத்திரமல்ல, ஒரு வாரத்திற்குக் கடிதங்கள்கூட வெளியிலே எழுத முடியாது என்று அப்படி ஒரு விதிமுறை இருக்கிறது. அதற்கு மாறாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் பத்திரிகையிலே வந்த செய்தி தவறானது என்று குறிப்பிட்டார்கள். அது தவறானது என்றால் நல்லதுதான். ஆனால் வந்திருக்கின்ற செய்தி, 'உண்ணாவிரதம் இருக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்வதற்காகத்தான் வந்தேன், அதன்படி உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்கள், அவர்களுக்கு ஆரஞ்சுப்பழம் பிழிந்து கொடுத்தேன், அவருக்கு அதைக்கூட கையால் வாங்கமுடியவில்லை' என்று பத்திரிகையிலே பேட்டி அளித்ததாகச் செய்தி வந்திருக்கிறது. நான் செய்தி வந்ததும் உடனடியாக அதைப்பற்றி கடலூரிலே விசாரிக்கச் சொன்னேன். எப்படி நடந்தது என்று கேட்டேன். எனக்கு வந்த தகவல், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கேயிருந்து புறப்பட்டதே, சென்னையிலே இருந்து புறப்பட்டதே காலை 7 அல்லது 8 மணிக்குத்தான். ஆனால் 8-20க்கே கடலூர் சிறைச்சாலையிலே திரு. உகம்சந்த் அவர்கள் தன்னுடைய உண்ணாவிரத நோன்பினை டாக்டர் குப்புசாமி அவர்களுடைய முன்னிலையிலே பால் அருந்தி முடித்துக் கொண்டார்கள் என்ற செய்தி வந்தது. 12 மணிக்குத்தான் அம்மையார் அவர்கள் சென்று அவர்களைப் பார்த்து இருக்கின்றார்கள். அப்படிப்



பார்த்தபோது ஆரஞ்சுப் பழத்தை உரித்து இரண்டு சுளைகளைக் கொடுத்ததாகவும், அதுதான் அங்கே நடந்தது என்றும் ஜெயில் அதிகாரிகள் சொல்கின்றார்கள்.

பழம் பிழிந்து கொடுத்து, ஆரஞ்சு சாறைப் பருகச் சொல்லி உண்ணாவிரதத்தை சிறைச்சாலைக்குள்ளே முடிக்கச் சொல்லவில்லை. பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்தி தவறானது. ஒன்று பேட்டி தவறாக இருக்கவேண்டும் அல்லது பத்திரிகையாளர்கள் தவறாகப் பிரசுரித்திருக்க வேண்டும். சிறை அதிகாரிகள் எந்தத் தவறும் செய்யவில்லை.

## 5. கவன ஈர்ப்பு.

(அ) மதுரை மாவட்டத்தில் பல அரிசி ஆலைகள் மூடப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், எஸ். டி. உகம்சந்த், வி. கே. சின்னசாமி மற்றும் கே. ஏ. செங்கோட்டையன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' மதுரை மாவட்டத்தில் சுமார் 200 அரிசி ஆலைகள் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதால் 6 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ள நிலைமை குறித்தும், ஆலைகள் மூடப்பட்டுள்ளதால் மதுரை மாவட்டத்திலும், அண்டை மாவட்டத்திலும் அரிசி விலை உயர்வால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பும் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

### அறிக்கை.

மதுரை மாவட்டத்தில் 4—4—1989-ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட கோரிக்கைகளுக்காக அரிசி ஆலை அதிபர்களால் '' அரிசி ஆலைகள் ஸ்டிரைக் '' என்று தெரிவிக்கப்பட்டது.

(1) லெவி கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது ;

(2) வெளி மாநில நெல் மற்றும் அரிசியை இதர மாவட்டங்களுக்குக் கட்டுப்பாடின்றி கொண்டு போவதற்கு இயக்க அனுமதிச் சான்றிதழ் வழங்க வேண்டும் ; மற்றும்

(3) குடிமைப் பொருள் வழங்கல் போலீஸ் (குற்றப் புலனாய்வுத்துறை) கெடுபிடியை நிறுத்த வேண்டும்.

அரிசி ஆலைகள் ஸ்ட்ரைக் என்று அறிவிப்பு செய்தவுடன் மதுரை மாவட்ட ஆட்சியர் தக்க சமயத்தில் இந்த விஷயத்தில் தலையிட்டு 5—4—1989-ஆம் நாளன்று அரிசி ஆலை அதிபர்களிடம் விவாதித்ததினால் 6—4—1989 ஆம் நாள் காலையில் அரிசி ஆலைகள் ஸ்ட்ரைக் வாபஸ் பெறப்பட்டது. அனைத்து அரிசி ஆலைகளும் 4—4—1989 மற்றும் 5—4—1989 ஆம் நாட்களில் அரவை செய்வதைத் தவிர்த்து இயங்கி வந்தன. எனவே அரிசி ஆலைத் தொழிலாளர்களுக்கு பிரச்சினை ஏதும் ஏற்படவில்லை. ஸ்ட்ரைக் அறிவிப்பைப் பயன்படுத்திக் கொண்டு வியாபாரிகள் 4—4—1989 மற்றும் 5—4—1989 நாட்களில் ஒரு கிலோ அரிசிக்கு பத்து பைசாவிலிருந்து இருபது பைசா வரை விலையை உயர்த்தினார்கள். இவர்கள் கடுமையாக எச்சரிக்கப் பட்டார்கள். நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. யாருக்கும் எவ்வித இடையூறும் இல்லாமல் சுமுகமாக ஸ்ட்ரைக் பிரச்சினை முடிக்கப்பட்டுவிட்டது.

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தியைக் கேட்ட உடனே, அங்கேயிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரிசி ஆலை அதிபர்களை அழைத்துப் பேசி முடித்துவிட்டதாகத் தகவல் கொடுத்திருக்கின்றார்கள். நன்றி. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்வதெல்லாம், தமிழ்நாட்டிலே அரிசிப் பற்றாக்குறை அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே லெவி போன்றவைகளிலே பல இடங்களிலே பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து பல இடங்களிலே பிரச்சினைகள் வரக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதுபோல வராமல் இனி மேல் அரசும், ஆலை அதிபர்களும் பிரச்சினைகள் வந்து இதிலே ஸ்ட்ரைக் என்று அறிவிப் பதற்கு முன்பு பேசித்தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே அரிசி ஆலை உரிமையாளர்கள், லெவி முறையை எடுத்துவிட வேண்டும் என்றும், அதனாலே அரசாங்கத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்வதாகவும் சொல்லி இருந்தார்கள். இன்றுள்ள கடுமையான அரிசிப் பஞ்சம், வறட்சி இவைகளை.எல்லாம் கருத்திலே கொண்டு அரிசி ஆலைகளுக்கு இதற்கு முன்பு இருந்த அரசு என்ன விதி



முறைகளை வகுத்துத் தந்திருக்கிறதோ அதே விதிமுறைகளைப்டு
பின்பற்றித்தான் இன்றையதினம் லெவி முறை அமுல்படுத்தப்பட்
வருகிறது. இருந்தாலும் மாவட்டம் விட்டு மாவட்டம் போகக்
கூடிய உரிமை வேண்டுமென்று சொல்கின்றார்கள். அப்படிப்
பட்ட உரிமை தருவதன் மூலம் இங்கேயுள்ள அரிசி கேரளாவிற்குப்
போகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால் அங்கே அரிசி
யினுடைய விலை ரூபாய் 7-லிருந்து ரூபாய் 8 வரையிலே விற்றுக்
கொண்டிருக்கிறது. கொள்ளை லாபம் அடிக்க வேண்டுமென்று
நினைக்கின்ற வியாபாரிகள் கடத்துவதற்கு முயற்சி செய்கின்
றார்கள். அப்படி நாம் அனுமதித்துவிட்டால், தமிழ்நாட்டிலே
இன்னமும் அரிசிப் பஞ்சம் வரும். எனவேதான் அரசு இதிலே
கண்டிப்பாக இருக்க வேண்டியிருக்கிறது. மழை பெய்து, நல்ல
விளைச்சல் இருந்து உணவு தானியம் அதிகமாக அரசாங்கத்திடம்
கையிருப்பிலே இருக்குமானால் இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்
கும்.

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்பு
மிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்
அவர்கள், உங்கள் மூலமாக சொல்லிக் கொள்வதெல்லாம், வெளி
மாநிலத்திலே இருந்து நெல் மற்றும் அரிசி இதர மாவட்
டங்களுக்குக் கட்டுப்பாடு இன்றி போகவேண்டும் என்று
கேட்டிருக்கின்றார்கள். கட்டுப்பாடு இல்லாமல் போவதற்கு
எந்த அரசாங்கமும் அனுமதிக்க முடியாது. ஆனால் நான்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்வதெல்லாம் எங்
கள் காலத்திலும் அரிசிப்பற்றாக்குறை இருந்தது. அந்த நேரத்தில்
எல்லாம் வெளி மாநிலங்களிலிருந்து அரிசி ஆலை அதிபர்கள்
குறிப்பாக ஆந்திரா போன்ற மாநிலங்களிலிருந்து அரிசி கொண்டு
வர நாங்கள் தடையாக இருக்கவில்லை. அதுபோல கேரளா
பார்டரில் இருக்கிற செக் போஸ்டுகளை எல்லாம் வலுப்படுத்தி
யிருக்கிறோம். ஆனால் இன்றைக்கு இருக்கிற அரிசிப் பஞ்சத்தை
மையமாக வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது
குறித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே வெளி மாநிலங்களி
லிருந்து இங்கு அரிசி கொண்டு வருகிறார்கள். அதற்கு அனுமதி
சான்றிதழ் வழங்க இந்த அரசு முன்வந்தால் உடனே அதிலேயும்
ஊழல் நடைபெற்றதாகக் குற்றச்சாட்டு வர வாய்ப்பிருக்கிறது.
அதற்காகத்தான் யார் யார் வெளி மாநிலங்களிலிருந்து
தமிழ்நாட்டுக்கு, இந்த அரசாங்கத்திற்கு அரிசி கொண்டு வந்தா
லும் அவர்களையும் அனுமதித்திருக்கிறோம். அப்படிப்பட்டவர்
கள்மீது எந்த நடவடிக்கையையும் இந்த அரசு எடுப்பதில்லை
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சென்னையில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கத் தண்ணீர்த் தொட்டிகள் அமைக்க வேண்டியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் அ. இரகுமான்கான், செங்கை சிவம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை நகரில் பொது மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கத் தண்ணீர்த் தொட்டிகள் அமைப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

இயல்பாக மழை பெய்யும் ஆண்டுகளில் சென்னை நகருக்குக் குடிநீர் வழங்குவதற்கு ஆதாரமாக உள்ள நீர்த் தேக்கங்களின் மொத்த நீரளவு 6,483 மில்லியன் கன அடி ஆகும். ஆனால் இவ்வாண்டின் முதல் நாள் கணக்கின்படி மூன்று நீர்த் தேக்கங்களின் நீர் அளவும் 2,555 மில்லியன் கன அடி ஆகும். இந்த நீரினைக் கொண்டும், நிலத்தடி நீரினைக் கொண்டும் சென்னை நகருக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் சுமார் 60 மில்லியன் காலன் குடிநீர் வழங்கப்படுகிறது. இவ்வாறு இந்த ஆண்டு அக்டோபர் மாதம் வரை வழங்க முடியும். சென்னை நகரில் 5,665 கைப் பம்புகளும், 4,741 இந்தியா மார்க் II பம்புகளும் பராமரிக்கப் பட்டு வருகின்றன.

2. சென்னை நகரில் தற்போது ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்கும் முறையில் அழுத்தக் குறைவு காரணமாக குழாய் வழியே குடிநீர் வராத பகுதிகளுக்கும், மற்றும் குடிசைவாழ் மக்கள், பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்கள் வாழும் இடம் போன்ற பல பகுதிகளில் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் வாரியம் 2,269 குடிநீர்த் தொட்டிகள் அமைத்து அவற்றிற்கு அன்றாடம் லாரிகள் மூலம் தண்ணீர் நிரப்பப்பட்டு வருகிறது. இவ்வாறு குடிநீர்த் தொட்டிகள் மூலம் நாள்தோறும் வழங்கப்படும் குடிநீரின் அளவு 7 மில்லியன் லிட்டர் ஆகும்.



3. சென்னை நகரில் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக கீழ்க்கண்ட நிவாரணப் பணிகளுக்கு அரசு ரூ. 476 இலட்சம் வழங்கியுள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. சோழவரம், செங்குன்றம் ஏரிகளில் நீர் இறைக்கும் பணிக்காக. | 5.00 |
| 2. செங்குன்றம் ஏரியில் குழாய்கள் பதிப்பதற்காக. .. | 4.00 |
| 3. சோழவரம், செங்குன்றம் ஏரிகளில் நீர் ஆவியாதலை தடுத்தல். | 20.00 |
| 4. தனியார் கிணறுகளை வாடகைக்கு அமர்த்த | 3.00 |
| 5. 750 இரும்புக்குழாய்த் தொட்டிகளைப் பழுது பார்க்க. | 12.00 |
| 6. 500 புதிய இந்தியா மார்க் II பம்புகள் அமைக்க. | 82.00 |
| 7. லாரிகள் / டிராக்டர்கள் வாடகை .. | 350.00 |
| மொத்தம் .. | 476.00 |

4. பொது மக்களின் வேண்டுகோளின்படி மேலும் சுமார் 350 தண்ணீர்த் தொட்டிகள் நிறுவப்படவுள்ளன. தற்சமயம் ஆங்காங்கே தேவைக்கேற்ப நிறுவப்பட்டுள்ள தொட்டிகளின் எண்ணிக்கை விவரங்கள் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் தரப் பட்டுள்ளன.

5. இதைத் தவிர சென்னை நகரில் இயங்கி வரும் சத்துணவுக் கூடங்களில் நிறுவப்பட்டுள்ள சுமார் 350 குடிநீர்த் தொட்டி களுக்கு நாள்தோறும் லாரிகள் மூலம் குடிநீர்த்வழங்கப்படு கிறது.

6. சென்னை நகரில் குடிநீர் வழங்குதல் பற்றிய நிலையை அரசு கவனித்து வருகிறது. தேவையான நடவடிக்கை அவ்வப் போது மேற்கொள்ளப்படும்.

சட்டமன்றத் தொகுதிகளில் அமைக்கப்பட்ட குடிநீர்த் தொட்டிகளின் பட்டியல்.

| வரிசை எண்ணும் சட்டமன்றத் தொகுதியின் பெயரும். | | தொட்டிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | | (2) |
| 1. | இராயபுரம் .. .. .. .. | 13 |
| 2. | துறைமுகம் .. .. .. .. | 39 |
| 3. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் .. | 200 |
| 4. | பூங்கா நகர் .. .. .. .. | 124 |
| 5. | பெரம்பூர் .. .. .. .. | 246 |
| 6. | புரசைவாக்கம் .. .. .. | 121 |
| 7. | எழும்பூர் .. .. .. .. | 95 |
| 8. | அண்ணா நகர் .. .. .. | 121 |
| 9. | ஆயிரம் விளக்கு .. .. .. | 95 |
| 10. | தியாகராய நகர் .. .. .. | 246 |
| 11. | சேப்பாக்கம் .. .. .. .. | 84 |
| 12. | திருவல்லிக்கேணி .. .. .. | 88 |
| 13. | மைலாப்பூர் .. .. .. .. | 73 |
| 14. | சைதாப்பேட்டை .. .. .. | 234 |
| 15. | திருவொற்றியூர் .. .. .. | 44 |
| 16. | வில்லிவாக்கம் .. .. .. | 244 |
| 17. | ஆலந்தூர் .. .. .. .. | 101 |
| 18. | தாம்பரம் .. .. .. .. | 101 |
| | மொத்தம் .. | 2,269 |



திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அரசாங்கத்தின் சார்பாக வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் சென்னை நகர குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 476 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், ஒரு நாள் விட்டு ஒரு நாள் 60 மில்லியன் காலன் குடிநீர் வழங்குவதாகவும், லாரிகள் மூலமாகத் தண்ணீர் கொண்டு வந்து வழங்குவதாகவும், 5,665 கைப் பம்புகளும், 2,269 குடிநீர்தொட்டிகளும், 4,741 இந்தியா மார்க் II பம்ப்களும் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய முயற்சிகளை அரசு செய்திருந்தாலும் கூட சென்னை நகரில் எல்லாத் தொகுதிகளிலும் பல இடங்களில் குறிப்பாகப் பூங்கா நகர் தொகுதியிலுள்ள பல இடங்களில் குடிநீர் வசதியில்லாமல் நிலைமை இருக்கிறது. கைப் பம்புகளும் இல்லை, இந்தியா மார்க் II பம்புகளும் இல்லை, லாரிகளின் மூலம் கொண்டு வந்து தண்ணீர் வழங்குவதாகவும் தெரியவில்லை. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒவ்வொரு தெருவுக்கும் வாட்டர் டாங்க் வைத்து, தண்ணீர் வசதி இல்லாத பகுதிகளுக்கு எல்லாம் லாரிகள் மூலமாகத் தண்ணீர் கொண்டு வந்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அது போல கைப்பம்புகள் உடனடியாக எல்லா இடங்களிலும் போடப்பட வேண்டும். இது குறித்து அரசு உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக 350 தண்ணீர்த் தொட்டிகளை நிறுவ இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது. போர்க் கால நடவடிக்கையாக அந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறோம். புதிதாக லாரிகள் மூலமாகத் தண்ணீர் கொடுக்க புதிதாக டெண்டர் கொடுக்கப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த டெண்டர் பணி இறுதியாக முடிவு செய்யப்படுவதற்கு முன்பாகவே பழைய முறைப்படியும், புதிய முறை நடைமுறைக்கு வந்ததற்கு பிறகு புதிய முறைப்படியும் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு லாரிகள் மூலம் பல்வேறு இடங்களில் குடிநீர் வழங்கி குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே 4¾ கோடி ரூபாய் சென்னை நகர குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், அதற்கான பணிகள் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்டிருப்பதாகவும் இங்கே சொல்லியுள்ளமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். டிராக்டர் மூலமாகவும்

லாரிகள் மூலமாகவும் தண்ணீர் விநியோகம் செய்யும் முறையும் இதிலே இருக்கிறது. என்னுடைய தொகுதியான பெரம்பூர் தொகுதி சென்னையிலே ஓர் ஓரப்பகுதியாக இருக்கிறது. சென்னை நகரை, குடிநீர் வழங்குகின்ற அடிப்படையில் 3 ஜோன்கள்—ஆகப் பிரித்து தண்ணீர் வால்வைத் திறந்து விடுகிறார்கள். இதிலே நான் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் எங்கள் பகுதியிலே தண்ணீர் பிரசரின் அழுத்தம் குறைவு, சக்தி குறைவின் காரணமாக அங்கே தண்ணீர் வருவதில்லை. இன்றைக்கு அங்கே 175 பகுதிகள் இருந்தாலும் குறிப்பாக 120 பகுதிகளிலே, குடிசைப் பகுதிகளில் மிகவும் அதிகமாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதிகளிலே சரியாகத் தண்ணீர் வருவதில்லை என்பதுடன் அங்கேயுள்ள யாருக்கும் வீட்டுக் குழாய் இணைப்பும் கிடையாது. ஆக, இப்படிப்பட்ட பகுதிகளில், 120-க்கும் மேற்பட்ட குடிசைப் பகுதிகளுக்கு, பாயிண்ட் டு பாயிண்ட் என்ற அளவில் டிராக்டர்கள் மூலமாகத் தண்ணீர் கொடுக்க வேண்டும். அந்தப் பகுதிகளிலே டிராக்டர்களை நிறுத்தித் தண்ணீர் சப்ளை செய்ய வேண்டும். அடுத்து இன்றைக்கு அதிகமான தண்ணீர்த் தொட்டிகள் வைப்பது பற்றி இதில் குறிப்பிடவில்லை. புதிதாகத் தண்ணீர்த் தொட்டிகள் வைப்பது பற்றிக் குறிப்பிடவில்லை. அந்தத் தொட்டிகளைக் கொஞ்சம் அதிகமாக என்னுடைய தொகுதியில் வைக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லி, அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–50)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இருக்கின்ற பெரம்பூர் தொகுதியில் இப்போது 246 தொட்டிகள் இருக்கின்றன. புதிதாக சென்னை நகரத்திற்கு 350 தண்ணீர்த் தொட்டிகள் நிறுவப்பட இருக்கின்றன. உறுப்பினரவர்கள் கோரிக்கையையும் பரிசீலித்து, அந்தப் பகுதியில் மேலும் தண்ணீர்த் தொட்டிகள் அமைக்க ஒதுக்கீடு செய்யப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது போன்ற பகுதியில் குடிநீர் கொடுக்க லாரிகள் அதிகமாகக் கொடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## 6. மானியக் கோரிக்கைகள் 1989–90—விவாதமும், வாக்கெடுப்பும்.

### (அ) கோரிக்கை எண் 4.

பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிருவாகம்

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம். என்ற தலைப்பின் கீழ் ரூ. 23,97,80,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

Tniru M. SUNDARADAS: Hon. Speaker, Sir, to discuss the need to provide total exemption from taxes for products of cottage industries fully of a consumer nature like washing soaps, match boxes, etc. I move the following cut motion.

"That the allotment of Rs. 23,97,80,000 under Demand No. 4 General Sales Tax and other Taxes and Duties—Administration be reduced by Rs. 100."

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரி வசூல் செய்வதைப் பற்றி பருத்தி வியாபாரிகள் அச்சுறுத்தப்படுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் — நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 23,97,80,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 23,97,80,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண் 9.

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 49,85,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமை இடப் பணியாளர்கள் பகுதி நேரமாக இருப்பவர்களை நிரந்தரமாக்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 49,85,01,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,85,01,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(இ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம்.

திரு. எல். கணேசன் (முதல் அமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 62,63,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



''மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,63,67,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ரெ. பிச்சைமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து பெரம்பலூரைத் தலைநகராகக் கொண்டு தனி மாவட்டம் செயல்பட வேண்டும் என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,63,67,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் நிறைவேற்றப் படும் தீர்மானங்கள் சரியாக அமுல்படுத்தப்பட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கக் பெறுகின்ற ரூ. 62,63,67,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,63,67,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஈ) கோரிக்கை எண் 42.

ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,88,26,11,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியிலிருந்து ஓய்வுபெற்ற ஒன்றிரண்டு மாதங்களுக்குள் அவர்களுக்குச் சேர வேண்டிய நிதியைத் தந்து வயதான

[திருமதி. பாப்பா உமாநாத்] [1989 எப்ரல் 26

காலத்தில் அவர்களை நிம்மதியாக வாழவைக்க ஏற்பாடு செய்வது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,88,26,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,88,26,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**(உ) கோரிக்கை எண் 43— பல்வகை.**

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின்கீழ், ரூ. 5,03,40,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,03,40,48,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**(ஊ) கோரிக்கை எண் 58.**

**பல்வகை மூலதனச் செலவு.**

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்). மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,75,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''



1989 ஏப்ரல் 26]

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 58—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,75,60,000–இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**(எ) கோரிக்கை எண் 59.**

**மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்**

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ், ரூ. 3,75,10,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களுக்குப் பல்வேறு தொழில்கள் புரிவதற்கு இலகுவான முறையில் கடன்கள் வழங்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 59— மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,75,10,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,75,10,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்களின் பேரவைச் செயலர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

[1989 ஏப்ரல் 26

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கைகள் பற்றிய கொள்கை விளக்க ஏடுகள்* அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை அவைக் குறிப்பில் ஏற்றிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்களின் விவாதத்திற்கு பிறகு நான் என்னுடைய பதில் உரையைத் தெரிவிக்கிறேன் என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. வெ. இராசு.

*திரு. வெ. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற 1989–90 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் எண் 4, 9, 11, 42, 43, 58 மற்றும் 59 பற்றிய விவாதத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு நான் சார்ந்திருக்கிற அகில இந்திய அண்ணா தி.மு.க. சார்பாக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வருவாய்த் துறை தமிழகத்தின் நிர்வாகத் துறைகளின் ஒரு தனிப் பெரும் துறையாக விளங்குகிறது. பல்வேறு துறைகளில் இருந்து தமிழகத்திற்கு வருவாயை ஈட்டித் தருகிற துறை வருவாய்த்துறை ஆகும். நாள்தோறும் ஏழை எளிய மக்கள்—பாட்டாளி மக்கள்—உழைக்கின்ற வர்க்கம்—சிறுபான்மை மக்கள்—ஆதிதிராவிட மக்கள் ஆகிய அனைவருடைய வாழ்க்கையிலும் ஒன்றி, பின்னிப் பிணைந்திருக்கிற ஒரு துறையாகும். இத்தகைய ஒரு துறையில் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், கோட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு கோட்டாட்சித் தலைவர் அவர்களும், வட்டத்தைப் பொறுத்த வரை—அதாவது தாலுக்காவைப் பொறுத்த வரையில் ஒரு தாசில்தார் அவர்களும்—பிர்க்காவைப் பொறுத்த அளவில் ஒரு வருவாய் ஆய்வாளரும், கிராமத்தைப் பொறுத்த அளவில் ஒரு கிராம நிர்வாக அதிகாரியும், கிராமத்தை உள்ளடக்கிய குக்கிராமத்தில் கிராமப் பணியாளர்கள், கிராமக் காவலர்கள், என்று சொல்லக் கூடியவர்களும், கிராம நிர்வாக அலுவல்களுக்கு உறுதுணையாக இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வருவாய்த் துறைக்கு அடிப்படைக் காரணமாக விளங்கிய கிராம நிர்வாக அலுவலர்கள் தங்கள் பணியைச் செவ்வனே செய்து கொண்டிருக்கிறார்கள். கிராம கர்ணம், மணியம், என்பவர்களை மாற்றி புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் புதிய கிராம நிர்வாக அலுவலர்களை அறிவித்தார்கள். கர்ணம், மணியம் போன்றவர்களை ஒழித்துவிட்டு, புதிய

* அறிக்கைகள் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.



1989 ஏப்ரல் 26] [திரு. வெ. இராசு]

கிராம நிர்வாகிகளை அறிவித்து அவர்கள் எல்லாம் சீரும் சிறப்புமாகச் செயல்பட்டு வந்தார்கள். அந்த புரட்சிகரமான புதிய திட்டத்தினால் இன்றைய தினம் இந்தத் துறை நிர்வாகம் சிறக்க, இளமையும் நிர்வாகச் சுறுசுறுப்பும் கொண்ட பட்டதாரிகள் அதிலே கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆதிதிராவிட மக்களும் அதில் கலந்து கொண்டிருக்கிற வகையிலே அந்தப் புரட்சித் திட்டம் அமைந்தது.

(முற்பகல் 11-00)

கிராம நிர்வாக அலுவலர்களின் முக்கியப் பணியாகிய நிலவரி வசூல் செய்தல், சாகுபடி கணக்கு எழுதுதல், அரசுக்குத் தேவையான புள்ளி விவரங்களை உடனுக்குடன் அறிவித்தல், அரசினுடைய நல்ல பல திட்டங்களை கிராம மக்களுக்கு அவ்வப்போது எடுத்துக் கூறி வருதல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறார்கள். புதிதாகப் பணியேற்ற கிராம நிர்வாக அலுவலர்கள் இத்தகைய பணிகளைச் செய்து அரசுக்கு உறுதுணையாகப் பணி புரிந்து வருகிறார்கள். புதிதாகப் பொறுப்பேற்ற கிராம நிர்வாக அலுவலர்கள் பெரும்பாலும் கிராமங்களில் தங்குவதற்குப் போதுமான இடவசதி இன்மையால் பக்கத்து கிராமங்களிலே தங்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அவர்கள் தங்களுடைய கிராமங்களிலேயே தங்குவதற்கு குடியிருப்புடன் கூடிய அலுவலகம் கட்டித் தந்தால் அவர்கள் அங்கேயே தங்கி பணியாற்றுவதற்கு ஏதுவாக இருக்கும் ; மேலும் அவர்களுடைய கிராமக் கணக்குகளை, சிட்டா, அடங்கல், எப்.எம்.பி., 'ஏ' ரிஜிஸ்டர், பிறப்பு—இறப்பு பதிவுக் கணக்கு பராமரித்தல் போன்ற அத்தியாவசிய கணக்குகளைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கு பீரோ மற்றும் பர்னிச்சர் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம நிர்வாக அலுவலர்கள் தங்களுடைய முக்கியமான வரி வசூல், கிராம கணக்குகளைப் பராமரித்தல் போன்றவைகளைச் செய்வதோடு, அரசு அவ்வப்போது அறிவிக்கும் நல்லபல திட்டங்களையும் குறிப்பாக ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வூதியத் திட்டம், ஊராட்சி வரி, மர வரி, விவசாயக் கடன், தேசியத் திட்டமான குடும்பநலத் திட்டம், சிறு சேமிப்பு போன்ற பல்வேறு பணிகளை அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற காரணத்தால் வருவாய்த் துறை தாசில்தார் மற்றும் வனத்துறை அலுவலர்களுக்கு கொடுக்கக்கூடிய சிறப்பு ஊதியத்தைப் போல், அவர்களுக்கும் கூடுதலாக சிறப்பு ஊதியம் வழங்கி அவர்களைக் கௌரவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவர்களுக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய கிராமப் பணியாளர்கள் எந்த நேரத்திலும் கிராமத்தில் நடக்கக்கூடிய சம்பவங்களையும், நிகழ்ச்சிகளையும் உடனுக்குடன் கிராம அதிகாரிகளுக்குத் தெரிவித்து வருகிறார்கள். கிராம நிர்வாக அலுவலர்கள்

முழுநேர ஊழியர்களாகப் பணியாற்றி வருவதுபோல், கிராமக் காவலர்களும், கிராமப் பணியாளர்களும் முழு நேரமும் பணி யாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும் அரசு அலுவலர்களுக்குப் பொருந்தக்கூடிய அத்தனை சலுகைகளையும் அளித்து அவர்களுக்கும் ஊதிய உயர்வு கொடுத்துஅவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமக் காவலர்கள், கிராமப் பணி யாளர்கள் தங்களுடைய ஊர்களில் இருந்து தாலுக்கா அலுவலகத்திற்கும், கிராம நிர்வாக அலுவலர்களைச் சந்தித்து அவர் ள் பணிகளைச் சிறப்பாகத் தொடர்ந்து செயலாற்று வதற்கும் அவர்களுக்கு சைக்கிள்கள், அரசு மானியத்துடன் கடன் கொடுத்து அவர்களுடைய பணியை சீரும் சிறப்புமாகச் செய் வதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவரவர்கள் கிராமங்களில் பணியாற்றிய கர்ணம், மணியம் ஆகியவர்களை ஒழித்துவிட்டு புதிய கிராம நிர்வாக அலுவலர்களை நியமித்தார்கள். கிராமத்திலிருந்த கர்ணம், மணியம் ஆகிய இருவரும் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டு இருந்தார்கள். கர்ணம் புள்ளிகளைத் தயாரித்து, அதாவது வரி டாப்பை தயாரித்து மணியக்காரரிடம் கொடுப் பார் ; மணியக்காரர் அதை வைத்து வரி வசூல் செய்யும் போது, கிராம மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை அவர்கள் வந்து மணியக்காரரிடம் கூறும்போது, அவருக்கு கணக்குப் பிள்ளை பிடிக்கவில்லை என்றால், 'உன்னுடைய நிலத்திற்கு இவ்வளவு வரி எப்படிப் போட்டார்கள்? என்று கேட்பார்கள். மணியக்கார ரிடம் போய் கேட்கும்போது நானா போட்டேன் ? கணக்குப் பிள்ளை தான் போட்டார்; அவரிடத்திலே போய் கேளு என்று சொல்லுவார்கள். இப்படி இருவரும் பணிபுரிந்து கொண்டிருந்த நேரத்தில், அவர்கள் கருத்து ஒருமித்து செயல்படாததன் காரணமாக இரண்டு பதவிகளையும் சேர்த்து கிராம நிர்வாக அலுவலர் என்ற பதவியைக் கொடுத்தார்கள். அத்தகைய பதவியை அவர்கள் தொடர்ந்து செயலாற்றி இந்த நிர்வாகத் திற்கு நல்ல முறையில் பயன் அளிக்கின்ற வகையில் தொடர்ந்து செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் இந்தப் புதிய திட்டத்தை அறிவித்தார் என்ற காரணத்திற்காக அதில் ஏதும் மாறுதல் செய்யாமல் தொடர்ந்து அவர்களே பணி புரியவேண்டும். அவர்களுக்கு பணிப் பாதுகாப்பு மற்றும் பணி வரன்முறை செய்து அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்து, பதவி உயர்வு கொடுப்பதன் மூலம் அங்கு ஏற்படக் கூடிய காலி இடங்களுக்கு மீண்டும் புதிதாக அல்லது பழைய கிராம அதிகாரிகளையோ டி.என்.பி.எஸ்.சி. மூலம் தேர்ந் தெடுக்கக்கூடியவர்களையோ அமர்த்தி பழைய, புதிய இருவரும் பாதிக்காத வகையில் அதில் பணிபுரியும் வி.ஏ.ஓ.களுக்கு பதவி உயர்வு கொடுத்து, தாலுகா அலுவலகங்கள் மற்றும் பிற அலுவலகங்களிலும் பணிபுரிவதற்கு ஏதுவாக வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



நில அளவையாளர்களைப் பொறுத்தவரையில், நில அளவாளர் மற்றும் வரையாளர், பகுதி நேர எழுத்தர்கள் போன்றவர்கள் தொடர்ந்து பணி புரிந்து, இன்னும் அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் பிரிவு எழுத்தர்கள் எல்லாம் தங்களுடைய வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாகத் தொடர்ந்து வேறு வேலைக்குச் செல்ல முடியாமல், வயது வரம்பைக் கடந்தவர்களும் அந்தப் பணியில் செயல்படுவதால் அவர்களுடைய பணியை நிரந்தரம் செய்து, அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த வேண்டுமாய் இந்த நல்ல தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து, நிர்வாகப் பளுவைக் குறைத்து செயல்படுவதற்கு ஏதுவான வகையில் மாவட்டத் தைப் பிரித்துக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், என்னுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் குளத்தூர், மற்றும் திருமயம் தாலுக்காக்கள் பெரிய தாலுக்காக்களாக இருக்கின்றன.

குளத்தூர் தாலுக்காவைப் பொறுத்த அளவில், 11 பிர்க்காக்களையும், 75 வருவாய்க் கிராமங்களையும் கொண்டது. இதனால் வட்டாட்சியர் அவர்கள் இந்தப் பெரிய தாலுக்காவில், மக்களுடைய குறை களை உடனுக்குடன் சென்று அவர்களிடத்திலே கலந்து ஆலோசிக்கவும், மக்கள் அந்தத் தாலுக்கா அலுவலகத் திற்குச் சென்று அவர்களுடைய குறைகளை எடுத்துக் கூறு வதற்கும் போதிய பேருந்துகளோ மற்ற வசதிகளோ இல்லாத காரணத்தினால் அவர்களுடைய குறைகளைப் போக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த குளத்தூர் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கின்ற திட்டம் அரசின் செயற்குறிப்பில் நீண்ட காலமாக உள்ள திட்டமாக உள்ளது. அத்தகைய திட்டத்தை மிக விரைவாக முடித்து, அதை இரண்லிாகப் பிரித்து நிர்வாக வசதியை மேலும் சிறப்பாகச் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் நமது மாண்புமிகு தமிழக முதல்வரவர்களுக்கு நன்கு தெரியும். ஏனென்றால் நமது மாண்புமிகு தமிழக முதல்வரவர்களால், திருச்சியிலிருந்தும், தஞ்சாவூரிலிருந்தும் பிரித்து துவக்கி வைக்கப்பட்ட மாவட்டமாகும். இந்தப் புதுக்கோட்டை மாவட்டம், கடந்த நான்காண்டுக் காலமாகப் பருவ மழை இல்லாத காரணத்தினால் மிகவும் வறட்சியாகக் காணப்படுகிறது. எனவே, அதை வறட்சி மாவட்டமாக விரைவில் அறிவித்து, வறட்சிப் பணிகளைத் தொடங்கி, அங்குள்ள ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில், வறட்சிப் பணிகளைத் தொடர்ந்து விரைவில் செயலாற்ற வேண்டுமாய் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், விவசாயிகள் நில வரியைச் செலுத்த முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு நில வரியை ரத்து செய்ய வேண்டும். நில வரியை ரத்து செய்வதன் மூலம், அடிப்படைத் தீர்வையை மட்டும் தள்ளுபடி செய்தால் அவர்கள் பயனடைவதற்கு ஏதுவாக இருக்காது; எனவே, உள்ளூர் வரி, உள்ளூர் மிகுமேல் வரி மற்றும் தண்ணீர் வரி போன்றவற்றையும் சேர்த்து ஒட்டுமொத்தமாகத் தள்ளுபடி செய்தால் தான் அவர்கள் பயனடையும் வகையிலே இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, விவசாயிகளின் கடன் மற்றும் அபராத வட்டி போன்றவற்றையும் தள்ளுபடி செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு மனைப் பட்டாவைப் பொறுத்த அளவிலே, அரசுப் புறம்போக்கு நிலங்களில் நீண்ட நெடுங்காலமாகச் சுமார் 20, 25 ஆண்டுகளுக்கு மேலாகவும் வசித்து வருகிறார்கள். அந்த இடம் ஆட்சேபணை அற்றதாகவும் இருக்கிறது. அது வாய்க்கால் புறம்போக்கு, வாரி புறம்போக்கு, குளம் புறம்போக்கு, மேய்ச்சல் துறை என்றெல்லாம் இருக்கின்றது. ஆனால் கிராமக் கணக்குகளில் வாய்க்கால் புறம்போக்கு என்று இருக்கும்; ஆனால் அந்த இடத்தில் பார்க்கும்பொழுது சம்பந்தமில்லாமல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: துறைக்குச் சம்பந்தப்பட்ட கருத்தை மட்டும் பேசுங்கள்.

திரு. வெ. இராசு: வருவாய்த் துறை சம்பந்தமானது தான். எனவே, ஆட்சேபணை அற்ற அந்த இடத்தை ஏழை எளிய மக்களுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் பயன் அளிக்கின்ற, வகையிலே மனைப்பட்டாவையும், நிலப் பட்டாவையும் வழங்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி, அமர்கின்றேன், நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11-10)

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, வருவாய்த் துறை, மாநில ஆட்சி மன்றத் தலைவர், அமைச்சர்கள் மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை வெளியிடுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்காக நான் முதலில் நன்றி சொல்லுகின்றேன். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இந்தியாவில் நம்முடைய தமிழகத்தில் அமைச்சர்களின் சம்பளமும் குறைவு.





அவர்களுடைய வேலை நேரமும் குறைவு—அலுவலகத்திற்கு வராத காரணத்தால், அலுவலகத்திற்கு வருவார்களானால் வேலை அதிகம் என்ற பொருள்பட எண்ண முடியும். அமைச்சர்களும் பொது நல ஊழியர்கள் Public Servants. They are in the Pay Rolls of the Government என்ற அந்த அடிப்படையில் முழு நேர ஊழியர்கள், பொது நல ஊழியர்கள், உச்ச நீதிமன்றத்தின் பல்வேறு தீர்ப்புகளில் இதற்கு வழிகாட்டுகிறது. ஆகவே, அமைச்சர்கள் காலை 10½ மணியிலிருந்து மாலை 5.00 மணி வரையில் ஒரு சாதாரண அரசுப் பணியாளர் எப்படிப் பணியாற்றுகிறாரோ அப்படி பணியாற்றுவார்களானால் என்னைப் பொறுத்தவரையில் நம்முடைய தலைமைச் செயலாளர் சம்பளத்தை விட 10 ரூபாய் அதிகமாக அவர்களுக்கு கொடுக்க வேண்டும். இது தான் மேலை நாடுகளில் இருக்கிற வழிமுறையாகும். 'பிரென்ச்' நாட்டில் ஒரு சாதாரண சிவில் சர்வெண்ட்டைவிட அதிகமான சம்பளத்தைப் பெறுபவர்தான் அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலை 10½ மணியிலிருந்து மாலை 5-00 மணி வரையில் அமைச்சர்கள் வேலை செய்வதால் தலைமைச் செயலாளரை விட 10 ரூபாய் அதிகமாகச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்றால், காலை 8½ மணியிலிருந்து இரவு 12.00 மணி வரையில் வேலை செய்கிற அமைச்சர்களுக்கு எந்த அளவிற்கு கொடுக்க வேண்டும் என்பதை இங்கே அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு செயலாளர்களுக்கு எந்த விதி இடம் கொடுக்கிறதோ அதே விதியின்கீழ் இங்கே அமைச்சர்களும் கருதப்படலாம் என்பது தான் என்னுடைய எண்ணமாகும். சில அமைச்சர்கள் முழு நேரமாக வேலை பார்க்கலாம். எல்லோரையும் நான் சொல்லவில்லை. இரவு பகலாக, காரணம் இரவு நேரத்தில் கோப்புகளை பார்ப்பீர்கள், படிக்கலாம். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் இன்றைக்கு இருக்கிற அரசியல் சூழ்நிலையில் சம்பளத்தை அதிகமாகக் கொடுப்பீர்களானால் குற்றச்சாட்டே வராது. சம்பளமே இல்லாமல் அமைச்சராக இருப்பதற்கு பலபேர்கள் தயாராக இருப்பார்கள். சம்பளமே இல்லாமல் கலெக்டராக வருவதற்கு யாரைக் கேட்டாலும் வருவார்கள். ஆனால், அதிகாரம் விலை போய் விடக் கூடாது, தவறாகப் பயன்படுத்தி விடக் கூடாது என்ற காரணத்தால் தான் ஒரு சிவில் சர்வெண்ட் சம்பளத்தை விட அதிகமான சம்பளம் அமைச்சர்களுக்கு இருக்க வேண்டும். அது தான் விதி. ஆனால் நம்முடைய நாட்டில் என்ன காரணமோ தெரியாது, மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டு அமைச்சர்களுடைய சம்பளத்தை வைத்திருக்கிறோம்.

அதனால் தான் எதிர்பார்த்த வேலைபாய்ப்பு கிடைப்பது கிடையாது. நேரம் முழுமையாக செலவழிக்கப்பட வேண்டும். அப்படி முழுமையாக அவர்கள் தங்களுடைய காலத்தை, நேரத்தை செலவழிப்பார்களானால் நிச்சயமாக ஒரு தவறும் நேர்வதற்கு வாய்ப்பு இருக்காது.

அமைச்சருக்கு அடுத்தபடியாக நம்முடைய செயலாளர்கள் இருக்கிறார்கள். Secretaries to Government. அவர்களுக்கு மேல் முடிவு எடுக்கக்கூடியவர்கள், கொள்கை முடிவு எடுப்பவர்கள், அமைச்சரவை, அமைச்சர்கள். அப்படிப்பட்ட நிலையில் செயலாளர்களும் இன்றைக்கு தன்னிச்சையாக செயல்படுகிற அளவிற்கு அவர்களுக்கு நம்முடைய 'பிசினெஸ் ரூல்ஸ்' வழிவகை செய்கிறது. அமைச்சர்களும் முடிவு எடுக்கிறார்கள. என்னைப் பொறுத்தவரையில் ஒரு நேரத்தில் இங்கே பேசுமபோதுகூட சொன்னேன். நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஒருநாள் பேசினார், இந்த அதிகாரியைப் போட்டால் நீங்கள் சொல்கின்றபடிதானே செய்வார் என்று ஒரு வார்த்தையைச் சொன்னார். அன்றைக்கே சொன்னேன். இன்னாரைப் போட்டு இப்படி செய் என்று சொல்வதற்குத் தானே அமைச்சர். அதிகாரியே செய்துவிட்டுப் போவது என்றால் இந்த நாட்டில் அமைச்சர்களே வேண்டாம். அவர்களிடம் அன்றைக்கே சொன்னேன். அமைச்சர் சொல்வதைச் செய்வது தான் செயலாளருடைய வேலை. தலைமைச் செயலாளருடைய வேலை. அவர்களே எல்லா உத்தரவுகளையும் பிறப்பிப்பார்களானால், எதற்கு இந்த அவை? எதற்கு இந்த எம்.எல்.ஏ. தேர்தல்? எதற்கு இந்த அமைச்சரவை? ஆகவே, முடிவு எடுக்கும்போது பொது நன்மையைக் கருதி, பொதுமக்களுடைய வளர்ச்சியைக் கருதி முடிவு எடுக்கக்கூடியவர்கள் அமைச்சர்கள். சுயநலம் இல்லாமல் முடிவு எடுக்க வேண்டும். அதற்குக் கட்டுப்பட்டு செயல்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும்.

அதைப்போலத்தான் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும். அமைச்சருடைய அந்தஸ்து. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அமைச்சரவை, அரசாங்கத்தை Her Majesty's Government என்றுதான் சொல்கிறார்கள். இராணியுடைய அரசாங்கம். அதைப் போல எதிர்க்கட்சியை Her Majesty's Opposition என்று சொல்கிறார்கள். அதனால் தான் அமைச்சர் அந்தஸ்து அங்கே வழங்கப்பட்டிருக்கிறது. எப்படி சாதாரண ஊழியர்கள், அரசாங்க ஊழியர்கள் சம்பளத்தை வாங்கிக் கொண்டு, சலுகைகளைப் பெற்றுக்கொண்டு, பெயரைப் பயன்படுத்திக் கொண்டு, தன்னுடைய எண்ணங்களை வெளியிடுகிறார்களோ, அதைப்போலத்தான், எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருப்பவர்களும் அப்படி பொறுப்போடு இருக்கவேண்டும். எனக்கு



அந்தப் பதவி வேண்டாம் என்றால் விட்டுவிடலாம். நீங்கள் அதற்கு வேறு ஒருவரை தேர்ந்தெடுத்து, ஏன் நம் திருநாவுக்கரசு அவர்களை நியமிக்கலாம். ஒருவர் வேண்டாம் என்றால்....

*திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் பேரவைத் தலைவர் அவர்கள் வேண்டும் என்றே, இப்போது வம்புக்கு இழுக்க ஆரம்பிக்கிறார்கள். இதிலே நான் குறுக்கிடுவதற்கு வருந்துகிறேன், இருந்தாலும் இதுபற்றி அவர்கள் அபிப்பிராயம் சொல்கிற போது, நானும் எதிர்க்கட்சித் தலைவர் ஏன் வரவில்லை என்பதற்கான காரணங்களைச் சொல்லவேண்டியிருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை அவர்கள் பேசவில்லையே.

*திரு. எஸ். திருநாவுக்கரசு: இல்லை, அவர்கள் வேண்டும் என்று சொல்கிறபோது, வராமல் இருப்பது தவறு என்று சொல்கிறபோது, ஏன் வராமல் இருக்கிறார்கள் என்பதற்கான காரணங்களை நான் சொல்லியாகத்தான் வேண்டும். எனவே அது வேண்டாம். நான் என்ன சொல்கிறேன் என்றால், 25 ஆம் தேதி ஏற்கனவே நடந்த சம்பவங்கள், இங்கே வந்தபோது நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசவில்லை. பொதுவாக எதிர்க்கட்சித் தலைவர்கள் எப்படி இயங்க வேண்டும், எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று, தனிப்பட்ட கருத்தைச் சொல்கிறார்கள். உங்களை அந்தப் பதவியில் அமரச் செய்யவேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். நீங்கள் நன்றிகூட சொல்லலாம் அவருக்கு.

திரு. எல். கணேசன் (முதல் அமைச்சரின் பேரவைச் செயலர்) துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பி. எச். பாண்டியன் பேசியபோது, அமைச்சர்களைப் பற்றியும் குறிப்பிட்டார். அமைச்சர்களுக்கு வேலை குறைவு என்றும் குறிப்பிடடார். ஆகவே பொதுவாகச் சொன்னார்கள். அமைச்சர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும், எதிர்க்கட்சிகள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் சொல்லப்பட்டதே தவிர, தனிப்பட்ட முறையிலே குற்றச்சாட்டும், அதற்கு பதிலும் இதிலே அவசியம் இல்லை.

*திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப் போல, முன்னாள் சபாநாயகர் அவர்கள் சிபாரிசு செய்து, ....

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தரலாம் என்கிறார். எனக்கு அந்தப பதவி வேண்டாம். துணைத் தலைவர் பதவியே போதும். இப்போது இருக்கிற எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் வரமுடியாத நிலை 25 ஆம் தேதி.... (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே, இங்கே மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு உறுப்பினர் பேசுகின்றபோது, ஆளுகின்ற தரப்பிலே பேசுகின்றபோது, அதற்குப் பதில் கூறி பேசிக்கொள்ளலாம். எனவே இப்படி விவாதம் ஆரம்பித்தால், அது எங்கே போகும் என்று தெரியாது. எனவே துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். எப்போதும் இப்படித்தான் நடக்கிறது. பேசுவதற்கு விட்டால் ஒரு நிமிடத்திலே முடிந்து போய் விடும். இந்த மாதிரி தகராறு செய்தால், ஒருமணி நேரம் ஆகிறது. தயவுசெய்து நான் கேட்டுக்கொளகிறேன். ஏன் வரவில்லை என்றால, அவர்கள வராததற்குக் காரணம் ஏற்கெனவே நடந்த சம்பவங்கள், அதையொட்டி அவர்கள் வரவில்லை. இதைச் சொல்ல உரிமையில்லையா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த அம்மா வரவில்லை என்பதைப் பற்றி யாருமே பேச்சை ஆரம்பிக்க வில்லையே. பொதுவாக எதிர்க்கட்சித் தலைவர்கள் எப்படி இயங்கவேண்டும், ஆளும் கட்சிக்கு உள்ள பொறுப்பு, அவருக்கும் சமமாக இருக்கிறது என்ற அந்தக் கருத்திலேதான் சொன்னாரே தவிர, வேறு ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : அந்தச் சம்பவங்களை இங்கே பேசினால் அதற்கு நாங்கள் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. எனவே, இதுமாதிரி இந்தப் பிரச்சினைகள் நீடித்தால், ஏன் வரவில்லை என்பதற்கான காரணங்களைச் சொல்லவேண்டியிருக்கிறது. 25 ஆம் தேதியையொட்டி வரவில்லை.... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வரவில்லை என்பதைப் பற்றி அவர்கள் கருத்துக் கூறவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். சொல்கிறேன். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். இராதா : திருநாவுக்கரசு அவர்களுக்கு பொரிச செய்கிறேன் என்று.... (குறுக்கீடு).



திரு. பி. எச். பாண்டியன் : சியாரிசு வேண்டாம். நான் சியாரிசு பண்ணவில்லை. நான் சொல்ல வந்தது, இப்போது அமைச்சர்கள் இங்கே இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். காரணம் யாராவது ஒரு அமைச்சரைச் சொல்லி விட்டால், தவறாக்கி விடுவார்கள். இப்போது அமைச்சருக்கும் ஒரு செயலாளருக்கும் ஏதோ ஒரு மனஸ்தாபம் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். நான் இனிமேல் அலுவலகத் திற்கு வரமாட்டேன் என்று சொன்னால், நீங்கள் வேலையில் வைப்பீர்களா? எனக்கு பதில் வேண்டும்.—லீவ் எடுக்காமல்— பதில் வேண்டும். காரணம் அமைச்சர் அந்தஸ்தில் இருக்கக் கூடியவர்கள், Pub'ic Servants. They are in the pay rolls of the Government. அரசாங்கச் சம்பளத்தை பெறக்கூடியவர்கள் ஒரு பைசா வாங்கினாலும் இந்த அவையில் கணக்குக் கொடுக்கக்கூடிய வர்கள், ஆகவே இதற்கு விதிவிலக்கு என்றால், இனிமேல் அதற்கு விதிவிலக்குத் தாருங்கள் என்று அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு ஒழுங்கு நடவடிக்கை இல்லை என்றால், எதற்கு நம்முடைய நாட்டில் Discriplinary proceedings அதையெல்லாம் மூடிவிடுங்கள், வேண்டாம். எதற்கு அதிகாரிகள் என்றால் அடக்கப்பட வேண்டும். நிர்வகிக்கக் கூடியவகள் என்றால் விதிகளுக்கு கட்டுப்படவேண்டும். விதியை உருவாக் இயவர்களுக்கு விதியை மீறலாமா? விதியின்கீழ் பணியாற்றக் கூடியவர்கள் விதியை மீறக்கூடாது என்ற காரணத்தால் நான் சொன்னேன்.

முற்பகல் 11-20

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு முன்னாள் சபாநாயகர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிற காரணத் தால், அந்த தகவலின் அடிப்படையில் நான் கேட் கிறேன். மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் அப்படி வராமல் இருந்தாரே, அதைப் பற்றி என்ன கருத்து சொல்கிறார்? ஒரு தடவை இதே சபாநாயகராக இவர் முன்னால் இருந்த போது அவருடைய தீர்ப்பை எதிர்த்து, இவர் சபாநாயகராக இருக்கும் வரை வரமாட்டேன் என்று மனோகரன் சென்றாரே, அதைப் பற்றி என்ன சொல்ல விருமபுகிறார்கள்?

திரு. பி. எச். பாண்டியன் : அவர்கள் இருவரும் அமைச்ச ராக இருந்த போது, இப்படிச் சொல்லிவிட்டுப் போகவில்லை. அமைச்சர் அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டு செல்லவில்லை. They were not in the pay rolls of the Government.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது தான் 4 ஆண்டுக் காலம் தொடர்ந்து சட்டப் பேரவைக்கு வர வில்லை. அப்போது அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந் தார். மற்ற உறுப்பினர்கள் பங்கு ஏற்றார்கள். எதிர்க்கட்சித் தலைவர் வரவில்லை.

[1989 ஏப்ரல் 26

திரு. எச். பாண்டியன் : அங்கீகரிக்கப்பட்ட எதிர்க் கட்சித் தலைவராக சம்பளம் வாங்கி, அதாவது He did not enjoy the Minis.erial Status. He was not in tLe pay rolls of the Government. நான் பார்த்திருக்கிறேன். அதனால்தான் சொல்கிறேன். ஆகவே இதை நான் சொல்வது, என்னுடைய தனிப்பட்ட எண்ணங்கள் என்று எண்ணிவிட வேண்டாம். அமைச்சர் எப்படி வேலை செய்ய வேண்டும் என்றால் அவர்களும் முழு நேர ஊழியர்கள்தான், துணைச் சபாநாயகரைத் தவிர துணை சபாநாயகர்தான் ''பார்ட்-டைம்'' இரண்டு வேலையும் செய்யலாம். துணைச் சபாநாயகராக இருந்த போது, நான் வக்கீலாகத்தான் இருந்தேன். சபாநாயகர், அமைச்சர்கள், முழு நேர ஊழியர்களாகக் கருதப்பட்டிருக்கிறார்கள்.

ஆகவே இங்கே நான் இந்தக் கருத்தை வெளியிடுவதற்குக் காரணம். இரண்டு நாட்களுக்கு முன்பு கூட நம்முடைய மாண்பு மிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் ஒரு கருத்தை—நேற்று என்று கருதுகிறேன்—வெளியிடும்போதும் தவறு யாராவது செய்திருந்தால் எப்படி நடவடிக்கை எடுப்பீர்கள் என்று கேட்டார்கள். முதலமைச்சர் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களின் வாசகத்தை எடுத்துச் சொன்னார். இந்த அவையில் விவாதிப்பதே தண்டனை என்று சொன்னார். நான் உடனே சட்ட அமைச்சரிடம் கேட்டேன். இனிமேல் இந்த நாட்டில் தவறு யார் செய்திருந்தாலும் அவர்களைப் பற்றி இங்கே விவாதித்து நடவடிக்கை எடுக்கலாம். சிறைசாலை வேண்டாம். ஏன் அவர்களுக்கு மட்டும் சிறை? பல கோடி ரூபாய் தவறு செய்பவர்களுக்கு பாராளுமன்ற கமிட்டி டில்லி கொஞ்சம் குறை என்றால் விசாரணைக் கமிஷன். அதற்குக் கீழே வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள தவறு செய்தால் காவல் நிலையம் காவல்நிலையம். நமக்கு அல்ல. நாம் எல்லாம் சட்டத்தின் மேலே உச்சாணியிலே அதைத் தாண்டி இருக்கிறோம். நம்மை சட்டம் தொடக் கூடாது. 420 என்றாலும்தொடக்கூடாது307என்றாலும்தொடக்கூடாதுஎன்ற நிலைமாற வேண்டும். சாதாரண மனிதர்கள் வாக்களித்துத் தான் நாம் எம்.எல்.ஏ.க்களாக இங்கே வந்திருக்கிறேம். ஆகவே தான் சாதாரண மனிதனுக்கு என்ன உரிமை இருக்கிறதோ, அதை விட மேலான உரிமை அமைச்சருக்குக் கிடையாது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இது போன்ற நிலைகள் வந்துவிடக் கூடாது என்ற காரணத்தினால் தான் அமைச்சர்களின் சம்பளத்தை தலைமைச் செயலாளருடைய சம்பளத்தைவிட அதிகம் ஆக்குங்கள் என்று சொல்லி இருக்கிறேன். அப்படியானால் முழுமையாக அவர்களுடைய சேவையை இந்த நாட்டிற்குத் தரமுடியும் என்ற காரணத்தால் தான் நான் இங்கே சொன்னேன்.



1984 ஏப்ரல் 26] [திரு. பி. எச். பாண்டியன்]

வணிக வரித் துறையைப் பொறுத்தவரையில், எத்தனை கோடி ரூபாய் நிலுவையில் வசூலிக்கப்படாமல், குறிப்பாக அவர் களுக்கு பல்வேறு தடை உததரவுகளினால் இருக்கிறது என்பதை இந்த அவைக்கு ஆட்சிமன்றச் செயலாளர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன் காரணம் அதிகமாக வரி செலுத்தக்கூடியவர்கள் செலுத்தாவிட்டால் நிதி பற்றாக்குறையை எப்படி சரிக்கட்டப் போகின்றீர்கள்? இங்கே பெட்ரோலுக்கு, டீசலுக்கு வரியை உயர்த்தி விதித்திருக் கின்றோம். நிதிநிலை அறிக்கையிலே பார்த்தோம். அரசாங்க வாகனங்கள் தான் அதிகம். அரசாங்க வாகனங்களுக்குத்தான் அதிகமாக செலவாகப் போகிறது. அப்படி செலவழிக்கும்போது இன்னும் பற்றாக்குறை அதிகமாகாதா என்பதை நான் இங்கே கேள்வியாகக் கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே இந்த மானியத்தில் என்னுடைய கருத்துக்களை வெளியிடுவதற்காக வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி சொல்லி, எல்லோரும் பொது நல ஊழியர்களாக, குறிப்பாக அமைச்சர்கள் எந்தக் குற்றச்சாட்டிற் கும் ஆளாகாமல் இருப்பதற்கு. இதைத் தவிர வேறு வழி இந்த நாட்டில் கிடையாது என்பதைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, முன்னாள் சபாநாயகர் அவர்கள் ஒருவருக்கென்றால், விசாரணை ஒருவருக்சென்றால்கமிஷன் நியமனம் என்றெல்லாம் தாரதம்மியம் இருக்கிறது என்று சொன்னார்கள். சட்டத்தின் முன் அனைவரும் சமம். ஆண்டவன்சந்நிதானத்தின்முன் அனைவரும் சமம் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் பேதம் இருக்கத்தான்செய்கிறது சில இடங்களிலே. இப்போது மாண்புமிகு ஜனதா தள் கட்சிக்கா ரர்களும், அன்பிற்குரிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும் அதிக எண்ணிக்கையில் இருந்தாலும் கூட ஒரே உறுப்பினராக வந்திருக்கிற திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் இந்த வரிசையிலே இருக்கிறார்களே அது எப்படி?

திரு. பி. எச். பாண்டியன் : 12 உறுப்பினர்களைக் கொண்ட கா. கா. தே. கா.வில் குமரி அனந்தன் இருக்கும்போதே அவரை நான் முன்னாலே உட்கார வைத்தேன். 9 சதவீதம் வாக்குகள் வாங்கி வந்திருக்கிற ஒரு கட்சியின் சார்பிலே நான் இங்கே அமர்ந்திருக்கிறேன். அதற்கு மேல் இதில் நான் ஒன்றும் சொல்ல வேண்டிய தேவை கிடையாது.

திரு. குமரி அனந்தன் : கேட்பது வேறு ஒன்றும் இல்லை. உங்களை குறை சொல்லவில்லை. எங்களையும் உட்கார வைத்தீர்கள். விதியின்படி சலுகைகள் சில இடங்களில் கொடுக்கப் படுகின்றன. உங்களுக்கு இந்த இடம் கொடுக்கப்பட்டதற்குக்

[திரு. குமரி அனந்தன்] [1989 ஏப்ரல் 26

காரணம் எண்ணிக்கையின் அடிப்படையில் அல்ல, நீங்கள் ஏற்கெனவே வகித்த பதவியின் அடிப்படையிலே. எனவே ஏதாவது ஒரு இடம் ஒருவருக்கு தகுதி கருதி கொடுக்கப்படுகிறது என்றால், பலவற்றை கணக்கில் எடுத்துக் கொண்டு கொடுக்கப்படுகிறது என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதனாலேதான் ஒருவருக்கு விசாரணை கமிஷன் வரும், இன்னொருவருக்கு காவல் நிலையம் வரும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஏற்கெனவே 9 சதவீதம் வாங்கிய ஜானகி அம்மையாருடைய கட்சி எங்கள் கட்சியோடு இணைந்து விட்டது.

**திரு. பி. எச். பாண்டியன் :** அ[illegible] சொல்லத் தேவை இல்லை. பாராளுமன்ற கமிட்டி என்று சொன்னேனே, பல கோடி ரூபாய் ஊழலுக்கு பாராளுமன்றக் கமிட்டி. பெரியவர் சிக்கினால் கமிட்டி, சிறியவன் சிக்கினால் எப்.ஐ.ஆர். எந்தச் சட்டம் சொல்கிறது? (குறுக்கீடு) பெரிய பெரிய தலைவர்களாக இருந்தால் பாராளுமன்றக் கமிட்டி, அதற்கு கீழே கொஞ்சம் லட்சத்திலே வந்தால் விசாரணைக் கமிஷன், அதற்கும் கீழே இருந்தால், அவனுடைய தலை எழுத்து, உங்களுக்கு வோட்டு போட்டவனுக்கு எப்.ஐ.ஆர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ரொம்ப உணர்ச்சி வசப்பட்டுப் பேசாதீர்கள்.

* **திரு. சோ. அழகர்சாமி :** ஒரே ஒரு பாயின்ட் அவர் சொன்னதிலே. மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, முன்னாள் சபாநாயகர் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னார்கள். தாரதம்மியத்திலே வழக்குகளில் எல்லாம் பெரியவருக்கு ஒன்றாக, சிறியவர்களுக்கு ஒன்றாக இருக்கிறது என்று ஆத்திரப்பட்டுச் சொன்னார்கள். இவைகளை எல்லாம் தீர்க்கிற ஒரு உயர்ந்த பதவியில் இருந்த காலத்தில் அதைப் போக்குவதற்கு அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா? அதற்காக ஏதாவது செய்தார்களா? [illegible]ப்போ[illegible] மட்டும்தான் பேசுகிறார்களா என்று தெரிய விரு[illegible]கிறே[illegible].

**திரு. பி. எச். பாண்டியன் :** நான் இருக்கும்போது தான் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி, [illegible]லெக்டராக இருந்தவர் மீது நடவடிக்கை எடுத்து, கவர்னா ஆட்சிக் காலத்தில் அவரை சஸ்பெண்ட் செய்தார்கள். இன்றைக்கு நீங்கள் யாராவது ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க முடியுமா? எடுத்து இருக்கிறீர்களா? ஏன் எடுக்கவில்லை என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சரி போதும். திரு. என். தங்கவேல் அவர்கள்.



1989 ஏப்ரல் 26]

**திரு. என். தங்கவேல் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இப் பேரவையில் எனது பேச்சைத் துவங்கு
முன் தமிழகத்து சுயமரியாதைச் சுடராம் தந்தை பெரியார்,
அரசியல் ஆசானாம் பேரறிஞர் அண்ணா ஆகியோருக்கு எனது
இதய அஞ்சலியை செலுத்தி, இப்பேரவையில் நான் பேசக்
காரணமான தமிழினத்தின் தனிப் பெரும் தலைவராம் முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அவை முன்னவர் பேராசிரியர்
பெருந்தகை அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதேபோல் இவ்வாய்ப்பினை நான் பெறுவதற்கு என்னை
ஆளாக்கி அனுப்பி வைத்த குன்னூர் தொகுதி வாக்காளப் பெரு
மக்களுக்கும் அதற்காக இரவு பகல் பாராது உழைத்த நல்லிதயங்
களுக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் கூறி எனது
கன்னிப் பேச்சை துவங்குகின்றேன். இம்மாமன்றத்தில் டாக்டர்
கலைஞர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட 1989–90 ஆம்
ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை இதுவரையில் இப்பேரவையில்
கண்டிருக்க முடியாத ஒன்று என்பது நல்லோர்களுக்கு தெரியும்.
அது ஓர் அட்சயப் பாத்திரம். அலாவுதீன் விளக்கு, கற்பக
விருட்சம், காமதேனுப் பசு. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க
வழி செய்யும் இதில் இல்லாதது எதுவுமே இல்லை. இதையும்
குறை கூறுபவர்களின் குறையை எண்ணிக் குறைபட்டுக் கொள்
வதைத் தவிர வேறு எதுவும் தோன்றவில்லை.

இச்சிறப்பு மிக்க நிதிநிலை அறிக்கையை நாட்டுக்கு அளித்த
ஈடு இணையற்ற என் தலைவரைப் போற்றவும் வாழ்த்தவும்
எனக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் சார்பாக நான்
கடமைப்பட்டுள்ளேன். நாட்டிலே நலிந்தோர் நலம் பெற
வேண்டுமென்கிற நல்லெண்ணத்தோடு இந்த நிதிநிலை அறிக்
கையை அளித்தமைக்கு முதல்வர் அவர்களுக்கு, நலிந்தோரின்
பிரிவினைச் சார்ந்த நான் நிச்சயமாகக் கடமைப்பட்டுள்ளேன்.

[முற்பகல் 11-30.]

மாவட்ட நிர்வாகம் என்கிற பொருள் குறித்துப் பேச வேண்டி
யவனாயிருக்கிறேன். மாவட்டம் என்கிற அளவில் தமிழ்நாட்
டின் ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நான்
சார்ந்துள்ள நீலகிரி மாவட்டம் சிறியதுதான். உதகை, குன்
னூர், கோத்தகிரி, கூடலூர் என்கிற நான்கே வட்டங்களைக்
கொண்டதுதான். ஆனால் மலைப் பிரதேசம் என்பதால்
உதகை, கூடலூர் ஆகிய இருவட்டங்களும் தற்போதுள்ள
அமைப்பின்படி நிர்வாகச் சிக்கலுள்ளதாகவும் அப்பகுதிகளைச்
சார்ந்த மக்களுக்குச் சிரமம் அதிகரிக்கச் செய்வதாகவும் உள்ளது.
ஆகவே, உதகை வட்டத்திலிருந்து மஞ்சூர் பகுதியைத் தனியே
பிரித்து மஞ்சூர் வட்டமென்றும், கூடலூர் பகுதியிலிருந்து பந்த
லூர் பகுதியைத் தனியே பிரித்து பந்தலூர் வட்டமாகவும்
அமைக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். தங்கவேல் : [1989 ஏப்ரல் 26

நீலகிரி ஒரு மலைப் பிரதேசமென்பதை நான் சொல்லித் தெரிந்துகொள்ளக் கூடியதல்ல. அங்கு தேயிலை உற்பத்திதான் பிரதானத் தொழில். இந்தத் தேயிலைக் காடுகள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமலும் தொலை தூரத்திலுமாக அமைந்துள்ளன. அதனால் ஆங்காங்கு வேலை செய்கின்ற தொழிலாளர் வர்க்கமான ஏழை மக்கள் உரிய இணைப்புச் சாலைகளும், போக்குவரத்திற்கான ஊர்தி வசதிகளும் இன்றி நெடுங்காலமாகவே சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஏழை எளியோரின்பால் பரிவும் அக்கறையும் கொண்ட அரசு இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகின்றேன். பலமுறை வைக்கப்பட்டிருந்த சில பொருட்களுக்கு ஒருமுனை வரியென நிர்ணயித்தமைக்கு அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் தற்போது உற்பத்தி செய்யப்பட்ட தேயிலைக்கு 4 விழுக்காடு என்று விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியைச் சற்று குறைத்தால் நீலகிரியில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை ஏல விற்பனைக்கென்று கேரள மாநிலத்திற்குக் கொண்டு செல்வதைத் தடுக்கலாம். இதன் மூலம் உள்ளூர் விற்பனைப் பெருகவும் அதன் மூலம் கிடைக்கக் கூடிய பலன் ஓரளவுக்கேனும் தொழிலாளருக்குக் கிடைக்கவும் வாய்ப்புள்ளது.

1939 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வணிக வரி ஆண்டிற்காண்டு பெருகி இவ்வாண்டு சற்றேறக்குறைய 1,510 கோடி ரூபாய் வருவாய் ஈட்டித் தருவதாக—அரசின் மொத்த வருவாயில் 72 விழுக்காடு வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய துறையாக இருப்பதால் ஆங்காங்குள்ள சுங்கச் சாவடி போன்ற இடங்களுக்கு காவல்துறைக்கு உள்ளது போல் 'வயர்லஸ்' கருவிகளை வழங்கி கண்காணிப்பையும் அதிகரித்தால் மேலும் வருவாய் பெருக வாய்ப்புள்ளது எனக் கூறிக்கொள்கிறேன்.

1989—90 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், உலக வங்கியின் உதவியுடன் பட்டுப்புழு வளர்ப்புத் துறையில் ரூபாய் 41.77 கோடி மதிப்பீட்டில் விரிவானதொரு திட்டம் வரும் ஆண்டில் தொடங்குவதற்கான குறிப்பு உள்ளது என்பதறிந்து மகிழ்ச்சியடைகிறேன். எனது தொகுதியான குன்னூரில்தான் பட்டுப்புழு ஆராய்ச்சி மையம் உள்ளது. எனது மாவட்டம் வேளாண்மையை நம்பியுள்ள மாவட்டமாகும். ஆகவே விவசாயிகளுக்குக் கணிசமான மானியம் வழங்கி முசுக்கொட்டை சாகுபடிக்கு ஊக்கத்தை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கால்நடை வளர்ப்பு திட்டத்தில் வரும் ஆண்டு ரூபாய 13.73 கோடி மதிப்பீட்டுச் செலவில் புதிதாக ஆடுகள் வளர்ப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட உள்ளது என அறி



1989 ஏப்ரல் 26] [திரு. என். தங்கவேல்]

றேன். இதில் செங்கை-அண்ணா, தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படவிருப்பதாக அறிகிறேன். இதில் நீலகிரி குறிப்பிடப்படவில்லை. நீலகிரியில் வளர்க்கப்படும் ஆடுகள் விசேஷமான ஆடுகளாகும். நீலகிரியில் ஆடு வளர்ப்போரிடம், மராட்டியம் போன்ற வெளி மாநிலத்திலிருந்து வரும் வியாபாரிகள் ஆட்டு ரோமங்களை மிகவும் குறைந்த விலைக்குப் பேசி அதையும் பணமாகத் தராமல் பண்டமாற்று முறையில் கம்பளிப் போர்வைகளைத் தந்து ரோமங்களைப் பெற்றுச் செல்கிறார்கள். இந்த ஏமாற்று முறையைத் தவிர்க்க, ஆடுகள் ஆராய்ச்சி நிலையம் உள்ள உதகை சாந்திநல்லா பகுதியிலேயே ஒரு கம்பளித் தொழிற்சாலை நிறுவினால் தொழில் பெருகவும் ஆட்டு ரோமங்களுக்கு நல்ல விலை கிடைக்கவும் வாய்ப்பு கிட்டும். எனவே ஆடு வளர்ப்புத் திட்டத்தில் நீலகிரியையும் இணைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டம் முழுவதுமே போதிய மருத்துவ வசதியற்ற நிலையில் உழன்று கொண்டிருக்கிறது. மக்கள் தொகைக்கும் அவர் தம் அவசியத்திற்கும் போதிய அளவில் மருத்துவமனைகளும் ஆரம்ப சுகாதார நிலையங்களும் இல்லை. இருக்கின்ற மருத்துவ நிலையங்களிலும் போதிய மருத்துவர்களும் செவிலியரும் இல்லை. இந்த மருத்துவத் துறைகளில் இருக்கும் குறைகளைப் போக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி என்றாலே வளமான பூமி-பசுமையான பிரதேசம் என்பதுதான் எல்லோருடைய எண்ணமும். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் இன்றைய தினம் அந்த மாவட்டம் முழுவதுமே வற்றி, வறண்டு போய்க் கிடக்கின்றது. பார்க்கும் இடம்தோறும் சுனைகளும், நீரூற்றுக்களும் பசுமையாகத் தெரிந்து கொண்டு இருந்த மலைப் பிரதேசத்தில், குடிக்கக் கூடத் தண்ணீர் இன்றி, அவதிப்படுகின்ற நிலை, துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு இருக்கின்றது. ஆகவே, கோடைக் காலத்தில் நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தரவிருக்கின்ற உல்லாசப் பயணிகளுக்குத் தண்ணீர்ப் பஞ்சத்தை நீக்குகின்ற வகையில் தண்ணீர்த் தட்டுப்பாட்டை உடனடியாக நிவர்த்தி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டம் முழுவதற்கும் அங்கிங்கெனாதபடி பல பகுதிகளுக்கும் குடி தண்ணீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது கோத்தகிரி பகுதியிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் உள்ளவர்களுக்கு குன்னூரில்உள்ள மாஜிஸ்திரேட் கோர்ட் மாத்திரம் உள்ளது. அங்கு நடைபெறும் வழக்குகளில் 75 சதவிகிதம் வழக்குகள் கோத்தகிரி பகுதியைச் சார்ந்தவை. 50 சதவிகிதம் வழக்கறிஞர்கள் அங்கே கோத்தகிரியிலிருந்துதான் செல்கிறார்கள். ஆகவே, கோத்தகிரியிலே ஒரு வழக்குமன்றம் வைக்கச் சொல்லி, அதற்கு கட்டிடமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

எனவே, அங்கு ஒரு மாஜிஸ்திரேட் கோர்ட் நிறுவ வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மேலும் மாஜிஸ்திரேட் கோர்ட் அமைக்க வேண்டுமென்று கோரிக்கைகள் விடப்பட்டு வந்தது மாத்திரமல்லாமல், அதற்கான கட்டிடமும் தயாராக உள்ளது. எனவே, கோத்தகிரியிலே அந்தக் கோர்ட் இயங்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பினை நல்கியமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பேரவைச் செயலாளர் அவர்களுடைய அறிமுகத்தின் பேரில், நடந்து கொண்டிருக்கின்ற பொது விற்பனை வரி, ஏனைய வரிகளும், மாவட்ட நிர்வாகமும், ஓய்வூதியம்—ஆகிய மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களை இந்த அவையிலே வைப்பதற்கு அனுமதித்ததற்கு நன்றி கூறி சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

ஒரு மாநிலத்தில், சரியான முறையிலே நிர்வாகம் நடைபெற வேண்டுமென்று சொன்னால், அந்த நிர்வாகத்திற்கு மூல காரணமாக இருப்பது வணிக வரித்துறை. அந்தத் துறையை நிர்வகிக்கிறவர்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்பது நடைமுறை. அந்த வகையிலே நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையினை நிர்வகிக்கிறார்கள் என்று நினைக்கின்ற போது உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். அந்த வகையிலே ஒவ்வொரு வகையான முறைகளை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருந்தாலும், அதற்கு அப்பாற்பட்ட சில விஷயங்களை, இதற்கு முன்னாலே எப்படி, எப்படி எல்லாம் நடந்தது என்பதையும் இந்த அவையிலே சொல்ல வேண்டும் என்பதற்காக வேண்டி சில கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன்.

கிட்டத்தட்ட இந்த நிர்வாகத்தில் பல முறைகேடுகளை, இதற்கு முன்னாலே இருந்தவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதற்கு நமது மாண்புமிகு முன்னாள் பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் சொன்னது போல, இந்த அவையிலே பல பெரிய நிர்வாகம் செய்கிறவர்களுக்கு வரிகள் கட்டவேண்டும் என்று வருகிறபோது, அந்த வரிகளை நிறுத்திவைக்க வேண்டுமென்று சில வழக்குகள் இருக்கின்றன. அதிலே அதிகாரிகள் செக்ரடரி, கமர்சியல் டிபார்ட்மெண்ட், அவர்கள் கூட அதற்கு ஒரு ஸ்டே கொடுப்பார்கள். அந்த வகையிலே எத்தனை வகையான ஸ்டேக்கள், நிறுத்தங்கள், வரியை வாங்குவதற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது என்பது தெரிந்தாலே, இந்த அரசிற்கு பெருவாரியான வருமானங்கள் வருவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. அந்த வகையிலே கிட்டத்தட்ட நிலுவையில் எத்தனை வகையான வழக்குகள் இருக்கின்றன என்பதை தெரிந்து கொண்டு அவைகளை விரைவில் முடிக்க, அது கூட ' லீட்ல்டு கரப்ஷன் ' என்று சொல்வார்கள். ஒரு நான்கு வருடம் தள்ளிப்



போடுகிறோம் என்று சொன்னாலே அந்த வரியை வாங்குவதற்கு 4 ஆண்டுகள் தள்ளிப் போடவேண்டும் என்று ஸ்டேயைக் கொடுத்தாலே அந்த வரிவகைகளைப் பெறுவதற்கு முன்னாலே, அதனால் பெருவாரியான வருமானத்தைப் பெறுவதற்கும் அரசாங்கத்திற்குத் தடையாக இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலை வரும் போது, இந்த ஸ்டேக்களை, இந்த நிறுத்தி வைப்பதை உடனடியாகப் பரிசீலித்து அவைகளை முடித்து விட்டாலே அரசாங்கத்திற்கு பெருவாரியான வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பது மட்டும் அல்ல, அந்த நிருவாகத்திலே இதற்கு முன்னால் இருந்தவர்கள் அந்த அதிகாரிகள் புரமோஷன் என்று சொல்வார்கள் அந்த வகையிலே பல முறைகேடுகள் நடந்து இருப்பதாக எனக்கு அதிகாரிகள் வந்து சொன்னார்கள்.

(முற்பகல் 11-40)

1972-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஏ.சி.டி.ஓ.-வாக நியமிக்கப்பட்டவர்கள் எல்லாம் துவரையில் டி.சி.டி.ஓ.வாக ஆகவில்லை. அந்த இன்னும் அவர்கள் டி.சி.டி.ஓ. புரமோஷன் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. 20, 25 அளவுக்கு புரமோஷன் வருடங்கள் ஆன பின்னாலும் கூட அவர்களுக்கு புரமோஷன் கிடைக்கவில்லை. அதற்கு காரணம் இல்லை. புரமோஷன் அந்த அலுவலகத்தில் வேலை செய்யும் அவர்கள் மட்டும் அல்ல, அஸிஸ்டெண்டாக இருந்தவர்களுக்கு எல்லாம் மூன்று அவர்களுக்கு புரமோஷன் கிடைத்து அவர்கள் சி. டி. ஓ.-வாக ஆகியிருக்கிறார்கள். ஆனால் ஏனோ தெரியவில்லை ஏ.சி.டி.ஓ.-க்கு மட்டும் இன்னும் புரமோஷன் வராமல் 1972 முதல் இருக்கிறார்கள். 400 வழக்குகள் கூட தேக்கத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த முறையில் வழக்குகளை பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அது ஒரே யூனிட்டாக தமிழகம் முழுவதும் இருக்கிறது. அந்த முறையில் இருக்கும்போது இதிலே ஆணையர் அலுவலகம் மட்டும் தனியாக ஒரு யூனிட் என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு மட்டும் தனியாக புரமோஷன் இருப்பதாகவும், மற்றவர்களோடு அவர்கள் வராமல் தனியாக அவர்களுக்கு மட்டும் புரமோஷன் என்ற ஒரு வகை இருப்பதாகச் சொல்கிறார்கள். அது எப்படி உகந்தது என்று தெரியவில்லை. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அந்த மாதிரி வராது. எப்படி அவர்களுக்கு மட்டும் தனியாக ஒரு புரமோஷன் முறை என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இல்லாமல் எல்லோருக்கும் முறையாக இந்த கம்யூனல் ரோல் என்று சொல்வார்களே அதைக்கூட அங்கே கடைப்பிடிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். பொய்யாக சிலர் தேதிகளைக் கொடுத்து வேலையில் சேர்ந்திருக்கிறார்கள். என்னிடம் அதை கூட சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: பொய் என்ற வார்த்தை அவைக் குறிப்பில் இருக்கலாமா?

திரு. எம். இராமச்சந்திரன்: பொய் என்ற வார்த்தை கருத்துக்களைச் சொல்லும்போது அப்படி பொய் இருக்கலாம். பொய்யாக சிலர் என்று சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

தேதியைக் குறிப்பிட்டு வேலையில் சேர்ந்து இருக்கிறார்கள் என்று சொன்னால் அந்தத் தேதியை பரிசீலனை செய்து பார்த்தால் அது உண்மையா, பொய்யா என்று தெரியும். ஆகவே, அந்த வகையில் அந்தத் தேதிகளை, அவர்களை பணியில் அமர்த்திய காலம், தேதி முறையாக குறிப்பிடப்படவில்லை. முன் தேதி இட்டு குறிப்பிட்டு அவர்களுக்கு எல்லாம் புரமோஷன் கொடுத்து இருப்பதாகக் கூட சொல்லுகிறார்கள். இந்த முறையில் சில பத்திரிகையில் கூட முன்பு எழுதினார்கள். அவைகளில் முறைகேடுகள் நடந்து இருக்கின்றன, அதாவது புரமோஷன் கொடுத்தது முறையாக இல்லை, சரியாக இல்லை, சில காரணங்களுக்காக சில முறைகேடுகள் நடந்து இருக்கின்றன, அதை வைத்து தான் சிலர் பதவி உயர்வுகள் கூட பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைக் கூட பல பத்திரிகைகளில் போன ஆண்டு, அதற்கு முந்தைய ஆண்டு எழுதியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் பரிசீலிக்க வேண்டும். அந்த மாதிரி முறைகேடுகள் இல்லாமல் சரியாகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சில வரி ஏய்ப்புகளை நான் கூட சினிமா கொட்டகைக்கு சென்ற வகையில் பார்த்தேன். ஒரு சினிமா திரையரங்கத்திற்குச் சென்றேன். அதில் டிக்கெட்டில் 6 ரூபாய் 98 பைசா என்று போட்டிருந்தார்கள். நான் கேட்டேன், ஏன் 6 ரூபாய் 98 பைசா என்று போட்டிருக்கிறார்கள். அதை 7 ரூபாய் என்று ஏன் போடக்கூடாது என்று கேட்டேன். அதற்கு சொன்னார்கள், 7 ரூபாய் என்று போட்டால் ஏதோ வரி உயர்வு அதற்காகத்தான் 6 ரூபாய் 98 பைசா என்று போட்டு அரசை ஏமாற்றுகிறார்கள். இந்த மாதிரி நிலைமை இல்லாமல் 6 ரூபாய் 98 பைசா என்று இருந்தாலே அதற்கு வரி வருகிற வகையில் எப்படியாவது ஒரு முறையை ஏற்படுத்த வேண்டும். இப்படி ஏமாற்றுகின்ற முறையைச் செய்யக்கூடாது. சினிமா கொட்டகைகளில் பார்த்தால் டிக்கெட்டைக் கொடுக்காமல் அந்த டிக்கெட்டை அப்படியே வைத்துக் கொண்டு தனியாக அவர்கள் ஏதோ ஒரு சீட்டை கொடுத்து அனுப்புகிறார்கள். கிராமங்களில் உள்ள டூரிங் தியேட்டர்களில் இந்த மாதிரி நடக்கிறது. அவைகளை எல்லாம் சரியாக கவனித்து அரசுக்கு வருவாயைப் பெருக்க வேண்டும். வணிக வரி நிர்வாகத்தை சரியாகச் செய்தால் தான் அரசுக்கு வரவேண்டிய வருமானம் வரும். அரசுக்கு வருமானம் வரக்கூடிய ஒரு துறை அந்த வணிகவரித்துறை ஒன்றுதான். ஆகவே அந்த முறையை சரி செய்ய வேண்டும். சரியான முறையில் அதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த மாவட்ட ஆட்சியாளர், அமைச்சர்கள் என்ற முறையை பார்க்கும்போது, மாவட்ட நிர்வாகத்தில் சிலர் சொன்னார்கள், கிராம நிர்வாக அதிகாரிகளை கிட்டத்தட்ட 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் போட்டார்கள். முந்தைய ஆட்சிக் காலத்தில் அவர்களை எல்லாம் நிர்வாகம் செய்வதற்காக கிராம நிர்வாக அலுவலர்களாகப் போட்டார்கள். அப்படி போடப்பட்ட அந்த கிராம நிர்வாக அதிகாரிகள் யாரும் அந்த கிராமத்தில்



இருப்பது இல்லை. அதிலே ஏற்றத்தாழ்வு வருகிறது. மாவட்டத்தில் இருக்கின்ற மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி டி. ஆர். ஓ. என்பவர் எஸ். எஸ். எல். சி. வரை படித்து இருப்பார். ஆனால் இப்போது இருக்கின்ற நிர்வாக அதிகாரிகள் எல்லாம் பி. ஏ. படித்து இருப்பவர்கள். தாங்கள் பி. ஏ. படித்து இருக்கிறோம் என்ற காரணத்தால் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியைக்கூட அவர் குறைவாகப் படித்தவர் என்பதால் மதிப்பது இல்லை, மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள் அனுபவத்தில் முதியவர்கள், இந்த கிராம நிர்வாக அதிகாரிகள் எல்லாம் வெறும் பட்டதாரிகள் தான். இவர்கள் எல்லாம் சங்கங்களை வைத்துக் கொண்டு தங்களுக்கு அங்கே வேண்டும், இங்கே வேண்டும் என்று கூட போராட்டம் செய்து கொண்டு இருக்கிறார்கள். எங்களுக்கு அந்த அந்த தாலுக்காவில் போடுங்கள் என்று கூட போராட்டங்கள் செய்கிறார்கள். அந்த அந்த சொந்த தாலுக்காவில் இருக்கவேண்டும் என்று ஒரு ஜி. ஓ.-வைக் கூட முந்தைய அரசு போட்டார்கள். அது ஒருவகையில் நல்லது தான். காரணம் கிராம நிர்வாக அதிகாரிகளைத் தேடி மக்கள் போக முடியாது. கிராம நிர்வாக அதிகாரிகள் அந்த அந்த ஊரில் இருக்கவேண்டும் என்ற அந்த முறையை ஏற்படுத்தவேண்டும்.

ஆனால் கிராம நிர்வாக அதிகாரிகள் யாருமே அந்த அந்த ஊரில் இருப்பது இல்லை. என்னைப் பொறுத்த வரையில் நான் எத்தனையோ முறை போய் கேட்டபோது அங்கே எல்லாம் அவர்கள் கிராமத்தில் இல்லாமல் இருந்து இருக்கிறார்கள். அந்த கிராம மக்கள் அவர்களைக் காண அவதிப்பட்டும் அந்த கிராம நிர்வாக அலுவலர்கள் கிடைப்ப தில்லை என்றெல்லாம் சொல்லி என்னிடம் குறைபட்டுக் கொண் டதைக்கூட நான் தேர்தல் சமயத்திலேயும் அதற்குப் பின்னாலும் கிராமங்களுக்குப் போகிறபோது பார்த்தேன். ஒரு சர்டிபிகேட் வாங்குவது என்று சொன்னாலுங்கூட அவர்கள் மிகவும் சிரமப் படுகிறார்கள். அவைகளுக்கென்று ஒரு தொகை கொடுக்கப்படு கின்ற முறைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள், கடன் வாங்குவது மற்ற காரியங்கள் ஏதாவது செய்ய வேண்டுமென்று சொன்னால், அவர்கள்ளைத்தான் அணுக வேண்டியிருக்கிறது. பெரியவர்களை எல்லாம் அணுகவேண்டிய அவசியம் இல்லை. அந்த ஏழை எளிய மக்கள் சான்றிதழ் பெறு வதற்குக்கூட ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அவ்வளவு எளி தில் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. சமீபத்தில் கொடுக்கப் பட்ட 5 கிலோ அரிசிகூட அவர்களைப்பற்றி சரியான முறையில் பரிந்துரை செய்யப்படாமல் அந்த ஏழை எளிய மக்கள் தாலுக்கா அலுவலகங்களிலும், வட்ட அலுவலகங்களிலும் நிறுத்தி வைக்கப் பட்ட நிலைமைகளெல்லாம் இருந்தது. இந்த நிலைமையை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டு, அதன் தலைவராக இருக்கக்கூடிய திரு. லட்சுமிகாந்தன் பாரதி அவர்கள் எங்களைப் போன்ற சட்ட மன்றஉறுப்பினர்களுக்கெல்லாம் ஒரு தாக்கீது அனுப்பி, உங்களுடைய முடிவு என்ன, விவரங்கள் என்ன என்பதையெல்லாம் கேட்

டிருக்கிறார். நாங்களும் அது குறித்து விவரங்களை அனுப்பியிருக்கிறோம். அந்த வகையிலே இந்த கிராம நிர்வாக அலுவலர்களெல்லாம் தங்களுடைய சொந்த கிராமத்திலே இருந்து பணியாற்றுவதில்லை. அவர்களுக்கு அந்தந்த ஊர்களிலே இருக்கக்கூடிய விவசாய நிலங்கள் பற்றிய விவரங்களும் தெரியாது. தஞ்சை மாவட்டத்திலே சாகுபடி பார்ப்பது என்பது போன்ற ஒரு முறை இருக்கிறது. அந்த சாகுபடி பார்க்கக்கூடிய முறையை அவர்கள் வைத்துக்கொள்வதே இல்லை. ஆகவே, அந்த மாதிரியான சூழ்நிலையிலே சாகுபடி செய்யப்பட்டதா, சாகுபடி செய்யப்படவில்லையா என்பதைக்கூட அவர்கள் பார்க்காத ஒரு சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரியான சூழ்நிலைகளையெல்லாம் போக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு இந்த அரசு அவர்களை அந்தந்த கிராமத்திலோ அல்லது அவர்கள் பி. ஏ. படித்தவர்களாக இருந்தால் அவர்களை ஜூனியர் அசிஸ்டெண்டாக மாற்றி தாலுக்கா அலுவலகங்களிலோ அல்லது வட்ட அலுவலகங்களிலோ போட்டு விடலாம். அப்படிப் போட்டுவிட்டால் அவர்களை மக்கள் சென்று பார்க்க ஏதுவாக இருக்கும். அவர்கள் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக செயல்படுகிறார்கள். தேர்தல் காலங்களிலே அரசியல் கட்சிகளுக்காகச் செயல்பட்டு பல தொல்லைகளை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களையெல்லாம் சரியாக, முறையாக அலுவலகங்களிலே போட்டு வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். ஊரிலே இருக்கின்றவர்களைப் போட்டு அந்த அலுவல்களைப் பார்க்கிறபோதுதான் அந்தந்த கிராமங்களிலே உள்ள ஏழையெளிய மக்களுக்கு உதவி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் அந்தந்த கிராமங்களிலே இருக்கக் கூடிய பெரிய மனிதர்கள், அந்தக் காலத்திலே மணியக்காரர்களாக, வீ. ஏ. ஓ.-ஆக இருந்தார்கள் என்று சொன்னால், ஒரு மரியாதை இருந்தது. கிராம நிர்வாக நீதிபதி என்றுகூட அவர்களைச் சொல்வார்கள். அவர்களையெல்லாம் மறுபடியும் போடுவதற்கு இந்த அரசு ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசுகிறபோது, மாண்புமிகு அமைச்சர்களுக்குச் சம்பளம் போதவில்லையென்று சொன்னார்கள். அது ஒருவகையிலே உண்மைதான். அமைச்சர்களுக்கு ஒரு நாளைக்கு 12 லிட்டர் பெட்ரோல் என்ற முறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். எப்படிப் பார்த்தாலும் அந்த 12 லிட்டர் பெட்ரோல் அவர்களுக்குப் போதாது. அமைச்சர்கள் படி எழுதிக் கொள்வதற்குக்கூட தயங்குகிறார்கள். இப்போது இருக்கிற அமைச்சர்கள் படிகளை எழுதிக் கொண்டால் முதல்வர் அவர்கள் கோபித்துக் கொள்வார்களோ என்று நினைத்து தங்களுடைய சொந்தக் காசை செலவு செய்து செயல்படக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே, இந்த மாதிரியான சூழ்நிலைகளை எல்லாம் போக்கி, அரசு, அமைச்சர்களுக்கு அதிகமாகச் சம்பளம் கொடுக்கலாம். இப்போது இருக்கிற எல்லா அமைச்சர்களுமே சுற்றுப்பயணம் செல்





லும்போது விமானத்தில் செல்லாமல் ரயிலில் முதல் வகுப்பில்தான் பிரயாணம் செய்கிறார்கள். இந்த முறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் அந்தக் காலத்திலும் சரி இப்போதும் சரி, அந்த முறைதான் வழக்கமாக நடைமுறையிலே இருக்கிறது. விமானங்களிலே போவது அதிகபட்சமான செலவுதான். விமானங்களிலே நமது அமைச்சர்கள் எல்லாம் செல்வது கிடையாது. அந்த மாதிரி ஏழையெளிய மக்களுக்காகப் பாடுபடுகின்ற அரசாங்கம், செலவுகளையெல்லாம் குறைத்துக் கொள்கின்ற அளவிற்கு இந்த அரசு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மாதிரி சூழ்நிலைகளிலே நம்முடைய அமைச்சர்களெல்லாம் இன்றைக்கு ரயில்களிலே போய் தாம் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் செய்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அமைச்சர்களுக்கு அதிகபட்சமான சம்பளத்தைக் கொடுப்பதற்கும் எங்களைப் போன்றவர்கள் பரிந்துரை செய்யக்கூட காத்திருக்கிறோம். அந்த முறையிலே எம். எல். ஏ.-க்களுக்கும் சம்பளம் 1,550 ரூபாய் என்றிருப்பதை .... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பக்கத்து இலைக்குப் பாயாசம் போடுங்கள் என்று சொல்வது போல் இருக்கிறது. (சிரிப்பு).

திரு. எம். இரசாமந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சபாநாயகருக்கும் துணைச் சபாநாயகருக்கும் சேர்த்துத்தான் கேட்கிறோம். 1,550 ரூபாய் என்பது போதாது. ஒரு நாளைக்கு கார் எடுத்தாலே 400 ரூபாய் ஆகிறது. கல்யாணங்கள், மற்ற நிகழ்ச்சிகள், கிராமத்திலே யிருக்கக்கூடிய குறைகளைத் தீர்க்கப் போகிறபோதுகூட ஒரு வண்டியிலே போகவேண்டுமென்று சொன்னால், 4 பேர்களை ஏற்றிக் கொண்டு போகவேண்டுமென்று சொன்னால் எங்களைப் போன்றவர்களுக்கு கஷ்டம்தான். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், சம்பளத்தையும் டி. ஏ. வையும் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்,

(முற்பகல் 11-50)

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றுள்ள மானியக் கோரிக்கைகள் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக விற்பனை வரி சம்பந்தப்பட்டவரை இன்றைக்கு பல்வேறு பொருள்களுக்கு பல முனை விற்பனை வரி இருந்ததை மாற்றி ஒரு முனை விற்பனை வரியாக்க ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் ஏற்கெனவே கடந்த 2, 3 ஆண்டுகளாக விற்பனை வரி சற்றொப்ப 84 கோடி ரூபாய் வசூல் செய்யப்படாமல் உள்ளது. அந்த 84 கோடி ரூபாய்

வசூல் செய்யாமல் இருப்பதற்கு எந்த வழக்கும் இல்லை. எந்த வழக்குமே இல்லாத அளவுக்கு இருக்கக் கூடிய இந்த வரி 84 கோடி ரூபாய் இன்றைக்கு வசூல் செய்யப்படாமல் இருக்கிறது.

ஏற்கெனவே பல உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல ஒரு சில வழக்குகளில் அதிகாரிகள் மட்டத்தில் 200 கோடி ரூபாய் அளவுக்கு வசூல் செய்ய வேண்டிய அளவுக்கு இருக்கிறது. ஆகவே, அரசுக்குப் பணம் கிடைக்க வேண்டுமென்றால் திட்டங்கள் நிறைவேற வேண்டுமானால் இந்தத் தொகையை வசூல் செய்ய துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று, இந்த விற்பனை வரியை பல்வேறு பொருள்களுக்கு மாற்றிச் செய்வதற்காக கொள்கை விளக்கக் குறிப்பில் சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக 8 சதவீதம் வரியாக இருக்கிற பொருள்களுக்கு, மக்கள் வாங்கி பயன் படுத்துகின்ற அத்தியாவசியப் பொருள்களுக்கு அந்த 8 சதவீதம் வரியை 3 சதவீதமாகக் குறைப்பதன் மூலம் ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்வதாக இருக்கும். அதை ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல, சோப்பு, ஊறுகாய் போன்ற சிறு தொழில்களுக்குக் கூட வரியை உயர்த்திப் போட ஆலோசனை இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. சோப்பு போன்ற சிறு தொழில்கள் சிறு இயந்திரங்கள் மூலமாகச் செய்யப்படுவதால் அதையும் இயந்திரங்ள் மூலம் செய்யப்படும் பொருள்களாகக் கருதி அந்த அளவுக்கு வரி விதிப்பது பற்றி ஆலோசனைச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இந்த சிறு தொழில்கள் மூலப் பொருள்களின் விலை உயர்வினால் நடத்த முடியாமல் இருக்கின்றன. அதன் காரணமாக தமிழ் நாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வரி விதிப்பின் மூலமாக அந்தத் தொழில்கள் மேலும் பாதிக்கப்பட்டு, ஹிந்துஸ்தான் லீவர் போன்ற ஏகபோக கம்பெனிகள் நல்ல இலாபம் சம்பாதிக்க வழி வகை ஏற்படும். ஆகவே, சோப்பு, ஊறுகாய் போன்ற சிறு தொழில்களுக்கு இந்த வரி உயர்விலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, பல முனை விற்பனை வரியாக இருந்த பல பொருள்களுக்கு ஒரு முனை விற்பனை வரி வசூல் செய்ய ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக, பீடி இலை ஏற்கெனவே பல முனை விற்பனை வரியில் இருந்தது. இப்போது ஒரு முனை விற்பனை வரி விதித்து, அதற்கு 5 சதவீதம் வரி விதிக்க ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது. பீடி இலை கிடைக்காமல் ஏற்கெனவே இந்தத் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தேவையான



மூலப் பொருள் கிடைக்கவில்லை. அது மத்திய மாகாணத்திலிருந்து வர வேண்டும். சில காரணங்களினால் இப்போது சரியாக வருவதில்லை. அதனால் இந்த மாகாணத்தில் பீடித் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொழில் பாதிக்கப்பட்டிருப்பதால் கூலி வெட்டு ஏற்பட்டிருக் கிறது என்ற பிரச்சினை இருக்கிறபோது இப்படி பீடி இலைக்கு மேலும் வரி உயர்வு என்றால் மேலும் அது இந்தத் தொழிலைப் பாதிக்கும்; தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என் பதால் அதைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போன்று மக்கள் பயன்படுத்துகின்ற பொருள்களுக்கு, அதிகமாகப் பயன்படுத்துகின்ற அத்தியாவசியப் பொருள்களுக்கு 8 சதவீதம் வரி விதிப்பதை 3 சதவீதமாக குறைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாநில ஆட்சித் தலைவர்கள் மற்றும் சில மானியக் கோரிக்கைகள் பற்றி சொல்லியிருக்கிறார்கள். அது சம்பந்த மாக எங்களுடைய கருத்து என்னவென்றால் நமது நாட்டிற்கு கவர்னர் பதவி தேவையில்லை என்பது. கவர்னர் பதவி என்பது இன்றைக்கு தமிழ்நாட்டில் மட்டுமல்ல ; பல்வேறு மாநிலங்களில், குறிப்பாக காங்கிரஸ் அல்லாத மாநிலங்களில் தொல்லை கொடுப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிற ஒரு பதவி யாக இருக்கிறது. அதுபற்றி நமக்கு கடந்த கால அனுபவம் இருக்கிறது. அது மட்டுமல்ல. ஏழை எளிய மக்கள் வரிப் பணத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாயை கவர்னர் பத விக்குச் செலவிடுகிறோம். அந்தப் பதவி நம்முடைய நாட் டுக்குத் தேவையில்லை. அந்தப் பதவியை நீக்குவதற்கான முயற்சியில் இந்த சர்க்கார் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், எந்த மாநிலத் திலும் மக்கள் குறைகளைத் தீர்ப்பதற்கு இந்த கவர்னர் பதவி உதவி செய்வதாக இல்லை. ஆகவே, தமிழ்நாட்டிலே மட்டு மல்லாமல் இந்த இந்திய நாட்டிலே கவர்னர் ஆட்சி முறை கூடாது என்ற முயற்சியை எடுக்க தமிழக அரசு முன் வரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர் கள் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை வருகிறது. எனக்கு முன்னால் முன்னாள் சபாநாயகர் அவர்கள் சில கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அமைச்சர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் கள் கடிதம் எழுதினால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது என்பதற்குக் கூட பதில் வருவதில்லை. குறிப்பாக எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுப்பணித்துறை அமைச் சர் அவர்களுக்கு—மோர்தானா அணையைக் கட்ட வேண்டு மென்று முன்னாள் அமைச்சர் அவர்கள் முயற்சி செய்தார்கள்— இன்றைக்கு கலைஞர் ஆட்சி வந்திருக்கிறது. தொடர்ந்து

முயற்சி செய்து, அந்த அணையைக் கட்ட வேண்டுமென்று கடிதம் எழுதினேன். அதே கடிதத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கும் நான் அனுப்பி இருக்கிறேன். ஆனால் இன்னும் பதில் இல்லை.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மோர்தானா நதியினைப் பற்றி எனக்குக் கடிதம் எழுதினார்கள். நானே அவரை நேரில் பார்த்து இந்தத் திட்டம் வரும் என்று சொல்லிவிட்டேன். எனவே மேலும் இதற்காக அஞ்சல் தலையை ஒட்டுவது அரசாங்கத்திற்கு சிக்கனம் இல்லை என்பதால் தான் எழுதவில்லை. கூடுமானவரையில் பதில்களை அனுப்பி இருக்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே போன்று மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கும் நான் ஒரு கடிதம் எழுதி இருக்கிறேன். சென்ற ஆட்சிக் காலத்தில் வடாற்காடு மாவட்டம், தர்மபுரி மாவட்டம் ஆகிய இரண்டையும் இணைத்து, அவை பின்தங்கிய பகுதிகள் என்பதால் காட்பாடியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டு, நிலங்களை எல்லாம் ஆர்ஜிதம் செய்ய முயற்சி செய்யப்பட்டு அதற்காக பொறியியல் கல்லூரியில் அதிகாரிகள் எல்லாம் நியமிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றன. ஆனால் கடந்த மூன்று நான்கு ஆண்டு காலமாக அந்த வேலைகள் நடக்கவில்லையே......

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது நல்ல கோரிக்கை. எனவே இதை மீண்டும் அவர்கள் வலியுறுத்தி எழுத வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள நிலைமை குறித்து கல்வி அமைச்சருக்குக் கடிதம் எழுதி இருக்கிறேன். குடியாத்தம் நகராட்சி நலிவுற்ற நகராட்சி. ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் பணம் கொடுக்க முடியவில்லை. ஆகவே அங்கே உள்ளமேல் நிலைப் பள்ளியை அரசின் கல்வி இலாக்காவே எடுத்துக் கொண்டு அவர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கடந்த முறை அதாவது 1980-84 ஆம் ஆண்டு நான் உறுப்பினராக இருந்தபோதே அதை வலியுறுத்தி இருக்கிறேன். அதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதற்கும் அப்போது பதில் இல்லை. இதை எல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால் அமைச்சர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதுகிற கடிதங்களைப் பார்த்து, இலாக்காபூர்வமாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் குறித்து அவர்களுக்குத் தெரிவிக்க



வேண்டும். அப்படி தெரிவித்தால்தான் தொகுதியிலே நாங்கள் வேலை செய்வதற்கு உதவிகரமாக இருக்கும். இவைகளை அரசு கவனிக்க வேண்டும்.

இன்றைக்கு இருக்கிற மாவட்ட நிர்வாக நிலைமையை எடுத்துக் கொண்டால் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் முறையாக நடக்கவில்லை. அவை முறையாக நடக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அங்கே நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்களை அமல்படுத்துவதற்கு மாநில அரசு முன் வர வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அங்கே நிறைவேற்றிய தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு என்னென்ன செய்தார்கள் என்பதை அந்த மன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

அடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தமிழ் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை மத்திய அரசு அனுமதித்தாலும் கூட அப்படிப்பட்ட அதிகாரிகளை மாநில மட்டத்தில் பயன் படுத்திக் கொள்ளலாம். மாவட்ட ஆட்சித் தலைவர்களாக இருப்பவர்கள் மக்களிடம் அன்றாடம் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கின்ற முக்கியமான பணியைச் செய்பவர்கள். எனவே அந்த இடங்களில் தமிழ் தெரிந்தவர்களையே நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய மாநிலத்தில் புதிய ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு நலிவுற்ற மக்களுக்காக பல்வேறு நல்ல திட்டங்களை நிறைவேற்றுகின்ற வகையில் அறிவிப்புகளைச் செய்திருக்கிறோம். ஆனால் அவற்றை நிறைவேற்றுகின்ற ஊழியர்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. மாவட்டத்தினுடைய தாலுகா அலுவலகத்திலும் சரி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகத்திலும் சரி இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. தீவிபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி மற்றும் பல்வேறு பகுதியினருக்குச் சலுகைகள் எல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்ற நிலைமையில் அவை மக்களைச் சென்று அடைய வேண்டும் என்பதற்கான உத்தரவாதமான ஏற்பாடு தற்போது இல்லை. எனக்குத் தெரிந்த வரையில் வருவாய்த் துறையில் 3,000-க்கு மேற்பட்டவர்கள் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு வேலையிலிருந்து பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று பத்திரிகைகளில் கூட எழுதப்பட்டிருக்கிறது. அந்த நிலைமைகளைப் போக்கி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தட்டெழுத்தர்கள், சுருக்கெழுத்தர்கள், இளநிலை எழுத்தர்கள் போன்ற 3,000 பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் கடந்த 25-6-1984 தேதி வேலை செய்தவர்கள் எல்லாம் நிரந்தரமாக்கப்படுகிறார்கள். ஆனால் அதற்கு

முன்னாலே மூன்றாண்டுக் காலம் வேலை செய்திருந்தாலும் கூட இந்தக் குறிப்பிட்ட தேதியில் வேலை செய்யவில்லை என்பதால் ஆயிரக்கணக்கான பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்குக் கூட கடற்கரையில் அவர்கள் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஊனமுற்றவர்கள், பெண்கள், திருமணம் ஆனவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க முயற்சி எடுத்துக் கொண்டு அந்தக் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டும்.

இப்படிப்பட்ட நிலைமை பதிவுத் துறையிலே இருக்கிறது. தேர்வாணைக் குழுவிலே கூட அங்கே நடைபெறுகிற வேலைகளுக்கு ஏற்கெனவே இளநிலை எழுத்தர்கள் இருந்தார்கள். அந்தப் பதவிகளை எல்லாம் காலி செய்து விட்டு இப்போது எம்.ஏ., பி.ஏ. படித்தவர்களை எல்லாம் 15 ரூபாய் கூலியிலே தற்காலிகமாக வேலை வாங்குகின்ற நிலைமை இருக்கிறது. இப்படி பல்வேறு துறைகளில் உள்ளவர்களை நிரந்தரமாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வாரத்திற்கு ஒரு முறை அதாவது திங்கட்கிழமைதோறும் மனுநீதி நாளை நடத்துகிறார்கள். அந்த நாட்களிலே கட்டாயமாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைநகரிலிருந்து மக்களுடைய மனுக்களை வாங்கி அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அந்த மக்களுக்குத் தெரிவிக்கிற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். பல்வேறு நேரங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இருப்பதில்லை. அவர்களுடைய நேர்முக உதவியாளர்களோ அல்லது மற்றவர்களோதான் அங்கே இருக்கிறார்கள். அது போதாது. அவர்கள் இருப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

(நண்பகல் 12.00)

அது போலவே, பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஓய்வூதியம் சம்பந்தமாகவும், அரசு ஊழியர்கள் மற்றவர்களுக்குக் கடன் கொடுப்பது சம்பந்தமாகவும் கூறப்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்கள் வீடு கட்டுவதற்கு கடன் கோருகின்றார்கள். அவர்களுக்கு உரிய நேரத்திலே கிடைக்காமல் கால தாமதம் செய்யப்படுகிறது. ஆனால் அரசிலே இருக்கின்ற உயர் அதிகாரிகளுக்கு மட்டும் கடன்கள் அவ்வப்போது வழங்கப்படுவதாக புகார்கள் இருக்கின்றன. ஆகவே ஊழியர்கள் அத்தகைய கடன்களைக் கேட்கின்றார்கள் என்றால், அவர்களுக்கும் போதிய நிதி ஒதுக்கி ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



ஆக இத்தகைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலமாக குறிப்பாக நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புவது, அரசு பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றுவதாக அறிவித்திருந்தாலும், அதை அமல் ஆக்க வேண்டிய அரசு ஊழியர்களை பல்வேறு இலாக்காக்களிலே நியமிப்பது மூலமாகத்தான் மக்களுக்கு நன்மை கிடைக்கும். அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஒய் வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த விற்பனை வரி, மாநில மாவட்ட நிர்வாகம் மற்றும் பென்சன் ஆகிய இந்த மானியக் கோரிக்கைகளிலே நான் சில கருத்துக்களைக் கூற முன் வருகிறேன். விற்பனை வரியைப் பொறுத்தவரைக்கும் ஏற்கெனவே முதலிலே வெள்ளைக்காரன் காலத்திலே திரு. இராசகோபாலாச்சாரி அவர்கள் ஒரு பைசா வரி போட்டார்கள். சேலத்திலே புரோஹிபிஷன் கொண்டு வந்தார்கள். முதன் முதலிலே கொண்டு வந்தார்கள். இதிலே என்னவோ பெரிய ரெவின்யூ குறைந்து விடுமோ என்று, அந்த ரெவின்யூவை ஈடுகட்டுவதற்கு ஒரு பைசா, அப்போது ஒரு ரூபாய் என்றால் 192 பைசாதான், அந்த 192 பைசா ஒரு ரூபாய்க்கு இருக்கும் போது, ஒரு பைசா வரி போட்டார்கள். அன்றைக்கே அப்படி யிருக்கும்போதே போடக் கூடாது, அப்படி, இப்படி என்று சொன்னார்கள். அப்போது காமதேனு என்று சொல்வார்கள். கலியுக காமதேனு என்று இந்த காலத்திலே சொல்லலாம். அந்த யுகத்திலே காமதேனு இருந்தது. இப்போது சேல்ஸ்டாக்ஸ் என்பது ஒரு வரப்பிரசாதமாகவே ஆகி விட்டது. இப்போது வரியே போட வேண்டியதில்லை. விலைவாசி ஏறி, ஏறி, ஏறி இன்னும் ஏறிக்கொண்டே இருக்கின்றது. உங்களுக்கு வருமானம் இருக்கிறதா என்று பாருங்கள். நீங்கள் பர்சென்டேஜ் கணக்கிலே கூட ஏற்ற வேண்டியதில்லை. விலைவாசிகள் ஏறிக்கொண்டே இருக்கின்றது. இன்றைக்குக் கூட போட்டு இருக்கின்றார்கள். அரிசி விலை ஏறிப்போயிற்று. வெல்லம் விலை ஏறிப் போயிற்று என்று சொல்கின்றார்கள். சபாநாயகர் உட்கார் எழுந்து பேசலாம் என்று நின்றேன். என்று சொல்லி விட்டார். இதிலே இரண்டு பேர் அதே வார்த்தைகளைச் சொன்னால், எழுந்து பேசுங்கள் என்று சொல்கிறார். எங்களைப் போன்றவர்கள் இந்த பக்கம் பேச வேண்டும் என்றால், சரி உட்காருங்கள் அப்புறம் பேசிக் கொள்ளலாம் என்கின்றார்கள். இன்றைக்கு விலை ஏறிக் கொண்டிருக்கின்றது. அண்டை மாநிலங்களிலே கேரளத்திலே ரூ. 7 அரிசி விலை என்று சொல்கின்றார்கள். நம் ஊரிலேயே ரூ. 7 அரிசி விலை இருக்கிறது. வெல்லத்திற்கு ரூ. 7 என்று விலை இருக்கிறது. இன்றைக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்கள் விலை ஏறிக்கொண்டே இருக்கின்றது. அத்தியாவசியப் பொருள்களுக்கு மட்டுமல்ல, இதர பொருள்களுக்கும்

ஏறிக்கொண்டேதான் இருக்கிறது. கணக்கில்லாமல் ஏறிக் கொண்டே போகிறது. அப்படி ஏறும்போது தானே விற்பனை வரியானது நிறைய ஏறிவிடும். நான் நினைக்கிறேன் 18 கோடி ரூபாய் என்று நினைக்கிறேன். திரு. இராஜகோபாலாச்சாரி யார் அவர்கள் இருக்கும்போது போட்ட வரியானது ரூ. 18 கோடிதான். அது இன்றைக்கு 1300 கோடி ரூபாய் அளவுக்கு வந்திருக்கிறது. நாம் வரி போட வேண்டியதில்லை. நாங்கள் 1967 ஆம் வருடத்திலே காங்கிரஸ்காரர் அப்படி இருந்தபோது 146 கோடி ரூபாய்தான் வரி இருந்தது. அதுவும் பட்ஜெட் தொகையே ரூ. 146 கோடிதான் இன்றைக்கு அதுவே ரூ. 3,500 கோடி முதல் ரூ. 4,000 கோடி அளவுக்கு போய் இருக்கிறது. அதனாலே விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. அதனால் வரி வசூல் இருக்கிறது பாருங்கள். சோத னைச் சாவடி என்று வைத்திருக்கின்றார்கள். அந்த சோதனைச் சாவடிகளிலே எதையோ சோதனைப் பண்ணுகிறார்கள். ஏதோ ஐந்துக்கு இரண்டு அளவுக்கு பழியில்லாமல் சோதனைச் சாவடி யிலே சோதனை பண்ணுகின்றார்கள். வருகின்றவர்களிடம் பணம் இருந்தால் அந்த சோதனையும் நடந்துகொண்டிருக்கிறது. அந்த சோதனை நடத்துவதால் அவர்களுக்கும் வருமானம் வந்து கொண் டிருக்கிறது. ஆக அந்த வருமானம் மட்டுமல்லாமல் வேறும் வரும். இந்த வரி ஏமாற்றுகின்றவர்கள் இருக்கின்றார்கள். அதை சரியான முறையிலே சோதனை பண்ணி, அந்தக் கணக்கை ஆய்வு பண்ணினால், அந்த வரியை கணக்குப் பண்ணினால், ரூ. 3,500 கோடி அளவுக்கு வரமுடியும். வேறு வரியும் போடவேண்டிய தில்லை. நம்முடைய நாட்டிலே சென்ட்ரல் வரியாக, இன்கம் டாக்ஸ் வருகிறது, ஸ்டேட்டிலே சேல்ஸ்டாக்ஸ் வருகிறது. இதை நாம் சரியான முறையிலே வசூல்பண்ணினால் போதும். நாட்டிலே ரொம்பப் பேர்கள் ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் மட்டும் என்ன பண்ணுவீர்கள் என்று கேட்கலாம். எனக் கும் அந்த மாதிரி வியாபாரம் இருந்தால் நானும் ஏமாற்றத்தான் நினைப்பேன். அது மனித சுபாவம். இதையெல்லாம் சர்க்கார் தான் கண்காணிக்கவேண்டும். ஆங்காங்கே ஆபீசர்கள், சேல்ஸ் டாக்ஸ் ஆபீசரிலேயிருந்து, ஐ.ஏ.எஸ். ஆபீசர் வரையில் சரியான முறையிலே வசூல் பண்ணவேண்டும்.

அடுத்து பீடி இலை பற்றி இங்கே சொன்னார்கள். சிலவற் றிற்கு வரி தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதை நான் வரவேற்கி றேன். ஆனால் இந்த பீடி இலைக்கு வரி போட்டிருக்கின்றார்கள். அதைப்பார்க்கும்போது கொஞ்சம் மனக்கஷ்டமாகத்தான் இருக்கி றது. பீடி இலை பற்றி சொல்கின்றார்கள். இடது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அவர்கள் சொன்னார்கள். பீடி இலை பயன் படுத்துபவர்கள் சாமான்ய ஏழைதான். சிகரெட் பெரிய பணக் காரன்தான் பயன்படுத்துவார்கள். காரிலே போகின்றவர்கள் ஏரோப்பிளேனில் போகின்றவர்கள் பயன்படுத்துகிறார்கள். பர்ஸ்ட் கிளாசிலே போகின்றவர்கள் பயன்படுத்துவார்கள். ஏ.சி.யில் போகின்றவர்கள் பயன்படுத்துவார்கள். அதுவும்



உயர்ந்த சிகரெட்தான் பிடிப்பார்கள். பீடி பிடிப்பவர்கள் ஏழை தான். கொஞ்சநஞ்சம் பேர்கள் அதிலே போகிறார்கள். கொஞ் சம் என்ன, நிறையவே பாதிப்பு ஏற்படும்.

அடுத்து, ரப்பர் பொருட்களைப் பொறுத்தவரையில் வரி விதிப்பு செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் ஒன்றி ரண்டு தொழிற்சாலைகள்தான் இருக்கின்றன. இந்த ஒன்றி ரண்டு ரப்பர் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளும் கூட இந்த வரி விதிப்பினால் பாதிக்கப்பட்டு மூடப்படுகிற நிலைமை கூட ஏற்படலாம். இந்தத் தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட தொழில் நுட்பங்களை எல்லாம் பாரினுக்கு போய் தெரிந்து வந்து இங்கே அவற்றை அமைத்திருக்கிற காரணத்தால்தான் நம்மைப் போன்றவர்கள் சொகுசாக உட்காரவும், தூங்குவதற்கும் அந்தப் பொருட்களை நாம் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். இன் றைக்கு இந்தப் பொருட்களை சோம்பேறிகள் எல்லாம் பயன்படுத் தும் நிலை இருப்பதை நாம் பார்க்கிறோம். இதன்மூலம் சில லட்சம் ரூபாய்தான் வரியாக வருகிறது என்று சொல்லுகிறார்கள். பொதுவாக இதற்காக வரி விதிப்பதை நான் வரவேற்றாலும் இது குறித்து ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய பக்கத்து மாநிலங்களான ஆந்திராவிலும், கர்நாடகாவிலும் இத் தகைய தொழிற்சாலைகள் இருக்கும் நிலையில் அங்கே எல்லாம் இதுபோல் அவர்கள் வரி விதிக்கவில்லையென்றால் வியாபாரி கள் போட்டி மனப்பான்மையுள்ள நிலையில், விலையில் அல்லது வரி விகிதத்தில் இருக்கிற வித்தியாசத்தை கம்பேர் பண்ணி இங் கேயுள்ள நிலையை வரவேற்க மாட்டார்கள். இது குறித்தும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தலைக்கவசத்திற்கு வரி விதித்திருக்கிறார்கள். தலைக் கவசம் பற்றி இங்கே காலையில்தான் விவாதம் நடைபெற்றது. வரி போட்டிருக்கிற காரணத்தால், அரசுக்கு வருமானம் வராமல் போய்விடுமோ என்கிற காரணத்திற்காக அரசு தலைக்கவசத்தை எடுக்க தயங்குகிறதோ என்கிற சந்தேகம் எனக்கு இருக்கிறது. அதை எடுப்பதா வேண்டாமா என்பதுபற்றி முடிவு செய்ய குழு அமைக்கப்பட்டிருப்பதாக கூட தெரிவித்திருக்கிறார்கள். இப்படி பட்ட நிலையில் இப்போது திடீரென்று தலைக்கவசத்திற்கு வரி போட்டு விட்டு, தலைக்கவசம் இனிமேல் வேண்டியது இல்லை என்று அறிவித்து விட்டால் இந்த வரி போட்டதற்கு வேல்யூவே இல்லாமல் போய்விடும் என்பது என்னுடைய கருத்து.

அடுத்து, கையினால் செய்யப்படும் சோப்புக்கு வரி இல்லை. ஆனால் பெரிய அளவில் தயாரிக்கப்படுகின்ற மைசூர் சேன்டல். ரக்சோனா, லிரில் போன்ற சோப்புக்கு வரி போடுகிறோம். அவர் கள் இந்தமாதிரி சோப்புக்களை கோடிக்கணக்கில் தயாரிக்கிறார் கள். இந்த மாதிரி சோப்புகளை அவர்கள் கையினால் செய்து சப்ளை செய்தால் ஜனங்களின் தேவையை பூர்த்தி செய்யமுடி யாது. பொதுவாக நாம் பார்க்கிறோம். கடைகளில் போய் சோப்பு வாங்குகிறவர்கள், கைனால் செய்த சோப் கொடு

என்று கேட்பதில்லை. கேரளா சேன்டல், மைசூர் சேன்டல், போன்ற சோப்புக்களைத்தான் பெரும்பாலும் கேட்கிறார்கள். எங்களைப் போன்ற துப்பட்டி கட்டியிருக்கிற ஒரு சிலர்தான் கையினால் செய்த சோப்பை கேட்டு வாங்குகிறார்கள். இன்றைக்கு இண்டுஸ்தான் லிவர், காட்ரஜ், மைசூர் சேன்டல் போன்ற சோப்புகளை கோடிக்கணக்கில், பெரிய அளவில் தயார் செய்கிறார்கள். அது அதிக மணம் என்பதால் எல்லோரும் வாங்குகிறோம். அதன் வாசனைக்காக எல்லா பெண்களும், ஆண் பிள்ளைகளும், ஏன் என்னைப் போன்ற கிழவர்களும் வாங்கி பயன்படுத்துகிறோம். (சிரிப்பு) ஆகவே, சோப்புக்கு போட்டிருக்கிற வரியை வித்ட்ரா பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஓட்டல் பொருள்களுக்கு எல்லாம் விற்பனை வரி போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு நான் 2 ரூபாய்க்கு காலையில் சாப்பிட்டேன். அதற்கு 50 காசு வரி போட்டிருக்கிறார்கள். ஆக, நாமே இன்றைக்கு அரசுக்கு லட்சக்கணக்கில் வரி கொடுக்கும் நிலையில் நம்முடைய சம்பளத்தை எல்லாம் உயர்த்துவதாக அறிவித்திருப்பதையும் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். இருந்தாலும் இதனால் அதிகமாக பாதிக்கப்படுவது சாதாரண மக்கள்தான். அந்தக் காலத்தில் 100 ரூபாய்க்கு விற்பனையானது என்றால் இந்தக் காலத்தில் லட்சக்கணக்கில் வியாபாரம் நடக்கிறது.

அடுத்து, ஒரு காலன் பெட்ரோல் 14 அணாவுக்கு நான் வாங்கியிருக்கிறேன் அந்தக்காலத்தில். ஆனால் இப்போது லிட்டர் ஒன்றுக்கு 10 ரூபாய்க்கு மேல் விற்கிறது. காரணம் இன்றைக்கு இரண்டு சக்கர வண்டிகள் எல்லாம் பெட்ரோலில்தான் ஓடுகின்றன. பொதுவாக கம்பெனிகள் பயன்படுத்துகின்ற பெட்ரோலுக்கான வரியை உயர்த்த வேண்டியதுதான். அதாவது சென்ட்ரல் கவர்ன்மென்ட், ஸ்டேட் கவர்ன்மென்ட், அண்டர் டேக்கிங்ஸ், கம்பெனிகள் இப்படிப்பட்ட துறைகளில் எல்லாம் பெட்ரோலைப் பயன்படுத்தும் நிலை ஒரு புறத்திலும், இரண்டு சக்கர வண்டிகளுக்கு பெட்ரோலை பயன்படுத்துவது இன்னொரு புறமும் இருக்கிறது. இரண்டு சக்கர வண்டி ஓட்டுகிறவர்களுக்கு எந்தவிதமான சிரமமும் இல்லாமல் இருக்கும் வகையில் இதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். வேகமாக அலுவலகத்திற்குச் சென்று பணி செய்வதற்கு இரண்டு சக்கர வண்டிகளைப் பயன்படுத்தும் நிலையில், லட்சக்கணக்கானவர்கள் இந்த வண்டிகளை ஓட்டிக்கொண்டிருக்கும் நிலையில், இதர மாநிலங்களில் இதற்கு சலுகைகள் கொடுத்திருப்பது மாதிரி நம்முடைய மாநிலத்திலும் சலுகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடைகளுக்கு வணிகவரி அதிகாரிகள் போய் வியாபாரிகளை அச்சுறுத்துகிறார்கள். விற்பனை வரி ஆபீசர் வருகிறார் என்று சொன்ன உடனேயே வியாபாரிகளுக்கு பிளட்பிரசர் வந்து விடுகிறது. சின்னக் கடைகளில் கூட அவர்கள் சென்று



கணக்கைக் காட்டு, இருப்பைக் காட்டு என்று கேட்கிற நிலையும், சாதாரணமாக 5 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய்க்கு வியாபாரம் நடைபெறுகின்ற கடைகளில் கூட சென்று இம்மாதிரி அவர்கள் அச்சுறுத்தும் நிலையிருப்பதால், ஏதாவது பெறுவதற்காக இப்படி அவர்கள் செய்வதால், அவர்களுக்குப் பொதுவாக ரொம்ப தொந்தரவாக இருக்கிறது. இதனால் இப்பிரச்சினை முடிகிற வரையில் வியாபாரிகளால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. வருமான வரித் துறையில் உள்ள அதிகாரிகளுடைய தொந்தரவு, சோதனைக் கூடங்களில் தொந்தரவு இல்லாமல் இருந்தால், நல்லது. ஜனங்களுக்கு நல்லது, சர்க்காருக்கு நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அடுத்து இன்றைக்கு 15 இலாக்காக்கள் குறித்த மானியக் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அத்தனையும் முதலமைச்சர் இலாகாக்கள் என்று நினைக்கிறேன். எல்லாம் மாண்புமிகு திரு. கணேசன் அவர்களுக்குத் தெரியும். அவர் எல்லாவற்றையும் வாசித்துவிட்டார். இதற்கு 3 நாட்கள் கொடுத்திருக்க வேண்டும். இத்தனை மானியங்களுக்கும் 3 நாட்கள் கொடுத்திருக்க வேண்டும். அரைகுறையாகச் சொன்னால் என்ன பிரயோசனம்? எந்தப் பிரயோசனமும் இல்லை.

அடுத்ததாக மாவட்டம் பற்றிச் சொல்கிறார்கள். மாவட்ட நிர்வாகம் என்பது கிராமங்களிலிருந்து ஜில்லாவரை இருக்கிறது. அந்தக் காலத்தில் பெரிய பெரிய மாவட்டங்களாக இருந்தது. இப்போது பெயர் வைப்பதற்கு மாவட்டங்களைப் பிரிக்கிறார்கள் கிராம நிர்வாகத்தில் ரொம்பக் கஷ்டம் இருக்கிறது. ஏற்கெனவே கிராமங்களில் அவர்கள் இருந்தார்கள். பஞ்சாயத்தில் 100-ரூபாய்வரை விசாரிக்கலாம். கிரிமினல் கேஸ் வரையில் எல்லாம் தெரிந்திருந்தது. வெளி நாட்டிலிருந்து ஒருவன் வருகிறான் என்றால், ஒரு குற்றவாளி வருகிறான் என்றால் உடனே கிராமத்திற்குத் தெரியும். கிராம முனிசீப்புக்குத் தெரியும், தலையாரிக்குத் தெரியும். உடனே பிடித்துக் கொடுத்துவிடுவார்கள். அதற்கு போலீஸ் வேண்டாம். ஈஸ்ட் இந்தியா கம்பெனி காலத்தில் ஏற்பட்ட கிராம நிர்வாகம், நூற்றுக் கணக்கான வருடங்களாக நல்லபடியாக நடந்து வந்தது. எந்தவிதமான புகாரும் இல்லை. எந்தக் காரணத்தாலோ, ஒரே நாளில் ஆர்டர் போட்டு, அர்த்த ராத்திரியில் அவர்களிடமிருந்த கட்டுகளை எடுத்துச் சென்றுவிட்டார்கள். அந்தக் கட்டுகளை வைத்து ஊறுகாய் போடுவதா? ஒரே நாளில் கிராம நிர்வாகத்தை ஒழித்து அர்த்தராத்திரியில் அவர்களிடம் இருக்கிற கணக்குகளை எல்லாம் எடுத்துக்கொண்டார்கள். அதுமாதிரி பாவம் ஒன்றும் கிடையாது. அவர்கள் என்ன தப்பு பண்ணினார்கள். கணக்குப் பிள்ளை லஞ்சம் வாங்கினாரா, தலையாரி லஞ்சம் வாங்கினாரா, முன்சீப் லஞ்சம் வாங்கினாரா என்று கண்டுபிடித்தீர்களா? நான் 12-1/4 ரூபாய்க்கு கிராம உத்தியோகம் பார்த்திருக்கிறேன்.

ஸ்ரீரங்கத்திற்கும் திருவாணைக்கோயிலுக்கும் சேர்த்துப் பார்த்திருக்கிறேன். தலையாரிக்கு 7-1/4 ரூபாய் சம்பளம். அவன் சந்தோஷமாக இருப்பான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் முன்னாள் கிராம அதிகாரியாகப் பணியாற்றினீர்களா? அதனால் தான் நீண்ட நேரம் பேசுகிறீர்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தகவல்களைச் சொல்லித்தான் ஆக வேண்டும். அதைச் சொன்னால்தான் உங்களுக்கு எல்லாம் தெரியும். அந்தத் தகவல்கள் சிலருக்குத் தெரியாது. நம்மைப் போகச் சொன்னால்தான் தெரியும். எங்களுக்குத் தெரிகிறது. கர்நாடகாவில் கவர்னர் கலைத்து விட்டார். இன்றைக்கு கவர்னர் வேண்டாமென்று சொல்லுகிறோம் நாங்கள். தூக்கு தண்டனை கொடுத்தவனுக்கு, ஐயா, தூக்கு போடப் போகிறோம், உங்களுக்கு என்ன வேண்டுமென்று கேட்கிறார்கள். உங்களுக்கு சர்க்கரைப் பொங்கல் வேண்டுமா, பெண்டாட்டியைப் பார்க்க வேண்டுமா, பிள்ளைகளைப் பார்க்க வேண்டுமா என்று கேட்கிறார்கள். இப்போது அரசியலுக்குச் செல்லக்கூடாது. அதைச் சொன்னால் சர்ச்சை வந்துவிடும். அப்படிச் கேட்கக்கூட நேரமில்லை. திரு. சஞ்சீவ ரெட்டி அன்றைக்குச் செய்தார்கள்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சுந்தரதாஸ் அவர்கள் வந்துவிட்டார்கள். வெளியே இருந்தார்கள், அவரை வரவழைத்துவிட்டீர்கள்.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவரவர்களே, வெளியே இருந்து கேட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மானியக் கோரிக்கையிலே பேசுகிறாரா அல்லது கர்நாடக அரசினுடைய அரசியல் பேசுகிறாரா என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்று சொன்னால், அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : கவர்னர், அவர் எழுதாமல் யார் எழுதியிருப்பார்கள்? இது ஊழலாக இருக்கிறது, இதில் ஓட்டை இருக்கிறது, இதில் உடைசல் இருகிறது என்று வேறு யார் எழுத முடியும்? கவர்னர்தான் எழுதியிருக்க வேண்டும். இதை வைத்துக்கொண்டுதான் கலைத்தார்கள் என்று சொல்லுகிறோம். எனவே நம்முடைய நாட்டுக்கு கவர்னர் தேவையா? தி.மு.க., அண்ணா தி.மு.க. எல்லாம் ஒன்றாக இணைந்திருந்தபோது கவர்னர் வேண்டாமென்று அறிக்கை விட்டிருக்கிறார்கள். இன்றைக்கு இது தேவையா? இதிலே கொஞ்சநஞ்சமா செலவாகிறது? எத்தனையோ நூற்றுக்கணக்கான ஏக்கரை வளைத்துக்கொண்டு,



கவர்னர் மாளிகைக்குப் போனாலே கால் வலிக்கும், என்னைப் போன்ற கிழவர்கள் போய் வந்தால் கண்டிப்பாக கால் வலிக்கும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய மானியக் கோரிக்கைகளில் மாநில ஆட்சித் தலைவர் அவர்களுக்கு ஆகிற செலவும் அடங்கும். ஆகவே மாநில ஆட்சித் தலைவருடைய அந்த அதிகார வரம்புகளைப் பற்றிய பிரச்சினைகளையும் இங்கே மானியத்தை ஒட்டிப் பேசுவதற்கு இருக்கிறதென்பதை நான் அவையினுடைய கவனத்திற்கும், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறேன்.

திரு. மா. சுந்தரராஸ் : துணைத் தலைவரவர்களே, மாவட்ட ஆட்சியாளர்கள் பற்றிப் பேச முடியுமே தவிர, ஆளுநர் பற்றி பேச இந்த டிமான்டில் இடமில்லை.

திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் தெரிந்து கொண்டு பேச வேண்டும். அந்த மானியக் கோரிக்கையின்மீதும் இன்று விவாதம் நடக்கிறது. ஆளுநர் அவர்கள் பற்றியும் பேசலாம். அதிலேயும் அவர் மிக கண்ணியமாகவே, ''வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள் திடீரென்று, சட்டமன்ற உறுப்பினர்களை வேலை நீக்கம் செய்தால்தான் உங்களுக்குத் தெரிகிறது'' என்று சொன்னார்கள். கிராம அதிகாரிகளை வேலை நீக்கம் செய்ததைப் பற்றி குறிப்பிட்ட போது, அதிலே சிலர் குறுக்கிட்ட போது, உங்களை வேலை நீக்கம் செய்தால் எவ்வளவு சங்கடப்படுவீர்கள் என்பதற்காகச் சொன்னேன் என்று சொன்னார்கள். அவ்வளவுதான். இங்கே கவர்னர் பற்றி ஒன்றும் பேசவில்லை. ஆகவே அவர் பேசலாம்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் கூட ஆளுநருடைய பதவி நீக்கம் கோரும் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே விவாதிப்பதில் தவறு கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : அதே மாதிரி கிராம அதிகாரிகள் இருந்தார்கள். நம்முடைய மாகாணத்தைப் பொறுத்தவரையில் ஆயிரக்கணக்கான கிராம அதிகாரிகள் இருந்தார்கள். அவர்களெல்லாம் மந்திரிகள் தேவையில்லை, கலெக்டர்கள் தேவையில்லை, டெபுடி கலெக்டர்கள் தேவையில்லை, தாசில்தார்கள் தேவையில்லை என்கிற அளவுக்கு அவர்களே ஆண்டு கொண்டிருந்தார்கள். அவர்களையெல்லாம்

ஒரு நாள் போகச் சொல்லிவிட்டார்கள். அடிப்படை கிராம நிர்வாகம் என்பது கலெக்டர் வரை இருக்கிறது. இப்போது கலெக்டரைப்பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. தமிழ் தெரிந்தவர்கள்தான் கலெக்டர்களாக இருக்க வேண்டும் என்கிறார்கள். நாம் தமிழ்நாட்டில் இருக்கிறோம். ஆனால் ஐ.ஏ.எஸ். பரிட்சையில் பார்த்தால் 700 பேர் பாஸ் செய்தவர்களில் 2 பேர்தான் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்? நம் படிப்புக் கொள்கையில் ஏதேனும் தவறு இருக்கிறதா? சொல்லிக் கொடுக்கிறவர்கள் சரியாகச் சொல்லிக் கொடுப்பதில்லையா? பள்ளிகள். கல்லூரிகளில் சொல்லிக் கொடுப்பது சரியில்லையா? காரணம் என்ன என்று தெரிய வேண்டும். 2 பேர்தான் தேறி இருக்கிறார்கள் ஐ.ஏ.எஸ். பரீட்சையில் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து உங்களைப் பேச அழைக்கப் போகிறேன். இப்போது உட்காருங்கள். அதற்குள் என்ன 'Point of order'. தயவு செய்து உட்காருங்கள்.

**திரு. இரா. சொக்கர் :** தவறான கருத்துச் சொல்லப்படுகிறபோது அதைச் சுட்டிக்காட்டும் உரிமைகூட இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் பேசப் போகிறீர்கள். அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்பு வழங்குகிறபோது நீங்கள் பேசலாம். உட்காருங்கள்.

**திரு. இரா. சொக்கர் :** தலைவர் அவர்களே, வாய்ப்பு மறுக்கப்படுகிறதே என்று வருந்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் வாய்ப்பு வருகிறபோது மறுக்கலாம். உட்காருங்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** நான்கூட மறுக்க முடியும். மறுக்க வேண்டாம் என்றுதான் சும்மா இருக்கிறேன். மறுப்பதற்கு எனக்குக்கூட தெரியும். தமிழ்நாட்டில் மொத்தம் இத்தனை பேர் பாஸ் செய்திருக்கிறார்கள்—இத்தனை பர்சென்ட் பாஸ் செய்திருக்கிறார்கள் என்று சொல்லி மறுத்துக் கூறுங்கள் அல்லது அபிப்பிராயம் சொல்லுங்கள்—அது சரி. எனவே ஐ.ஏ.எஸ். தேர்வில் இந்தியா அளவில், நேஷனல் லெவலில் நம் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர்—எத்தனை பர்சென்ட் என்று பாருங்கள். குறைந்திருக்கிறது என்பதை நாம் ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். அப்படி சரியான முறையில் தமிழகத்திலிருந்து அதிகம் பேர் ஐ.ஏ.எஸ். தேர்வில் தேர்வு பெறவில்லை என்றால் வெளியே இருந்துதானே கொண்டு வர வேண்டியிருக்கிறது. அப்படித்தான் வெளியிலிருந்து கலெக்டர்களைக் கொண்டு வந்து இங்கே போடுகிறோம். அதற்குத் தேவை இருக்கிறது. அப்படி இருக்கும்போது தமிழில் பேசுகிறவர்களைத் தான் போட வேண்டும் அப்போதுதான் நன்றாக இருக்கும் என்கிறோம். எனக்கு இங்கிலீஷ் தெரியாது. 8-வது, 10-வது படித்துவிட்டு இங்கே வந்து தமிழில்தான் பேசுகிறோம். எனவே தமிழ் தெரிந்த கலெக்டர்களைப்போட்டால் நாங்கள் ஒத்துக் கொள்கிறோம்...





**திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்):** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு தீட்சிதர் அவர்கள் தமிழ் தெரிந்தவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களாகப் போட வேண்டுமென்று பேசினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களாக வருகிறவர்கள் ஐ.ஏ. எஸ். அதிகாரிகள் என்பது நமக்குத் தெரியும். அது அகில இந்திய கேடர். ஆனால் அப்படி தமிழ்நாட்டுக்கு வருகிற ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் இங்கே வந்த பிறகு தமிழ் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள். அதாவது ''ஓர்க்கிங் நாலெட்ஜ் ஆப் தமிழ்'' அதாவது குறைந்த பட்சம் தமிழைப் பேசி, நடவடிக்கை எடுக்கக் கூடிய அளவுக்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்ட பிறகுதான் மாவட்ட ஆட்சித் தலைவராக நியமிக்கப்படுகிறார்கள். பெரும்பாலும் அவர்களாகவே கருத்தைச் சொல்லி விளங்க வைக்க முடிகிறது.

தஞ்சை மாவட்டத்திற்கு சத்பதி என்பவர் மாவட்ட ஆட்சித் தலைவராக வந்தார். மிக நன்றாகத்தான் தமிழில் பேசினார். தமிழரைப் போல் பேசவில்லை என்றாலும், நன்றாகப் பேசுகிறார்கள். அந்த அடிப்படையில்தான் அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள் பேசுகிற போது தமிழ்நாட்டிலிருந்து இருவர்தான் ஐ. ஏ. எஸ். தேர்வில் தேர்வு பெற்றிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இது எல்லோருக்குமே இருக்கிற மனக்குறைதான். ஆனால் டெல்லியிலே இதைப் பற்றி விசாரித்தபோது ஐ. ஏ. எஸ். தேர்வுக்கு என்னென்ன பாடங்கள் —சிலபஸ்—வைக்கப்படுகின்றனவோ அவையெல்லாம் அங்கே பி.ஏ. எம். ஏ., பட்டப்படிப்பிற்கே வைத்து விடுகிறார்கள் — பல்கலைக் கழகத்திலேயே வைத்து விடுகிறார்கள் என்றும், எனவே ஏற்கனவே படித்த பாடமாக அவைகள் அவர்களுக்கு இருப்பதால் அவர்கள் வெற்றி பெறுவதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது என்றார்கள். இதை நான் யு.பி.எஸ்.ஸியின் கேட்டு விட்டு பறகு சொல்லுகிறேன். எனவே நம் கல்வித் துறையும் அப்படிபட்ட திட்டங்களை வகுத்தால் நமது மாணவர்களும் ஐ. ஏ.எஸ் தேர்வில்அதிகமாக தேர்வடைவதற்கு வாய்ப்பு இருக்கும்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதே 4 பிள்ளைகளைப் பள்ளியில் சேர்த்தால் ஒருவன் அமெரிக்காவுக்குப் போகிறான்—ஒருவன் காலேஜுக்குப் போகிறான்—ஒருத்தன் பெயில் ஆகிறான். எல்லோருக்கும் ஒரே வாத்தியார்தான். ஒரே வகுப்பில் 10 பையன்கள் நன்றாகப் படிக்கிறார்கள். 10 பையன்கள் நடுத்தரமாக இருக்கிறார்கள். அதை யாரும் தவறு என்று சொல்ல முடியாது. ஒரு 10 பேர் எக்ஸ்ட்ரீம் நாலெட்ஜோடு இருக்கிறார்கள்.

அடுத்து கேளிக்கை வரி பற்றி சொல்ல வேண்டும். நேரம் இல்லை என்கிறார்கள். இப்போதே நாழியாச்சு என்கிறார்கள். எங்கள் ஸ்ரீரங்கமும் திருச்சியும் முனிசிபாலிடிகள். ஏற்கனவே இதில் ஸ்ரீரங்கம் முனிசிபாலிட்டிக்கு இவ்வளவு — திருச்சி முனிசிபாலிட்டிக்கு இவ்வளவு என்று பிரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது ஆடிட் காரணமாக பல லட்சம் ரூபாய் கொடுக்கப்படாமல் நின்று போயிருக்கிறது. ஏற்கனவே எங்களுக்குப் பற்றாக்குறை. பற்றாக்குறை முனிசிபாலிட்டிக்கு இந்தப் பணமும் நின்றுப் போனால் என்ன ஆவது? எனவே அதைப் பார்த்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

இந்த சாதி சான்றிதழ், படிப்பு சான்றிதழ் பெறுவதில் பெரிய கஷ்டம் இருக்கிறது. மலை சாதியினர் வெகு சிறப்பாக வளர்ந்து இருக்கிறார்கள். இதைப் பயன்படுத்தி இதர சாதிகள் எல்லாம் நிறைய சாதி சான்றிதழ்கள் வாங்கி இருக்கிறார்கள். மலையிலே வாழ்கிற கொண்டா ரெட்டி தலையிலே குடுமிவைத்து இருப்பார்கள். காட்டு நாயக்கன் சாதியினரும் எப்படி எப்படியோ வாங்கி விடுகிறார்கள். அதை வந்து இப்போது கண்டு பிடித்த உடனே, இப்போது இந்த சான்றிதழ்களை வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. அதைக் கண்டுபிடித்த உடனே 'இதை எப்படி வாங்கினாய், இதற்கு நடவடிக்கை எடுப்பேன்' என்று சொன்னால் சான்றிதழ் கொடுப்பதற்கே கஷ்டமாக இருக்கிறது. இதிலே பலரிடம் நீ என்ன சாதி, எப்படி இருக்கிறாய் என்று கேட்டால், எல்லோரும் ஒரே மாதிரி தான் இருக்கிறார்கள். நான் ஏதோ குடுமி வைத்து இருக்கிறேன். எல்லோரும் கிராப் வைத்து இருக்கிறார்கள், எல்லோரும் மீசை வைத்து இருக்கிறார்கள், எல்லோரும் கைலி கட்டுகிறார்கள், எல்லோரும் குழாய் போடுகிறார்கள். எல்லோரும் ஒரே மாதிரி இருக்கிறார்கள். இன்னாருதான் இன்ன சாதி என்று தெரியவில்லை. சாதியை ஒழித்து இருந்தால் நன்றாக இருக்கும். அலங்காரத்தில் ஒரே நிறமாக இருக்கிறார்களேயொழிய, சாதி சான்றிதழ் பெறும்போது சலுகைகள் பெறும்போது நான் இன்ன சாதி என்று கேட்டு, நான் பேக்வேர்டு கிளாஸ், நீ அதற்கு கீழே உள்ள கிளாஸ், நான் அந்த கிளாஸ் அப்படி என்று முக்கால்வாசி முன்



னேறுவது மாதிரி சொல்லமாட்டார்கள். நான் கூட ஒரு சான்றிதழ் வாங்கிக் கொண்டு போய்விட்டேன். அந்த சான்றிதழில் 'Not below the rank of Deputy Collector' என்று சொல்வதால் அவரிடமிருந்து அதை வாங்கி வருவதற்குள் பாதி உயிர் போய்விடுகிறது. அதனால் கஷ்டம் இருக்கிறது. இதில் ஏதாவது சீர்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நமது முதலமைச்சர் அவர்களுடைய நிர்வாகத்தில் குறைபாடுகளே வரக் கூடாது. அப்படி வந்தால் அவைகளை நிவர்த்திக்க முதலமைச்சர் அதற்குத் தயாராக இருக்கும்படிக் கேட்டுக் கொண்டு எனக்கு அளித்த நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

**திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது விற்பனை வரி மற்றும் மாவட்ட நிர்வாக மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் பேசுகிறேன். விற்பனை வரியிலிருந்து ஏறத்தாழ 17 பொருள்களுக்கு இன்றைய தினம் இந்த மானியக் கோரிக்கையிலே வரி விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். முதல் அமைச்சர் அவர்கள் 1974ஆம் ஆண்டு அன்று நெல்லைக்கு வந்திருந்த போது அங்கு ஒரு பொதுக் கூட்டத்திலே அவர்கள் பேசினார்கள். நெல்லை வியாபாரிகள் சங்கத்திலிருந்து அவருக்கு வரவேற்புக் கொடுக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில் அவர்கள் பேசுகின்ற போது அங்கு வைக்கப்பட்ட முக்கியக் கோரிக்கையாக இருந்த பலமுனை வரி விதிப்பிலே இருந்து ஒருமுனை வரி விதிப்புக்கு ஆக்கிட வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை விடுத்து இருந்தார்கள். அந்த நேரத்திலே அவற்றினை கொள்கை அளவிலே நான் ஏற்றுக் கொள்கிறேன்; மிக விரைவிலே இந்த பலமுனை வரி விதிப்பை மாற்றி ஒருமுனை வரி விதிப்பாக நான் ஆக்கிக் காட்டுகிறேன் என்று அன்றையதினம் சொன்னார்கள். அப்படிச் சொல்கின்றபோது ஒரு உதாரணத்தைக் கோடிட்டுக் காட்டினார்கள். முதலிலே சாம்பார் அளிக்கப்படும்; அதற்குப் பின்னால் ரசம் அளிக்கப்படும், அதற்குப் பின்னால் உங்களுக்கு மோர் கொடுக்கப்படும், கடைசியிலே பாயாசம் கொடுக்கப்படும் என்று வியாபாரிகளைப் பார்த்துச் சொன்னார்கள். இப்போது அந்த வியாபாரிகள் எல்லாம் மகிழ்ச்சி அடையத் தக்க அளவில் முதல் தடவையாக சாம்பார் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஏறத்தாழ 9 பொருள்களுக்கு பல முனை வரி விதிப்பிலிருந்து ஒருமுனை வரி விதிப்பாக மாற்றிக் கொடுத்து இருக்கிறார்கள். இது முதல் அடையாளம். இதற்கு அந்த நெல்லை மாவட்டத்தில் இருக்கிற வியாபாரிகள் சங்கத்தின் சார்பாக நமது முதலமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

எங்களது நெல்லை மாவட்டத்தில் அம்பை கல்லிடைப் பகுதிகளிலே அப்பளம் தயாரிக்கும் ஒரு குடிசைத் தொழிலில் விதவைப் பெண்கள் தான் மிக அதிகமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அந்த அப்பளம் தயாரிப்பதற்கு வரி விதித்தது கிடையாது; ஏன் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கூட வரி விதிப்பு இல்லை; ஆனால் இடைக் காலத்திலே வந்த கவர்னர் ஆட்சிக் காலத்திலே அந்த அப்பளத் தயாரிப்புக்கு வரி விதிக்கப்பட்டு இருக்கிறது. இது ஆச்சரியப்படத்தக்க அம்சம். ஆனால் இன்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் அந்த விதவைப் பெண்களுடைய கண்ணீரைத் துடைக்கின்ற அளவுக்கு 2 லட்சத்திலிருந்து 3 லட்சத்திற்கு வரி விலக்கு வரம்பை உயர்த்தி இருப்பது குறித்து எனது மகிழ்ச்சியை அந்த வட்டார மக்கள் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் முழு அளவுக்கு அந்த வரி விலக்கை அளித்தால் அந்த விதவைப் பெண்கள், கைம்பெண்களுக்கு உதவிகரமாக இருக்குமென்று நான் வேண்டிக் கொள்கிறேன்.

அடுத்து, இந்தச் சென்னையிலே இருக்கின்ற தலைமைச் செயலக அலுவலர்களுக்கு, திராவிட முன்னேற்றக் கழகம் இந்தப் பதவியை ஏற்றவுடனே அந்தப் பணியாளர்கள் மீது வைத்திருந்த கடுமையான வேலை நீக்கத்தை நீக்கிவிட்டு, மீண்டும் வேலை வாய்ப்பை அளித்திருக்கின்றார்கள். அந்தப் பணியிலே உள்ளவர்களுடைய சார்பாக நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மாவட்ட நிர்வாகம். பாளையங்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளைவுக்குள்ளே நிறைய இடம் இருக்கிறது. அந்த இடத்தை விட்டுவிட்டு, இன்றைய தினம் பாளையங்கோட்டை, அதாவது நெல்லை மாவட்டத்தினுடைய தலைமையிடமாக இருக்கின்ற அந்தப் பகுதியில், நெல்லை மாவட்டத்தினுடைய அரசு அலுவலகங்களெல்லாம் பல்வேறு இடங்களிலே இன்றைய தினம் வாடகைக் கட்டிடங்களிலேயிருப்பதைப் பார்க்கின்றோம். பொதுமக்கள் வந்தால், ஒரு அலுவலகத்திற்குச் சென்றால், மற்றொரு அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் ஒரு மைல் செல்ல வேண்டும்; இரண்டு மைல்கள் செல்ல வேண்டும். இப்படி பல தொல்லைகளுக்கு ஆளாகின்றார்கள். ஆகவே, இந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குள்ளே நிறைய இடமிருக்கின்ற காரணத்தினாலே அந்த இடங்களிலேயே அரசு அலுவலகக் கட்டிடங்கள் அனைத்தையும் கட்டிட வேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கிறேன்.

இதே நிலைமைதான் தென்காசி தாலுகா ஆபீசிலேயும். தென்காசி தாலுகா ஆபீசில் நிறைய இடமிருக்கிறது. ஆனால் தென்காசி தாலுகா ஆபீசிலே அமைக்கப்பட வேண்டியஅலுவலக





கங்களெல்லாம் பல்வேறு இடங்களிலே அந்த நகரத்திற்குள்ளே அமைத்திருக்கிறார்கள். அவைகளெல்லாம் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன.

(மாற்றுத் தலைவர் தலைமை)

அந்த வாடகைப் பணம் மிக அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. இவைகளையெல்லாம் மிச்சப்படுத்தி ஒரேயிடத்திலே வைத்து பொதுமக்களுக்கு ஒரு சௌகரியம் ஏற்பட, அந்தத் தாலூகா ஆபீசில் உள்ளே அந்த அலுவலகக் கட்டிடத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கிறேன். தென்காசியிலே இருக்கின்ற ஆர்.டி.ஓ. வுக்குக் கூட தங்குவதற்கு குவார்ட்டர்ஸ் இல்லை. ஒரு வாடகைக் கட்டிடத்திலேதான் அவர் இன்றைய தினம் குடும்பத்தை வைத்துக் கொண்டிருக்கிறார். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு நிலைமையை மாற்றி, தென்காசி தாலூகா ஆபீஸ் கட்டிடத்தின் வளாகத்திற்குள்ளேயே அந்தக் கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று நான் இந்த அரசை வேண்டுகிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே என். ஜி. ஓ க்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அவற்றிலே அவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். பதவி உயர்வு இல்லாமல் இன்றைய தினம் பதவியிலேயிருந்து கீழே இறக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த நிலைமைகளையெல்லாம் பார்த்து, அவர்களுக்கு மீண்டும் பதவியளிக்க, மீண்டும் அந்த வேலையைக் கொடுக்க, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய அந்த உயர்வு வேலையை அளிக்க வேண்டும் என்று இந்தஆட்சியை நான் வேண்டிக் கொள்கிறேன்.

என்.ஜி.ஓ. க்களுக்கு ஏற்காட்டிலே ஒரு '' ஹாலிடே ஹோம் '' இருக்கிறது. ஆனால், இன்றையத் தினம் திருநெல்வேலி, மதுரை போன்ற இடங்களிலேயெல்லாம் சுகவாசஸ்தலமாகக் கருதப்படுகின்ற திருக்குற்றாலத்திலே இந்த என்.ஜி.ஓ. க்களுக்கு ஹாலிடே ஹோம் இல்லை. இந்தக் குறையை அரசு நீக்க வேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கிறேன். என்.ஜி. ஓ-க்களுக்கு அங்கு ஒரு இடம் இருக்கிறது. அதை அரசு ஏற்றுக் கொண்டால் அந்த இடத்தை அரசுக்கு மாற்றிக் கொடுக்க என். ஜி. ஓ.க்கள் தயாராக இருக்கின்றார்கள். ஆகவே, அந்த இடத்தைப் பெற்று அந்த இடத்திலே என்.ஜி.ஓ. க்களுக்காக, திருக்குற்றாலத்திலே ஒரு ஹாலிடே ஹோம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கின்றேன்.

அதைப் போன்று, நெல்லையிலே—தலைநகரத்திலே இருக்கின்ற பாளையங்கோட்டையில், பி. டபிள்யூ. டி. அலுவலகமோ, ஹைவேஸ் அலுவலகமோ அங்கே இருக்கிறது. டிவிஷனல்,

00 009- 144366
D
V211, 31'N89
N99.12.1

ஆபீஸ் இருக்கிறது. அதனால் வேலைப்பளு மிக அதிகமாக இருக்கிறது. அந்த இடத்திலே, அதற்கு அடுத்த படியாக இருக்கிறது தென்காசி. ஒரு ரெவின்யூ பகுதியாக. அந்தத் தென்காசி ரெவின்யூ பகுதியிலே, அதைச் சுற்றியிருக்கின்ற ராமநதி திட்டம், கடனாநதி திட்டம், கருப்பா நதி திட்டம் குண்டார் திட்டம் மற்றும் ஆய்விலே இருக்கின்ற அடவிநயினார் திட்டம் எல்லாம் அங்கே இருக்கின்றன. ஏராளமான பாசனக் குளங்களெல்லாம் அந்தப் பகுதியிலே காணப்படுகின்றன. ஆகவே, இவைகளையெல்லாம் உள்ளடக்கி, தென்காசியிலே நிரந்தர பி.டபிள்யூ. டி., ஹைவேஸ் டிவிஷன் அமைக்க நான் வேண்டிக் கொள்கின்றேன்.

அதற்கடுத்து, கடைசியாக கடையநல்லூர் நகரம். இந்த நகரம் ஏறத்தாழ 70,000 மக்கள் தொகை கொண்ட ஒரு பெரிய நகரமாகும். இந்த நகரம் ஒரு இரண்டாம் நிலை நகராட்சியாகும். இந்த நகரத்திலே மருத்துவமனை இருக்கிறது. ஊராட்சி ஒன்றிய அலுவலகம் இருக்கிறது, கால்நடை மருத்துவமனை இருக்கிறது, காவல் நிலையம் இருக்கிறது ; தீயணைப்பு நிலையம் இருக்கிறது ; கல்வி அலுவலகம் இருக்கிறது ; வனச் சரக அலுவலகம் இருக்கிறது ; ஆகவே, இத்தனை அலுவலகங்களையும் கொண்டு அந்த நகரம் தலைநகரமாக ஏற்றுக் கொள்ளப்படாமல், இருபது கிலோ மீட்டர் தூரத்திலேயிருக்கின்ற தென்காசியிலே உள்ள தாலூகா ஆபீசிற்கு அந்த மக்கள் அலைய வேண்டியிருக்கிறது. ஆகவே, எழுபதாயிரம் மக்கள் தொகை கொண்ட கடையநல்லூரைத் தலைநகராகக் கொண்டு, கடையநல்லூர் தாலூகாவாக இந்த அரசு அறிவித்திட வேண்டுமென்று நான் வேண்டி கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, அமைகிறேன். நன்றி.

(பிற்பகல் 12-30)

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனது பொது வாழ்வில் பொன்விழா கண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பொன்விழா காணும் இந்த விற்பனை வரித்துறைக்கு பொறுப்பு ஏற்றிருக்கும் இந்த நல்லவேளையில் தமிழகத்திற்கு விற்பனை வரி அறிமுகப்படுத்தப்பட்டதற்கு விருதுநகர்தான் காரணமாக இருந்தது என்ற அடிப்படையில், அந்தத் தொகுதியைச் சார்ந்த உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய கருத்துக்களை எடுத்துரைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1938 ஆம் ஆண்டில் தமிழக முதல்வராக பொறுப்பேற்று இருந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள் விருதுநகருக்கு ஆனைக் குட்டம் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கி வைக்க வந்திருந்தாராம். அப்போது, அங்கே நடைபெறுகிற கல்வி நிறுவனங்கள் எல்லாம் இலவசமாக நடத்தப்படுவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, இது எப்படி சாத்தியப்படுகிறது, இதற்குத் தேவையான



நிதியை எப்படி சேகரிக்கிறீர்கள் என்று கேட்டாராம். அதற்கு அந்தப் பள்ளிகளை நடத்தும் குறிப்பிட்ட சமூகத்தினர் மகமை என்று சொல்லப்படுகிற ஒருவிதமான 'சாரிட்டி பண்டை' தாங்கள் செய்யும் வியாபாரத்தின் மூலமாக சேர்க்கிறார்கள் என்பதை அறிந்து, அந்த முறையை இந்த மாநிலம் முழுவதும் 1939-ஆம் ஆண்டில் விற்பனை வரியாக முதல்முதலாக அறிமுகப் படுத்தினாராம். இருந்தாலும் அமெரிக்கா, இந்தியாவில் உள்ள மத்திய பிரதேசம் போன்ற இடங்களில் இந்த விற்பனை வரி இருந்தது என்றாலும் தமிழகத்தில் முதல் முதலாக அறிமுகப்படுத்தப்படுவதற்கு விருதுநகரும், மூதறிஞர் இராஜாஜி அவர்களும், அங்கே வாழ்ந்த குறிப்பிட்ட சமூகத்தினர்கள் கையாளும் மகமை முறையும் ஆகும் என்பது பலருக்குத் தெரியாத உண்மையாக இருக்கும்.

நமது அரசு என்ற இந்த சக்கரம் செம்மையாகச் சுழல்வதற்கு அச்சாணியாக இந்த விற்பனை வரி கடந்த ஆண்டில் 1,502 கோடி ரூபாயை வருமானமாக ஈட்டித் தந்திருக்கிறது. நான் இந்த மன்றத்தில் கூறுகின்ற கருத்துக்கள் அரசிற்கு வருமான இழப்பு ஏற்படாமலும், வரி செலுத்துகின்ற மக்களுக்கும் சுமை இல்லாமல் இருக்கக்கூடிய அளவிற்கு அமல்படுத்தக்கூடிய யோசனைகளாக இருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன். அரசு மக்களிடமிருந்து வரி வசூல் செய்கிறபோது எப்படி வண்டு மலரிலிருந்து தேனை எடுக்கும்பொழுது அந்த மலர் நோகாமல், அது காயாகி, கனியாகி உதவுகிற வகையில் அந்தத் தேனை எடுக்கிறதோ, அந்த வகையில் வரி விதிப்பு இருக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

பொன்விழா காண்கிற இந்த நாளில் எத்தனையோ வரிவிதிப்பு முறைகள் முழுமையாக மறுபரிசீலனை செய்யப்படக் கூடிய நிலையில் தான் இருக்கின்றன. மின்வெட்டை 60 சதவீதமாக அறிவித்த பிறகு, இன்னமும் அதிகமாக அறிவிக்க வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அதனால் இழக்கக்கூடிய தொழில் உற்பத்தியும், அதனால் இழப்பு ஏற்படுகிற விவசாய உற்பத்தியும், நேரிடையாக இந்த விற்பனை வரி வசூலைத்தான் பாதிக்கப் போகிறது என்பதை நான் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது இல்லை. இந்த வரி விதிப்பில் மாறுதல் முக்கியமாக விவசாய விளை பொருள்களுக்கு செய்து தரவேண்டும். ஏனென்றால் மொத்தமாக 1,502 கோடி ரூபாய் வருமானம் வந்த ஒரு நிலையில் விவசாய விளைபொருள்கள் மூலமாக மொத்தம் நாலே நான்கு கோடி தான் விற்பனை வரியாக வருகிறது. இதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால் மிளகாய் வற்றல், கொத்தமல்லி போன்ற பொருள்களுக்கு 8 சதவீதம் வரியாக இருப்பதால் வரி ஏய்ப்பு செய்பவர்களுக்கு அது சாதகமாக அமைந்து விடுகிறது. நேர்மையான வியாபாரிகள் வியாபாரம் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

' அக்ரிகல்ச்சர் ஸ்டாட்டிஸ்டிக்ஸ் ' ஐ எடுத்துப் பார்க்கும்போது மிளகாய் வற்றல் இந்தியாவில் ஏழு லட்சம் டன் விளைந்ததாகச் சொல்கிறார்கள். தமிழகத்தில் 20 சதவீதமாக சுமார் ஒரு லட்சத்திலிருந்து ஒன்றரை லட்சம் டன்கள் மிளகாய் வற்றல் விளைகிறது. ஒரு லட்சம் டன் என்று எடுத்துக் கொண்டாலும் சராசரி விலை குவிண்டால் 3,000 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும், 300 கோடி ரூபாய்க்கு மிளகாய் வற்றல் விளைகிறது. 8 சதவீதம் வரியாக இருக்க வேண்டுமென்றால் மிளகாய் வற்றலிலிருந்து மட்டுமே 24 கோடி ரூபாய் விற்பனை வரி வருமானம் வர வேண்டும். ஆனால் விளைகிற மிளகாய் வற்றல் எல்லாம் தமிழகத்தில் விற்கப்படுவதாக எடுத்துக் கொண்டால் தான் அந்த 24 கோடி ரூபாய் வரும். வெளி மாநிலத்திற்கு மிளகாய் வற்றல் செல்லக்கூடிய காரணத்தால் அந்த விற்பனை வரி இழப்பு ஏற்படுகிறது. அந்த வரி வசூலைக் குறைத்து, ஆனால் வரக்கூடிய வருமானத்தை குறைக்காமல் இருப்பதற்கு நிச்சயமாக வழி இருக்கிறது. 8 சதவீதம் வரி என்று இருப்பதை ஒரு சதவீதமாக மாற்ற வேண்டும். வெளிமாநிலத்திற்கு மிளகாய் வற்றல் consignment sales போகக் கூடியதைத் தடுப்பதற்கு நம்முடைய மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை. ஏனென்றால் அது மத்திய அரசினுடைய வரி விதிப்பு முறைக்கு உட்பட்டதாகும். இருந்தபோதிலும்கூட, consignment sales-ல இருப்பதை நாம் ஒரு ரெஸ்ட்ரிக்சன் மூலமாகவோ, அல்லது ஒருவித கன்ட்ரோல் மூலமாகவோ, அல்லது ஒருவித ரெகுலேசன் மூலமாகவோ நாம் கட்டுப்படுத்த முடியும். Essential Commodities Movement Regulatory Order என்று போட்டுவிட்டால், வெளியே எடுத்துச் செல்லக் கூடிய பொருட்களுக்கு விற்பனை வரித் துறையிலிருந்தோ, அல்லது வருவாய்த் துறையிலிருந்தோ, ஒரு குறிப்பிட்ட சதவீதத்தைச் செலுத்தி, அதற்கு பெர்மிட் வாங்கிக் கொண்டு தான் வெளியே கொண்டு செல்ல வேண்டும் என்ற ஒரு முறை அறிமுகப்படுத்தப்பட்டால், ஒரு சதவீத வரியாக இது குறைக்கப்பட்டாலும் கூட, இந்த மிளகாய் வற்றல் என்ற இந்த ஒரு பொருளிலிருந்து 3 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வரும். ஆகவே விற்பனை வரியைக் குறைக்க வேண்டும் என்று சொல்லும்போது, அரசாங்கத்தினுடைய வருமானத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் இதைக் கூறுகிறேன், என்ற அடிப்படையில் நான் சொன்ன இந்த யோசனையைக் கண்டிப்பாக பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் உணவு தானிய எண்ணெய். இதை எடுத்துக் கொண்டால், உணவு தானிய எண்ணெய் மூலப் பொருட்களை வாங்கும்போது 3 சதவீத வரியும், எண்ணெயாக ஆட்டி, அதை விற்கும்போது 4 சதவீத வரியும், பிண்ணாக்காக விற்கும்போது, அதற்கு 4 சதவீத வரியும், அடிசனல் சேல்ஸ் டாக்சாக ஒன்றிலிருந்து ஒன்றரை சதவீத வரியும்,



சர்சார்ஜாக 10 சதவீதமாகவும், ஆக மொத்த விலையில் 10 சதவீதத்திற்கு மேல் இந்த வரி விதிப்பு இருக்கக்கூடிய, காரணத்தால், இன்று உண்மையிலே வரி ஏய்ப்பு செய்டவா களுக்குத்தான் வாய்ப்பாக இருந்து வருகிறது. பல நல்ல அதிகாரிகள் தவறு செய்யத் தூண்டக்கூடிய வகையில் இந்த வரி விதிப்பு முறை இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு, ஓர் ஆண்டுக்காவது வணிகர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மிகக் குறைந்த அளவிலே, ஏதாவது ஒன்றிரண்டு பொருட்களுக்கு விற்பனை வரியைக் குறைத்து, அதன் மூலமாக பரிட்சார்த்தமாக தொடர் நடவடிக்கையை மேற் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல Additional Surcharge, Additional Sales Tax என்பது உண்மையிலே நியாயமற்றதாக இருக்கிறது. இதைக் குறைக்க வேண்டும் என்று பல முறை கேட்டிருந்தபோதிலும் கூட, முன்னால திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சியிலே யிருந்தபோது, 0.7 சதவீதமாக அறிமுகப்படுத்தப்பட்ட வரி யானது. இன்று $1\frac{1}{2}$ சதவீதத்திற்கு மேல் அதிகமாக உயர்த்தப் பட்டு இருக்கிறது. இதை முற்றிலுமாக நீக்க வேண்டும் என்பது எங்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமாக உள்ள தீப்பெட்டித் தொழிற் சாலைகள் மதுரை, காமராசர், திருநெல்வேலி, வ.உ.சி. ஆகிய மாவட்டங்களில் ஆயிரம் தொழிற்சாலைகள். சிறிய தொழிற் சாலைகளாகவும், 8,000 தொழிற்சாலைகள் Tiny Sector, Cottage Sector என்று சொல்லக் கூடிய அளவிலே இருக்கின்றன. அதன் மூலமாக 3 லட்சம் பேர்கள் வேலை வாய்ப்பைப் பெற்று வருகிறார்கள். அதற்கு ஆளுநர் ஆட்சியில் 3 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாக விற்பனை வரி குறைக்கப் பட்டு இருந்தாலும் கூட, இந்த 2 சதவீதம் வரியிலிருந்து வரக்கூடிய மொத்த வருமானமே, கையால் தயாரிக்கக்கூடிய தீப்பெட்டிகளிலிருந்து 27 லட்சம் ரூபாயும், மெசின் மூலமாக தயாரிக்கக்கூடிய தீப்பெட்டிகளிலிருந்து 6 லட்சம் ரூபாயும் வரக்கூடிய காரணத்தால் மொத்தம் 1,502 கோடி ரூபாயில் இந்த 50 லட்சம் ரூபாய் என்பது மிகவும் குறைவு என்ற காரணத்தால் இதையும் பரிசீலனை செய்து இதை முற்றிலுமாக நீங்கள் நீக்கினால், நிச்சயமாக எண்ணற்ற லட்சக்கணக்கான குடும்பங்களுக்கு நல்லது செய்யப்பட்டது என்ற ஒரு நல்ல பெயரை இந்த அரசு ஏற்படுத்திக் கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தங்களுக்கு மிக நன்றாகத் தெரிந்த, எங்களுக்கு ஓரளவே தெரிந்த கலைத் துறையிலிருந்து எத்தனையோ வேண்டுகோள்கள் வந்திருக்கின்றன. அந்த கலைத் துறையினர் வரி விதிப்பை மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்ட கோரிக்கை உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

அந்த அடிப்படையில் அவர்களுக்கும் வரி விதிப்பை மாற்றம் செய்து கொடுத்து, சிறிய சிறிய நடிகர்கள், நடிகைகளை வைத்து சிறு முதலீட்டுடன் தயாரிப்பு செய்கின்ற படங்களும் நல்ல முறையில் ஓடக்கூடிய முறையில், இந்த வரி விதிப்பு முறைகளை மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விற்பனை வரித் துறையைப் பொறுத்தவரையில், 1,500 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்றால், எந்த அளவிற்கு இந்தத் துறை நவீனமாக்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். இதுவரையிலும் அதிலே கம்ப்யூட்டர் பொருத்தப்படாமல் இருந்தது. இப்போது தான் ஏழ்தா தலைமையிடத்திலே மட்டும் கம்பயூட்டர் வாங்கியதாக நான் அறிகிறேன். இது மிகத் தீவிரமாக அமுல் படுத்தப்பட்டால், வரி ஏய்ப்பை நூற்றுக்கு 90 சதவீதம், அதன் மூலமாகக் குறைக்க முடியும்;அதனால் அரசுக்கு அதிகமான வருமானமும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக பணிக் காலத்தில் உயிரிழக்கின்ற அரசு ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்குவது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மிக்க மகிழ்ச்சி. அன்றொரு நாள் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசாங்கத்தினுடைய நிதி நிலையை ஆராய்ந்துதான் மற்றவர்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவாக்கலாமா என்பது கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும் எனறு சொன்னார்கள்.

(பிற்பகல் 12.40)

குரூப் இனசூரன்ஸ் திட்டம் எனற ஒரு திட்டம் இருக்கின்றது. எங்கள் ஆலையில் 1,500 பேர்கள் வேலை பார்க்கக் கூடிய இடத்திலே குரூப் இன்சூரன்ஸ் திட்டத்தின் மூலமாக ஒரு சிலருக்கு மட்டும் நாங்கள் பிரிமியம் செலுத்தி, நாங்கள் அநத இன்சூரன்ஸ் திட்டத்தை எடுத்திருக்கிறோம். ஆகவே ஒரு வேளை யாராவது வேலை பார்ப்பவர் இறந்துவிட்டார் என்றால், நிர்வாகத்திடமிருந்து பணம் கொடுப்பதற்குப் பதிலாக இன்சூரன்ஸ் கம்பெனியே கொடுத்து விடுகின்றது. ஆக அரசாங்கமே வேலை பார்க்கக் கூடிய ஊழியர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 12 மட்டும் செலுத்திவிட்டால் அரசாங்கத்தினுடைய நிதி செலவாகாமல, இன்சூரன்ஸ் மூலமாக அந்தத் தொகையை வாங்கிக் கொடுக்கக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கும். இதில் எல்லா ஊழியர்களும் அந்த இன்சூரன்ஸ் தொகையை செலுத்த வேண்டியதில்லை என்ற காரணத்தால், இதுபோன்ற கருத்துக்களை எல்லாம் நீங்கள் பரிவுடன் பரிசீலித்து மக்களிடம் மேலும் மேலும் நல்ல பெயரைப் பெற்று, எங்களுக்கும் நல்ல பெயர் கிடைக்கக் கூடிய அளவிலே இந்தக் கருத்திற்கு செவி சாய்க்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன், வணக்கம்.



திரு. ஆர். எட்டியப்பன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய விவாதத்தின்மீது பேசுகின்ற நேரத்தில், வணிக வரித் துறையைப் பொறுத்த வரையில், இந்தத் துறை 1939ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, மூதறிஞர் ராஜாஜி அவர்களால் தொடங்கப்பட்டு, இன்று பொன் விழா காணுகின்ற துறையாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலே நாம் எல்லாம் இந்தத் துறைக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அப்படிப்பட்ட இந்தத் துறை அப்போதிருந்த கால கட்டத்தில் ஒரு பைசாவாக இருந்து, இன்று ஏறக்குறைய 50, 51 பைசாக்களாக உயர்ந்திருக்கின்ற ஒரு துறையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட இந்தத் துறையை தமிழக வருவாயில் ஒரு கற்பக விருட்சமாக, காமதேனுவாக விளங்கிக்கொண்டிருக்கின்ற இந்தத் துறையை மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள் எங்களுடைய தானைத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள். அவர் மேன்மேலும் சிறப்பு செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். அத்தோடு மட்டுமல்லாமல், இந்தத் துறையைப் பொறுத்தவரையில், வரிகள் என்று சொல்லுகின்ற நேரத்திலே, ஒரு முனை வரி, பல முனை வரி என்று பல நாட்களாக உள்ளது. சாதாரண மக்களைப் பாதிக்கக் கூடிய அளவிற்கு பல்வேறு பொருட்களின் மீது பல முனை வரிகள் விதிக்கப்படுகின்றன. இதை மாற்றி எல்லா பொருட்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரு முனை வரியாகவே நிர்ணயிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஒரு முனை வரியாக ஒட்டுமொத்தமாக நிர்ணயித்தால், வணிகர்களுக்கும், அதை வணிகர்களிடமிருந்து வாங்குகின்ற பொது மக்களுக்கும் ஒரு சமமாக, ஏற்றமாக, எளிதாக இருக்குமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோன்று நம்முடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் 9–2–1989-ல் நடந்த முதலமைச்சர் மாநாட்டில் அங்கே நடுவண் அரசுக்கு கூறி இருக்கின்ற இந்த விற்பனை வரி சம்பந்தமான அவருடைய கருத்துக்கள் மத்திய அரசு ஏற்றுக்கொள்கின்ற ஒரு விதமாக அமைந்திருக்கின்றன. அதுபோன்று வணிகர்களுக்கு சிரமம் கொடுக்கின்ற வரிகள், வரிக்கான விவரங்கள், அதனுடைய முறைகளை எளிதாக ஆக்கவேண்டும் மேலும் வரி விதிப்பிற்கான மாற்றங்கள், அறிவிப்புகள், ஆகியவைகள் ஆங்கிலத்தில் வருகின்ற அந்த நிகழ்ச்சிகளை, அந்த அறிக்கைகளை, தபால்களை எல்லாம் மாற்றி கட்டாயமாக தமிழ் மொழியிலேயே வருகின்ற ஒரு நிகழ்ச்சி நிரலாக வைக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று கூடுதல் வரி விதிப்பதினால் பொருட்களுடைய விலை கூடுகின்ற வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது வாங்குவோருடைய தலை மேல் தான் ஏறு கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியப் பேரரசு விற்பனை வரி செலுத்தப்படுவதற்கான சட்ட திட்டங்களை எல்லாம்வைத்திருக்கிறார்கள். லாபம்கிடைத்தால் தான் வருமான வரி செலுத்த வேண்டும். கூடுதல் வரி என்பது லாபம் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் செலுத்தவேண்டுமென்கி ற முறையை மாற்றி மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறை ஒரு முக்கியமான துறை. வரி, உபரி வரி, கூடுதல் விற்பனை வரி, கூடுதல் விற்பனை வரி மீதான கூடுதல் உபரி வரி, என்று வரிக்கு மேல் வரி போட்டால், அது வாங்குவோர் தலையில் தான் விழும். ஆகவே இதுசம்பந்தமாக அரசு அதிகாரிகள் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேடடுக்கொள்கிறேன். மேலும் வணிகர்கள் ஒரு சீரான கணக்கை வைத்துக்கொள்ள முடியாத நிலையிலும், இதை ஒரு 'ரேஷனலைஸ்' செய்து வரி வாங்குவோருக்கும், வரி கொடுப்போருக்கும் ஒரு சீரான, ஒரு நிலையான கொள்கையை அரசு அறிவிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள், ஏழைகளுடைய மிகச்சாதாரண வாகனம் சைக்கிள் என்று. அந்த சைக்கிளுக்கும் சைக்கிளுடைய உபரி சாமான்களுக்கெல்லாம் வரிவிதிக்கக் கூடாது என்று சொல்லி இருந்தார்கள். அது போல ஒரு சில எளியோர்கள், ஏழ்மையானவர்கள் பயன்படுத்துகிற அந்தச் சாதனங்களுக்கெல்லாம் வரி விலக்குக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். மருந்துப் பொருள்களின் மீது ஒரு முனை வரியை அறவே நீக்க வேண்டும். சாதாரண ஏழை மக்கள் பயன்படுத்துகின்ற அலுமினிய பாத்திரங்களுக்கு பூரணமாக வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வணிக தொழிலிலே சங்கடமான பிரச்சினைகள். வருமான வரி அதிகாரிகள், எவ்வளவு பொருள் இருக்கிறது, எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது என்றெல்லாம் தினசரி எழுதிவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார்கள். அப்படி எழுதி வைக்காத கடைக்காரர்கள் மீது அதிகாரிகள் ஒரு மடங்கு, $1\frac{1}{2}$ மடங்கு அபராதத்தை விதிக்கிறார்கள். உதாரணமாகச் சொல்லப்போனால் சைக்கிள் கடை சாமான்கள், மோட்டார் வாகன சாமான்கள், இவைகள் எல்லாம் சிறு சிறு சாமான்கள். இவைகள் எண்ணி வைக்கக் கூடிய நிலையில் இல்லை. அப்படிப்பட்ட கடைகளை எல்லாம் சோதனை செய்து ஒன்று அல்லது $1\frac{1}{2}$ மடங்கு அபராதம் போட்டு விடுகிறார்கள். அது மாதிரி நிலைமையை மாற்றம் செய்ய வேண்டும்.



அதோடு மட்டும் அல்லாமல் சினிமா கொட்டகைகளில் போடப்படுகிற வரி வகைகளை இந்த அரசாங்கத்திற்கு இன்னும் அதிகமான லாபம் வருகிற அளவுக்கு உயர்த்த இந்த அரசாங்கம் முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வணிக வரி சோதனைச் சாவடிகள் தமிழ் நாட்டில் இப்போது 48 வணிக வரி சோதனை சாவடிகள் இருக்கின்றன. அந்த வணிக வரிச் சோதனைச் சாவடிகளில் எல்லாம் அலுவலர்கள் எண்ணிக்கையை உயர்தத வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடைய செய்தி தொடர்பு வசதிக்காக ரேடியோ முறையை அவர்களுக்கு நடைமுறைப்படுத்த வேண்டும். போலீஸ் கண்டிரோலில் இருப்பதைப் போல, இருக்கிற சோதனை சாவடிகளில் எல்லாம் ரேடியோ சாதனங்களைப் பொருத்தி அதை நவீனமயமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்லாமல் இங்கே இருக்கிற ஆலோசனைக் குழுவை எல்லாம் மாற்றம் செய்து ஒரு செம்மையான சீரான நிர்வாகத்தை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள். தமிழ்நாட்டில் இருக்கிற மாவட்டங்களில் வட ஆற்காடு மாவட்டமும் தென்னாற்காடு மாவட்டமும் தான் பெரியமாவட் டங்கள் ஏறத்தாழ 21 சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்ட இந்த மாவட்டங்களை அடுத்த நிதி ஆண்டிலாவது பிரித்து, அப்படி பிரிக்கிறபோது அதனுடைய வட்ட தலைநகரங்களையும் கூட பார்த்து சீராக செம்மையாக நல்ல இடமாகப் பார்த்து பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி பிரிக்கிற போது வட ஆற்காடு மாவட்டத்தில் சேத்துப்பட்டு மற்றும் பெர ணமல்லூர் ஆகிய ஊர்களை தாலுக்கா தலைமை இடங்களாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்லாமல் ஜமுனாமருதூரை ஒரு தனி வட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அடிமட்டத்தில் இருக்கும்படியான கிராம நிர்வாகமுறைகள் வரை எல்லாம் வெள்ளைக்காரன் காலத்தில் வந்த முறைகள்தான். அந்த முறைகளைஒழுங்கு படுத்தச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், டி.டி.சி. யில் போடுகிற தீர்மானத்தை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அது போல மாவட்ட ஆட்சித் தலைவர்தான் 'மேன் ஆன் தி ஸ்பாட்' என்று சொல்லுவார்கள். அதற்கேற்ப அவருடைய அறிக்கையை முழுவதுமாக ஏற்றுக் கொள்ள வேண்டும், அதுவும் வறட்சி பற்றிய நிலவரங்களையெல் லாம் அரசு முழுவதுமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

[1989 ஏப்ரல் 26

**திரு. பா. அப்துல் சமத் :** பேரவைத் தலைவர் அவர்களே வாய்ப்புக்கு நன்றி. மாநில ஆட்சித் தலைவர், அதாவது ஆளுநர் இன்று நமது மாநிலம் நலிந்து நிற்கும் நேரத்தில் பெரும் தொகையை எடுத்துச் செலவு செய்கிறார்கள். பெரிய மாளிகைகள், வெளிநாட்டுக் கார்கள், எஸ்டேட்டுகள், ஆள் அம்பு போன்றவை தேவை தானா என்பதை இந்த அரசு மூலம் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நடத்தும் மக்கள் மனு நீதி நாளிலும் ஊழல் நடப்பதாக கேள்விப்படுகிறேன். அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாவட்ட கலெக்டர்கள் எம். எல். ஏ.க்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் ஓய்வு ஊதியங்கள் கிடைப்பதில் இன்று வீணான கால தாமதங்கள் ஏற்படுகின்றன என்பதையும் கூறி அதைப் போக்குவதற்கு இந்த அரசு சிறந்த வழியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்து துறை அமைச்சர்களும் மாநிலம் முழுவதும் பயணம் செய்ய வேண்டும். கடந்த காலங்களில் சில அமைச்சர்கள் சென்னையை விட்டு நகர்ந்ததே இல்லை. அந்த வழியில் நடைபோடாமல் அமைச்சர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களையும் உடன் அழைத்துக் கொண்டு பல பகுதிகளுக்கு பயணம் செய்ய வேண்டும் என்றும் ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் மாவட்ட அதிகாரிகளை தலைநகருக்கு அழைக்கும் பழக்கத்தை மாற்றி, வட்ட அளவில் நேரில் சென்று குழு கூட்டி, அதிகாரிகளை சந்தித்து பேசி ஆலோசனைகளை நல்கி நிர்வாக இயந்திரங்களை சிறப்பாக நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

***திரு. வே. தங்கபாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர்கள் சென்னையிலிருந்து மாவட்டங்களுக்குச் சுற்றுப் பயணங்கள் மேற்கொள்வதில்லை என்ற ஒரு குறைபாட்டை நம்முடைய முஸ்லீம் லீக் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இந்த அமைச்சரவையிலுள்ள பெரும்பாலான அமைச்சர்களும்—ஏன், முழுமையாகவே எல்லா மாவட்டங்களுக்கும், எல்லா தொகுதிகளுக்கும் சென்று வந்து கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை, தற்போது சட்ட மன்றக் கூட்டம் நடைபெறுகின்ற காரணத்தால் வராமல் இருக்கலாமே தவிர, குற்றச்சாட்டு இருப்பதாக எதுவும் தெரியவில்லை.



1989 ஏப்ரல் 26]

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசும்போது 'கடந்த காலத்தில்' என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கபாண்டியன் அவர்கள் அதைக் கவனிக்கவில்லையென்று நான் கருதுகிறேன். கடந்த காலத்தில்,

Not only Ministers but also the files were immobilised. The Non. Member wants the mobility of the Ministers.

That is all.

**திரு. பா. அப்துல் சமத் :** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் மாண்புமிகு திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் பேசும்போது கள் குடிப்பதற்கு அனுமதி வேண்டுமென்று கேட்டார்கள். இதுதான் பிரதமர் ராஜீவ் காந்தியின் மதுவிலக்கு..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் கள் குடிப்பதற்காகவா அல்லது மொத்தத்தில் கள் இறக்குவதற்காகவா? (சிரிப்பு) (குறுக்கீடு)....... மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ சொல்லவிரும்புகிறார்கள். அதில் ஒரு தெளிவு வேண்டும் நமக்கு. (சிரிப்பு).

**திருமதி ரமணி நல்லதம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ் என் மூச்சு' தமிழ்-தமிழ், என்று சொல்லிக் கொண்டு, மேனாட்டு சாராயத்தைக் குடிக்கச் சொல்லுகின்றார்களே என்று கேட்பதற்காகத்தான் நான் அதைக் கூறினேனேயொழிய, கள் குடிக்கவேண்டுமென்று நான் கேட்கவில்லை. நன்றாக அந்தப் பேச்சை வாசித்துப் பாருங்கள்.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** பேரவைத் தலைவர் அவர்களே, அது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கு இது தேவையா?

**திரு. எம். அப்துல் லத்தீப் :** தலைவர் அவர்களே, அது எனக்குச் சம்பந்தமானது. என் தொடர்பானது அதில் இருக்கிறது. நான் பேசிய பிறகு வந்த பிரச்சினை. ஆகவே, நான் அதைப்பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது கள்ளை இறக்குகின்றவர்கள், கள்ளை இறக்குகின்ற இடத்திலேயே கள்ளை உண்ண உரிமை வேண்டும் என்று சொன்னார்கள். கள் உண்ணுவது உடம்புக்கு நல்லது என்று சொன்னார்கள். ஆகவே

அது, தங்களுடைய கொள்கையா என்று நான் கேட்டபோது, அது காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையா என்று கேட்ட போது, 'தமிழ்' 'தமிழ்' என்று சொல்லிக் கொண்டிருக்கக் கூடியவர்கள், இந்த நாட்டு சாராயத்தைச் சாப்பிடக்கூடாது என்று வெளிநாட்டுச் சாராயத்தைச் சாப்பிடுவதற்கு பாட்டில் களில் அடைத்துத் தருவதற்கு இன்றைக்கு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்களே, அப்படி அதை சாப்பிடுவதற்கு ஏற்பாடு செய்யும்போது, கள் ஏன் சாப்பிடக் கூடாது என்று தெளிவாகக் கேட்டார்கள். எனவே, கள் ஏன் சாப் பிடக்கூடாது என்று கேட்கும்போது, நீங்கள் உங்களுடைய கொள்கையாக இருந்தால், நீங்கள் சாப்பிடுவதைப் பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் சட்டமன்றத்தில் அதற்கான சட்டம் இயற்றி இருக்க வேண்டும். அதையும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்ல தம்பி. .. .. ..

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்களுக்கு ஒரு விளக்கம் அளிக்க விரும்பு கிறேன். ஐ. எம். எப். எஸ். என்றால், அது வெளிநாட்டி லிருந்து வரவழைக்கப்படுகிற சரக்கு அல்ல. ஐ.எம்.எப்.எஸ். என்ற பெயரில் அது இங்கேயே தயாரிக்கப்படுகிறது. அது, ஏற்கெனவே பிராந்தி, பீர், விஸ்கி என்றெல்லாம் அறிமுக மாகிவிட்ட காரணத்தால் அந்தப் பெயரில் அறிமுகமானது. இங்கேதான் தயாரிக்கப்படுகிறது. அது சுதேசிதான், அம்மை யார் அவர்கள் கவலைப்பட வேண்டாம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன விளக் கத்தைப் போலவே, அந்த நோக்கத்தில், வாதாடுவதற்காக சொன்னார்களே தவிர, கட்சியினுடைய கொள்கை அது அல்ல என்பது அவர்களுக்கும் தெரியும் உங்களுக்கும் தெரியும். பரிபூரண மதுவிலக்குதான் காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள் இதிலே சொல்லாவிட்டால், வேறு யார் தான். சொல்ல முடியும்? (சிரிப்பு).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, தமிழுக்கு 'அமுது' என்று பெயர்தான் சொல்லியிருக்கிறார்கள். அது கள் என்று



எப்போது பெயர் சொன்னார்கள் என்று தெரியவில்லை. தமிழுக்கும் கள்ளுக்கும் என்ன சம்பந்தம்? தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அதைச் சொல்ல வேண்டும்.

திரு. குமரி அனந்தன் : பேரவைத தலைவர் அவர்களே, கள்ளும் அமுதம் தான். ஏனென்றால், 'கள்ளூறும் வாய்' என்று சொல்லுகின்றபோது, அமுதூறும் வாய்........

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : பேரவைத் தலை வர் அவர்களே, அது காங்கிரஸ் கட்சிக் கொள்கையா? அல் லது தலைவர் அவர்களுடைய கொள்கையா? தயவு செய்து ........

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, அது கவிதைக் கொள்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெங்கடேஸ் வர தீட்சிதர் அவர்கள் ஏதாவது சொல்ல வேண்டும். அவர் கள் சொல்லவில்லையென்றால் ஒரு முடிவுக்கு வர முடி யாதே!

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் அவர்களின்—இப்போதும் என் தலைவராக மதிக்கிறேன். திரு குமரி அனந்தன் அவர் களை—என்னுடைய மதிப்பிற்குரியவர்—காங்கிரஸ் அரசாங்கம் எத்தனையோ மாநிலங்களில் இருக்கின்றன. ஒன்று, இரண்டு அல்ல—பல மாநிலங்களில் இருக்கின்றன. இதுவரைக்கும் காந்திஜியின் கொள்கையை நினைக்கவே இல்லை. மதுவிலக்கு என்ற கொள்கையை நினைக்காமல் அப்படியே நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, நாங்கள் ஒருவருக்கொருவர் எவ்வளவு பாசம உடையவர்கள என்பது உங்களுக்குத் தெரியும். அதே நேரத்திலே வெள்ளையர்கள் ஆண்டு கொண்டிருந்த நேரத்திலே திருச்செங்கோட்டிலே காந்தி ஆசிரமம் வைத்திருந்த இராஜாஜி அவர்கள் வேண்டு கோளுக்கிணங்க திருச்செங்கோட்டைச் சுற்றி 5 மைல் வட்டாரத்திற்கு கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளை யும் நிறுத்தியவர் இராஜாஜி. அதைப்போலவே முதலிலே சேலம் மாவட்டத்திலே நிறுத்தி பிறகு இந்த தமிழ்நாடு முழு வதும் மது விலக்கை கொண்டு வந்தவர்கள். எனவே தமிழ்நாடு என்று சொல்லுகின்ற போது அதற்கு என்று தனி பண் பும், அதற்கு என்று தனி நாகரிகமும் இருக்கிறது என் பதை நாம் நினைவிலே வைத்து செயல்பட வேண்டும் என பது என்னுடைய வேண்டுகோள.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அப்துல் சமத் அவர்கள் தொடர்ந்து பேசலாம். (குறுக்கீடு) உடகாருங்கள். (Point of ord r)

திரு. இரா. மோகன் : தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள சபைக்கு ஒரு தவறான தகவலைத் தருகிறார். ஆகவே இந்தப் பிரச சினையை எழுப்புகிறேன். நேற்றைக்கு நான் இந்த அவை யிலே இருந்தேன். இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய உறுப் பினர் மாண்புமிகு ரமணி நல்லதம்பி அவர்கள் பேசுகின்ற போது பனை ஏறுகின்ற தொழிலாளி மேலே ஏறி அவ்வளவு கஷ்டப்பட்டு அந்தப் பனையிலிருந்து பதநீரை, களளை எல் லாம் இறக்குகின்றான், அவன் ஏன் அந்த பானத்தைக் குடிக்கக் கூடாது, கள்ளைக் குடிக்கக் கூடாது என்று மிகத தெளிவாக இந்த அவையிலே அவர் பேசினார். அது கொளகை அல்ல என்று குமரி அனந்தன் அவர்கள இன்றைக்குச் சொல்வது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1½ ரூபாய், 2 ரூபாய்க்கு கிடைக்கக் கூடிய அந்த பானத்தை ஏன் குடிக்க கூடாது? அப்ட டித்தானே. (குறுக்கீடு)

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, தயவு செய்து ஒரு வேண்டுகோள். கட்சியினுடைய கொள்கை அதுவல்ல. அவர் வாதத்திற்காக ஒன்றை வைத்தார் என்று நான் சொன்னேன். இன்னும் அதை மறுத்து இதுதான்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து இதை விட்டுவிடலாம். இதையே திருப்பித் திருப்பி பேசிக் கொண்டே இருக்க வேண்டாம்.

திரு. பா. அப்துல் சமத் : மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையைத் தெளி வாகச் சொல்லியிருக்கிறார்கள. பூரண மதுவிலக்குதான் காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை என்று சொல்லியிருக் கிறார்கள். காங்கிரஸ் ஆளுகின்ற எந்த எந்த மாநிலங்களில் அவர்கள் பூரண மதுவிலக்கை அமல்படுத்தியிருக்கிறார்கள என்பதை அவர்கள் விளக்கிச் சொன்னால் அவர்கள் கொள்கையில் உறுதி உடையவர்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளலாம்.

திரு. குமரி அனந்தன் : கனம் சபாநாயகர் அவர்களே, நல்லதை எங்கிருநதும் தொடங்கலாம். பரிபூரணததை நோக்கி போய்க் கொண்டிருக்கின்ற மனிதன் சிறிது சிறிதாக முன்னேறுவதைப் போலவே, இந்தியா விடுதலை பெற வேண்டும் என்று காந்தி மகான் போராடுகின்ற போது, மனித இனத்தின்



விடுதலை எனது நோக்கம்; ஆக இந்தியாவிலிருந்து ஆரம்பிக் கின்றேன், என்று சொன்னாரே அதைப்போல, இஙகிருந்து ஆரம் பிப்போம்.

திரு. பா. அப்துல் சமத் : தலைவர் அவர்களே, பனை மரம் ஏறும் தொழிலாளி—கலையம் நிறைய கள் குடித்து கீழே விழுந்து மரணம் அடைந்தவர்கள் எண்ணிக்கை அதிகம் என்று தெரிந்தும், அம்மையாருக்குத் தெரிந்தும், கள் குடித்து விட்டு புகுந்து விளையாடுகிறார் என்று கூறுகின்றாரே, இது நியாயமா, நேர்மையா, நீதியா என்று கேட்க விரும்புகிறேன். பெண்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் என வாதாடும் பெண் இனத்தின் பிரதிநிதியாக வந்துள்ள மாண்புமிகு உறுப்பினரே

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அபதுல் சமத் அவர்களே, விவாதத்திலே பேசுவதாக இருந்தால் பேசுங்கள். இந்தச் செய்தியை விட்டு அடுத்த செய்திக்குப் போகலாம். அதைப் பற்றிப் அதையே படித்துக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? இவ்வளவு நேரம் பேசியாகிவிட்டது. பதில் சொல்லி யாகிவிட்டது. நீங்கள் எழுதி வைத்ததைஎல்லாம் படிக்க வேண்டும் என்று நினைக்கக் கூடாது.

திரு. பா. அப்துல் சமத் : தலைவர் அவர்களே, வேறு சப் ஜெக்ட்டுக்கு வந்து விடுகிறேன். தோல் பதனிடும் தொழில் பற்றியும் அதற்குண்டான வரி விதிப்பு பற்றியும் என்னுடைய கருத்துக்களைக் கூறுகிறேன். கடந்த கலைஞர் ஆட்சிக் காலத்தில் இந்தத் தொழிலுக்கு ஒருமுனை வரி இருந்தது. அதைப் போல நமது இந்தியாவில் அனைத்து மாநிலத்திலும் இருந்தது, இப் போதும் இருக்கின்றது. ஆனால் கலைஞர் ஆட்சிக்குப் பின் அண்ணா தி.மு.க. அரசு ஒருமுனை வரியை பலமுனை வரியாக்கி, நம் நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் அந்தத் தொழிலை நாசமாக்கி விட்டார்கள் இதனால் வட மாநிலங்களுக்கு தோல் பதனிடும் தொழில் என்னவென்றே தெரியாத அந்த மாநிலங்களுக்கு இந்தத் தொழில் சென்று கொண்டிருக்கிறது. இதனால் நம் மாநிலத்தில் உள்ள தொழிலாளர்கள் வேலையை இழந்தார்கள். நமக்கு வரவேண்டிய அந்நியச் செலாவணிகளும் குறைந்து நமக்கு நஷ்டம் ஏற்பட்டது, ஏற்பட்டுக் கொண்டிருக் கிறது. பஞ்சாப், ஹரியானா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான், காஷ்மீர், டெல்லிக்கு இந்தத் தொழில் சென்று கொண்டிருக்கிறது அல்லது பெருவாரியாகப் போய்விட்டது. ஆகவே, அந்த மாநிலங் களில் இந்தத் தொழிலுக்கு முன்பு இங்கே கலைஞர் ஆட்சியில் இருந்ததைப் போல ஒரு முனை வரி இருக்கிறது. ஆகவே இந்தத் தொழில் இன்னும் சீர்கெட்டுவிடாமல் பாதுகாக்க நம்முடைய முதல்வர் அவர்கள் இந்தத் தொழிலையும், நமது தொழிலாளர் களையும், தமிழ்நாட்டின் சிறப்பையும் பாதுகாப்பார் என்று நம் புகிறேன். தற்போது கூடுதல் வரி. அதாவது அடிஷனல்

டாக்ஸ் என்பது விற்பனை வரிக்கு ஏறக்குறைய சமமாகி விடு
கிறது. இதனால் நம் மாநிலத்தில் பல தொழிற்சாலைகள்
மூடப்பட்டன. மூடிக் கொண்டும் வருகிறார்கள். பிற மாநிலத்
திற்குச் சென்று நம்முடைய தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களே
இடங்களை வாங்கியும், லைசன்ஸ் அப்ளை செய்த வண்ணமும்
உள்ளனர். இதை நன்றாக அறிவேன். மற்ற மாநிலங்களில் இந்தத்
தொழில் வந்தால் போதும் என்று வரவேற்று, சலுகைகள்
கொடுத்து உதவுகிறார்கள். ஆனால் இங்கே தொழிற்சாலை
களை நடத்தி வரும்....(மணியடிக்கப்பெற்றது)

(பிற்பகல் 1.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி
யுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது. திரு. அப்துல்
சமத் இன்னும் இரண்டு மணித்துளிகளில் முடிக்க வேண்டும்.

திரு. பா. அப்துல் சமத் : ஜாப் ஓர்க் என்னும் கூலிக்குத்
தயார் செய்து கொடுக்க, கூலியின் தொகையின் பேரிலும் வரி
விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு உபயோகப்படுத்தும் எல்லாக்
கச்சாப் பொருளும் ஏற்கனவே வரி செலுத்திய பொருளா
கும். அதன் பேரிலும் மீண்டும் வரி செலுத்துவது தொழிலுக்கு
பாதகம் ஏற்படுத்துகிறது. பல முனை வரியை மாற்றி ஒரு முனை
வரியை ஏற்படுத்தியதனால் வருவாய் ஒன்றும் குறைந்து விடாது.
எனவே, இங்கே உள்ள தொழில் பெருகும், குறைந்த இலாபம்,
அதிக வியாபாரம் என்ற வகையில் இப்போதைய வருவாயைவிட
அதிக வருவாய் வரும் என்று உறுதி அளிக்கிறேன். தேவையா
னால் தமிழ்நாட்டில் இன்று இந்தத் தொழில் மூலம் வரும்வரு
மானத்தைக் கணக்கிட்டு, அந்தத் தோல் தொழில் நடத்துகின்
றோர் அசோசியேஷனை அழைத்துப் பேசி, நமது முதல்வர் அவர்
கள் ஆலோசனை நடத்தி, எப்படியாவது இந்தத் தொழிலைக்
காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்
போலவே, தமிழ்நாட்டில் கண்டசாரி சர்க்கரை ஆலைகள்
கலைஞர் ஆட்சியில் சுமார் 15 கண்டசாரி ஆலைகள் இருந்தன.
ஆனால் இன்று தமிழ்நாட்டில் ஒரே ஒரு கண்டசாரி சர்க்கரை
ஆலை தான் இருக்கிறது. அதுவும் என்னுடைய தொகுதி
வாணியம்பாடியில், அதுவும் மூடும் நிலையில் உள்ளது. இதற்கும்
வரி விதிப்பு முறைதான் காரணம். நமது முதல்வர் அவர்கள்
நினைத்தால் அதைக் காப்பாற்ற முடியும். இல்லாவிட்டால்
அதில் வேலை செய்கின்ற 500 தொழிலாளர்களுக்கு வேலை
இல்லாமல் போய்விடும். இன்னும் ஐந்தாண்டு, அ.தி.மு.க. அரசு
இருந்திருந்தால் தமிழ்நாட்டில் ஒரு தொழிலும் இருந்து இருக்
காது என்றே கருதுகிறேன். ஆகவே, இதையெல்லாம் சீர்படுத்த,
ஒழுங்குபடுத்த, (மணியடிக்கப்பெற்றது) ஆண்டவனே நமக்கு
மீண்டும் கலைஞர் தலைமையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறான்



என்று எண்ணியுள்ளேன். ஆகவே, இந்த ஆட்சியும், கலைஞரும்
சீரோடும், சிறப்போடும் நீண்ட நாள் இந்த நாட்டுக்குச் சேவை
செய்ய வேண்டும் என்று எல்லாம் வல்ல அல்லாவை வேண்டிக்
கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி.

*திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைய நாள், நம்முடைய மாண்புமிகு அமைச்சர்
களைப் பற்றியும், தலைமையிடத்தினுடைய ஆட்சித் தலை
வர்களைப் பற்றியும், பொது விற்பனை வரி பற்றியும் பேசக்
கூடிய வாய்ப்பினைக் கொடுத்த தங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளை முடியாய் வைத்து,
திருத்தக்கத் தேவரின் சிந்தாமணி அணிந்து சேரன் இளவல் இளங்
கோவின் சிலம்பணிந்து, சீத்தலைச் சாத்தனாரின் மேகலை
அணிந்து, காதிலே குண்டலமாட, கைகளிலே வளையொலி
குலுங்க, விரல்களிலே மோதிரம் மின்ன, சங்க நூல்களான எட்
டுத் தொகையும், பத்துப் பாட்டும், பதினெண் கீழ்க் கணக்கும்,
கோவையும், நாலடியும், தங்க நகைகளாக மின்ன, அகமும்
புறமும் மகிழ அழகுருவாக வீற்று அரசாண்டு கொண்டு இருந்
தாளே தமிழ்த்தாய், அந்தத் தமிழ்த் தாய் இடைக்காலப்
பகுதியிலே அழகிழந்து, பொலிவிழந்து, ஆற்றல் இழந்து, சக்தி
யிழந்து மண்ணிலே மண்டியிட்டிருந்த நேரத்திலேதான் நாலரைக்
கோடி தமிழ் மக்களுடைய நாயகன், புரட்சித் தலைவர், பொன்
மனச் செம்மல், மதுரை மாநகரிலே தமிழ்த் தாய்க்கு ஒரு
மாநாட்டைக் கூட்டி, சங்கம் வைத்து வளர்த்தாரே, அந்தத்
தானைத் தலைவருடைய ஆட்சியிலேதான் தொழில்வளம் கெட்
டுப் போய்விட்டது என்று இங்கே எனக்கு முன்னாலே ஒருவர்
பேசினார். நான் அவரைப் பார்த்து மிகப் பணிவன்போடு சொல்
லிக் கொள்வேன். நம்முடைய தானைத் தலைவர் இருபதாம்
நூற்றாண்டின் இணையற்ற சாதனையாளராக விளங்கிய அந்தப்
புரட்சித் தலைவர் இன்றைக்கு இல்லை. அவர் இல்லாத நேரத்
தில் அவரைப் பற்றி இங்கே அவைக் குறிப்பிலே ஏறுகின்ற விதத்
திலே நீங்கள் பேசுவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். நான்
மிகவும் வருத்தத்தோடு சொல்லிக் கொள்வேன். அப்படிப்பட்ட
நிலையினை மீண்டும் நீடிக்காத வகையில் நீங்கள் நடத்தவேண்
டும் என்று இந்த மாமன்றத்தின் பேரவைத் தலைவர் அவர்
களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இங்கே நான் பட்ஜெட் கூட்டத்தைப் பற்றிப்
பேசுகின்ற நேரத்தில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர்களைப்
பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் ஒரு சாதாரண சட்ட
மன்ற உறுப்பினராக வந்திருக்கிறேன். எங்களைப் போன்றவர்
களுக்கு, இன்றைக்குக் கொடுக்கின்ற சம்பளம் போதாது என்ற
நிலையிருக்கிறது. அப்படி இருக்கின்றபோது மாண்புமிகு அமைச்
சர்களுக்கு எல்லாம் நல்ல முறையிலே ஆட்சி நடாத்த வேண்டும்
என்று சொன்னால், கறை படியாத கரத்திற்குச் சொந்தக்

காரர்களாக விளங்கவேண்டும் என்று சொன்னால், நீதி, நேர்மை நாணயத்தோடு நடக்க வேண்டும் என்று சொன்னால் அவர்களுக்குப் போதிய சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதுதான் இந்த அவையிலுள்ள அத்தனை பேருடைய ஒட்டு மொத்தக் கருத்து என்பதை இந்த நேரத்திலே நான் மெத்தப் பணிவன்போடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அது மட்டுமல்ல, எங்களைப் பொறுத்தவரையில், சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனியாக ஒரு மானியம் இருந்தாலும் எங்களுக்கு, நாங்கள் ஒரு கிராமத்திற்குச் செல்கின்ற நேரத்தில் என்னைப்போன்ற, தனித் தொகுதியிலே இருந்து வந்திருக்கின்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த என்னைப் போன்றவர்களுக்கு எல்லாம், நாங்கள் வெளியில் போகின்றபோது, மக்களுடைய குறைகளைக் கேட்கப் போகின்றபோது ஊராட்சி ஒன்றியங்களில் 2 நாட்களுக்கு தான் ஜீப் கொடுக்கிறார்கள். குறைந்தபட்சம் எங்களுக்கு ஒரு வாரத்திற்காவது ஊராட்சி ஒன்றியங்களுடைய ஜீப்புகளை கொடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுக்கு 50 லிட்டர் டீசல்தான் இப்போது கொடுக்கப்படுகிறது. அதை இன்னும் கொஞ்சம் அதிகப் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பொது விற்பனை வரியைப் பற்றி சொல்லும்போது ஏ.சி.டி.ஒ. என்றும், டி.சி.டி.ஓ. என்றும் அதிகாரிகள் வர்க்கம் இந்த நாட்டில் ஒழுங்கான முறையில் கணக்குகளை தணிக்கை செய்ய வேண்டும். அப்படி செய்தால் தான் இந்த அரசுக்கு வரக்கூடிய வருமானம் விற்பனை வரி மூலமாக, வணிக வரி மூலமாக, மதுவிலக்குத் துறையின் மூலமாக அதிகமாக கிடைக்கும். அந்த வரிகள் ஒழுங்கான முறையில் நம்முடைய அரசுக்கு கிடைப்பதற்கு இந்த அதிகாரிகள் மிகவும் நல்லவர்களாக, வல்லவர்களாக, நியாயமானவர்களாக கடமை உணர்ச்சியுடன் நடக்கக் கூடியவர்களாக இன்றைக்கு இருக்க வேண்டும். அவர்கள் எல்லாம் தக்க ஆடிட்களை சிறந்த முறையில் செய்ய அவர்களை கண்காணிக்க இன்றைக்கு அதற்கு என்று ஒரு குழுவை நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் பற்றி சொன்னார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடத்துகின்ற மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் இருக்கின்றன. ஊராட்சி மன்றத்தின் அந்த ஊராட்சி மன்றத்தினுடைய தலைவர் அந்தக் கூட்டத்தை நடத்துகிறார். ஊராட்சி ஒன்றியத்தில் அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர் அந்தக் கூட்டத்தை நடத்துகிறார். ஆனால், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தை நடத்துகின்ற முறை யாரிடம் இருக்கிறது என்று சொன்னால், மாவட்ட ஆட்சித்



தலைவர் இடத்தில் இருக்கிறது. இந்த நிலையில் இதை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு சிறப்பான முறையில் அந்த மாவட்டத்தில் உள்ள உண்மையான சர்வ கட்சியைச் சேர்ந்த யாரையாவது ஒருவரை நியமனம் செய்து அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்த வேண்டும். இங்கே எப்படி சபாநாயகர் இன்றைக்கு இந்தக் கூட்டத்தை நடத்துகின்றபோது எப்படி சட்டமன்றத்தினுடைய செயலாளர் இருந்து, கண்காணித்து, நடவடிக்கை குறிப்புகள் எடுக்கிறார்களோ, அதேபோல் நடத்த வேண்டும் என்று இந்த மன்றத்தின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதைத்தான் ஆசியாவின் ஜோதி, மனிதருள் மாணிக்கம், பண்டித நேருவினுடைய பேரன் ராஜீவ் காந்தி அவர்கள் இன்றைக்குத் திட்டம் போட்டு ராமராஜ்யம் பற்றி சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நல்ல திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்கு பட்டா கொடுக்கின்ற முறையில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கீழே மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி, வட்டாட்சியர், துணை வட்டாட்சியர் இருக்கிறார்கள். கிராமத்தில் உள்ள மக்களுக்கு ஒரு சிட்டா அடங்கல், டோப்போ ஸ்கெட்ச், ஆர். எஸ். ஆர். போன்றவைகள் எல்லாம் ஒரு கிராம அதிகாரி கொடுக்க வேண்டும் என்று சொன்னால் ஏராளமான லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அந்தியூரின் கடைசிப் பகுதியாக பர்கூர் இருக்கிறது. அந்தப் பகுதியில் குட்டையூர் என்ற ஊர் மைசூர் மாநிலத்தின் எல்லையில் இருக்கிறது. அங்கே உள்ள ஒரு மாணவன் விடுதியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று சொன்னால் ஜாதி சான்று, வருமான சான்று வாங்குவதற்கு பவானிக்கு வரவேண்டும். பவானிக்கு வருகின்றபோது அங்கே ஒரு விண்ணப்பத்தை எழுதிக் கொடுக்கிறான். பவானிக்கு வருவதற்கு ஏறத்தாழ 10 ரூபாய் செலவு, திரும்பிப் போவதற்கு 10 ரூபாய் செலவு ஆக மொத்தம் 20 ரூபாய் செலவு ஆகிறது. இங்கே வந்து விண்ணப்பத்தை எழுதிக் கொடுத்த உடனே அவர் அதைப் பார்த்துவிட்டு நீ போய் பர்கூரில் இருக்கின்ற கிராம நிர்வாக அதிகாரி இடத்திலும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் இடத்திலும் எழுதி வாங்கி வா என்று சொல்லி அனுப்பிவிடுகிறார். அவன் மீண்டும் அதை எடுத்துக் கொண்டு அதே பர்கூருக்குப் போக வேண்டியிருக்கிறது. அங்கே போனால் அதிகாரிகள் இருப்பதில்லை. மீண்டும் அவர்கள் என்றைக்கு வருகிறார்களோ அதாவது அந்த குட்டையூருக்கும் பர்கூருக்கும் 20 மைல் தொலைவு இருக்கிறது. அதுவரை அங்கே தங்க வேண்டியிருக்கிறது. திரும்ப அங்கே எழுதி வாங்கிக் கொண்டு வந்து இங்கே வந்தால் தாசில்தார் மாவட்ட ஆட்சித் தலைவர் அழைத்துவிட்டார்

என்று போய்விடுகிறார். ஆகவே ஒரு மனிதன் சாதாரணமாக ஒரு ஜாதி சான்றோ, வருமான சான்றோ, அல்லது சிட்டா அடங்கலோ, டோப்போ ஸ்கெட்சோ, ஆர். எஸ். ஆர். ரோ, வாங்க வேண்டும் என்று சொன்னால் இன்றைக்கு நடைமுறையில் பல்வேறுவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் அந்தியூரில் ஒரு வட்டாட்சியரை நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் ஆதிவாசிகளுக்கு, ஆதி திராவிடர்களுக்கு இலவசமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலத்திலும், அதற்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்திலும் நிலங்களை பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். 10 ஆண்டுகளுக்குள் அதை விற்கக்கூடாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். பத்து ஆண்டுகள் வரை விற்காமல் ஒருவர் அங்கே இருக்கிறார், (மணியடிக்கப் பெற்றது) ஒரு சாதாரண ஏழை அந்த பூமியை தொடர்ந்து விவசாயம் செய்து கொண்டிருக்கிறான். ஆனால் அவருடைய பூமியை இன்றைக்கு பட்டாவை கேன்சல் செய்து அதை புறம்போக்கு செய்து இருக்கிறார்கள். என்ன காரணம் என்று சொன்னால், அங்கே இருக்கின்ற அதிகாரிகள், கோட்டாட்சியர் நிலைக்கு உட்பட்ட அந்த அதிகாரிகள் தவறான புள்ளி விவரங்களைக் கணக்கு எடுத்து 10 ஆண்டுக்குள் பூமியை விற்றுவிட்டார் என்று சொல்லி தவறான கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். நான் கூட போய் சொன்னேன், இது வரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுத்து தொடர்ந்து நல்ல பல காரியங்கள் ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–10)

ரெவின்யூ துறையிலே வேலை செய்கின்ற அதிகாரிகள் பலபேருக்கு இன்றைக்கு பதவி இறக்கம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு தாசில்தார் இறந்துவிட்டால், அவருடைய மகனுக்கு பணி கொடுக்கிறார்கள். அப்படிப்பட்டவரே 10 ஆண்டுக்காலம் பணி செய்து கொண்டிருந்தால் இந்த வேலை வாய்ப்பிலே இறக்கம் ஏற்படும் என்ற சூழ்நிலை ஏற்பட்டு அவர் கீழே இறக்கப்பட்டு விடுகிறார். ஆகவே, தயவுசெய்து அப்படிப்பட்ட குடும்பங்களுடைய நல னைக் கருத்திலே கொண்டு, அவர்களுடைய குடும்பத்திற்குப் பணிப் பாதுகாப்பு கொடுப்பதற்கு, மீண்டும் அப்படிப்பட்டவர் களுக்குப் பணி உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேசுவதற்கு நல்ல வாய்ப்பைக் கொடுத்த உங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.



*திரு. சோ. அழகர்ராமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பில்
இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகள் மீது
ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் முன் வருகிறேன்.
இன்றைக்கு நம்முடைய அரசாங்கத்திற்கு வரக்கூடிய முக்கிய
மான வருமானத்தில் அதிகமான வருவாயை ஈட்டித்தருவது
இந்த விற்பனை வரி மூலமாகத்தான். ஏறக்குறைய மொத்த
வருமானத்தில் 40 சதவிகிதம் இந்தத் துறையின் மூலமாகத்தான்.
வருகிறது. வணிக வரித் துறையின் மூலமாகத்தான்
வருமானமாக அது வருகிறது. வரியை ஏய்க்காமல், இன்
றைக்கு இருக்கிற வரி விதிப்பின்படி வசூல் செய்வோம் என்று
சொன்னால், இன்னும்கூட ஒரு ஆயிரம் கோடி ரூபாய் அரசாங்
கத்திற்கு வருமானமாக வரும் என்று நான் நினைக்கிறேன்.
காரணம் என்னவென்று சொன்னால், இந்த வரியைச் சாதாரண
மாக எந்த வியாபாரியும் முழுமையாக, கரெக்டாக,
நியாயமாகக் கட்டுவது என்று சொன்னால் அவர்கள்
வியாபாரமே செய்ய முடியாது என்று கூறுகிறார்கள். காரணம்
இந்த வரி விதிப்பானது, அதிகமான சதவிகிதத்திலே விதிக்கப்
படுகிறது என்பது என்னுடைய அபிப்பிராயமாகும்.

அதுமட்டுமல்லாமல், இந்த வரியை விற்பனை வரி
என்று சொல்கிறோமே தவிர, விற்கக்கூடிய வியாபாரிகள்
வரியைத் தன்னுடைய கையிலேயிருந்து கொடுப்பது
இடையாது. வாங்கக்கூடிய பொதுமக்கள்தான் அந்த
விற்பனை வரியைச் செலுத்துகிறார்கள். குறிப்பாகச்
சொல்ல வேண்டுமென்றால், இப்போது கூட ஓட்டல்களுக்கு
என்று வரி விதிக்கப்பட்டது. தினமும் 3 ஆயிரம் ரூபாய்க்கு
விற்கக்கூடிய ஓட்டல்களுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது.
வருஷத்திற்கு 10 இலட்சம் ரூபாய் என்று சொல்லி வரி
விதிக்கப்பட்டிருக்கிறது. நாம் 4 ரூபாய்க்கு உணவு உட்
கொள்கிறோம் என்றால், அதிலே வரியையும் சேர்த்து வசூல்
செய்து விடுகிறார்கள். இந்த வரியை நேரடியாகப்
போடுவதை விட்டு மறைமுகமாக மக்கள் மீது அதிகமாகச்
சுமத்தப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்வதோடு,
இதைவிட நேரடியாக வரி வசூல் செய்வதிலே அதிகமான
கவனத்தை இந்த அரசு செலுத்த வேண்டுமென்று
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டு
மல்லாமல் இந்த விற்பனை வரி, பெரிய வியாபாரி
களைச் சொல்லவில்லை, சிறு சிறு வியாபாரிகளுக்கு,
மிகவும் தொந்தரவு ஏற்படுத்தக் கூடிய முறையிலே
இந்த வரி விதிப்பு இருக்கிறது என்று நான்
தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், சிறு வியாபாரிகள்
வேறு பணியாளர்கள் இல்லாமலேயே, தானும், தன்னுடைய
மகனோ அல்லது சகோதரனையோ வைத்து வியாபாரத்தை

மேற்கொள்ளக்கூடிய நிலை இருக்கிறது. அப்டடியிருக்கும்
போது அதிகாரிகள் திடீரென்று சோதனை செய்யச் செல்லும்
போது அங்கே ஏதாவது சிறிய குற்றங்கள், ஸ்டாக் சரியில்லை,
ஏதாவது ஒரு பொருளுக்கு பில் இல்லையென்ற காரணத்தைச்
சொல்லி அவர்களைத் தொந்தரவு மட்டுமல்ல, வரிக்கு
மேலாகவே அவர்கள் வாங்கிக் கொள்ளக் கூடிய நிலைமை
களெல்லாம் இருக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே
நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்த
வரி விதிப்பு முறையில் கூடுமான வரையிலே, அந்த சிறு
வியாபாரிகளுக்குத் தொந்தரவு இல்லாத முறையில்—குறிப்பாக
சிறிய வியாபாரிகளுக்குத் தொந்தரவுகள் அதிகமாக
இருக்கின்றன. அந்தத் தொந்தரவுகளெல்லாம் இல்லாதபடி—
செய்ய வேண்டுமென்று சொன்னால், சகல வரிகளையும்,
பலமுனை விற்பனை வரிக்குப் பதிலாக, ஒரு முனை வரியாக
ஆக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்
அமைச்சர் அவர்கள் இப்போது கூட 9 பொருள்களுக்குப் பல
முனை விற்பனை வரியிலிருந்து ஒரு முனை விற்பனை வரியாக
மாற்றப்பட்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.
தொடர்ந்து இந்த மன்றத்திலே பல முறை, பல்வேறு
உறுப்பினர்கள் இதுபற்றிப் பேசியிருக்கிறார்கள். ஆளுங்
கட்சி உறுப்பினர் ஒருவர்கூட இது குறித்து இங்கே அழகாகச்
சொன்னார். பல்வேறு உறுப்பினர்கள் இதைத் தொடர்ந்து
சொல்லிக் கொண்டே வருகிறார்கள். ஏனென்றால், பல முனை
விற்பனை வரிக்குப் பதிலாக ஒரு முனை விற்பனை வரி என்று
சொல்லிவிட்டால், ஒரே இடத்தில், அந்தப் பொருளை விற்பனை
செய்யக்கூடிய முதல் கட்டத்திலேயே வரி விதித்து விட்டோம்
என்று சொன்னால் சிறு வியாபாரிகள் . எல்லாம் வணிக வரித்
துறை அதிகாரிகளைக் கண்டு பயப்பட வேண்டிய அவசியம்
ஏற்படாது. எப்போது வருவார்களோ, எந்த நேரத்திலே
நமக்கு அபராதம் விதிப்பார்களோ அல்லது அபராதத்திற்கு
மேலேயே நம்மிடம் பணம் கேட்பார்களோ என்று பயந்து
கொண்டிருக்கக் கூடிய நிலை நீங்கும் என்று நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இன்றைக்குப் மீதி இருக்கின்ற
பொருள்கள் மீதும் பலமுனை விற்பனை வரி என்பதற்குப்
பதிலாக ஒரு முனை விற்பனை வரியாக அத்தனை பொருள்கள்
மீதும் மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அமைச்சர்கள், தலைமையிடப் பணி
யாளர்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தைப் பற்றி ஒரு சில
கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குப் பல்வேறு
துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர்
கள் கடிதங்கள் எழுதினாலும்கூட, சில சமயங்களிலே பதில்
வருகிறது. அதேபோன்று அமைச்சர்களுக்கும் சட்டமன்ற
உறுப்பினர்கள் எழுதக்கூடிய கடிதங்களுக்குத் துறையின் மூலமாக



அவைகளுக்குப் பதில் அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை
எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி
யாக, மத்திய அமைச்சர்களாக இருந்தாலும் சரி, மாநிலஅமைச்சர்
களாக இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினர்களின் கடிதங்
களுக்கு உடனடியாகப் பதில் அளிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய
வேண்டும். சில நேரங்களில் உபதேர்தல்கள் வருகின்றன.
அதிலே என்னுடைய கருத்து என்னவென்றால் உபதேர்தல்
வருகிற போது, அமைச்சர்கள் அங்கே தேர்தல் பிரச்சாரத்திற்காகச்
செல்லக்கூடாது. காரணம் அமைச்சர்கள் எல்லாம் முழுநேர அரசு
அலுவலர்கள். அப்படிப்பட்டவர்கள் உபதேர்தல்கள் வரும்
போது தேர்தல் பணிக்காகச் செல்லக்கூடாது ; தேர்தல்
பணிக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். மத்திய அமைச்சர்
களாக இருந்தாலும் சரி, மாநில அமைச்சர்களாக இருந்தாலும்
சரி தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்லக்கூடாது. அமைச்சர்கள்
செல்கிறார்கள் என்றால் அவர்கள் மட்டும் செல்வதாக
இல்லை ; அனைத்து அதிகாரிகளும் உடன் செல்கிறார்கள்.
ஆகவேதான் இந்த முறையைத் தவிர்க்க வேண்டுமென்று
நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

எம்.எல்.ஏ. முழு நேரப் பணியாளர் அல்ல ; அதனால்
எம்.எல்.ஏ. போகலாம். இதற்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டு
மென்றால், கேரளத்திலே ஒரு உப தேர்தல் வந்தபோது, நாங்கள்
எல்லாம்கூடப்போயிருந்தோம். அப்போது அங்கே திரு. இ.எம்.எஸ்.
அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். ஒரு அமைச்சர் கூட
தேர்தல் பிரச்சாரத்திற்காகச் செல்லவில்லை. முதலமைச்சரும்
வரவில்லை ; மற்ற அமைச்சர்களும் வரவில்லை. அது
நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும்
என்று நினைக்கிறேன். அந்த முறையை நாம் இங்கிருந்து
முதலில் ஆரம்பிக்கலாம் ; மத்திய அரசும் மற்ற மாநில அரசு
களும் இதைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட நிர்வாகம் சம்பந்தப்பட்டவரை
டி.டி.சி. க்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. கூட்டம்
நடக்கிறது ; நாங்கள் போகிறோம். பேசுகிறோம், கருத்துக்
களைச் சொல்லுகிறோம். ஆனால் எதுவும் நடக்கவில்லை,
நாங்கள் கருத்துக்களைச் சொல்லும்போது, நடைமுறைக்கு
ஏற்ப உரிய நடவடிக்கை எடுக்க முயற்சி செய்ய வேண்டும்.
இப்போது அந்த முயற்சி இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர்
தலைமையில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடை
பெறுகிறது. அப்படி இருந்தாலும் கூட சகல துறைகளைச்
சேர்ந்த அதிகாரிகளும் அங்கே சரியாக வருவதில்லை. மாவட்ட
அளவிலே உள்ள அதிகாரிக்குப் பதிலாக அவருக்குக் கீழே இருக்கிற
ஒரு அதிகாரியை அனுப்புகிறார்கள். மின்சாரம் இல்லையா,
குடிதண்ணீர் இல்லையா அல்லது வேறு ஏதாவது கோளாறு
இருக்கிறதா ? இதைச் சொன்னால் உடனடியாகப் பதில்

பெற முடியவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் போகிறார்கள்; மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமை தாங்குகிறார். அங்கே எழுப்புகின்ற ஐயங்களுக்கு, கேட்கின்ற கேள்விகளுக்கு அப்போதே பதில் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்; உரிய நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு மாவட்ட நிர்வாகத்திற்குக் கீழே கிராம நிர்வாகம் இருக்கிறது. கிராம நிர்வாக அதிகாரியாக வி.ஏ.ஓ. இருக்கிறார். அவர் முழு நேர அரசாங்கத் ஊழியர். அவருக்குக் கீழே பணியாற்றுகின்ற கிராம தலையாரி, வெட்டியான் போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பகுதி நேர ஊழியர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பகுதி நேர ஊழியர்கள் சுமார் 32,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மேலே இருக்கிற கிராம நிர்வாக அதிகாரி முழு நேர ஊழியர். ஆனால் கீழ்நிலையில் இருக்கிற பியூன் போன்றவர்கள் பகுதி நேர ஊழியர்கள். அப்படி இருந்தால் வேலை எப்படி நடக்கும்? அதிகாரி சொல்வதைச் செய்வதற்கு பியூன் இருக்க வேண்டும். பியூன் இல்லை என்றால் அதிகாரி யாரிடம் சொல்வது? எப்படி வேலை நடக்கும்? ஆகவே, கீழ்நிலையில் இருக்கிற அந்தப் பகுதி நேர ஊழியர்களையும் முழு நேர ஊழியர்களாக ஆக்கி, அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் அவர்களுக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் பணியாளர்களாக, பகுதிநேர ஊழியர்களாக வெட்டியான், தலையாரி இப்படிப்பட்ட பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் எல்லாம் பகுதி நேர ஊழியர்கள் என்று சொல்லி இன்றைக்கும் குறைந்த ஊதியம்தான் கொடுக்கப்படுகிறது. அவர்களை முழு நேர ஊழியர்களாக்க மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று மாவட்டத்திலே நிர்வாகச் சீர்திருத்தம் செய்கிற ஏற்பாடு இருக்கிறது. அதாவது பெரிய தாலுக்காக்களை சிறு சிறு தாலுக்காக்களாகப் பிரிக்கின்ற முறை இருக்கிறது. பல பெரிய தாலுக்காக்கள் அல்லது வட்டாரங்களை சிறு சிறு வட்டாரங்களாகப் பிரிக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே சங்கரன்கோவில், கோவில்பட்டி ஆகிய இரண்டு தாலுக்காக்கள் இருக்கின்றன. இரண்டு தாலுக்காக்களும் ஒரே மாவட்டத்தில் இருந்தன. இப்போது பிரிக்கப்பட்டுவிட்டன. என்னுடைய தொகுதி இப்போது இரண்டு மாவட்டங்களிலும் இருக்கிறது. என்னுடைய தொகுதி கோவில்பட்டி. அங்கிருந்து ஒரு பர்லாங் தூரத்தில் சங்கரன்கோவில் வட்டம் இருக்கிறது. கோவில்பட்டி



வட்டம் சிதம்பரனார் மாவட்டத்திற்குப் போய் விட்டது. ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்குச் சென்று விட்டதனால் நடைமுறையிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருக்கும் அது சம்பந்தமாகக் கோரிக்கை வந்திருக்கிறது. கோவில்பட்டிக்குப் பக்கத்திலே இருக்கிற சங்கரன்கோவில் வட்டத்தைச் சேர்ந்த 10, 15 கிராமங்களை, கோவில்பட்டி வட்டாரத்தோடு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது நீண்டநாள் கோரிக்கை; தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. அதைக் கவனிக்க வேண்டும்.

இன்னொன்று, கடந்த 22—9—1984 அன்று ஓர் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அது என்னவென்றால், அதற்கு முன்னால் பல்வேறு காரணங்களால் அன்றைக்கு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகப் பணியாளர்களை அமர்த்தாமல் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ் மூலமாகப் பணியாளர்களை டெம்பரவரியாக நியமித்தார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் 10,000 அல்லது 12,000 பேர்கள் இருப்பார்கள். அப்படி டெம்பரரியாக வேலை பார்த்துவந்தவர்கள் எல்லாம் ஒரு நேரத்தில் எல்லோரும் சேர்ந்து ஒரு கோரிக்கை வைத்தார்கள். நிரந்தரமாக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தார்கள். அவர்களை நிரந்தரமாக்க 22—9—1984-ல் உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 1–20)

அதிலே என்ன உத்தரவு என்றால் 25—6—1984 அன்று யார், யார் பணியில் இருந்தார்களோ அவர்கள் எல்லாம் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று சொலலி அந்த உத்தரவின் அடிப்படையில் ஏறக்குறைய 12,000 பேர் நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே கிட்டத்தட்ட 2,000 பேர் அதற்கு முன்னாலே இரண்டு வருடம்; 3 வருடம் என்று பணியாற்றியவர்கள் அன்றைக்கு அந்த ஒருநாள் மட்டும் பணியில் இல்லை என்ற காரணத்திற்காக அவர்களுக்கு அந்தப் பதவி கிடைக்கவில்லை. அதாவது நிரந்தரமாக்கப்படக்கூடிய அந்தத் தகுதி அவர்களுக்கு இல்லை என்று சொல்லி நீக்கி விட்டார்கள். அதற்கு முன்னாலேயும் வேலை பார்த்து இருக்கிறார்கள். அன்றைக்கு மட்டும் இல்லாமல் அதற்குப் பின்னால் வந்து பணியாற்றி இருக்கிறார்கள். இப்படி 2 வருடம், 3 வருடம் பணியாற்றியவர்கள் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி தொடர்ந்து இப்போது உண்ணாவிரதம் இருக்கிறார்கள், கோட்டைக்கு வரக்கூடிய வழியிலே. எனவே, 12,000 பேர்களை நிரந்தரமாக்கியது போல்—10 நாட்கள், 12 நாட்கள் வேலை பார்த்தவர்கள் எல்லாம் நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள்—2 ஆண்டு, 3 ஆண்டு என்று விட்டு விட்டு வேலை பார்த்த இவர்களையும் நிரந்தரமாக்கவேண்டும். அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு நீதி வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஓய்வூதியம் சம்பந்தப்பட்ட வகையில் ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். 1970-ஆம் ஆண்டுக்கு முன்பு ஓய்வு பெற்றவர்கள் இருக்கிறார்கள். அப்போது ஆசிரியர்களாக இருந்தவர்கள் எல்லாம் வாங்கிய ஊதியம் 100 ரூபாய்தான். அந்த அளவுக்குத்தான் வாங்கி இருப்பார்கள். ஆனால் இன்றைக்கு ஆசிரியருக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. எனவே, அன்றைக்கு 100 ரூபாய் சம்பளம் வாங்கியவருக்கு 50 சதவீதம் பென்ஷன் என்ற அடிப்படையில் 50 ரூபாய் தான் வழங்கப்படும் என்று சொல்வது சரியல்ல. ஏனென்றால் அன்றைக்கு 100 ரூபாய்க்கு இருந்த மதிப்பு வேறு: இன்றைக்கு 100 ரூபாய்க்கு இருக்கின்ற மதிப்பு வேறு. பண வீக்கம் அந்த அளவுக்கு அதிகமாகி இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் நீங்கள் அன்றைக்கு 100 ரூபாய் தானே வாங்கினீர்கள். எனவே எல்லோரும் வாங்குகிற ஓய்வு ஊதிய விகிதாச்சார அடிப்படையில் உங்களுக்கும் 50 சதவீதம் என்ற அடிப்படையில் 50 ரூபாய்தான் கொடுக்கபடும் என்று சொல்வது சரியல்ல. அவர்கள் எல்லாம் இன்னும், இரண்டு, மூன்று வருடங்களில் இறக்கக் கூடியவர்கள் ஆகவே அப்படிப்பட்டவர்களுடைய கோரிக்கையையும் ஏற்று இன்றைக்கு உள்ள நிலைமைக்கு உகந்த முறையில் (மணியடிக்கப்பட்டது) ஓய்வூதியத்தை உயர்த்திக் கொடுக்கவேண்டும். 1970-க்கு முன்னால் மற்றும் 1975-க்கு முன்னாலஓய்வு பெற்றவர்களின் கோரிக்கைகளை ஏற்று அவர்களுடைய ஓய்வூதியத்தை உயர்த்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசு ஊழியர்களுக்கெல்லாம் வீடு கட்டுவதற்காகக் கடன் வழங்குவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ரொம்பவும் குறைவாகக் கடன் தொகை ஒதுக்கப்படுகிறது. இதற்கு முன்னாலே ஒதுக்கிய அதே அளவுக்குத்தான் அவர்களுக்குப் பணம் ஒதுக்கப்படுகிறது. அதிகமான நிதி ஒதுக்கி அரசு ஊழியர்கள் எல்லாம் வீடுகட்டுவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்தக் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையினை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. சுந்தரதாஸ் :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சேல்ஸ் டாக்ஸ், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என்கின்ற மானியக் கோரிக்கைகளின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நாட்டினுடைய வருவாயையே நாங்கள்தான் தருகிறோம்; எங்களால்தான் இந்த நாடே நடக்கிறது என்று சொல்கிற வகையில் சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகள் நடந்து கொண்டிருப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குக் காரணம்



பல்வேறு அதிகாரங்கள் அவர்களிடத்திலே இருப்பதுதான். 'ஸ்குவார்ட்' என்று சொல்கிறார்கள்; 'ஃப்ளையிங் ஸ்குவாட்' என்று சொல்கிறார்கள். அதைப் போல் அதிகாரிகளும் நேர்மையாக இருக்கவேண்டும் அல்லவா? அவர்களே லஞ்சத்திற்கு ஆளாகிறார்கள் என்று சொன்னால் நிச்சயமாக இந்த நாடு தப்ப முடியாது. ஆட்சியாளர்கள், அதாவது அமைச்சர்கள் ஆணைதான் போட முடியுமே தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது. ஏனென்றால் அந்த அதிகாரிகள்தான் 'எக்ஸிக்யூட்டிவ் ஆஃபீஸர்ஸ்'. அவர்கள் தப்பு செய்தாலும் அரசுக்குத்தான் கெட்ட பெயர் வரும். இதனை ரெக்கார்டு பூர்வமாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதல் கட்டமாக இந்த நாட்டிலே இருக்கிற 'அட்வான்ஸ் டாக்ஸ் கலெக்ஷன்' பற்றிச் சொல்கிறேன். 'அட்வான்ஸ் டாக்ஸ் கலெக்ஷன்' பண்ணக்கூடாது என்று ஜஸ்டிஸ் வீராசாமியின் ஜட்ஜ்மெண்ட் இருக்கிறது. அதை வேண்டுமானால் இங்கே நான் படிக்கிறேன். "There is no provision in the General Sales Tax Act, 1954 or the Rules to collect Advance Tax" அட்வான்ஸ் டாக்ஸ் கலெக்ட் பண்ண யாருக்கும் அதிகாரம் இல்லை. ஆனால் ஒரு டீ.சி.டி.ஓ. 2 இலட்சம் ரூபாய் அட்வால்ஸ் டாக்ஸ் கலெக்ட் பண்ணுகிறார். எதற்காக இந்த அளவுக்கு பிஸினஸ் செய்பவர்களைத் துன்புறுத்துகிறார்கள் என்று பார்க்க வேண்டும். எடுத்துக்காட்டாக 10 நாட்களுக்கு முன்பு நெல்லை மாவட்டத்தில் ஒரு பிஸினஸ்மேன் அதிகாரிகளைப் பார்த்தவுடன் ஷாக்காகி இறந்துவிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அந்தச் செய்தியைப் படித்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். 10 நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் பார்த்தேன். அப்படி ஒரு செய்தி வந்திருந்தது.

சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகள் வந்தால், எங்களுடைய கிளார்க்குகள் இன்னும் வரவில்லை. எனவே ஒரு மணி நேரம் கழித்து வாருங்கள் என்று சொன்னால் கேட்பதில்லை. அதிகாரிகளின் கெடுபிடித்தனங்கள், மிரட்டல் காரணமாகத்தான் 10 நாட்களுக்கு முன்பு அந்த பிஸினஸ் மேன் நெல்லை மாவட்டத்தில் இறந்திருக்கிறார். இந்த அளவுக்கு அதிகாரிகள் இருக்கிறார்கள். எங்களால்தான் நாட்டிலே எல்லாம் நடக்கிறது. எங்களால்தால் சம்பளம் போடப்படுகிறது. எங்களால்தான் இந்த நாடு நடக்கிறது என்று சொல்கிற வகையில் அதிகாரிகள் மாறிக் கொண்டு இருக்கிறார்கள். இவர்களைக் கட்டுப்படுத்துகிற நிலைமை இல்லையா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். டாக்ஸ் கொடுக்கிறார்கள், டாக்ஸ் கொடுக்கவில்லை என்று சொன்னால் காரிலே போகிறவர்களையும், லாரிகளிலே போகிறவர்களையும் பிடிப்பதற்கு 'ஸ்குவாட்' என்று சொல்லிக்கொண்டு 40 பேர் வருகிறார்கள்.

திருடனைப் பிடிப்பதை விட மிக மோசமாக இவர்களைப் பிடிக்கிறார்கள. பிஸினஸ்மேனை திருடனை விட மிக மோசமான நிலைமையில் நடத்துகிறார்கள். இவர்கள் என்ன யோக்கியர்களா?

தற்போது நிதியில்லை என்று மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்
களுடைய வீடுகளை எல்லாம் 'சீஸ்' செய்தாலே—
A parallel economy of the Country is there—அதை
ஆணித்தரமாக என்னாலே சொல்ல முடியும். இங்கே நிதி
யில்லை என்று சொல்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களைப் பார்த்து நான் கேட்கிறேன், உங்களைச்
சேர்ந்திருக் கிற அந்த அலுவலர்களைப் பிடித்தாலே A parallel
economy of the State rests with these people. எஸ்பது புலப்
படும் இதை நிச்சயமாகச் சொல்ல முடியும். ஆணித்தரமாகச்
சொல்ல முடியும். ரெக்கார்டை வைத்துத்தான் நான் பேசு
கிறேன். இதற்கு ஒரு முக்கியமான காரணம் "அட்வான்ஸ்
டாக்ஸ். மல்டிப்பிள் டாக்ஸ்." சாதாரணமாக காஞ்சிபுரத்திலே
வேலை செய்கிற ஒரு வீவரை எடுத்துக்கொண்டால்
அவன் ஜரிகை வாங்கவேண்டி இருக்கிறது.
அதற்கு எத்தனையோ டாக்ஸ்—சி.எஸ்.டி. 2 பர்சென்ட்,
ஜெனரல் டேக்ஸ் 4 பர்செண்ட், சர்சார்ஜ் 5 பர்சென்ட், அடி
ஷனல் டேக்ஸ் 7 பர்செண்ட், டர்ன்ஓவர் டேக்ஸ்—இந்த
அளவிலே டேக்ஸ் போட்டால், இத்தனை டேக்ஸும் போடும்
போது நிச்சயமாக அங்கே வேலை செய்கின்ற ஒரு வீவர் நிச்சய
மாகக் கணக்கு வைக்கமுடியாது. இதைச் செய்யவேண்டுமென்
றால், அதற்கு அடிஷனல் பணம் இந்த அதி
காரிகள் கேட்கிறார்கள். ரூ. 2 ஆயிரம், ரூ. 4 ஆயிரம் வாங்கு
கின்ற அதிகாரிகள்கூட இருக்கின்றார்கள். கேட்டால் அட்
வான்ஸ் டேக்ஸ் வாங்கவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள்
ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள்.
எங்களுக்கு 2 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று
மிரட்டுகின்றார்கள். இந்த அளவிலே செய்துகொண்டிருந்
தால், அந்த வீவர் எந்த அளவிலே தொழில் செய்ய முடி
யும். அதைபபோலவே, ஒரு உதாரணம் எடுத்துக் கொண்
டால் சூரத்திலேயிருந்து ஜரிகை வருகிறது. ஜரிகை ஒரு மூட்
டை வருகிறது என்று சொன்னால், காரிலே ஏற்றிக்கொண்டு
போகின்றார்கள் என்று சொன்னால், அதற்கு ஆயிரம் ரூபாய்
இன்சூரன்ஸ் என்று போட்டால் இந்த அதிகாரிகள் கணக்கிலே
ரூ. 25 ஆயிரம் என்று போடுகிறார்கள. ஒரு முனை வரி
இருந்தால் நிச்சயமாக இந்த பிரச்சினை வராது. இந்த மல்டிப்
பிள் டேக்சை, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்
திற்குக் கொண்டு வருகிறேன். இந்த நாடு நன்றாக இருக்க
வேண்டும் என்று சொன்னால் சிங்கிள் டேக்ஸ்—எங்கே புரொ
டெக்ஷன் இருக்கிறதோ அங்கேயே எத்தனையோ டேக்ஸ்





போட்டுக் கொள்ளுங்கள். அதற்குப் பின்னால் டேக்ஸ் போடக் கூடாது. அந்த நிலை வரவில்லை என்று சொன்னால், இந்த அதிகாரிகளைக் கட்டுப்படுத்தவே முடியாது என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, செங்கற்பட்டு மாவட்டத்திலே ஒருவர் இருக்
கின்றார். அவருடைய ராதாகிருஷ்ணன் என்று சொல்கின்ற
தேவதாஸ் அண்டு கோ என்று சொல்கின்ற நிறுவனத்தின் மேல்
டேக்ஸ் பண்ணியிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் இடம் அந்த ரெக்கார்டுகளைக் கொடுக்கக் கடமைப்
பட்டு இருக்கிறேன். முதலிலே அவர்களுக்கு 11–12–1987-லே
ரூ. 4,61,349 வரி போடப்பட்டிருக்கிறது. ஒரு மாதம் கழித்து
உடனே அந்த 4 லட்சம் என்பது 7 லட்சமாக ஆகிவிட்டது.
அந்த அளவுக்கு ஆகிவிட்டது. ரெக்கார்டுகளிலே இருப்பதை
நான் சொல்கிறேன். அந்த ஆளுக்கு 25–1–1988-ல் அதே
வரியை ரூ. 7,38,455 என்று சொன்னால் 3 லட்சம் ரூபாய் ஒரு
மாதத்திலே அவர்களுக்குப் பெனால்டி என்று போட்டால் அவர்கள்
எந்த அளவுக்குப் பிசினஸ் செய்யமுடியும். நான் மாண்புமிகு
முதல்வர் அவர்களுக்கு இந்த இரண்டு ஒரிஜினல் ரெக்கார்டு
களையும் தருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
கருணை கூர்ந்து தொழில் செய்கின்றவர்களுக்கு நன்மையைச்
செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அள
வுக்கு மாதத்திலே 3 லட்சம் 4 லட்சம் என்று போட்டால்
எந்த அளவுக்குத் தொழில் செய்யமுடியும்? இன்னும் கேடடால்
ஒரு நெம்பர், சி.எஸ்.டி. நெம்பர் வாங்கவேண்டும் என்று
சொன்னால் ரூ. 5,000 என்று இப்போது ரேட் சொல்லுகின்
றார்கள். ஒரு ரெனுவல் என்று சென்னால் அதற்கு என்று ஒரு
தொகை வைத்து இருக்கின்றார்கள். இந்த அளவுக்குப் போனால்
டேக்ஸ் எப்படிக் கட்டமுடியும் என்று கேட்டுக்கொள்
கிறேன். எதற்கு எடுத்தாலும் எங்களுக்கு அதிகாரம் இருக்கிறது
என்று சொல்கின்றார்கள். போலீஸ்காரர்கள் பிடிப்பதாக இருந்
தாலும் ஒரு பார்மாலிட்டி இருக்கிறது. விஜிலன்ஸில் பிடிக்க
வேண்டும் என்றாலும் கூட அதற்கு என்று பார்மாலிட்டீஸ்
இருக்கின்றது. ஆனால் இவர்களுக்கு அந்த பார்மாலிட்டீஸ்
இடையாது. அவர்கள் போகவேண்டியது; நீங்கள் 5 லட்சம்
கொடுக்கவேண்டும் என்று மிரட்டுகிறார்கள். இந்த அளவுக்கு
சேல்ஸ் டேக்ஸ் அதிகாரிகள் நடத்துகொண்டிருந்தால் நிச்சய
மாக நம்முடைய நாடு முன்னேற்றத்திற்கு வரமுடியாது.

எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த
வரையில் நான் பலமுறை அதிகாரிகளைப் பார்த்துச் சொல்லி
யிருக்கிறேன். அங்கே ஒரு அதிகாரி இருக்கின்றார். எடிசன்
என்று ஒருவர் இருக்கிறார். அந்த ஊரைச் சார்ந்தவர் இருக்
கின்றார். டி.சி.டி.ஓ.-வாக இருக்கின்றார். அந்த ஆள்
ரப்பருக்கு டேக்ஸ் கட்ட விடுவதே இல்லை. பல கோடி ரூபாய்
களைப் பெற்றுக்கொண்டிருக்கின்றார். தமிழகத்திலே ரப்பர்

[திரு. மா. சுந்தரதாஸ்] [1989 ஏப்ரல் 26

கிடைக்கின்ற ஒரே மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம் தான்.
அந்த மாவட்டத்தை ஒரு லாபி பண்ணுகின்றார்கள். பிசினஸ்
காரர்களைக் கூப்பிடுகின்றார்கள். பல கோடி ரூபாய்களுக்கு
டர்ன்ஓவர்—லட்சக் கணக்கில் அல்ல, கோடிக் கணக்கான ரூபாய்
களில் பண்ணுகின்றார்கள். பலகோடி ரூபாய்க்கு விளைந்து
வருகின்ற ரப்பரைக் கல்கத்தாவுக்கு அனுப்புகின்றார்கள். டெல்
லிக்கு அனுப்புகின்றார்கள். ஒரு காசும் டேக்ஸ் போடுவதில்லை.
இவர்கள் சாயந்திரத்தில் அதிகாரிகளுடன் மீட்டிங் போடு
கின்றார்கள். என்ன கூட்டம், கல்யாணமா என்று கேட்டால்
சேல்ஸ்டாக்ஸ் ஸ்குவாட் வந்து இருக்கின்றார்கள். யாருடைய
வீட்டிலே நடக்கிறது என்றால் பெரிய முதலாளிகள வீட்டிலே
பங்க்ஷன் அப்படி நடந்து கொண்டிருக்கிறது. அதிலே ஈடு
பட்டிருப்பவர்கள் சில டி.சி.டி.ஓ. க்கள் என்பதைச் சொல்லிக்
கொள்கிறேன். இதைப்பற்றி பல தடவை அதிகாரிகளிடம்
சொல்லியும் இருக்கிறேன். யாரும் அதை மாற்றத் தயாராக
இல்லை. ஏனென்றால் அவர்களுடைய கமிஷன் வரு
கிறது. அதை நான் சொல்லத் தயாராக இருக்
கிறேன். எந்தக் கோர்ட்டிலும் சொல்வேன். அதைச்
சந்திக்கக்கூடத் தயாராக இருக்கிறேன். அவருடைய சொத்து
லட்சத்திற்கு மேல் இருக்கிறது என்று சொல்வேன். ஏன், பல
லட்சங்களைத் தாண்டி கோடியிலே இருக்கின்றது. எனவே
எம்.எல்.ஏ.க்களைச் சொல்கின்றார்கள். மந்திரிகளைச்
சொல்கின்றார்கள். தமிழகத்திலே ரப்பர் இருக்கின்ற மாவட்
டம் கன்னியாகுமரி மாவட்டம் தான். அங்கே இருக்கின்ற அதி
காரிகள் இப்படி இருக்கின்றார்கள். இந்த அளவுக்கு
ஒரு டேக்சும் போடாமல் வெஸ்ட் பெங்காலுக்கு
கல்கத்தாவுக்கும் ஏற்றி அனுப்பிக்கொண்டு இருக்கின்றார்கள்.
இதை அதிகாரிகளிடம் சொன்னால் ஒரு பெட்டிஷன கொடுங்கள்
என்று சொல்கின்றார்கள். என்குயரி பண்ணுகிறோம் என்று
சொல்கின்றார்கள். என்ன என்குயரி பண்ணுகிறார்கள்? அந்த
அளவுக்கு அங்கே அவர்கள் பேரலல் கவர்ன்மெண்ட் நடத்திக்
கொண்டிருக்கின்றர்கள். அந்த அளவுக்கு கன்னியாகுமரி மாவட்டத்
திலே செய்துகொண்டிருக்கின்றார்கள். அந்த அதிகாரிகளை
நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக
விசாரித்து, சேல்ஸ்டேக்ஸ் நிர்வாகத்தைச் சரி செய்யவில்லை
என்றால் தொழில்துறையிலே நம்முடைய மாநிலம் முன்னேறாது
என்பதை சொல்லிக் கொள்ளக் கடமைபட்டிருக்கிறேன்.

அடுத்து மாவட்டத்தினுடைய பல்வேறு பிரச்சினைகளை
சொல்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரைப் பொறுத்தவரை
யில் டி.டி.சி.யிலே என்ன நடக்கிறது என்றால் எம்.எல.ஏ.க்கள்
எம்.பி.க்கள் இவர்களையெல்லாம் ஏதோ அவர்களுடைய சப்
பார்டினேட்கள் போல நினைக்கின்றார்கள். இதை மாற்றி
யமைக்க வேண்டும். இது மாநிலத்தினுடைய நிலை, டெல்லி
யிலே போக வேண்டிய அவசியம் இல்லை. அமைச்சர் அவர்
கள் டெல்லியிலே என்று சொல்லியிருக்கின்றார்கள். டெல்லி
அல்ல. முதல்வர் அவர்கள் கையிலே இருக்கின்றது. டெவலப்
மெண்ட் கவுன்சில் என்று ஒன்று முன்னால் இருந்தது.



[திரு. மா. சுந்தரதாஸ்] [1989 ஏப்ரல் 25

சில மாநிலங்களில் பார்த்தால், கர்நாடகாவிலே இருந்தது,
யு.பி.யிலே பார்த்தால் ஜில்லா பரிஷத் இருக்கிறது. அங்கே
தலைவர் தலைமை தாங்குவார்கள். முன்னால் டிஸ்ட்டிரிக்ட்
போர்ட் இருந்தது. நம்முடைய தமிழகத்திலே டிஸ்ட்டிரிக்ட்
போர்டு இப்போது இல்லை. அதற்குக் கலெக்டர்தான் தலைமை
தாங்குவார்கள்.

(பிற்பகல் 1.30)

நான் கேட்கிறேன், நாங்கள் அவர்களுக்கு சபார்டினேட்டா
இங்கே நம்முடைய சபையிலே பார்க்கிறோம், மக்களால் தேர்ந்
தெடுக்கப்பட்ட ஒருவரைத்தான் நாம் அவைத் தலைவராகத்தேர்ந்
தெடுத்திருக்கிறோம். இங்கே அவையிலே கூட அதிகாரிகள்
அப்சர்வர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் மாவட்டங்
களில் கலெக்டர்கள் தலைமை தாங்குகிறார்கள் என்றால் நாங்கள்
எல்லாம் அவர்களுக்கு சபார்டினேட்ஸா? இந்த நிலைமையை
மாற்ற வேண்டாமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் கவனத்திற்காக,
விளக்கத்திற்காக ஒன்றைச்சொல்கிறேன். ஏதோ தி.மு.க. வந்த
தற்கு பிறகு வந்ததல்ல இந்த முறை, காங்கிரஸ் ஆட்சிக் காலத்
திலிருந்தே இது இருக்கிறது. மாவட்ட வளர்ச்சி மன்றங்களில்
கலெக்டர்கள் சட்டமன்ற உறுப்பினர்களை மதிக்க வேண்டுமென்
பது வேறு விஷயம். ஆனால் நாம் கலெக்டரை மாவட்ட வளர்ச்சி
மன்றத்தில் தலைமை தாங்க வேண்டுமென்று சொல்வதற்கு
காரணம் இருக்கிறது. பல்வேறு தொகுதிகளிலிருந்து கூட்டத்தில்
கலந்து கொள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்
பினர்கள், ஒன்றியத் தலைவர்கள், நகரமன்றத்தலைவர்கள் இப்
படிப்பட்ட பிரதிநிதிகள் எல்லாம் பங்கு கொண்டு அவர்கள்
சொல்வது குறித்து நடவடிக்கை எடுக்க, மாவட்ட ஆட்சித்
தலைவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து அறிவுரை
வழங்க இம்முறை ஏதுவாக இருக்கும் என்பதால் தான் இந்த
முறை அமலுக்கு வந்தது. இங்கே அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்
கூட அந்தக் கருத்தைச் சொன்னார். சட்டமன்ற உறுப்பினர்
கள் தவறு செய்தால் அது குறித்து நடவடிக்கை எடுக்கும் அதி
காரம் நமக்கு இல்லை. இந் நிலையில் இன்றைக்கு மாவட்ட
ஆட்சித் தலைவர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றக்கூட்டங்களில்
தலைமை தாங்கும் முறை குறித்துத் தாங்கள் அரசுக்கு என்ன
ஆலோசனை வழங்க இருக்கிறீர்கள்?

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய மாநிலத்தில் ஒவ்வொரு எம்.எல்.ஏ.வும்
ஒவ்வொரு மாதமும் மாறி மாறி மாவட்ட வளர்ச்சி மன்றக்
கூட்டத்தில் தலைமை தாங்கி நடத்துகின்ற முறையை இங்கே
நடைமுறைக்குக் கொண்டு வந்தால் அது ஒரு நல்ல முன்மாதிரி
யாக இருக்கும். இப்போது அங்கே நடக்கின்ற முறைகள்

பற்றி நான் ரொம்ப வருத்தப்படுகிறேன். இந்தக் கவுன்சில்கள் நல்லபடியாகப் பணியாற்ற வேண்டுமென்றால் அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கபடட்ட பிரதிநிதிதான் தலைவராக இருக்க வேண்டும். ஆகவே, எம்.எல்.ஏ-க்களையும், எம்.பி.-க்களையும் ஒரு மாதத்திற்கு ஒரு முறை ஒருவர் வீதம் இந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடடங்களில் தலைமை தாங்க வைத்தால் என்ன கெட்டுப் போகும் என்று நான் தெரிந்துகொள்ள ஆசைப்படு கிறேன்.

அடுத்தடடியாக, சில உறுப்பினர்களின் தொகுதிகள் இரண்டு மாவட்டங்களில் வருகின்றன. இது குறித்து சென்ற தடவை நான் இங்கே பேசும்போது கூடக் குறிப்பிட்டிருக்கிறேன். இது பற்றி மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருக்கும் நன்றாக தெரியும். இரண்டு மாவட்டங்கள் சம்பந்தப்பட்ட தொகுதிகளிலுள்ள உறுப்பினர்கள இரண்டு மாவட்டங்களிலும் கலந்து கொள்ள உரிமை உண்டு. திருச்செந்தூர் தொகுதி அம்மாதிரி வருகி றது. அதுபோல மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதி இரண்டு மாவட்டங்களில வருகிறது. அந்த வகையில் டி.டி.சி. மீட்டிங்கைப் பொறுத்தவரையில் இரண்டு மாவட்டங் கள் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் இரண்டு மாவட்டங்களிலும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவேண்டும். கலெக்டர்களிடம் சென்று இரண்டு டி.டி.சி. மீட்டிங்கிலும் கலந்துகொள்ள அனு மதிக்க வேண்டுமென்று கேட்டால் இங்கே நம்முடைய சட்ட மன்றப் பேரவைச் செயலாளர் சொல்வது மாதிரி அதற்கு 'விதி' இல்லையென்று கலெக்டர்கள் சொல்கிற நிலை இருக்கிறது. ஒரு கூட்டத்தில்தான் கலந்து கொள்ளலாம் என்று சொல்வது நியாயம்தானா? இங்கே கூட நாம் பார்க்கிறோம். நம்முடைய குழுக் கூட்டங்கள் நடக்கும்போது அதிகாரிகள் தலைமை தாங்கு வதில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள்தான் தலைவர்களாக இருந்து தலைமை தாங்குகிறார்கள். அந்த அளவில் எஸ்டிமேட் கமிட்டி, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி எல்லாம் செயல்படும் நிலையில் டி.டி.சி. மீட்டிங்கில் மட்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறவர்கள் தலைமை தாங்கக் கூடாது என்று சொல்வது எந்தவகையில் நியாயம்? மக்கள் பிரதிநிதிகள் தலைமை தாங்கி னால் தான் அங்கே நிர்வாகம் நல்ல முறையில், செம்மையாக இருக்கும். இல்லையென்றால் அதிகாரிகள் அவர்களுடைய இஷ்டப்படி செயல்படுகின்ற நிலைமை வந்துவிடும். காங்கிரஸ் கட்சியானாலும் சரி, தி.மு.க. ஆனாலும் சரி, அ.இ.அ.தி.மு.க. ஆனாலும் சரி இதனை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் அந்த அதிகாரம் இருப்பது சரியல்ல. ஆட்சியாளர்கள் என்று சொன்னால், நிச்சயமாக நான் சொல்கிறேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தான் தலைமை ''எக்சிகியூடிவ்'' என்கிற உண்மையான அதிகாரம் இருக்கிறது. ஆனால் இந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித்தலை வரிடம் கொடுத்திருப்பதன் வாயிலாக நாமெல்லாம் We are only



law-makers என்று சொல்லக்கூடிய அளவுக்குத்தான் இன்றையதினம் நம்மிடம் அதிகாரம் இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டியிருக் கிறது. மக்கள் நம்மைத் தான் கேடகிறார்கள். அதிகாரி களோ இந்த மடம் இல்லையென்றால் அந்த மடம் என்று சொல கிறார்கள். நான் என்னுடைய விளவங்கோடு தொகுதியைவிட்டு எங்கும் செல்ல முடியாது. அதுபோல் தான் மற்ற சடடமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகள் அப்படி இல்லை. இந்த மடம் இல்லையென்றால் அந்த மடம், அந்த மடமும் இல்லையென்றால டெல்லிக்கு மாறுதல் வாங்கிச் சென்று விடுகிறார்கள். நம்மைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத்தொகுதியும், மக்களும் தான் தஞ்சம். ஆகவே, நான் சொல்லியுள்ள நடைமுறையை தமிழகத்தில் கொண்டு வந்து அதிகாரிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாவட்டங்களை, தாலுக்காக்களைப் பிரிக்கின்ற பிரச்சினையைப் பொறுததவரையில் ஒன்றைச் சொல்கிறேன். தாலுக்காக்களைப் பிரிப்பதற்கு ஒரு நார்ம்ஸ் வைத்திருக்கிறார் கள். அதாவது பாப்புலேசன் பேசிஸ், பரப்பளவு இன்னும் பல வேறு கருத்துக்களை மனதில் கொள்கிறார்கள். ஆனால் மாவட்டங்களைப் பிரிக்கிறபோது அப்படிப் பார்ப்பதில்லை. ஆகவே, அதற்கும் நார்ம்ஸ் பிக்ஸ் பண்ணி இனிமேல் மாவட்டங் களைப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு மாவட்டங்களைப் பொறுத்தவரையில் எல்லா அதிகாரமும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம்தான் இருக் கிறது. பி.ஏ. டு கலெக்டர் (சத்துணவு), பி.ஏ. டு கலெக்டர் (ஜெனரல்), இப்படி எதற்கு எடுத்தாலும் மாவடடத்தில் கலெக்டர்தான் சுப்ரீம் அதாரிட்டி. எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த அளவில் அதிகாரம் இருக்கக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள்.

அடுத்து, மத்திய அரசில் பணியாற்றுகின்றவர்களுக்கு, ஊழியர் களுக்கு அவர்களுடைய ரிடையர்மென்ட் டேட்டிலேயே எல்லாச் சலுகைகளையும் அளித்து விடுகிறார்கள். ஆனால் இங்கோ டீச்சர்ஸ் ரிட்டயர் ஆகி 4, 5 வருடங்கள் ஆகியும இன்னும் ஓய்வுகால நன்மைகள் கிடைக்கவில்லை. கேட்டால் ரெக்கார் டுகள் சரியாக இல்லையென்று சொல்லுகிறார்கள். மத்திய அரசு ஊழியர்களும் இங்கேயிருக்கின்ற ஊழியர்களும் ஒரே பணியைத் தான் செய்கிறார்கள். ஆகவே, இனிமேலாவது பிராவிடெண்ட் பண்ட் மற்றும் அனைத்து ஓய்வுகால சலுகைகளையும் மத்திய அரசு ஊழியர்களுக்கு ஓய்வுபெற்ற அன்றைக்கே வழங்குவது போல மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் [1989 ஏப்ரல் 26

அடுத்து. இன்றைக்கு டெம்பரவரி ஊழியர்களாக Fமுன்பு
அரசாங்கத்தில் பணியாற்றியவர்கள் உண்ணாவிரதம் இருந்து
கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்
திரு. அழகர்சாமி கூடக் குறிப்பிட்டார். அவர்களுக்கும் முந்திய
ஆட்சியிலே 996 எண்ணுள்ள ஜி. ஓ. வில் கொடுக்கப்பட்டுள்ள
சலுகையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, பொல்யூசன் கன்ட்ரோல் துறையிலுள்ள ஊழியர்
களுக்கு சம்பளம் குறைக்கப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள்.
உதாரணத்திற்கு 1,160 ரூபாய் சம்பளம் என்று அப்பாயின்ட்
மென்ட் ஆர்டர் போட்டுவிட்டு இப்போது 900 ரூபாய் சம்பளம்
என்று மாற்றி இருப்பதாகச் சொல்கிறார்கள். அதை அவ்வாறு
குறைக்கக்கூடாது என்று சொல்லி, வாய்ப்பளித்தமைக்கு மாண்ப
மிகு தலைவருக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்) :**
மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய
தினம் கோரிக்கை எண். 4, 9, 11, 42, 43, 58, 59 ஆகியவைகளின்
மீது இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் 13 பேருக்குமேல் தங்க
ளுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களு
டைய ஆய்வுரை, கருத்துரை அனைத்தையும் முறையாக இந்த
அரசு , அலட்சியப்படுத்தாமல், கவனத்தில் கொண்டு, ஏற்கத்
தக்கவற்றை ஏற்றுச் செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

வணிக வரித் துறை, தமிழினத் தலைவர், தமிழக முதல்வர்
மாண்புமிகு அண்ணன் கலைஞர் அவர்களின் நேரடிப் பொறுப்பில்
உள்ள துறையாகும். இந்தத் துறையில் மானியக் கோரிக்கை
யை சட்டப் பேரவையில் சமர்ப்பிக்கின்ற வாய்ப்பையும், அது
தொடர்பான விவாதத்திற்குப் பதில் அளிக்கின்ற வாய்ப்பையும்,
என்பால் உள்ள அன்பாலும், பாசத்தாலும், நம்பிக்கையாலும்
எனக்கு அவர்கள் அளித்திருக்கிறார்கள். அதற்காக என்னு
டைய நெஞ்சார்ந்த நன்றியறிதலை முதற்கண் தெரிவித்துக்
கொண்டு, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

இந்த அரசின் வரி வருவாயில் ஏறத்தாழ 76 சதவிகிதம்
அளிக்கின்ற துறை வருவாய்த் துறையாகும். ஆனால்
இந்தத் துறைக்கு ஆகின்ற செலவு மிகக் குறைவானதுதான்.
இந்தத் துறையின் மூலம் 1988-89-ல் கிடைத்த வருவாய் ரூபாய்
1,502.73 கோடியாகும். இவ்வாண்டு சென்ற ஆண்டைவிட
இத்துறையின் மூலம் பெறுகிற வருவாயின் சதவிகிதம் அதிக
மாகவே இருக்கும். காரணம், நிர்வாகத் திறனில் தலை
சிறந்து விளங்குகிற தமிழக முதல்வர் திறம்படச் செயல்
படுகிறார் என்பது மட்டுமில்லை, அவருடைய ஆற்றல் மற்றவர்



1989 ஏப்ரல் 26] [திரு. எல். கணேசன்]

அல்ல. முதல்வர் அவர்கள் கையிலே இருக்கிறது. டி.டி.சி.யிலே
முன்னால் டெவலப்மென்ட் கவுன்சில் என்று ஒன்று இருந்தது.
களையும் திறம்படச் செயலாக்கப்படுத்துகிற காரணத்தால், அவ
ரோடு இணைந்து துறை அதிகாரிகளும், அமைச்சரவை
உறுப்பினர்களும், அனைவருமே செயலபடுகிற காரணத்தால்,
நிச்சயமாக இந்தத் துறையில் வருகிற வருவாய் இந்த நிதி
ஆண்டில் அதிகமாகவே இருக்கும். இந்த நிதி ஆண்டில்
இந்தத் துறைக்கு எதிர்பார்க்கக்கூடிய செலவு 23 கோடியே
97 லட்சத்து 80 ஆயிரம் என்ற அளவில் மட்டுமே இருக்கும்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு
கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். The Hon. former
speaker has unique talent to incite controversies to ignitecontrover-
sies. அவருக்கு அது தனித்த ஆற்றல். அவர் சொன்னால்
பிரச்சினைகள் உருவாகும். இங்கே இந்த மானியக்
கோரிக்கையில் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள்.
நம்முடைய அமைச்சர்களுக்கு வேலையும் குறைவு,
சம்பளமும் குறைவு என்று சொன்னார்கள். அவர்கள் எந்த
உணர்வில் அதைச் சொன்னார்கள் என்று எனக்குத்
தெரியாது. ஆனால் உண்மையாக எண்ணிப் பார்க்கிற
போது, இந்த அமைச்சர்கள் எப்படிப் பணியாற்றுகிறார்கள்
என்பதை இவர்களுக்கெல்லாம் தலைமைப் பொறுப்பு ஏற்று
செயல்படுகிறவரை வைத்து நாம் கணக்கிட்டுவிட முடியும்.
அவர்கள் பொறுப்பு ஏற்றதிலிருந்து என்றைக்காவது, எப்போ
தாவது அவர் ஓய்வாக இருக்க முடிகிறதா என்பதை மாண்புமிகு
உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் எண்ணிப்
பார்க்க வேண்டும். அவர் எங்கே சென்றாலும், மக்கள் வெள்
ளத்தில் நீந்த வேண்டியவர்களாக இருக்கிறாகள்.—அலு
வலகம் ஆனாலும், வீடானாலும், சுற்றுப் பயணமானாலும்,
எங்கேயும் மக்கள் வெள்ளத்தில் நீந்த வேண்டியவராக இருக்கிறார்.
அண்மைக் காலத்தில் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு எத்தனை
முறை அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்; ஆறு ஏழு
முறைக்கு மேல் அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார்.

பிற்பகல் 1-40

எத்தனை பொது நிறுவனங்களின் கூட்டத்தைக் கூட்டி
யிருக்கிறார் : எத்தனை தொழில்துறை முன்னோடிகளை
அழைத்து விவாதித்திருக்கிறார்; அதைப் போலவே பாதிக்
கப்பட்ட அமைப்புகளிலிருந்து வருகிறவர்களையெல்லாம்
சந்தித்திருக்கிறார்கள். அதைப் போலவே வறட்சி நிவாரணப்
பணி, சட்ட ஒழுங்குப் பணி ஆகியவற்றை ஆய்வு செய்து, அவற்
றின் மீது விரைந்து, போர்க் கால அடிப்படையில் நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய
கூட்டத்தையும், மாவட்ட காவல் துறை அதிகாரிகளின் கூட்டத்
தையும் கூட்டி விவாதித்திருக்கிறார்கள் என்பதையெல்லாம்
எண்ணிப் பார்க்க வேண்டும்.

உங்களுக்கு ஒன்றை மட்டும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பொறுப்பேற்றுக் கொண்ட 27—1—1989 ஆம் தேதியிலிருந்து 24—4—1989 முடியப்பார்த்தால் 4 மாதங்கள் என்று மாதக் கணக்கில் வரும். ஆனால் நாட்கணக்கில் எண்ணிப் பார்த்தால், 3 மாதங்களுக்கும் குறைவாகவே வரும். இந்தக் குறுகிய காலக் கட்டத்தில் அவர்கள் பெற்றிருக்கிற மனுக்களின் எண்ணிக்கை—அவர்கள் சுற்றுப்பயணம் செல்லுகிறபோது அல்லது அவரை அலுவலகத்தில் சந்திக்கின்றவர்கள் என்று—இப்படி எல்லா நேரத்திலும் அவரிடம் தரப்பட்டிருக்கின்ற மனுக்கள் ஒட்டு மொத்தமாக இந்த மூன்று மாதந்தில்—1,93,499 ஆகும். இதில் மற்ற துறைகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி அவர்கள் ஆணை பிறப்பித்து அனுப்பியிருக்கிற மனுக்களின் எண்ணிக்கை 1,85,531 ஆகும். இந்தப் பிரிவில் தற்போது நிலுவையில் உள்ள மனுக்களின் எண்ணிக்கை 7,968 ஆகும்.

இதை நான் சொல்வதற்குக் காரணம் "மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது, எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது, செவ்வி அருமையும் பாராது" சில வேளைகளில் அவமதிப்பைப் பற்றிக்கூட கவலைப்படாமல் அரும்பாடுபடுகிற முதலமைச்சர் இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கிறார். அதைவிட என்ன வியப்பு என்றால் அமைச்சர்கள் எல்லாம் அவரைவிட இளையவர்கள். நான் அவருடைய நிர்வாக அல்லது நாடாளுமன்றச்செயலாளர். நான் அவரோடு நீண்ட பல ஆண்டுகளாக நெருங்கிய தொடர்பு கொண்டவன். இங்கே இருக்கிற அனைத்து அமைச்சர்களும் ஒரு வகையில் அவருக்கு பயந்து செயல்படுகிறார்கள். காரணம்—It is not a fear-complex. You should not take it in that sense. He instils moral fear in the hearts of his own Cabinet Members. என்னைப் பொறுத்தவரையில் நான் கருதுவது இதுதான். அவரை விட இளைஞர்களாக இருக்கிற அமைச்சர்கள் அவரைப் பார்த்து—அவரே இப்படிப் பணியாற்றுகிறார்; அவரைவிட நாம் தீவிரமாகச் செயலாற்ற வேண்டும்—பணியாற்ற வேண்டும் என்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் அறிவார்கள்.

இங்கே விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய தொளத்தூர் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. இராசு அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அ.தி.மு.க. காலத்தில் அப்போதிருந்த கிராம அதிகாரிகளை நீக்குகிற நடவடிக்கையை மேற்கொண்ட பிறகு அதற்குப் பின்பு நியமிக்கப்பட்டிருக்கிற புதிய கிராம அதிகாரிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார். அப்போது ஏதோ குறை இருந்தது—கணக்குப் பிள்ளை, பட்டா மணியங்களுக்கிடையே சண்டை வந்திருக்கிறது. இவைகளை எல்லாம் கருத்தில்கொண்டு தான் அவர்கள் நீக்கப்பட்டார்கள் என்றும், ஆகவே அவர்



களுக்குப் பின்னால் நியமிக்கப்பட்டிருக்கிற கிராம நிர்வாக அதிகாரிகளை—வில்லேஜ் அட்மினிஸ்ட்டிரேட்டிவ் ஆபீசர்ஸ்களை—எம்.ஜி.ஆர். அவர்கள் நியமித்தார்கள் என்பதற்காக நீக்க வேண்டும் என்ற பழி வாங்குகிற உணர்வோடு அவர்களையெல்லாம் வேலையை விட்டு நீக்குகிற தன்மையில் ஈடுபடக் கூடாது என்று கேட்டுக் கொண்டார். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள் அனுபவசாலி—அவர்கள் அதே பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறபோது எப்படி நள்ளிரவில் ஏதோ மிகப் பெரிய குற்றங்களைச் செய்துவிட்டவர்களைப் பிடிப்பதைப்போல்—உரிய கால அவகாசம் கூடக் கொடுக்காமல்—அவர்களிடமிருந்து பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள்—ஆவணங்களைக் கைப்பற்றினார்கள் என்பதையெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள்.

அது எப்படி நடைபெற்றது என்பது நமக்கு எல்லோருக்கும் தெரியும். ஆனால் இப்படிப் பழி வாங்குகிற உணர்வு அல்லது வஞ்சம் தீர்க்கிற உணர்வு என்ற அடிப்படையில் இன்றைய அரசு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்பதை நடுநிலையோடு நியாய உணர்வோடு எண்ணிப் பார்க்கிற யாரும் ஒப்புக்கொள்வார்கள். இதைப் பொறுத்தவரையில்கூட எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செய்வதாக இல்லை. இந்தப் பிரச்சினையினுடைய முழுமையும் தெரியும். ஒரு கட்டத்தில திராவிட முன்னேற்றக கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது அவர்களுக்காக எல்லா வகையிலும் குரல் கொடுத்தவர் இன்றைய முதலமைச்சர். ஆனாலும் கூட அதை நிதானமாக, நியாய அடிப்படையில் எண்ணிப் பார்த்துக் காரியங்கள் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் தான் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி லட்சுமிகாந்தன் பாரதி அவர்கள் தலைமையில் வருவாய்த் துறைச் செயலாளர், வருவாய்த்துறை இணை ஆணையர் ஆகியவர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு, இருக்கிறது. அந்தக் குழு எல்லா வகையிலும் இதைப் பற்றி விசாரித்து அறிந்து முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அந்தக் குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறபோது இறுதியாக இந்த அரசுக்கு பழி வாங்கும் உணர்வு வஞ்சித்தும் இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அதைப்போலவே இங்கே பல்வேறு கருத்துக்களை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக நம்முடைய திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னபோது, ஒன்றைச் சொன்னார்கள். ஓய்வு ஊதியம் approximately 50% of the last pay drawn என்ற அடிப்படையில் ஏறத்தாழ 100 ரூபாய் சம்பளம் வாங்கிய ஒருவர் ஓய்வு பெற்றிருந்தால் 50 ரூபாய்தான் தருகிறார்கள் என்று ஒன்றைச் சொன்னார்கள். அது இல்லை. அவர்கள் எவ்வளவு சம்பளம் பெற்றிருந்தாலும், இப்போது ஓய்வு ஊதியம், குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ. 245 வழங்கப்

படுகிறது. எனவே அது பழைய அடிப்படையில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்

அதைப்போலவே திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் ஒரு அருமையான கருத்தை வலியுறுத்தினார்கள். அதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாம் பல்வேறு வரிகளை வசூலிக்கும்போது தொடர்புடைய வணிகர்கள் வழக்குத் தொடர்ந்து, வரி வசூலிப்பதைத் தடை செய்கிறார்கள தற்காலிகமாகவாவது அதைத் தள்ளிப் போடுகிறார்கள்; கால தாமதம் செய்கிறார்கள் என்பதை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அதைப் பொறுத்தவரையில், விற்பனை வரியைப் பொறுத்தவரையில் தடை உத்தரவுகளின் கீழ் நிலுவையிலுள்ளது உச்ச நீதிமன்றத்தில் 6.35 கோடி ரூபா சம்பந்தப்பட்டதாகும். அதைப்போலவே உயர் நீ மன்றத்தில் 57.06 கோடி ஆகும். அதைப் போலவே சேல் டாக்ஸ் ட்ரிபியூனல் ; அதிலே நிலுவையிலுள்ளது 1.82 கோட அதைப்போலவே அப்பலேட் அசிஸ்டன்ட் கமிஷனரிட நிலுவையிலுள்ளது 7.06 கோடி ரூபாய். ஆக மொத் ரூ. 72.2 கோடி. அதைப் போலவே அரசின் தடை உத்தரவ மூலம் ரூ. 1.78 கோடி. இப்படிப் பல்வேறு நிலுவையில் இருக்கு இந்த வழக்குகள் சம்பந்தப்பட்ட வரி பாக்கிகளை, வழக்கு களை விரைவுபடுத்தி உரிய நடவடிக்கை எடுத்து விரைந்து வசூலிப்பதற்குத் தொடர்ந்து நடவடிக்கைகளை இந்தத் துறை மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சுந்தரதாஸ் பேசும்போது 'Advance tax is being coll-cted' என்கிற கருத்தை சொன்னார்கள். ஆனால் வணிக வரித் துறை சிறப்பு ஆணையர் அவர்கள் தன் கீழ்ப் பணியாற்றும் அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் எந்தக் காரணத்தைக் கொண்டும் அட்வான்ஸ் டாக்ஸ் வசூல் செய்யக் கூடாது என்று கூறியுள்ளார். சென்ற ஆண்டில் இவ்வாறு வசூல் செய்த ஒரு சிலர் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-50]

இந்த அரசின் நடைமுறை நெறி, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியவாறு வலியவர்களிடமிருந்து வரி திரட்டி ஏழை எளியவர்கள வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதாகும். எனவேதான் அண்ணாவின் லட்சியங்களை நிறைவேற்ற தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டு பாடுபடுகின்ற மாண்புமிகு கலைஞர் அவர்கள், தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலேயே, ஏழைகளைப் பாதிக்கக்கூடிய வரிகளைக் குறைத்தும், [illegible]யாகச் சில வரிகளை நீக்கியும் பல சலுகைகளை அறிவித் [illegible] என்பதை இந்த மன்றத்து உறுப்பினர்கள் அறிவார்



கழக அரசு பொறுப்பேற்பதற்கு முன்னர் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், விவசாயிகள் பயன்படுத்தும் பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படும் என்று அறிவித்திருந்த உறுதி மொழியினை நிறைவேற்றும் வகையில், மூன்று மற்றும் ஐந்து குதிரைத் திறன் கொண்ட அனைத்து பம்பு செட்டுகளுக்கும் 25-3-89 முதல் வரி விலக்கு அளித்ததை நீங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றீர்கள். அதை நான் நினைவுபடுத்துகிறேன்.

அதைப்போலவே, உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவிக் கரம் நீட்டி, இந்த அரசால் இயன்ற உதவிகள அனைத்தையும் செய் யும் நோக்கத்துடன் அவர்கள் பயன்படுத்தும் தாங்கிகள்—cr tches சக்கர நாற்காலிகள், அனைத்து வித மூன்று சக்கர வண்டிகள், எல்லாவித ஊன்றுகோல்கள் ஆகியவற்றிற்கு வரி விலக்கு அளிக்கப் பட்டிருப்பதை அறிவீர்கள்.

அதைப்போலவே, மாணவர்கள் பெரும்பாலும் பயன் படுத் தக்கூடிய பேனாக்கள், பால்பாயின்ட் பேனாக்கள்—R f ll அழித்து அழிப்பான்கள், வண்ணப் பென்சில்கள், பென்சிலைக் கூராக்கும் சாதனங்கள், கரும்பலகைகள், கரும்பலகை துடைப் பான்கள், வடிவியல் கணித சாதனங்கள் அடங்கிய பெட்டிகள், அறிவியல் கூட அறுவைக் கருவிகள் அடங்கிய பெட்டிகள், ரப்பர் விளையாட்டுப் பந்துகள் முதலியவற்றிற்கு வரி விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது.

அனைவரும் பயன்படுத்துகின்ற சீப்புக்கும் அவ்வாறேதான்.

அதைப்போல், எழுதுவதற்கு உபயோகப்படுத்தப்படும் மை, கோழித் தீவனம் ஆகியவற்றிற்கு 3-4-89 முதல் வரி விலக்கு அளிக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.

இங்கே பேசியபொழுது திரு. சொக்கர் என்று கருதுகிறேன். அவர் ஒரு கருத்தைச் சொன்னார். வரி வாங்குவது, வரியைப் பெறுவது என்பது, மலரிலிருந்து தேனை எப்படி வண்டு எடுக் கிறதோ, அதைப்போல் வாங்க வேண்டும் துன்புறுத்தாமல், என்று சொன்னார்கள்.

என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், அந்த உவமை டாக்டர் அறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னதை நான் நினைவுக்குக் கொண்டு வருகிறேன்.

வரியை விதிக்கிறபோதுகூட இந்த அரசு எவ்வளவு நிதான மாக, துன்புறுத்தல் இல்லாமல் வரியை வசூலிக்க வேண்டுமென்பது மட்டுமில்லை, தாங்கக் கூடிய வலியவர்கள் மீது விதிக்கவேண்டு மென்ற எண்ணம், இவைகளையெல்லாம் உள்ளடக்கித்தான் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதைச் செய்கிறார்கள் என் பதை நீங்கள் அறிவீர்கள்.

உதாரணத்திற்குச்சொல்ல வேண்டுமென்றால்,ஒரு வரி, ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் பத்து இலட்சமும் அதற்கு மேலும் வியாபாரம் செய்யக்கூடிய சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் உணவு விடுதி களில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின்மீதும் பானங்கள் மீதும் 5 சதவிகித வரி விதித்தல்,விற்பனைத்தொகை ரூபாய் பத்து இலட்சத்திலிருந்து ரூபாய் 15 இலட்சத்திற்கும் மேற்படாமல் இருந்தால் ஒட்டுமொத்த வரிகளாகவோ அல்லது 5 விழுக்காடு வரியாகவோ செலுத்துவதற்கு அவர்கள் விருப்பப்படி அனுமதிக் கப்படுவார்கள்.

இந்த வகையில் இந்த வரியை விதித்தோம். இதிலே என்ன நாம் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்பு கிறேன் என்றால், இந்த வரி விதிப்பில் 15 இலட்சத்திற்கும் மேல்— Turn over should be morethan rupees 10 lakhs and only then they will be taxed. அதுதான் உண்மை. இந்த ஆண்டு தான் நாம் வரி போடுகிறோம். கர்நாடக அரசு அரசு இந்த வரியை விதித்திருக்கிறது. அண்டை மாநிலமாகிய கர்நாடகத்தில் மூன்று நட்சத்திர உணவு விடுதிகள் அல்லது அதற்கு மேற்பட்டவைகளில் விற்கப்படும் உணவுப் பொருட் களுக்குப் பத்து சதவிகித வரியும், மற்ற சாதாரண உணவு விடுதி களுக்கு, விற்கப்படும் உணவுப் பொருட்கள் மீது 5 சதவித விற் பனை வரியும் விதிக்கப்படுகிறது. சிறிய உணவு விடுதிகளுக்கு வரி விதிப்பினால் பெரிதும் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகப் பொது வரி விதிப்பான 5 சதவிகிதத்திலிருந்து மிகக் குறைந்த அளவில் ஒட்டுமொத்தத் தொகையாக வசூலிக்கப்படு கிறது. அண்டை மாநிலமான கர்நாடகம் போன்ற மாநிலத் தில் ரூபாய் ஒரு லட்சத்திற்கும் அதற்குமேலும் விற்பனையாகும் உணவு விடுதிகள் அனைத்துக்கும் விற்பனை வரிவிதிக்கும் பொழுது. இங்கே ஏற்கெனவே பத்து இலட்சம் வரையிலுள்ள உணவு விடுதி களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டு, பத்து இலட்சத்திற்கும் மேல் உள்ளவர்களுக்குத்தான் ஐந்து சதவிகித வரி விதிக்கப்படுகிறது.

ஆக, வரியை விதிக்கிறதிலே கூட எவ்வளவு நியாயமான அடிப்படையில் விதிக்கிறோம் என்பதற்கு வேறொரு உதாரணம் சொல்ல வேண்டுமென்று சொன்னால், விற்பனை வரி ஏய்ப்பைத் தடுக்கவும், வர்த்தகம் வேறு மாநிலங்களுக்குச் சிதறுவதைத் தடுக்கவும் வேறு மாநிலங்களில் வாங்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் விற்பனைக்காக அல்லது சொந்த உபயோகத்துக்காக தமிழ்நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டால் அந்த மோட்டார் வாகனம் மீது மோட்டார் வாகனங்கள் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்படும்போது நுழைவு வரி விதிக்கும் வகையில் புதிய சட் டத்தை இயற்றக் கருதப்பட்டுள்ளது. மோட்டார் வாகனம் எந்த மாநிலத்திலிருந்து கொண்டு வரப்படுகிறதோ அந்த மாநி லத்தின் விற்பனை வரிவீதம் தற்போது நம் மாநிலத்திலுள்ள விற்பனை வரிவீதத்தைக் காட்டிலும் குறைவாக இருக்குமானால் அந்த வித்தியாச அளவிற்குத்தான் நுழைவு வரி விதிக்கப்படு கிறது. suppose the other State has already taxed. 5% and our taxation is 10%, we are going to tax only upto 5% though, of course, our limitation is 10%.



ஆனால் இதே வரியை மகாராஷ்டிராவில் விதிக்கிறார்கள். விதிக்கிறபோது அங்கே எவ்வளவு வரி செலுத்தி இருந்தாலும் கவலை இல்லை. இங்கே போடுகிற மொத்த வரியையும் போடு கிறார்கள். இதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே தான் வரி விதிப்பிலே நாங்கள் மிகத் தெளிவான கொள்கையைப் பயன்படுத்துகிறோம் என்பதை நான் தெரிவிக்க கடமைப் பட் டிருக்கிறேன்.

அதைப் போலவே, 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்ற கலைஞரின் இலட்சிய முழக்கத்திற்கேற்ப, 1975 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப் படுவதற்கு முன்பு நெல்லையில் வணிகர்களின் வேண்டுகோளை ஏற்று வணிகர் நல வாரியம் அமைக்கப்படும் என்று அறிவித்ததை 13 ஆண்டுகள் கழித்தும் மறந்துவிடாமல்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு).

திரு. கோ. பூவராகன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர் களே, நான் தூங்குவதை அவர் எப்படிக்கண்டுபிடித்தார் என்று அறிய விரும்புகிறேன். அவர்கள் கண்ணாடி போட்டிருக்கிறார் கள். கண்ணாடி போட்டவர்கள் நிறையப்பேர் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அந்தக் கண்ணாடிக்கு நான் தூங்குவதைப் போல இருக்கிறதோ என்று எண்ணு கிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கண்ணாடியை ஒருதடவை சரி பார்த்துக் கொள்ள வேண்டும். நம்முடைய மாண்புமிகு திரு. பூவ ராகன் அவர்கள் ஞானநிலையில் இருக்கிறார் என்று தான் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர வேறு வகையில் எடுத்துக் கொள்ளக் கூடாது. (சிரிப்பு).

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, எனது கண்ணாடியைச் சரிபார்க்க வேண்டிய அவ சியம் இல்லை. அவர் ஞானநிலையில் இல்லை. மோனநிலையில் இருக்கிறார். (சிரிப்பு).

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, 13 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அன்று கொடுத்த வாக்குறுதியை

மறந்து விடாமல், நிறைவேற்றும் வகையில் வணிகர்களின் நலனை கட்டிக்காக்கவும் நலிவுற்ற வணிகர்கள் புனர்வாழ்விற்கு உதவிடவும் வணிகர் நல வாரியம் ஏற்படுத்தப்படும். அதற்காக விற்பனை வரி வருவாயிலிருந்து ரூபாய் இரண்டு கோடி இந்த ஆண்டு இந்த அரசு ஒதுக்குகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே நான் ஒன்றை இந்தப் பேரவைக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1957 ஆம் ஆண்டில் அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வரவில்லை. மாநில முதல்வர் ஒப்புக்கொண்டு விட்ட காரணத்தால் மத்திய அரசு சர்க்கரை, புகையிலை மற்றும் துணி இவைகளின் மீது மாநிலம் போடுகிற விற்பனை வரிக்குப் பதிலாக மத்திய அரசு கூடுதல் ஆயத்தீர்வையை விதிக்க ஆரம்பித்தது. மேலும் மருந்துகள், சிமெண்ட், பேப்பர், பெட்ரோலியம் பொருட்கள், வனஸ்பதி ஆகிய ஐந்து இனங்களுக்கு விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத்தீர்வை விதிக்க வழி செய்யும் பொருட்டு திரிபாதி கமிட்டி அளித்த அறிக்கையை வைத்துக்கொண்டு மத்திய அரசு அந்தப் பொருள்களின் மீதும் அந்த வரியை அது விதிக்க வேண்டுமென்று உரிமை கொண்டாடியது. ஆனால் அண்மையில் நடந்த முதல்வர்கள் மாநாட்டில் தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் அவர்கள் எழுப்பிய கடுமையான ஆட்சேபத்தையும், அவரைச் சார்ந்து அவருக்குத் துணையாக மற்ற காங்கிரஸ் அல்லாத மாநில முதல்வர்கள் எழுப்பிய அந்த ஆட்சேபத்தையும் ஏற்று இப்போது மத்திய அரசு அதனைக் கைவிட்டுவிட்டது என்பதை நான் இந்த மன்றத்திற்கு அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 2—00)

இந்த மன்றத்து உறுப்பினர்கள் குறிப்பாக நம்முடைய ஆளும் கட்சிக் கொறடா திரு. கதிரவன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக அவர்கள் அதற்காகப்பரிந்து பேசினார்கள். தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள் நிரம்ப உழைக்கக்கூடிய ஏழைகள், அதிலும் குறிப்பாக விதவைப் பெண்கள் இப்படிப்பட்டவர்கள் இந்தத் தொழிலைச் செய்கிறார்கள். வடகம், அப்பளம் போடுவது பெரும்பாலும் பெண்கள். தாய்க்குலம், தாய்க்குலம் என்று பேசிக்கொண்டு இருக்கவேண்டிய அவசியம் இல்லை. காரியத்திலே கூட தாய்க்குலத்தின் மீது பாசத்தைக் காட்டலாம். அப்போது முதலிலே வரி விதிக்கப்பட்டு இருந்தது. அந்த வரி விதிப்பினுடைய எல்லையை அதிகப்படுத்தினால் போதும் என்று அறிவித்தார்கள். 2 லட்சத்திற்கு மேற்பட்டு அந்த வியாபாரம் நடக்குமானால், அதற்கு வரி விதிப்பு என்று சொன்னோம். அதை 3 லட்சத்திற்கு மேல் என்று கொண்டு வரலாமா என்று யோசித்தார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்கள் அந்த நியாயத்தை எடுத்துச் சொன்ன காரணத்தால், இன்றையதினம் பெண்கள் தயாரித்து விற்பனை



செய்கிற வடகம், அப்பளம் அது எத்தனை ரூபாய்க்கு விற்பனை ஆனாலும் கவலையில்லை. முற்றுமாக அதற்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்களுடைய அறிவிப்புக்கு நம்முடைய திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள் எவ்வளவு முறை மேசையைத் தட்டுகிறார்கள் தெரிகிறதா. (சிரிப்பு).

**திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்):** அவருக்கு மிக அனுகூலமாக இருக்கும். ஆகவே அவர்கள் அதிகமாக மகிழ்ச்சி அடைவதில், பாராட்டுவதில் நியாயம் இருக்கிறது.

அதேபோல் ஏழை எளியவர்கள் பெரும்பாலும் பயன்படுத்துகிற, பயன்படுத்துகிறவர்கள் மட்டும் ஏழைகள் இல்லை, அதை உற்பத்தி செய்கிறவர்களும் கூட. அதைக்கூட நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் வற்புறுத்திச் சொன்னார்கள்—50 கிராமுக்குக் குறைவாக உள்ள பொட்டல ஊறுகாய்க்கு இன்றைக்கு வரி முற்றிலுமாக நீக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த வரி விலக்கை அளிப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அறிவிக்கிறவன் மட்டும்தான் நான் என்பதை மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே இந்தத் துறையில் உள்ள அதிகாரி பெருமக்கள் முழுமையாக முதல்வர் அவர்களுடைய உணர்வைப் புரிந்து கொண்டு, அவர்கள் எதிர்பார்க்கிற அளவிற்கு விரைந்து செயல்படக்கூடிய அதிகாரிகள், திரு. ஆளுடையப்பிள்ளை ஆனாலும், கமிஷனராக இருக்கிற அம்மையார் அவர்கள் ஆனாலும், அத்தனை பேர்களுக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த அளவிலே என்னுடைய விளக்கத்தை அளித்து, கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பப் பெற்று, கோரிக்கைகளை அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

***திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய செயலாளர் ஒரு கருத்தைச் சொன்னார்கள், அட்வான்ஸ் டாக்ஸ் வசூலிக்கக் கூடாது என்ற அறிக்கை இருக்கிறது என்று. நான் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த ஆண்டிலே கூட, மதுரை நகரத்திலேயும் மற்றும் பல்வேறு இடங்களிலேயும், அட்வான்ஸ் டாக்ஸ் வசூலிக்கப்பட்டு

இருக்கிறது. அதற்காகக் கெடுபிடிகள் நடந்திருக்கின்றன. எனவே, தயவு செய்து இந்த அறிக்கை விடுவதைக் கூட, பிப்ரவரி மாதத்திலே சொல்லி இருந்தால், மார்ச் மாதத்திலே சொல்லி யிருந்தால், சில வணிகர்கள் தப்பித்திருப்பார்கள். எனவே நீங் கள் இதைக் கவனத்திலே கொண்டு, அதிகாரிகளுக்கு உத்தர விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில உணவுப் பண்டங்களுக்கு, கடலை எண்ணெய், மஞ்சள், மிளகாய், மிளகு இதுபோன்ற உணவுப் பண்டங்களுக்கு பாண்டிச்சேரியிலும், பெங்களூரிலும் வரி விதிப்பு குறைவாக இருப்பதால், நம்முடைய மாநிலத்தில் இருப்பவர்கள் பார்ம்- 20-ஐப் பயன்படுத்தி, அதனால் ஏராளமான அளவில் வரி ஏய்ப்புச் செய்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு அண்டை மாநிலங்களில், அதாவது குறிப்பாக பாண்டிச்சேரியிலும், பெங் களூரிலும் இருக்கின்ற அந்த வரி விதிப்புக்கு இணையாக, நம் முடைய மாநிலத்திலும் அவ்வாறு குறைத்து, நிறைய அந்த வரி மூலம் வருகின்ற வருவாயைப் பெருக்குவதற்கு முன் வரு வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அரிய யோசனையை இந்த அரசு ஆய்ந்து தக்க நடவடிக்கையை மேற்கொள்ளும்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, நீதிமன்றங்களில் தடை உத்தரவு பெறப் பட்டதால், வசூலிக்கப்பட வேண்டிய வரித் தொகை, ஆட்சி மன்றச் செயலாளர் அவர்கள் பதில் உரையில் கூறியதைப் போன்று, சென்னை உயர்நீதிமன்றத்தில் 57.06 கோடி ரூபாய், தடை உத்தரவினால் நிற்கிறது என்று சொன்னார் கள். அனேகமாக இந்த ஆயத் தீர்வை, அதாவது மதுவின் மேல் போடப்பட்ட ஆயத் தீர்வைக்கும் சேர்த்து, கட்டப் படவேண்டிய விற்பனை வரியாக இது இருக்கும் என்று நினைக் கிறேன். நேற்று நீதிமன்றத்தில் ஹானரபிள் ஜஸ்டிஸ்மோகன் அவர் களால் இந்தப் பெட்டிசன் டிஸ்மிஸ் செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவே அவர் கூறியது எது என்பது விளங்கவில்லை. இருந்தா லும் வணிகர்கள் நல வாரியம் அமைப்பதற்காக ரூ. 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு இணையான ஒரு நிதியை வணிகர்கள் கொண்டு வர வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது. அது எங்களுக்குப் புரிய வில்லை. ஆகவே அதற்கு உரிய விளக்கத்தையும் தயவுசெய்து அளிக்குமாறு நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். ஏனென்றால் வணிகர்களும ரூ. 2 கோடி கொண்டு வர வேண்டும் என்றால். .. (குறுக்கீடு).



*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வணிகர்கள் நல வாரியம் வைக்க அரசு விற்பனை வரித் தொகையிலிருந்து ரூ. 2 கோடி ஒதுக்குவதாக முடிவு செய்திருக்கிறது. ஒரு சமமான தொகையை அவர்களும் பங்கு பெறுகின்ற வகையிலே வழங்க வேண்டுமென்று தொடக்கத்திலே கூறப்பட்டது. ஆனால் வணிகர் கள் சிலர் என்னைச் சந்தித்து, இந்தத் துறையினுடைய செய லாளரைச் சந்தித்து, அந்த அளவிற்கு எங்களால் தர இயலாது என்று சொன்னதற்குப் பிறகு, அவர்களுக்கும் அந்த வாரியத் திலே பங்கு இருக்கின்ற வகையிலே, ரூ. 2 கோடியை அரசு ஒதுக்குவதால், 10 சதவிகித அளவிற்காவது அவர்கள் ஒரு தொகையை வழங்கினால் ஒரு பிடிப்பு இருக்கும், ஒரு உரிமை இருக்கும் என்கின்ற வகையிலே அது குறைக்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண். 43-க்கான கொள்கை விளக்கக் குறிப் பிலே, 'இது ஒரு கூட்டுக் கொள்கையாகும். இதில் பொதுவாக உதவி மானியங்கள், முன்னாள் சமஸ்தான மன்னர்களுக்கு அளிக் கப்படும் அரசியல் ஓய்வூதியங்கள், அதற்கும் சேர்த்து இதிலே வருகிறது, என்ற அளவில் இருப்பதால், எத்தனை முன்னாள் சமஸ்தான மன்னர்களுக்கு இப்போது அரசியல் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது? அவர்கள் தமிழ்நாட்டில் இன்னும் இருக்கிறார் களா? எவ்வளவு தொகை அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்) : புதுக்கோட்டை மன்னர் அவர்களுக்கு இப்போதும் அந்தத் தலைப் பில் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : இங்கே பேசிய பல அங்கத்தினர்கள் டீ.டீ.சி. கூட்டத்தில் கலெக்டர் தலைமை தாங்குவது சரியில்லை என்பது மாதிரிச் சொன்னார் களே, அதைப்பற்றி ஒரு விளக்கமும் இல்லை. இப்போது கலெக் டர் அவர்கள் கையில்தான் எக்சிகியூடிவ் அதாரிட்டி இருக்கிறது. அவர்கள் சொன்னால்தான் மற்ற அதிகாரிகள் அங்கே வேலை செய்ய முடியும். அதை விட்டு விட்டு, தனிப்பட்டவர்கள்தான், மூத்த உறுப்பினர்கள்தான் இருக்க வேண்டுமென்று பல அங்கத் தினர்கள் பேசிக் கொண்டிருந்தார்களே, அதற்கு அமைச்சரவர் கள் என்ன விளக்கம் அளிப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தற்போதைக்கு அம்மையார் அவர்களுடைய கருத்துத்தான் நடைமுறைப்படுத் தப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் பாராளு மன்றச் செயலாளர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் வரி

யைப் பற்றி அதிகமாகப் பேசினார்கள். ஆனால் மாவட்ட நிர்வாகத்தைப் பற்றி அவர் ஒன்றும் பேசவில்லை என்பதையும், பல்வேறு கருத்துக்கள் என்னுடைய வெட்டுத் தீர்மானங்களில் பல யோசனைகளாகக் கூறப்பட்டிருந்தும், அவருடைய பேச்சில் முழுவதுமாக அவைகள் விடப்பட்டிருக்கின்றன என்பதையும், மாவட்ட நிர்வாகம் முறையாக, சீராக நடைபெறவேண்டுமென்ற வகையில், அதற்கு அவர் பதில் சொல்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கொடுத்தது உண்மைதான், வெட்டுத் தீர்மானங்களின் வாயிலாக. இங்கே பேசிய உறுப்பினர்களிலே பெரும்பாலோர் வரியைப் பற்றித்தான் பேசினார்கள். மாவட்ட நிர்வாகத்தைப் பற்றி மேலெழுந்தவாரியாக ஓரிருவர் குறிப்பிட்டார்கள். ஆகவே நான் என்னுடைய பதிலிலேகூட அவர்கள் குறிப்பிட்ட முக்கியக் கருத்துக்களை எல்லாம் குறிப்பெடுத்து, அதற்குப் பதில் சொல்கின்ற வகையில்தான் சொன்னேன். இப்போது அவர்கள் சொல்வது போன்று பல கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே மிக முக்கியமானவைகள் எல்லாம், பிர்க்காக்களைப் பிரிக்க வேண்டும், மாவட்டங்களைப் பிரிக்க வேண்டும் என்பதாகும். அதையெல்லாம் பற்றி அதிகமாக இங்கேயே பேசவில்லை என்ற காரணத்தால் நானும் பதில் கூறவில்லை. அவ்வளவு தான். ஆனால் அதில் இருக்கிற முக்கியமான கருத்துக்களை எல்லாம், நிச்சயமாகப் பரிசீலனையில் எடுத்துக் கொள்ளும், ஏற்றுக் கொள்ளும் இந்த அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர்களே அறிவார்கள்.

**(பிற்பகல் 2.10).**

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லும்போது ஓய்வூதியம் பெறக் கூடியவர்களைப் பற்றிச் சொன்னேன். உதாரணமாக 1970-ஆம் ஆண்டுக்கு முன்னால் ஓய்வு பெற்ற ஒரு பி.டீ. ஆசிரியர், ரூ. 100, ரூ. 200 என்று வாங்கி வந்த நிலையில், இன்றைக்கு வாங்கக் கூடிய ஓய்வூதியம் மிக மிகக் குறைவாக இருக்கிறது. அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியாமல் இருக்கிறார்கள். ஏனென்றால் அப்போதிருந்த விலைவாசிகள், ரூபாயினுடைய மதிப்பு அப்படி இருந்தது. அதற்குப் பின்னால், பல்வேறு காரணங்களினால் ஊதியம் உயர்ந்து விட்டது. ஊதியம் உயர்ந்து விட்ட பிறகு, இப்போது ஓய்வூதியம் பெறக்கூடியவர்களுக்கு நியாயமான ஓய்வூதியம் கிடைக்கிறது. 1970 ஆம் ஆண்டிற்கு முன்னால் ஓய்வு பெற்றவர்கள் எல்லாம், மிக மிகக் குறைவாக ரூ. 200, ரூ. 250 என்ற அளவில் வாங்குவதாகச் சொன்னார்கள். ஆகவே அந்த ஓய்வூதியம் மிக மிகக் குறைவாக இருக்கிறதே, அதை உயர்த்துவதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.



இன்னும் ஒன்று 22—9—1984 அன்று போட்ட உத்தரவு. அந்த உத்தரவிலே டெம்பரவரியாக அப்போது பணியாற்றியவர்களையெல்லாம் நிரந்தரம் ஆக்கப்படுவார்கள் என்று அன்றைக்கு முன்னால் இருந்த முதலமைச்சர் சொல்லி பல்வேறு ஆட்கள் நிரந்தரம் ஆக்கப்பட்டார்கள். அந்த ஒரு தேதியில் மட்டும் பணியாற்றாமல் அதற்கு முன்பும் பின்பும் பணியாற்றியவர்கள், 2 ஆண்டு, 3 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்கள் விடுபட்டிருக்கிறதே, அது சம்பந்தமாக ஒன்றும் சொல்லவில்லையே அதைச் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியமிக்கப்பட்டிருக்கிற சம்பளக் குழு, கமிஷன் ஓய்வு ஊதியங்களையும் பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்க இருக்கிறது. ஆகவே அவைகளையெல்லாம் பற்றி அந்தக் குழு தீவிரமாக ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரை செய்யும். அவைகளை இந்த அரசு ஏற்றுச் செயல்படுத்தும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகரத்தைத் தவிர்த்து ஏனைய மாவட்டங்களுடைய மாவட்ட நிர்வாகத்தோடு அவர்கள் கலந்துரையாடல் செய்யவும், ஆலோசனை சொல்லவும் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் இருக்கின்றன. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மற்ற மாவட்டங்களில் அந்த வாய்ப்புக் கிடைக்கிறது. ஆனால் சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் இங்கே 14 தொகுதிகளிலும் இருக்கிற நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நேரிடையாக அந்த வாய்ப்பு இல்லை. மாவட்ட நிர்வாகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு இல்லை. எனவே ஏனைய மாவட்டங்களில் இருப்பதைப் போல, வளர்ச்சி மன்றமோ அல்லது வளர்ச்சி மன்றம் போன்ற ஏதோ ஒரு அமைப்போ நம்முடைய சென்னை மாவட்டத்திற்கும் ஏற்புடையதாக 14 சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாவட்டங்களில் ஒன்றியங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள் என்ற முறையிலே தான் நிர்வாக அங்கங்கள் இருக்கின்றன. எனவே தான் இது போன்ற மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டங்களைக் கூட்டி அவர்களுடைய கருத்துக்களை அறிந்து செயல்பட்டு வந்திருக்கிறது. ஆனால் சென்னையைப் பொறுத்த வரையில் சென்னையின் முழு நிர்வாகத்தை கவனித்துக் கொள்ள மாநகராட்சி மன்றம் இருக்கிறது. எனவே இங்கே வளர்ச்சி மன்றம் தேவையில்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டினுடைய சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்த தியாகச் செம்மல்களுக்கு, தியாகிகளுக்கு வழங்குகிற உதவித் தொகை ரூ. 250 ஆக இருக்கிறது. அதை ரூ. 500 ஆக மாற்ற வேண்டும். அதே நேரத்தில் இன்னும் பல்வேறு நூற்றுக் கணக்கான தியாகிகளுக்குப் பென்ஷன் வழங்காமல் தமிழக அரசு ஏதோ ஒரு எல்லையை நிர்ணயம் செய்திருப்பதாக அறிகிறேன். அப்படி எல்லை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் நீண்ட நாள் பெண்டிங்காக இருக்கின்ற தியாகிகள் பென்ஷன் கேஸ்களை முடிவுக்குக் கொண்டு வந்து அவர்களுக்குப் பென்ஷன் வழங்கத் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தியாகத்திற்கு எல்லையே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. மானியக் கோரிக்கை எண். 4....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் இங்கே ஒரு ஐயத்தை எழுப்பினார்கள். இப்போது நிலுவையிலே உள்ள இந்த விற்பனை வரித் தொகையைக் குறித்து நேற்றைய தினம் உயர்நீதிமன்றத்திலே வழங்கப்பட்ட தீர்ப்புக் குறித்து அவர்கள் குறிப்பிட்டார்கள். நேற்று தீர்ப்பு வழங்கப் பட்ட தொகை சுமார் 24 கோடி ரூபாயும் இந்த நிலுவையிலேயே அடங்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 4.

### பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம்

திருவாளர்கள் கோ. வீரையன், கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

திரு. மா. சுந்தரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவயின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது



மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 4 — பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம்— என்ற தலைப்பின் கீழ் ரூ. 23,97,80,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

திருவாளர்கள் கோ. வீரையன், கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 9 — மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்— என்ற தலைப்பின் கீழ் ரூ. 49,85,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம்.

திருவாளர்கள் சி. கோவிந்தராஜன், கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

திருவாளர்கள் ஜி. பழனிச்சாமி, ரெ. பிச்சைமுத்து ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிருவாகம்— என்ற தலைப்பின் கீழ் ரூ. 62,63,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப் பெற்றது.

திருமதி பாப்பா உமாநாத் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்— என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,88,26,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 43—பல்வகை.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :



" மானியக் கோரிக்கை எண். 43—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,03,40,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 58—பல்வகை மூலதனச் செலவு.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண். 58—பல்வகை மூலதனச் செலவு—என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,75,60,000-க்கு மேற்படாததொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

திருவாளர்கள் என். பழனிவேல், கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாகக் கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்—என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 3,75,10,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை 27—4—1989 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-18 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்,

91. சேரன் பொறியியற் கழகத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

92. சேரன் போக்குவரத்துக் கழகத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

93. மதுரை பாண்டியன் பொறியியற் கழகத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

94. அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

95. சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

128. கோரிக்கை எண் 4—தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் (தமிழ், ஆங்கிலம்).

129. கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும், 1989–90 (தமிழ், ஆங்கிலம்).

130. கோரிக்கை எண் 43—பல்வகை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989–90 (தமிழ், ஆங்கிலம்).

131. கோரிக்கை எண் 43—அகதிகள், தாயகம் திரும்பியோர், குடிபெயர்ந்தோர் துயர் தணிப்பும் மறுவாழ்வும், 1989–90 (தமிழ், ஆங்கிலம்).

132. கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989–90 (தமிழ், ஆங்கிலம்).

133. கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும், (தமிழ், ஆங்கிலம்).

134. மறு வாழ்வுத் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1989–90 தமிழ், ஆங்கிலம்).



## இணைப்பு 1.

### மானியக் கோரிக்கை எண் 4.

### தமிழ்நாடு பொதுவிற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிர்வாகமும்.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், ஏனைய வணிக வரிச் சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் விற்பனை வரியாக வசூலிக்கப்பட்ட தொகை 1987–88 ஆம் ஆண்டில் ரூ. 1,313.49 கோடியாகும். 1988–89-ல் வணிக வரிகள் வாயிலாக ரூ. 1,502.73 கோடி வருவாய் கிட்டியது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ. 189.24 கோடி, அதாவது 14.41 சதவீதம் அதிகமாகும்.

2. வணிகவரித் துறையில் வரும் வரிவிதிப்புச் சட்டங்களை நிருவகித்து வருகிறது

(1) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

(2) தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

(3) தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரிச் (மேல் வரி) சட்டம்.

(4) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

(5) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் ட்டம்.

(6) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங் கள் நிதிச் சட்டம்.

(7) தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

(8) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஒட்டல்கள்—தங்கும் இல்லங்களில் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம்.

(9) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம்.

3. கடந்த ஐந்தாண்டுகளில் வணிகவரித் துறை வசூல் செய்த வருவாயும் அதற்காக இத்துறைக்கு ஏற்பட்ட செலவும் வருமாறு :—

| ஆண்டு. (1) | வருவாய். (2) | செலவு. (3) |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்.) | |
| 1983—84 | 751.18 | 10.68 |
| 1984—85 | 905.32 | 12.31 |
| 1985—86 | 1,035.13 | 13.80 |
| 1986—87 | 1,172.44 | 15.58 |
| 1987—88 | 1,313.49 | 17.35 |
| 1988—89 | 1,502.73 | 20.77 |

4. வணிகவரி அலுவலகங்களுக்கு அரசுக் கட்டிடங்கள் கட்டுதல் :—

வணிக வரி அலுவலகங்களுக்கு வரும் வணிகப் பெருமக்களுக்கும் வணிக வரித் துறைப் பணியாளர்களுக்கும் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்குடன் வணிக வரி அலுவலகங்களுக்கு படிப்படியாக கட்டிடங்கள் கட்டும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது. தற்போது வணிக வரித் துறை அலுவலகங்களில் பெரும்பான்மையானவை அரசுக் கட்டிடங்களில் அமைந்துள்ளன. வணிக வரித் துறை அலுவலகங்களுக்குப் படிப்படியாக அரசு கட்டிடம் கட்டும் திட்டத்தின்படி 1988-89 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகள் முடிக்கப்பட்டுள்ளன :—

(1) தேனியில் வணிக வரி அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.

(2) தூத்துக்குடியில் வணிக வரி அலுவலகத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

(3) நாகர்கோயிலில் தற்போதுள்ள வணிக வரி அலுவலகக் கட்டிடத்தில் கூடுதல் மாடி கட்டுதல்.



(4) திருச்சியில் தற்போதுள்ள வணிக வரி அலுவலகக் கட்டிடத்தில் கூடுதல் மாடி கட்டுதல்.

(5) கோயம்புத்தூரில் வணிக வரி அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.

(6) கும்பகோணத்தில் வணிக வரி அலுவலகக் கட்டிடத்தில் கூடுதல் மாடி கட்டுதல்.

(7) நாகப்பட்டினத்தில் வணிக வரி அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.

(8) திருவாரூரில் வணிக வரி அலுவலகக் கட்டிடத்தில் கூடுதல் மாடி கட்டுதல்.

(9) உதகமண்டலத்தில் வணிக வரி அதிகாரிகளுக்கு குடியிருப்புகள் கட்டுதல்.

கரூரில் வணிக வரி அலுவலகக் கட்டிடம் கட்டும் பணி நடந்தேறி வருகிறது.

5. வணிகவரிச் சோதனைச் சாவடிகள் :

தமிழ்நாட்டில் 48 வணிக வரித் துறை சோதனைச் சாவடிகள் உள்ளன. அவற்றுள் பின்வரும் சோதனைச் சாவடிகள் தற்போது அரசுக் கட்டிடங்களில் செயல்படுகின்றன. முதல் 12 சோதனைச் சாவடிகள் நிரந்தரமான அரசுக் கட்டிடங்களிலும், எஞ்சியுள்ள ஒன்று ஓரளவு நிரந்தரமான அரசுக் கட்டிடத்திலும் செயல்படுகின்றன :—

(1) இரும்புலியூர்—தாம்பரம்.
(2) பூவிருந்தவல்லி.
(3) புழல்.
(4) இராணிப்பேட்டை.
(5) ஓசூர்.
(6) கே. ஜி. சாவடி.
(7) மீனாட்சிபுரம்.
(8) காட்பாடி.
(9) சின்ன சேலம்.
(10) புளியறை.
(11) சன்னூரப்பட்டி.
(12) கடம்பர்கோயில்.
(13) தோப்பூர்.

ஏனைய 35 சோதனைச் சாவடிகள் புறம்போக்கு நிலத்தில் அல்லது தனியார் கட்டிடங்களில் அமைக்கப்பட்ட கீற்றுக் கொட்டகைகளில் செய்யப்படுகின்றன. களியக்காவிளையில் ரூ. 4 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சோதனைச் சாவடிக் கட்டிடம் கட்டுவதற்கான செயல்குறிப்புச்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. இராணிப்பேட்டை, கந்தே கவுண்டன் சாவடி ஆகிய இரு இடங்களிலும் இருவழிச் சோதனைச் சாவடிகள் அமைப்பதற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 4.71 இலட்சம் (தொடரினம்) அனுமதிக்கப்பட்டுள்ளது.

6. செய்தித்-தொடர்பு வசதிகள் :

பெரும்பாலும், அனைத்து வரிவிதிப்பு வட்டங்களுக்கும் தொலைபேசி வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. புதிதாகப் பிரிக்கப்பட்ட வரிவிதிப்பு வட்டங்களுக்கும் தொலைபேசி வசதிகள், படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ், அளிக்கப்படும்.

7. வரிவிதிப்பு வட்டங்களை வலுப்படுத்தல், பிரித்தல், சீரமைத்தல் முதலியன :

வரி விதிப்பு வட்டங்கள் மீது திறமையான கட்டுப்பாட்டைச் செலுத்தும் பொருட்டும், வருவாய் நிலையை மேம்படுத்தவும், தற்போதுள்ள சென்னை கோட்டங்கள் (வடக்கு, தெற்கு கோட்டங்கள்) மூன்றாகப் பிரிக்கப்பட்டு சென்னை மத்திய கோட்டம் என்று ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதிய மத்தியக் கோட்டத்தை ஏற்படுத்துகையில் IX ஆம் மண்டலம் என்ற புதிய வணிகவரி மாவட்டம் ஏற்படுத்தப்பட்டது

8. கூடுதல் ஆயத்தீர்வை—அனுப்பீடு சரக்கு வரி :

துணி, சர்க்கரை, புகையிலை ஆகியவற்றின் மீது விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத்தீர்வையை மத்திய அரசு விதித்து வருகிறது. இக்கூடுதல் ஆயத் தீர்வையிலிருந்து கிடைக்கும் நிகர வருவாயில் மாநில அரசு பங்கு பெற தகுதியுடையதால், இப்பொருட்கள் மீது மாநில அரசு விற்பனை வரி விதிக்க முடியாது. மேற்கூறிய மூன்று இனங்களில் போதுமான வருவாய் கிடைக்கும் வகையில் ஆயத்தீர்வையின் வீதத்தைச் அதாவது அந்த மூன்று இனங்களின் மதிப்பிற்கான (Value of Clearar ce) சதவீதமாக, உயர்த்துவது அவசியம் என்று இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்தி வந்துளளது. கூடுதல் ஆயத் தீர்வையிலிருந்து கிடைக்கும் நிகர வருவாயின் பங்கினைக் காட்டிலும், விற்பனை வரியிலிருந்து கிடைக்கும் வருவாயானது அதிகமாகயிருப்பதால் இத்திட்டம் செயல்படுவது குறித்து மாநில அரசுகள் மகிழ்ச்சி அடையவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. திரிபாதி குழுவின் பரிந்துரைகளின்படி வனஸ்பதி, மருந்துப் பொருட்கள் மற்றும்





மருந்துகள், சிமிட்டி, காகிதம், காகித அட்டை, பெட்ரோலியம் பொருட்கள் ஆகிய ஐந்து பொருட்களைப் பொருத்தவரையில், கூடுதல் ஆயத் தீர்வை விதிக்க மத்திய அரசு கருதியது. 1989 ஆம் ஆண்டு பிபரவரித் திங்கள் 9 ஆம் மற்றும் 10 ஆம் நாட்களில் புதுடில்லியில் மத்திய நிதி அமைச்சர் கூட்டிய முதலமைச்சர்கள் மாநாடடில் மேற்சொன்ன ஐந்து பொருட்களின் மீது விற்பனை வரிக்குப் பதிலாக சுடுதல் ஆயத் தீர்வை விதிப்பதற்கு இந்த அரசு ஆணித்தரமாக எதிர்ப்பு தெரிவித்துள்ளது. மத்திய அரசு தற்போது இதனை கைவிட்டு விடடது.

மேற்சொன்ன மாநாட்டில் கிடைக்கப் பெற்ற ஒருமித்த கருத்துக்களின் அடிப்படையில், மாநிலங்களிடையே பொருள் விற்பனை குறித்து, அனுப்பீடு சரக்கு வரிவிதிப்பிற்கான சட்டம் ஒன்றை இயற்றவும், இந்த ஆண்டு நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் இச்சட்டத்தைக் கொண்டுவரவும் மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது

9. வணிக வரித்துறைப் பணியாளர் பயிற்சி நிலையம் ,சென்னை :

1982 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வரும் வணிக வரித்துறைப் பணியாளர் பயிற்சி நிறுவனத்தில், வணிக வரித் துறை அலுவலர்க்கு பயிற்சியளிக்கப்படுகிறது. இந்த பயிற்சி நிறுவனத்திற்கு வணிக வரிகள் துணை ஆணையாளர் தலைவராக இருக்கிறார். இந் நிறுவனம், வணிக வரி அலுவலர், துணை வணிக வரி அலுவலர், உதவி வணிக வரி அலுவலர் ஆகியோருக்கு நினைவுகூர் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றது. மேலும், வணிக வரி அலுவலர்களுக்கும், உதவி வணிக வரி அலுவலர்களுக்கும் ஆறு வாரமும், துணை வணிக வரி அலுவலர்களுக்கு மூன்று வாரமும் பணியிடைப் பயிற்சி அளிக்கிறது. பயிற்சி முடிந்ததும், தேர்வு ஒன்று நடத்தப்பட்டு பயிற்சியாளர் ஒவ்வொருவரின் தகுதி பற்றிய அறிக்கை, சிறப்பு ஆணையாளர்-வணிக வரிகள் ஆணையாளருக்கு அனுப்பப்படுகிறது.

10. ஆலோசனைக் குழுக்கள் :

விற்பனை வரி, நிர்வாகம் குறித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்யவும் பொதுமக்களின் கருத்துக் கணிப்பு என்ன என்பதை அறியவும், உதவும் வகையில் பல்வேறு நிலைகளில் ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத்துள்ளது. பல்வேறு ஆலோசனைக் குழுக்களின் பங்கு கீழே விவரிக்கப்பட்டுள்ளது :—

(i) மாவட்ட அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள் :

மாவட்ட அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுக்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைவர்களாக இருக்கின்றனர். இக் குழுக்களில், அரசு சார்புள்ள உறுப்பினர்

களுடன், வர்த்தக சபை வணிகச் சங்கங்கள் கூட்டுறவு, உழவுத் தொழில் சார்பு அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் அரசுச் சார்பற்ற உறுப்பினர்களும் உள்ளனர். விற்பனை வரிச் சட்டங்கள், விதிகள் ஆகியவற்றை நடைமுறைப் படுத்துவதில் வர்த்தகத் துறைக்கே உரித்தான பல பிரச்சினைகளை இக் குழு விவாதிக்கிறது. இக் குழுவின் ஆய்வுகளும், அவை தெரிவித்த கருத்துகளும் நிருவாக மேம்பாடு கருதியும், வர்த்தக சமூகத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளவும், கருத்தில் கொள்ளப்படுகின்றன.

(ii) மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுவும், வணிகர் நல ஆலோசனைக் குழுவும் :

மேற்கூறிய இரு குழுக்களின் செயல் நோக்கங்கள் ஏறக் குறைய ஒன்றாக இருப்பதால், அதாவது, வணிக வரிகள் தொடர்பான சட்டங்களைச் செயலாக்குவதில் வணிகர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை விவாதித்துத் தீர்க்க வேண்டியவையாக இருப்பதால், மேற்படி இரு குழுக்களையும் ஒன்றாக இணைக்கலாம் என அரசு ஆணையிட்டது. அவ்வாறு ஒன்றாக இணைந்த பின்னர் இக்குழுவில் வணிகவரிகள் துறை அமைச்சர் தலைவராகவும் அரசு சார்புள்ளவர்களும், அரசு சார்பற்றவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் குழுவின் உறுப்பினர்களாகவும் இருப்பர்.

11. குறை தீர்க்கும் பிரிவு :

குறை தீர்க்கும் பிரிவு ஒன்று 1984 செப்டம்பரில் அமைக்கப்பட்டுள்ளது. இணை ஆணையாளர் (நிருவாகம்) இப்பிரிவின் தலைவராவார். 1988 ஜனவரியிலிருந்து இணை ஆணையாளரும் (மக்கள் தொடர்பு), உதவி ஆணையாளரும் (சிறப்புப் பிரிவு) உறுப்பினர்களாக உள்ளனர். இப் பிரிவு, வணிக சமூகத்தினரின் குறைகளைக் கேட்டு, அவற்றை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதற்கென்றே அமைக்கப்பட்டுள்ளது.

12. கணிப்பொறி மையம்:

வணிக வரிகள் துறை தனக்கென்று கணிப்பொறி மையம் ஒன்றை அமைத்துள்ளது. இது 1988 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டிலிருந்து செயல்படத் தொடங்கியது. கணிப்பொறி இயக்கத்தில் தனிப் பயிற்சி பெற்ற உதவி ஆணையாளர் இந்த மையத்தின் தலைவராக உள்ளார். இதில், வணிகவரி அலுவலர் பதவித் தரத்தில் கணிப்பொறி முறை ஆய்வாளரும், புள்ளி விவரத்துறையின் உதவி இயக்குநர்கள் பதவித் தரத்தில் கணிப்பொறி விவரத் தொகுப்பாளர் இருவரும் இவர்களுக்கு உதவியாக தேவையான பணியாளர்களும் உள்ளனர். இம் மையம், சென்னைக் கிரீம்ஸ் சாலையில் உள்ள வணிகவரிகள் அலுவலக கட்டிடத்தில் தற்போது செயல்பட்டு வருகின்றது. இம்



மையம் பதிவு செய்யப்பட்ட வணிகர்கள் பற்றிய அடிப்படைத் தகவல்கள் அடங்கிய வணிகர்கள் விவர நூல் ஒன்றைத் தயாரிக்கின்றது. சென்னை மாநகரிலுள்ள வணிகர்களின் மாதாந்திர விற்பனை விவர அறிக்கையின் அடிப்படையில் வணீகப் பொருள் வாரியான விற்பனைத் தொகை பற்றிய புள்ளி விவரங்களையும், திங்கள்தோறும் கணிப்பொறி மூலம் இம் மையம் தொகுக்கிறது. இதன் மூலம் இரண்டாவது விற்பனை என வரி விலக்கு கோரும் இனங்களை ஒப்பிட்டுச் சரிபார்க்கவும். சென்னை மாநகரைச் சுற்றியுள்ள சோதனைச் சாவடிகளில் பதிவாகும் வணிகப் பரிமாற்ற விவரங்களை ஒப்பிட்டுச் சரிபார்க்கவும் இயலுகிறது. மேற்கண்ட திட்டங்கள் மூலம் தகவல்களை தொகுத்தல், அத்தொகுப்பைச் சரி பார்த்தல் ஆகியவைகளை விரைவுபடுத்தி வரி ஏய்ப்பைத் தடுக்க முடியும். கணிப்பொறி மையத்துக்குத் தேவையான கணிப்பொறியில் பயன்படுத்தப்படும் பொருள்கள் வாங்கவும் அம் மையத்திற்குத் தேவையான பணியாளர்களை நியமிக்கவும் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

13. நிறுவன அமைப்பு—நடைமுறைப் பிரிவு.

நிறுவன அமைப்பு—நடைமுறைப் பிரிவுக்கு, வணிக வரி அலுவலர் தலைவராக உள்ளார். தொடர்ந்து விரிவடைந்து வரும் இத் துறையின் வரி மதிப்பீட்டு அலுவலகங்களில் ஏற்பட்டுள்ள பணியின் அளவைத் திட்டமிட்ட முறையில் முறையாக ஆய்வு செய்யவும். தேவையான இடங்களில் கூடுதல் பணியாளர் நியமனத்திற்கு ஆலோசனை கூறவும் இப் பிரிவு தொடங்கப்பட்டது.

14. சட்டங்களில் சில முக்கியத் திருத்தங்கள்.

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

1. 36 ஆம் பதிவு, 1-1-1988-லிருந்து பின்வருமாறு திருத்தப்பட்டது :—

| தொடர் எண். | பொருள்களின் விவரம். | விற்பனை வரி முறை. | விற்பனை வரி வீதம் (சத வீதத்தில்). |
|---|---|---|---|
| 36 (i) | இயல்பு மாற்றப் பட்ட தேயிலை தவிர தேயிலைக் கழிவு. | முதல் விற்பனை முனை. | 6 |

[1989 ஏப்ரல் 26

| தொடர் எண். | பொருள்களின் விவரம். | விற்பனை வரி முறை. | விற்பனை வரி விதம் (சத விதத்தில்). |
|---|---|---|---|
| (ii) | சில்லறை விற்பனைக்காக பொட்டலங்களில் சிப்பஞ்செய்யப்பட்ட ''தேயிலை சாகோ'' எனப்படும் தேயிலை. | முதல் விற்பனை முனை. | 6 |
| (iii) | 20 கிலோ கிராமுக்கு அதற்குக் குறைவாகவும் ''யூனிட் கன்டெய்னர்'' களில் சிப்பஞ்செய்யப்பட்ட தேயிலை. | -டி- | 6 |
| (iv) | மேலே பட்டியலிடப் பட்டவை நீங்கலாக ஆனால் தேநீர்ப் பானம் அல்லாத தேயிலை அல்லது பதப்படுத்தாத தேயிலை. | -டி- | 6 |

2. பின்வரும் பதிவு 1-4-1988-லிருந்து முதல் விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது :—

| தொடர் எண். | பொருள்களின் விவரம். | விற்பனை வரி முறை. | விற்பனை வரி விதம் (சத விதத்தில்) |
|---|---|---|---|
| 178 | சலவை நீலம் அல்லது அல்ட்ராமெரைன் நீலம். | முதல் விற்பனை முனை. | 10 |

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் பின்வருந்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன :—



1989 ஏப்ரல் 26]

(1) இனம் (3)-ல் பத்தி (2)-ல் வரும் பதிவுகளில்—

(vi) ஆம் துணை இனத்திற்குப் பின்னர் பின்வரும துணை இனம் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

(v) மின்கலம் நீங்கலாக, மோட்டார் வண்டிகள் இழு வண்டிகளின் பாகங்களும் துணைப்பாகங்களும்.

(2) பின்வரும் புதிய இனங்கள், 7-10-1988-லிருந்து முதல் விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டன :

| தொடர் எண். | பொருள்களின் விவரம். | விற்பனை வரி முறை. | விற்பனை வரி விதம் (சத விதத்தில். |
|---|---|---|---|
| 179 | இந்த விவர அட்டவணையில் வேறு எங்கேனும் குறிப்பிடப் பட்டவை நீங்கலாக, எவர்சில்வரில் செய்யப் பட்ட பாத்திரங்கள். | இம் மாநிலத்தில் முதல் விற்பனை முனையில். | 10 |
| 180. | இரும்பு-உருக்குப் பெட்டகங்கள், பணம் வைக்கப்படும் இழுப் பறைப் பெட்டிகள் பணப் பெட்டிகள், சுவரில் பொருத்தப் பட்ட பணப் பேழைகள், பாதுகாப்புப் பெட்டகங்கள், பாதுகாப்பு அறைகள், சேமக் காப்பறை அல்லது பொருள்கள், பாகங்கள், துணைப்பாகங்கள் மேலே கூறிய உட்பட நிலவறைக் கதவுகளும், பலகணிகளும். | -டி- | |

[1989 ஏப்ரல் 26

| தொடர் எண். | பொருள்களின் விபரம். | விற்பனை வரி முறை. | விற்பனை வரி வீதம் (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| 181 | (i) அனைத்து வகை அறைக்கலன்கள் (வீட்டுப் பயனுக்கான அறைக்கலன்கள் உட்பட) 180 ஆம் இனத்தில் குறிப்பிடப்பட்டவை நீங்கலாக உருக்கு அலமாரிகளும் அலுவலகச் சாதனங்களும். | இம் மாநிலத்தில் முதல் விற்பனை முனையில் | 8 |
| | (ii) மேலே (i) துணை இனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவையும், இரும்பு, உருக்கு அல்லது ஏனைய உலோகம் அல்லது கலப்பு உலோகத்தால் செய்யப்பட்ட மேசை, நாற்காலிகள் அல்லது அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகிற நுனையுடன் கூடிய வளைவுச் சட்டங்கள், கட்டுமானக் கோணச் சட்டங்கள், தகடுகள், பலகைகள். | டி | 8 |
| 182 | விலங்கு இழுத்துச் செல்லும் வண்டியின் டயர்கள். | டி | |
| 183 | இரத்த நாளங்களில் மருந்துகளைச் செலுத்தப் பயன்படும் உபகரண அமைப்பும், டெக்ஸ்ரோசும். | டி | |



1989 ஏப்ரல் 26]

| தொடர் எண். | பொருள்களின் விபரம். | விற்பனை வரி முறை. | விற்பனை வரி வீதம். (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 184 | எந்தவொரு உலோகம் அல்லது பொருளால் செய்யப்பட்ட முள் கம்பி, வலைத்தகடு, சிறு துளை வலைத் தகடு, வெப்பத்தால் விரிவடையும் உலோகம், சங்கிலித் தொடர். | டி. | 8 |
| 185 | இவ் விவர அட்டவணையில் வேறெங்கும் குறிப்பிடப்பட்டவை நீங்கலாக பீங்கான் பொருள்களும் வெட்டு கருவிகளும். | டி | 8 |
| 186 | தோலினால் செய்யப்பட்ட பொருள்கள் உட்பட, சூட் கேஸ்கள், பிரீப் கேஸ்கள், அட்டாச் கேஸ்கள், டம்பப் பைகள். | டி | 8 |
| 187 | கார்பைட் முனைகளும் கருவிகளும் | .. | 8 |

V-ஆவது விவர அட்டவணையில் 1, 2, 4, 5 ஆம் இனங்களும் அவை தொடர்பான பதிவுகளும் நீக்கப்பட்டன.

15. வரி வசூல்.

A. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

[1989 ஏப்ரல் 26

1983–84 ஆம் ஆண்டிலிருந்து 1988–89 ஆம் ஆண்டு வரை மேற்சொன்ன சட்டத்தின் கீழ் பெற்ற வரவினங்கள் வருமாறு:—

| ஆண்டு. | மொத்த வரவினங்கள். (ரூபாய் கோடியில்) |
| --- | --- |
| 1983–84 | 588.40 |
| 1984–85 | 718.96 |
| 1985–86 | 824.46 |
| 1986–87 | 937.47 |
| 1987–88 | 1,062.08 |
| 1988–89 | 1,217.86 |

B. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

1983–84 ஆம் ஆண்டிலிருந்து 1988–89 ஆம் ஆண்டு வரை 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. | | | | | மொத்த வரவினங்கள். (ரூபாய் கோடியில். |
| --- | --- | --- | --- | --- | --- |
| 1983–84 | | .. | .. | .. | 118.22 |
| 1984–85 | .. | .. | .. | .. | 135.69 |
| 1985–86 | .. | .. | .. | .. | 150.06 |
| 1986–87 | .. | .. | .. | .. | 171.65 |
| 1987–88 | .. | .. | .. | .. | 184.90 |
| 1988–89 | .. | .. | — | — | 213.00 |



1989 ஏப்ரல் 26]

C. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

1983–84-ஆம் ஆண்டிலிருந்து 1988–89 ஆம் ஆண்டு வரையி லான கால அளவில் மேற்சொன்ன சட்டங்களின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. | | | | மொத்த வருவாய் (ரூபாய் கோடியில்). |
| --- | --- | --- | --- | --- |
| 1983–84 | .. | .. | .. | 39.26 |
| 1084–85 | .. | .. | .. | 44.88 |
| 1985–86 | .. | .. | .. | 53.28 |
| 1986–87 | .. | .. | .. | 57.98 |
| 1987–88 | .. | .. | .. | 60.21 |
| 1988–89 | .. | .. | .. | 63.21 |

இவ்விரு சட்டங்களும், கேளிக்கைகள் மீது வரிவிதிக்க வகை செய்கின்றன. தொகை செலுத்துவதன் பேரில், மக்கள் அனு மதிக்கப்படும் திரைப்படக் காட்சிகளுக்கும், குதிரைப் பந்தயங் களுக்கும் மட்டும் வரிவிதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாடு 1961-ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் வரி மூலம் கிடைக்கும் வருவாய் முழுவதும் அந் தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. அத்துடன் தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெறும் அடிப்படை கேளிக்கை வரித் தொகையில் 90 சதவீதத் தொகையும், இணக்கம் செய்து கொள்ளும் திட்டம் செயலில் இல்லாத பகுதிகளில் உள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படுகிறது.

வரி இணக்கம் செய்து கொள்ளும் திட்டம் செயலிலுள்ள பகுதி களில் வருவாய் பின்வருமாறு ஒதுக்கப்படுகிறது :—

| | ரசு. | உள்ளாட்சி மன்றங்கள். |
| --- | --- | --- |
| | (சதவீதம்) | |
| (i) முதல் நிலை தேர்வு நிலை நகராட்சிகள். | 35 | 65 |

| | | |
|---|---|---|
| (ii) இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகராட்சிகள். | 35 | 65 |
| (iii) ஊராட்சிகள். | 40 | 30 |
| | | ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் 30 |
| (iv) ஊராட்சி நகரியங்களும், நகராட்சி நகரியங்களும். | 35 | ஊராட்சிகள். 65 |

கேளிக்கை வரியை முறைப்படுத்த படத்தயாரிப்பாளர்களும், வினியோகஸ்தர்களும், திரையரங்கு உரிமையாளர்களும் முன் வைத்துள்ள கோரிக்கைகளை அவர்களின் பிரதிநிதிகளுடன் அரசு கலந்து பேசி முடிவெடுக்கும்.

D. தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

குதிரைப் பந்தயங்கள், சென்னையிலும் (கிண்டி), உதக மண்டலத்திலும் நடைபெறுகின்றன. 9–4–1986 முதல் இதனை தமிழ்நாடு அரசின் குதிரைப் பந்தயத் துறை எடுத்துக் கொண்டது.

1983–84 ஆம் ஆண்டு முதல் 1988–89 ஆம் ஆண்டு வரை இச்சட்டத்தின்கீழ் கிடைத்த வருவாய் வருமாறு:—

| ஆண்டு. | மொத்த வருவாய் (ரூபாய் கோடியில்). |
|---|---|
| 1983–84 .. .. .. .. | 3.78 |
| 1984–85 .. .. .. .. | 3.92 |
| 1985–86 .. .. .. .. | 4.55 |
| 1986–87 .. .. .. .. | 2.58 |
| 1987–88 .. .. .. .. | 3.52 |
| 1988–89 .. .. .. .. | 4.72 |



முந்தைய ஆண்டுகளில் முறையான குதிரைப் பந்தயங்கள் நடைபெறவில்லை. எனவே, பிற மைய பந்தயம் மூலமாக (inter Venue Betting) மட்டுமே வருமானம் கிடைத்தது. 1988 நவம்பரிலிருந்து முறையான குதிரைப் பந்தயங்கள் நடைபெறு கின்றன.

E. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள்மீது வரிவிதிப்புச் சட்டம்.

1983–84 ஆம் ஆண்டிலிருந்து 1988–89 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. | மொத்த வருவாய் (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| 1983–84 .. .. .. .. | 1.50 |
| 1984–85 .. .. .. .. | 1.81 |
| 1985–86 .. .. .. .. | 2.72 |
| 1986–87 .. .. .. .. | 2.69 |
| 1987–88 .. .. .. .. | 2.70 |
| 1988–89 .. .. .. .. | 2.87 |

F. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம்.

இச்சட்டம், 5–12–1983 முதற்கொண்டு செயலுக்கு வந்தது. வரி வீதங்கள், 17–11–1988-லிருந்து திருத்தப் பட்டன. 1987–88-ல் இச் சட்டத்தின்கீழ் கிடைத்த வருவாய் ரூ. 8.00 இலட்சமாகும். 1988–89-இல் கிடைத்த வருவாய் ரூ. 7.00 இலட்சமாகும்.

16. தமிழ்நாட்டில தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக, 1988-ல் அளிக்கப்பட்ட முனைப்பு ஊக்க உதவிகளும் சலுகைகளும்— முதல் தொகுப்பு 9-5-1988-லிருந்து.

(1) எஞ்சின் விசைத் திறன் எவ்வளவாகயிருந்தபோதிலும், எல்லாவகை இரு சக்கர வாகனங்கள் மீதான விற்பனை குறித்தும் வணிகர் ஒருவர் செலுத்தத் தக்க வரி வீதத்தை 4 சத வீதமாகக் குறைத்தல்.

(2) மின்னணுப் பொருட்கள், துணை பாகங்கள் விற்பனை மீது வணிகர் ஒருவர் செலுத்தத்தக்க வரி வீதத்தை 2 சத வீதத்திற்குக் குறைத்தல், 'C' அல்லது 'D' படிவங்களை அளிப்பதற்கு உட்பட்டு, மின்னணுப் பொருட்கள், துணை பாகங்கள் விற்பனை மீது செலுத்தத் தக்க மத்திய விற்பனை வரியை 1 சதவீதமாகக் குறைத்தல், இல்லையெனில் வரி வீதம் 2 சதவீதமாக இருக்கும்.

(3) விவர அட்டவணை I-ன், 117 ஆம் இனத்தின் கீழ் வரும் எல்லா வகை காகிதங்களுக்கும் வரி வீதத்தை 4 சத வீதமாகக் குறைத்தல்.

(4) ஹைடிரோ சல்ஃபைட் (சோடியம் ஹைடிரோ சல்ஃபைட்டு) விற்பனை மீதான வரி வீதத்தை 4 சதவீதமாகக் குறைத்தல்.

(5) துணி ஆலை இயந்திரங்களைப் பொருத்த வரை வரி வீதத்தை 4 சதவீதமாகக் குறைத்தல்.

(6) சுவர் கடியாரங்கள், மேசை கடியாரங்கள், கைக் கடியாரங்கள் அவற்றின் பாகங்கள் ஆகியவற்றைப் பொருத்த வரை வரி வீதத்தை 10 சதவீதமாகக் குறைத்தல்.

(7) மேலும், 33 உயிர் காக்கும் மருந்துகள் வரி வீதத்தை 4 சதவீதமாகக் குறைத்தல்.

(8) காலணி விற்பனை மீதான மொத்த வியாபாரத் தொகை ரூ. 2 இலட்சத்திற்கு மேற்படாவிட்டால், காலணி விற்பனை மீது வணிகர் ஒருவர் செலுத்தத் தக்க வரிக்கு விலக்களித்தல்.

(9) பின்வருவனவற்றின் விற்பனை மீது செலுத்தத் தக்க வரிக்கு விலக்களிக்கப்படுகிறது :—

(a) பசுந்தழை விதைகள்.

(b) வெள்ளைப் பூண்டு.

(c) இந்தியத் தர நிறுவன முத்திரை உடை... [illegible] மண்ணெண்ணெய் ஸ்டவ்கள்.

(d) அனைத்து வகை கருத்தடை சாதனங்கள்.

(e) கம்பென்ஜாயின் (சாம்பிராணி)

(f) லாடங்கல், லாட ஆணிகள்

(g) சாக்கட்டிகள்.



(10) வர்த்தகப் பெயர் இல்லாத அல்லது வர்த்தகப் பெயர் உள்ள (1959 ஆம் ஆண்டு வணிக வர்த்தகக் குறிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படாத) ரொட்டித் தயாரிப்புகள் விற்பனையில் வணிகர் ஒருவரின் ஆண்டு வியாபாரத் தொகை ரூ. 2 இலட்சத்துக்கு மேற்பட்டு, ஆனால் ரூ. 5 இலட்சத்திற்கு மேற்படாமல் இருக்கும்போது, அவர் செலுத்தத்தக்க வரி வீதத்தை 3 சதவீதமாகக் குறைத்தல் (மொத்த வியாபாரத் தொகை ரூ. 2 இலட்சம் வரை உள்ள வணிகர்களுக்கான மொத்த வரி விலக்கு தொடர்ந்து நடைமுறையில் உள்ளது).

(11) ஏற்றுமதி செய்வதற்கு உறையிடப் பயன்படும் பொருட்களின் விற்பனைமீது வணிகர் ஒருவர் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தல்.

(12) ரூ. 1.000 அல்லது அதற்குக் குறைவான மதிப்புடைய கைவினைப் பொருள் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தல்.

(13) பதப்படுத்தப்பட்ட உரிவைகள், தோல்கள் விற்பனை மீது வணிகர் ஒருவர் செலுத்தத்தக்க வரி விதத்தை 1 சத வீதமாகக் குறைத்தல்.

(14) தீப்பெட்டி வணிகர்களைப் பொறுத்தவரை மொத்த வியாபாரத் தொகை ரூ. 2,50.000-க்கு மேற்பட்ட கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளின் விற்பனை மீது அவர்கள் செலுத்தத்தக்க வரியை 2 சதவீதமாகக் குறைத்தல் :

(15) 900 cc-க்கு மேற்படாத எஞ்சின் விசைத் திறன் உடைய மோட்டார் கார் விற்பனை மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல்.

(16) 8 ஆம் விவர அட்டவணையின்கீழ் வரும் மோட்டார் பாகங்களையும் துணைப் பாகங்களையும், தயாரிக்க உதவும் துணை உறுப்புகள் விற்பனைக்கு, பிரிவு 3 (3) சலுகையை நீட்டித்தல்.

இரண்டாம் தொகுப்பு சலுகைகள் 7-10-1988 முதல் அமுலானது:—

(1) வணிக வாகனங்கள், அடிச்சட்டம் மீது இணைக்கப்பட்ட மேற்கூடுகள், தொடர் வண்டிகள், மோட்டார் பாகங்கள். துணைப் பாகங்கள் ஆகியவற்றின் மீதான வரியை 8 சதவீதமாகக் குறைத்தல்.

(2) டிராக்டர் விற்பனைமீது விற்பனை வரி வீதத்தை 3 சதவீதமாகக் குறைத்தல்.

(3) மூலப் பொருட்கள், பாகங்கள், செய்முறைப் படுத்தும் பொருட்கள் முதலியவற்றை வாங்குவதற்காக 3 (3) பிரிவின்கீழ் சலுகை வரி வீதத்தை 3 சதவீதமாகக் குறைத்தல்.

(4) குறிப்பிடப்பட்ட துணித் தொழில் எந்திர உதிரிப் பாகங்கள்மீது வரி வீதத்தை 4 சதவீதமாகக் குறைத்தல்.

(5) ஊறவைத்த தானியத்தை அரைக்கும் அரவை சாதனங்கள் (கிரைண்டர்கள்). சில வீட்டுப் பயன் துணைக் கருவிகள், விற்பனைமீது வரி வீதத்தை 8 சதவீதமாகக் குறைத்தல்.

(6) அலுமினியத்தால் செய்யப்படும் வீட்டுப் பயன் கலங்கள் மீது வரி வீதத்தை 4 சதவீதமாகக் குறைத்தல்.

(7) ஒருமுனை வரிவிதிப்பு அடிப்படையில் இரும்பு அலமாரிகள் மீது வரி வீதத்தை 8 சதவீதமாகவும் அனைத்து வகை மேசை நாற்காலி, போன்ற மரச் சாமான்கள், அலுவலகச் சாதனங்கள் மீது வரி வீதத்தை 8 சதவீதமாகவும் குறைத்தல்.

(8) உயர் அடர்த்தி பாலிதின் நூலிழைகளால் நெய்யப் பட்ட சாக்குகள் மீது வரி வீதத்தை 2 சதவீதமாகக் குறைத்தல்

(9) குங்குமப் பவுடர் விற்பனை மீது முழு வரி விலக்களித்தல்.

(10) விசைக் கலைப்பைகள் விற்பனைமீது முழு வரி விலக்களித்தல்.

(11) பருத்தி உள்ளாடைகள் மீது விற்பனை வரியை தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 3 சதவீத மாகவும், மத்தியவிற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 2சதவீதமாகவும் குறைத்தல

(12) எளிய பருத்தி சிட்ட நூற்சுருள்மீது விற்பனைவரியை 2 சதவீதமாகக் குறைத்தல்.

(13) அப்பளம், வடகம் முதலியவற்றிற்கு வரி விலக்கு வரம்பை ரூ. 2 இலட்சத்திலிருந்து ரூ. 5 இலட்சத்திற்கு உயர்த்துதல்.

(14) தையல், புத்தகம் கட்டுதல், நூலில் பசைபோடுதல்— பதப்படுத்துதல், தோல் பொருளில் சாயம் போடுதல், குரோமி யம், நிக்கல் முலாம் பூசுதல் போன்ற பெருமளவு தொழிலாளர் களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கில் அமைந்த பணி ஒப்பந்தங்கள்மீது வரி விலக்களித்தல்.

(15) V ஆம் விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள இனங்களை, மீண்டும் முதலாம் விவர அட்டவணையில் சேர்ப் பதன் மூலம் வரி விதிப்பு ஏற்பாட்டை ஒருமுனை வரி விதிப் பாக மாற்றுதல்.





இணைப்பு.

(16) சில இனங்கள் மீது பலமுனை வரி விதிப்பை ஒருமுனை வரி விதிப்பாக மாற்றுதல்.

(17) தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் தகுந்த திருத்தம் செய்வதன் மூலம் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கீழ்க்காணும் சலுகைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கப்படும்:—

(i) மூலப் பொருட்களை அல்லது பாகங்களை வாங்கும் போது 3(3) பிரிவின் கீழ், சலுகை வரி வீதத்தைப் பயன் படுத்திய பின்னர் தயாரிக்கப்பட்டு, கிளை நிலையத்திற்கு மாற்றுதல் மூலம் அல்லது அனுப்பீடு விற்பனை மூலம் ஏனைய மாநிலங்களுக்கு அனுப்பப்படும் பொருட்களின் மதிப்பில் 2 சதவீதம் என்ற வீதத்தில் வரி விதிப்பது தொடர்பான தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனைச் வரிச் சட்டத் தின் 3(4) பிரிவை நீக்குதல்.

(ii) விற்பனை வரி செலுத்துவதை தள்ளி வைக்கும் ஏற்பாட்டில் மேல்வரியையும் கூடுதல் மேல்வரியையும் சேர்த்தல்; வரி செலுத்துவதை தள்ளி வைக்கும் ஏற்பாட்டை புதிய தொழில்களுக்கும் நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கும் அறிவிக்க அரசுக்கு அதிகாரமளித்தல்.

(iii) மேல்முறையீடுகள், வரி தொடர்பான வழக்குகள், மறு ஆய்வுகள் ஆகியவற்றில் காலதாமதம் ஏற்படுவதைப் பொறுத்துக் கொள்வதற்கான கால வரம்பை உயர்த்துதல்.

(iv) வரி விதிப்பை, ஒரு முனை வரி விதிப்பிலிருந்து பலமுனை வரி விதிப்பாக மாற்றும்போது வரி செலுத்துவதில் வணிகர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளை நீக்குதல்.

மூன்றாம் தொகுப்பு சலுகைகள் 5—12—1988 முதல் அமுலானது

(1) தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழும், மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழும் திரைப்படச் சுருள் கள் விற்பனைமீது வரி வீதத்தை 6 சதவீதமாகக் குறைத்தல்.

(2) நிழற்படக் கருவிகள், திரைப்படம் காட்டும் கருவிகள், ஒலியைப் பதிவு செய்து மீண்டும் கேட்கச் செய்யும் சாதனம், ஆடிகள், வளைவு கார்பன் அல்லது திரைப்படக் கார்பன், அவற்றிற்குத் தேவைப்படும் பாகங்கள், துணைப் பாகங்கள் ஆகியவை உள்ளிட்ட திரைப்படச் சாதனங்கள் விற்பனைமீது வரி வீதத்தை 8 சதவீதமாகக் குறைத்தல்.

இணைப்பு [1989 ஏப்ரல் 26

(3) சிலைடுகள், படச் சுருள்கள் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் விளம்பர வரி விதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு குறைக்கப்பட்டுள்ளது :—

| உள்ளூர் பகுதிகள். | காட்சி ஒன்றுக்கு சிலைடு ஒன்றுக்கு வரி வீதம். 17—11—1988ஆம் நாளிலிருந்து வரி வீதம். | படச்சுருள் ஒன்றுக்கு வரி வீதம். |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1. மாநகராட்சி சிறப்பு நிலை நகராட்சிகள். | 0.15 | 0.70 |
| 2. தேர்வு நிலை நகராட்சிகள் | 0.10 | 0.60 |
| 3. முதல் நிலை நகராட்சிகள் | 0.05 | 0.50 |

செயலாக்கம், சலுகைகள், விலக்கு ஆகியவற்றை அளிக்கும் மேற்சொன்ன தொகுப்பு நடவடிக்கைகளின் நோக்கமும், குறிக்கோளும், தொழில் வளர்ச்சிக்குப் பொருத்தமான சூழலுக்கும், சூழ்நிலைக்கும் வகை செய்வதே ஆகும். 1989–90ஆம் ஆண்டில் மேற்சொன்ன தொகுப்பு நடவடிக்கைகளின் விளைவு முழு அளவில் உணரப்படும் என்றும், மாநிலத்திற்கு அதிக வருவாயை உருவாக்கக் கூடிய பொருளாதார நடவடிக்கை பெருமளவில் மேற்கொள்ளப்படும் என்றும் நம்பப்படுகிறது.

17. 1989–90ஆம் ஆண்டிற்கான சலுகைகள், விலக்குகள், கூடுதல் நிதி திரட்டுதல்.

1989–90ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதன்படி, 25—3—1989ஆம் நாளிலிருந்து கீழ்க்காணும் விற்பனை வரிச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன:—

I. கீழ்க்காணும் இனங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல்:—

(1) பெரும்பாலும் வேளாண் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் 3 குதிரைத்திறன், 5 குதிரைத் திறன் கொண்ட வேளாண் நீரிறைக்கும் பம்பு செட்டுகள்.

(2) மணல்.



1989 ஏப்ரல் 26 ] இணைப்பு.

(3) உடல் ஊனமுள்ளவர்கள் பயன்படுத்தும் தாங்கிகள் (crutches) சக்கர நாற்காலிகள், மோட்டார் பொருத்தப்பட்ட, பொருத்தப்படாத மூன்று சக்கர வண்டிகள், எல்லாவித ஊன்றுகோல்கள் ஆகியவை.

(4) பேனாக்கள், பால்பாயிண்ட் பேனாக்கள், ரீபில்கள், எழுத்தழிப்பான்கள், வண்ணப் பென்சில்கள், பென்சிலைக் கூராக்கும் சாதனங்கள் (Pencil Sharpeners) கரும்பலகைகள், கரும்பலகைத் துடைப்பான்கள், வடிவியல் கணித சாதனங்கள் அடங்கிய பெட்டிகள், அறிவியல்கூட அறுவைக் கருவிகள் அடங்கிய பெட்டிகள், ரப்பர் விளையாட்டுப் பந்துகள்.

(5) சீப்புகள்.

II. கீழ்க்காணும் இனங்களுக்கு விற்பனை வரியிலிருந்து 3—4—1989 முதல் விலக்களிக்கப்பட்டுள்ளது:—

(1) எழுதுவதற்கு உபயோகப்படுத்தும் மை.
(2) கோழித் தீவனம்.

III. கீழ்க்காணும் பொருட்கள், பலமுனை வரி விதிப்பிலிருந்து ஒருமுனை வரிவிதிப்பின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன :—

| பொருளின் பெயர். | வரி வீதம். (சதவீதம்). |
|---|---|
| (1) ஆயத்த (ரெடிமேட்) ஆடைகள் .. .. | 5 |
| (2) விலங்குகளால் இழுக்கப்படும் வண்டிகளின் சக்கர ட்யூப்கள் .. .. .. .. | 8 |
| (3) ஸ்கால்ப் நரம்பு, இரத்த இயக்கத்திற்கான கருவிகள், இரத்தம் கொடுப்பதற்கான கருவிகள், திரவம் செலுத்தும் கருவிகள், கன அளவைக் கருவிகள் .. .. | 8 |
| (4) பற்றவைக்கும் கோல்கள் .. .. .. | 10 |
| (5) பீடி இலைகள் .. .. .. .. | 5 |
| (6) ரப்பர் கலந்த கயிறு வகைப்பொருட்கள் .. | 5 |
| (7) தலைக் கவசங்கள் .. .. .. .. | 8 |
| (8) இலகுவான கூரைத் தகடுகள் .. .. | 8 |
| (9) கடப்பைக்கல் பலகைகள், சாகாபாத் கற்பலகைகள், கிரானைட் கற்பலகைகள் .. .. | 8 |

இணைப்பு. [1989 ஏப்ரல் 26

IV. கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்குக் கீழ்க்காணும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (1) பெட்ரோல் .. .. | வரிவீதம் 14 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்தல். |
| (2) வானூர்தி எரிபொருள் | வரிவீதம் 14 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக உயர்த்தல். |
| (3) தொழிற்சாலைகளுக்கான எந்திரங்கள். | வரிவீதம் 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தல். |
| (4) எந்திரங்கள் மூலம் தயாரிக்கப்படும் சோப்புகள் (கையினால் தயாரிக்கப்படும் சோப்புகள் நீங்கலாக.) | வரிவீதம் 6 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக உயர்த்தல். |

(5) ஆண்டொன்றுக்கு ரூ. 10 இலட்சமும், அதற்கு மேலும் வியாபாரம் செய்யக் கூடிய சிற்றுண்டி சாலைகள் மற்றும் உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப் பண்டங்கள் மீதும், பானங்கள் மீதும் 5 சதவீதம் வரி விதித்தல், விற்பனைத் தொகை ரூ. 10 இலட்சத்திலிருந்து ரூ. 15 இலட்சத்திற்கு மேற்படாமலிருந்தால் ஒட்டுமொத்த வரியாகவோ அல்லது 5 விழுக்காடு வரியோ செலுத்துவதற்கு அவர்கள் விருப்பப்படி அனுமதிக்கப்படுவர்.

(6) மாநகராட்சிகள், சிறப்பு நிலை நகராட்சிகள் ஆகியவற்றின் கீழ்வரும் அனைத்துப் பகுதிகளுக்கும், பொருந்தத்தக்க வகையில் மேல்வரியையும் கூடுதல் மேல்வரியையும் 10 சதவீதம் என்று ஒரே வரி விதிப்பாக சீரமைத்தல், ஏனைய அனைத்துப் பகுதிகளுக்கும் மேல்வரியை 8 சதவீதமாகச் சீரமைத்தல்.

(7) தற்போது கூடுதல் விற்பனை வரியானது, ரூ. 10 இலட்சத்திற்கும் ரூ. 40 இலட்சத்திற்கும் மிடையேயான வரி விதிக்கத்தக்க விற்று முதல்மீது 1.25 சதவீதம் என்றும், ரூ. 40 இலட்சமும் அதற்கு மேலும் உள்ள வரி விதிக்கத்தக்க விற்று முதல் மீது 1.5 சதவீதம் என்றும் விதிக்கப்படுகிறது. இனி ரூ. 1 கோடியும் அதற்கு மேலும் உள்ள வரி விதிக்கத்தக்க விற்று முதல் மீது கூடுதல் விற்பனை வரியை 2 சதவீதமாக உயர்த்த தற்போது கருதப்படுகிறது. ரூ. 10 இலட்சத்திலிருந்து ரூ. 1 கோடி வரையிலுள்ள விற்றுமுதல் மீதான கூடுதல் விற்பனை வரி வீதம் தற்போதைய நிலையிலேயே இருக்கும்.



1989 ஏப்ரல் 26]

(8) விற்பனை வரி ஏய்ப்பைத் தடுக்கவும் வர்த்தகம் வேறு மாநிலங்களுக்குச் சிதறுவதைத் தடுக்கவும், வேறு மாநிலங்களில் வாங்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் விற்பனைக்காக அல்லது சொந்த உபயோகத்திற்காக தமிழ் நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டால் அந்த மோட்டார் வாகனங்கள் மீது மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்திடும் போது நுழைவு வரி விதிக்கும் வகையில் புதிய சட்டத்தை இயற்றக் கருதப்பட்டுள்ளது. மோட்டார் வாகனம் எந்த மாநிலத்திலிருந்து கொண்டு வரப்படுகிறதோ அந்த மாநிலத்தின் விற்பனை வரி வீதம் தற்போது நம் மாநிலத்தில் உள்ள விற்பனை வரி வீதத்தைக் காட்டிலும் குறைவாக இருக்குமேயானால் அந்த வித்தியாசத்தின் அளவிற்கு நுழைவு வரி விதிக்கப்படும்.

18. வணிகர் நல வாரியம் :

வணிகர்களின் நலனைக் கட்டிக் காக்கவும், நலிவுற்ற வணிகர்களின் புனர் வாழ்வுக்கு உதவவும், வணிகர் நல வாரியம் ஒன்று ஏற்படுத்தப்படும். இதற்காக விற்பனை வரி வருவாயில், ரூபாய் இரண்டு கோடியை அரசு ஒதுக்கும். வணிகர்களது பங்கும் இதில் இருக்கும் வகையில், இந்த நல வாரியம் எவ்வாறு செயல்படுவது என்பது குறித்து விரிவாக ஆராய்ந்து விரைவில் முடிவெடுக்கப்படும்.

## இணைப்பு. II.

### நிதித்துறை (ஓய்வூதியம்.).

**கோரிக்கை 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு**

இக் கோரிக்கையில் கீழ்க்காணும் பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன :—

| | ரூ. |
|---|---|
| 2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் .. .. .. | 185,50,56,000 |
| 2235. சமூகப் பாதுகாப்பு நலன் ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள். | 2,75,55,000 |
| | 188,26,11,000 |

அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் உட்பட மானிய உதவிபெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்கள் உள்ளாட்சி மன்றங்களின் ஆசிரியர்கள் அல்லது நேர்விற்கேற்ப அவர் தம் குடும்பங்களைப் பொறுத்தவரையில் ஓய்வுஊதியத்தின் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக்குதல் உட்பட ஓய்வுதியங்கள், பணிகொடைகள், வருங்கால வைப்பு நிதிக்கான பங்குத் தொகை, குடும்ப ஓய்வூதியம் முதலியவை குறித்த செலவுகளைச் செய்வதற்கு இக் கோரிக்கை ஏற்பட்டுள்ளது.

**பொது.**

ஓய்வூதிய நன்மைகளை வழங்கும் விஷயத்தில், மத்திய அரசின் விதிகள்/ஆணைகளையே மாநில அரசு விழக்கமாக பின்பற்றுகிறது. அவ்வாறே, மத்திய அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படுகிற அதே வீதத்தில் ஓய்வூதிய நன்மைகள் சிலவற்றை அரசுவழங்கியுள்ளது. மத்திய அரசின் ஓய்வூதிய நடைமுறைக்கேற்ப, ஓய்வூதியம், பணிக்கொடை, சிறப்பு ஓய்வூதிய, பணிக்கொடை ஆகியவற்றைக் கணக்கிடும் நடைமுறை திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இறப்பு ஓய்வூதிய பணிக்கொடையின் உயரளவு தொகையை ரூ. 50,000விருந்து ரூ. 1 இலட்சத்திற்கு அரசு உயர்த்தியுள்ளது. ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அகவிலைப்படி வழங்குகிற விஷயத்தில்;மத்திய அரசின் ஓய்வூதிய நடைமுறையை அரசு பின்பற்றியுள்ளது.



**ஓய்வூதியம்.**

அரசுப் பணியாளர் ஒருவர், குறைந்தது 10 ஆண்டுகள் தகுதி பணி புரிந்திருந்தால், அவர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவராவார். ஓய்வு பெற்ற நாளுக்கு முன்னர் கடைசி 10 மாதகால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் என்ற ஒரே சீரான வீதத்தில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது. உயரளவாக 33 ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தவர்களுக்கு முழு ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. 33 ஆண்டுக்குக் குறைவான தகுதிப்பணி உள்ளவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் ஓய்வூதியம் குறைக்கப்படும். குறைந்தளவு ஓய்வூதியம் மாதமொன்றுக்கு ரூ. 245 ஆகும். உயரளவு ஓய்வூதியத்திற்கு உச்சவரம்பு ஏதுமில்லை.

**பணிக்கொடை.**

பத்து ஆண்டுக்குக் குறைவாக தகுதிப்பணி புரிந்தவர்களுக்கு பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவுபெற்ற ஒவ்வொரு ஆறுமாத பணிக்கும் 1/2 மாத ஊதியம் என்கிற ஒரே சீரான வீதத்தில் பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது ஆற்றிய பணிக்காக ஒரே நேரத்தில் வழங்குகிற ஒட்டுமொத்த தொகையாகும். அனுமதிக்கத்தக்க ஓய்வூதிய பணிக்கொடைக்கு கூடுதலாக இத்தொகை வழங்கப்படுகிறது. இதற்குக் குறைந்தளவு அல்லது உயரளவு வரம்பு ஏதுமில்லை.

**இறப்பு-பணிக் கொடை.**

பணியில் இருக்கும் போது மரணமடைகின்ற பின்வரும் வீதங்களில் இறப்பு-பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:—

| பணிக்காலம். | பணிக்கொடையின் அளவு. |
|---|---|
| 1. ஓராண்டுக்குக் குறைவாக இருந்தால். | மாத ஊதியத்தின் இருமடங்கு |
| 2. ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக ஆனால், ஐந்தாண்டுக்குக் குறைவாக இருந்தால். | மாத ஊதியத்தின் ஆறுமடங்கு |
| 3. ஐந்தாண்டு அல்லது அதற்கு அதிகமாக இருந்து ஆனால் இருபதாண்டுக்குக்குறைவாக இருந்தால். | மாத ஊதியத்தின் இருப மடங்கு. |

| | |
|---|---|
| 4 இருபதாண்டு அல்லது அதற்கு அதிகமாக இருந்தால். | உயரளவாக 33 மடங்கு மாத ஊதியத்திற்குட்பட்டு முடிக்கப்பட்ட ஒவ்வோர் ஆறு மாத தகுதிப்பணிக்கும் அரை மாதச் சம்பளம் ஆனால், அவ்வாறு வழங்குகிற இறப்பு பணிக்கொடை, எந்த நேர்விலும் ரூ. 1 இலட்சத்திற்கு மேற்படக் கூடாது. |

ஓய்வுகாலப் பணிக்கொடை.

ஒருவர், ஐந்தாண்டுத் தகுதிப்பணியை முடித்திருந்து, பணிகுறித்த பணிக்கொடை அல்லது ஓய்வூதியம் பெறத்தகுதியுடையவராக இருந்தால், அவருக்கு ஓய்வு பெறும்போது, மாத ஊதியத்தில் 16½ மடங்கு என்ற அதிக அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறுமாத தகுதிப்பணிக்கும் ஊதியத்தில் நான்கில் ஒரு பங்குத் தொகை ஓய்வு காலப்பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. உயரளவு ஓய்வு காலப் பணிக்கொடையின் உச்சவரம்பு ரூ. 1 இலட்சம் ஆகும்.

குடும்ப ஓய்வூதியம்.

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ, ஓய்வு பெற்ற பின்னரோ இறந்துவிட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். அவர் பணியிலிருக்கும் போது இறந்தால் அவருடைய குடும்பம் குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டுக் காலம் பணியாற்றி இருக்க வேண்டும். ஓய்வுபெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பம் குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதிபெற அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறுபவராக இருக்க வேண்டும். இருப்பினும், 10 ஆண்டிற்குக் குறைவாகப் பணியாற்றியிருந்து ஓய்வூதியம் பெறத் தகுதியற்றவர்களாக இருப்பவர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவர்கள் குடும்பங்களுக்கு ஓரே வீதத்தில் அதாவது அவ்வப்போது அனுமதிக்கப்படும் குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

ஒருவர் இறக்கும்போது, அல்லது ஓய்வுபெறும்போது, கடைசியாக வாங்கிய சம்பளத்தில் 30 சதவீதத் தொகை என்ற ஒரேசீரான விகிதத்தில் குடும்ப ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது. ஒருவர் 7 ஆண்டுக் காலம் தொடர்ந்து பணியாற்றிய பிறகு பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால் அவருடைய குடும்பத்திற்கு, அவர் இறந்துவிட்ட பிறகு ஓராண்டுகால அளவிற்கு அல்லது வயது முதிர்வு காரணமாக வழக்கமாக ஓய்வு பெறக்



கூடிய நாள் வரையில் இதில் எது முந்தியதோ அந்த காலம் வரையில் அவர் கடைசியாக வாங்கிய சம்பளத்தில் 50 சதவீதம் என்ற அதிகரிக்கப்பட்ட விகிதத்தில் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அதன் பிறகு, கடைசியாகப் பெற்ற சம்பளத்தில் 30 சதவீதம் என்ற வழக்கமான வீதத்தில் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியம் ரூ. 245. அதிக அளவு குடும்ப ஓய்வூதியம் ரூ. 1,000.

விதவை, மனைவியை இழந்த கணவனுக்கு, அவர்கள் மறுதிருமணம் செய்துகொள்ளும் வரை அல்லது இறக்கும் வரை இதில் எது முந்தையதோ அதுவரை குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு இந்த குடும்ப ஓய்வூதியம் அவர்களுடைய உரிய வயதடையாத குழந்தைகளுக்கு அதாவது அவர்களுடைய மகன்கள் அல்லது திருமணமாகாத மகள்களுக்கு 25 வயது ஆகும் வரை அளிக்கப்படுகிறது.

ஓய்வூதியத் தொகையில் ஒருபகுதியை மொத்தமாக்கி அளித்தல் :

ஓய்வூதியத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியை மொத்தமாக்கி ஒட்டுமொத்தமாக பெற அரசு அனுமதித்திருக்கிறது. ஓய்வூதியம் வழங்குவதற்காக ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்குள் விண்ணப்பிக்கப்படுமாயின், மருத்துவ பரிசோதனை இல்லாமல், ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப்பிறகு, ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெறப்பட்டத் தொகையை மீண்டும் வழங்க அரசு அனுமதித்துள்ளது.

ஏனைய ஓய்வுகால நன்மைகள் :

1. மத்திய அரசின் முறைக்கேற்ப (அதாவது ஆண்டில் இருமுறை, ஜனவரி 1, ஜூலை 1 ஆகிய தேதிகளில் அகவிலைப்படி வழங்கப்படுவதுபோல) பணிபுரியும் பணியாளர்கள் பெறுவது போலவே ஓய்வூதியம் பெறுபவர்களும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும், அகவிலைப்படித் தவணைத் தொகை பெறுகிறார்கள்.

2. ஓய்வூதியம் பெறுபவர்களும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும், மருத்துவச் செலவுத் தொகையைத் திரும்பப் பெறும் திட்டத்திற்குப் பதிலாக திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 15 என்ற வீதத்தில் மருத்துவப்படி பெறுவதுடன் அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெறும்போது/பணியில் இருக்கும்போதே இறந்தபோது, பெறத் தகுதிப்பெற்றிருந்த அதே மருத்துவச் சலுகைகளையும் பெறத் தகுதியுடையவர்களாவர்.

1989 ஏப்ரல் 26]

3. ஓய்வுபெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பிற்குப் பதிலாக ரொக்கம் பெற அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால், உயரளவு 240 நாட்கள் ஈட்டிய விடுப்பிற்கு மட்டுமே தொகை பெற இயலும்.

4. ஓய்வுபெறும் பணியாளர், ஓய்வுபெற்றபின்னர், தங்களுடைய சொந்த ஊர் அல்லது வேறு ஒரு இடத்தில் வசிக்க விழைகிறாரோ அந்த இடத்திற்குச் செல்வதற்கான பணிமாற்றுப் பயணப்படி பெற அனுமதிக்கப்படுவார்.

5. 1-10-1987 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெறுபவர்களுக்கு ஓய்வுகாலப் பயன்களைக் கணக்கிடும்போது, 30-9-1987 வரை அனுமதிக்கப்பட்ட அகவிலைப்படி/கூடுதல் அகவிலைப்படியை, அகவிலைச் சம்பளமாக எடுத்துக்கொள்ளலாம் என்ற சலுகையை அரசு வழங்கியுள்ளது.

6. திங்களொன்றுக்கு ரூ. 750 வரை ஓய்வூதியம் பெறுபவர், ஒரு திங்களுக்கான ஓய்வூதியத் தொகை அல்லது ரூ. 100 இவற்றுள் எத்தொகை குறைவானதோ அத்தொகையைப் பண்டிகை முன்பணமாக பெறத் தகுதியுடையவராவார்.

7. திங்களொன்றுக்கு ரூ. 400-க்கு மிகாமல் ஓய்வூதியத் தொகை/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அத்தொகை அரசு செலவில் பணவிடை மூலமாக அனுப்பிவைக்கப்படுகிறது.

8. ரூ. 400-க்கும் அதிகமாக ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர் ஓய்வூதிய முன்னோடித் திட்டத்தின்படி தனியார் வங்கிகள் உட்பட ஏதேனும் ஒரு வங்கியின் மூலமாக அல்லது பொதுத்துறை வங்கித் திட்டத்தின்படி எந்த ஒரு பொதுத் துறை வங்கியின் மூலமாக அத்தொகையைப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

9. மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் இராணுவ ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப்படியுடன், மாநில ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப்படியையும் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

### உள்ளாட்சி மன்றக் கல்வி நிறுவனங்கள் உட்பட அரசு சாராக் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்

அரசு சாராக் கல்வி நிறுவனங்களில் (அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றக் கல்வி நிறுவனங்கள்) பணிபுரியும் ஆசிரியர்கள் உட்பட அனைத்துப் பணியாளர்களும், மாநில அரசுப் பணியாளர்களுக்குரிய அனைத்துப் பயன்களையும் பெற அனுமதிக்கப்படுகின்றனர். மாநில அரசிடமிருந்து ஓய்வூதியதாரர்களுக்கு அனுமதிக்கப்படும் வீதத்திலேயே அவர்களும் அகவிலைப்படி/கூடுதல் அகவிலைப்படி பெறுகின்றனர்.



1989 ஏப்ரல் 26]

### ஓய்வூதியக்காரர்களின் பிரச்சினைகள்/குறைகளைக் களைய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்.

1. ஓய்வூதியதாரர்களின் பிரச்சினைகளைக் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கான பணியாளர்-நிருவாகச் சீர்திருத்தத்துறையில் ஓய்வூதியதாரர்கள் குறை தீர்ப்புப் பிரிவு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது.

2. ஓய்வூதியதாரர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் களைவதற்கு வகை செய்யும் பொருட்டு காலாண்டிற்கு ஒரு முறை ஓய்வூதியதாரர்கள் சங்கத்துடன் அரசு ஆலோசனை நடத்தி வருகிறது.

3. ஓய்வூதியதாரர்களின் பிரச்சினைகள் குறித்து ஆலோசிப்பதற்காக, கருவூலக் கணக்குகள் இயக்குநர், சென்னை, மாநிலக் கணக்குத்துறைத் தலைவர் ஆகியோருடன் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒன்றும் நடத்தப்படுகிறது.

## இணைப்பு III.

### கொள்கைக் குறிப்பு.

**கோரிக்கை எண். 43—பல்வகை.**

**1989-90 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் பல்வகை அயல் நாடுகளில் உள்ள இந்தியா மற்றும் அகதிகள்**

**(அ) ஸ்ரீலங் ாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் :**

1964 மற்றும் 1974ஆம் ஆண்டு இந்திய—ஸ்ரீலங்கா ஒப்பந்
தங்களின்படி, ஸ்ரீலஞ்காவில் வாழ்ந்துவந்த இந்திய மக்களின்
வழி வந்தவர்களில் நாடற்றவர்களாக விளங்கிய 9.75 இலட்சம்
நபர்களில் 6 இலட்சம் நபர்களை இந்தியா எடுத்துக்கொள்வ
தென ஒப்புக்கொள்ளப்பட்டது. 1983ஆம் ஆண்டு ஜூலை
மாதம் ஸ்ரீலங்காவில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக,
ஸ்ரீலங்கா அரசு இந்தியாவுடன் 1986ஆம் ஆண்டு ஜனவரி மாதம்,
மீண்டும் செய்துக்கொண்ட ஒப்பந்தத்தின்படி, ஸ்ரீலங்கா அரசு,
கூடுதலாக 94,000 நபர்களுக்கு குடியுரிமை அளிக்க ஒப்புக்கொண்
டது. இதனால், தாயகத்துக்கு திரும்புபவர்களாகிய 6 இலட்
சம் நபர்கள் 5.06 இலட்சம் நபர்களாக குறைந்து இந்திய
அரசின் சிரமம் சற்று குறைந்தது. இதுவரை, கணக்கிலடங்கிய
3.34 இலட்சம் நபர்களைக் கொண்ட 1.16 இலட்சம் குடும்பங்
கள் மற்றும் அவர்களின் இயற்கை அதிகரிப்பான 1.26 இலட்சம்
நபர்களும் ஆக மொத்தம் 4.60 இலட்சம் நபர்கள் ஸ்ரீலங்கா
விலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியுள்ளனர். மேலும், 1.72
இலட்சம் நபர்களும் அவர்களின் இயற்கை அதிகரிப்பு நபர்களும்
ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவுக்கு இன்னமும் திருப்பி அனுப்பப்
பட உள்ளனர். 1984ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல்
தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரத்துக்கு கப்பல் போக்குவரத்து
நிறுத்தி வைக்கப்பட்டதால், மீதமுள்ள இந்திய வம்சா
வழியின் மக்களை ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவுக்கு திரும்ப
அனுப்புவது இயலாமல் போனது.

ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்புகின்றவர்கள், தங்களுக்
குச் சொந்தமான உடைமைகள், சொந்த நகைகள் ஆகியவற்றை
சுங்கவரி கட்டாமல் தங்களுடன் கொண்டுவர அனுமதிக்கப்படு
கின்றனர். அவர்கள் இராமேஸ்வரத்துக்கு வந்து சேர்ந்தவுடன்
சாப்பாடும், தேநீரும் இலவசமாக வழங்கப்படுகின்றன.
இராமேஸ்வரம் துறைமுகத்தில் மறுவாழ்வுத்துறை பணியாளர்கள்
அவர்களைக் குறித்த புள்ளி விவரக் கணக்குகளை எடுக்கின்
றனர். சுங்கப் பரிசோதனை முடிந்த பின்னர், குடும்பங்கள்,
மண்டபத்தில் அமைந்துள்ள இடைத்தங்கல் முகாமுக்குச் செல்ல
லாம்; அங்கிருந்து அவர்கள் பல்வேறு திட்டங்களில் சேருவதற்கு
அனுப்பி வைக்கப்படுவர், அல்லது, கண்டியிலுள்ள உதவி தூத
ரகத்தின் முதன்மைச் செயலாளர் அவர்களுடைய குடும்ப அட்
டைகளில் பரிவுரை செய்துள்ளவாறு வணிகக் கடன்கள் அவர்
களுக்கு வழங்கப்படும். ரூ. 5,000-க்குக் குறைவாகக் கொண்டு





வருகின்ற குடும்பங்களுக்கு, அவர்கள் மண்டபம் இடைத்தங்கல்
முகாமில் சேர்க்கப்பட்டதும் அதிகபட்சம் மூன்றுமாத காலத்
திற்கு ரொக்க உதவித் தொகை வழங்கப்படும். மேலும், ஒரு
கிலோ அரிசிக்கு 57 காசு வீதம் விலைக்குறைப்புச் செய்த
பங்கீட்டு அரிசியும் நாளொன்றுக்கு பெரியவர்களுக்கு 400 கிராம்,
சிறுவர்களுக்கு 200 கிராம் வீதமும் அவர்களுக்கு வழங்கப்படு
கிறது. அங்கேயுள்ள 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை
யில் அவர்களுக்கு மருத்துவ வசதியும், இலவசத் தங்குமிடம்,
தண்ணீர் வசதி, மின் வசதியும் அளிக்கப்படுகிறது. குடும்பங்
களுக்கு பணக்கொடை அரைத் திங்களுக்கு ஒரு முறையும், மலிவு
விலை அரிசி வாரத்திற்கு ஒரு முறையும் முகாமிலேயே வழங்கப்
படுகின்றது.

1989ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31ஆம் நாள் வரை
வரப்பெற்ற மொத்தம் 1.16 இலட்சம் குடும்பங்களில் இதுவரை
யிலும் 96,223 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாடு,
கேரளம், ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், அந்தமான்-நிக்கோ
பார் தீவுகள் ஆகியவற்றில் குடியமர்த்தப்பட்டுப் புதுவாழ்வு
அளிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் தமிழ்நாட்டில் 91,192 குடும்
பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

**2. பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோர்:**

பர்மாவிலிருந்து இதுவரை 1,44,353 பேர் இந்தியாவிற்குத்
திரும்பி வந்துள்ளனர். 1974-க்குப் பிறகு கப்பல் போக்கு
வரத்து இல்லை. எனினும், சில குடும்பங்கள் விமானம் மூலம்
கல்கத்தா வழியாக வருகின்றனர்.

**வணிகக் கடன்.**

பர்மாவிலிருந்து இந்தியா திரும்புவோர் பெரும்பாலும் வணி
கர்களாகவும், இலங்கையிலிருந்து திரும்புவோரில் பெரும்பான்மை
யினர் மலைத் தோட்டத் தொழிலாளர்களாகவும் இருக்கின்ற
னர். பர்மா, ஸ்ரீலங்கா நாடுகளில் இருந்து இந்தியா திரும்பு
வோர் தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான வருவாயைத்
தேடிக்கொள்ள சிறு அளவில் வணிகத்தை மேற்கொள்ளவும்
நடத்தவும் அவர்களில் தகுதிவாய்ந்தவர்களுக்கு ரூ. 7,500
அல்லது அதற்குக் குறைவாகக் கடனாக வழங்கப்படுகிறது. இது
இரண்டு தவணைகளில் அதாவது முதல் தவணையில் ரூ. 5,000-ம்
இரண்டாவது தவணையில் ரூ. 2,500-ம் வழங்கப்படுகிறது.
இதுவரையில் 75,858 இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்
பங்களுக்கு வணிகக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

]1989 ஏப்ரல் 26

### வீட்டு வசதி அளிப்பதற்கான திட்டம்.

இந்தியா திரும்பியவர்களுக்குச் சொந்தமாக வீடு இல்லையெனில், அவர்களுக்கு வணிகக்கடன் கொடுக்கப்பட்டிருப்பினும், விவசாயக் கடன் கொடுக்கப்பட்டிருப்பினும், வேலைவாய்ப்பளிக்கப்பட்டிருப்பினும் அவர்களுக்கு வீட்டுவசதி அளிக்கப்பட்டு வருகிறது. வீடுகளைக் கட்டிக்கொள்ள எங்கெங்கு அரசு நிலங்கள் காலியாக உள்ளனவோ அவை அங்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. அத்தகைய குடும்பங்களுக்கு நகர்ப்புறப் பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கு ரூ. 10,000 கடனும், கிராமப் பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கு ரூ. 6,000 கடனும் வழங்கப்படுகிறது. கிராமப் பகுதிகளுக்காக வழங்கப்பட்ட ரூ. 6,000-த்தில் ரூ. 1,200 மானியமாக அளிக்கப்படுகிறது. இந்த மானியம் நகர்ப் பகுதிகளில் வீடு கட்டுபவர்களுக்கு ஆ,ளிக்கப்படுவதில்லை. இதுவரை 41,765 குடும்பங்களுக்கு வீட்டுவசதிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### வேளாண்மை நிலக் குடியேற்றத் திட்டம்.

பர்மா, இலங்கையிலிருந்து இந்தியா திரும்பும் குடும்பங்களில், உரிய வயது வந்த உடல் வன்மையுள்ள இரண்டு பேர் இருந்து அவர்கள் வேளாண்மைத் தொழிலில் அனுபவம் உடையவர்களாகவும் இருப்பின், அவர்களுக்குச் சொந்தமாக நிலங்கள் இல்லாமலிருந்தால், அக்குடும்பங்கள் வேளாண்மை நிலக்குடியிருப்புகளில் குடியமர்த்தப்படுகின்றனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3 ஏக்கர் புன்செய் நிலம் கொடுக்கப்படுகிறது. அரசு நிலங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. நிலங்களைப் பண்படுத்தவும், பாசனக் கிணறுகள் கட்டவும், எருதுகள், விதைகள், கருவிகள் முதலியன வாங்கவும், பயிரிடவும் ஒவ்வொரு குடும்பத்திற்கும், விவசாயக் கடன் ரூ. 6,850 வரை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு குடும்பமும் வீட்டு வசதிக் கடனும், மாட்டு வண்டி வைத்து வாடகைக்கு ஓட்டுதல், கோழி இன வளர்ப்பு, காய்கறித் தோட்டம் வைத்தல், போன்ற துணைத் தொழிலுக்காகக் கடனும் பெறத் தகுதியுடையதாகும்.

தவிர, ஸ்ரீலங்கா அகதிகள் குடும்பங்கள் அவர்கள் எடுத்து வந்த சொத்தின் மதிப்பு ரூ. 5,000-க்கு மேற்படாமல் இருந்து, அவர்களுக்கென்று சொந்தமாக நிலங்கள் இல்லாமலிருந்து வேளாண்மைத் தொழிலை மேற்கொள்ள விரும்பினால், 3 ஏக்கர் வரை நிலங்களை வாங்குவதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 2,000-க்கு மேற்படாத, வீதத்தில் தனியார் வேளாண்மை நிலங்களை வாங்குவதற்குக் கடன் பெறவும் தகுதியுடையவர் ஆவார்கள்.



1989 ஏப்ரல் 26]

### வேலை வாய்ப்பு வசதிகள்.

வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக மாநில அரசுப்பணியில் நியமனம் பெறுவதற்காக தாயகம் திரும்பியவர்களுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அவசியம் ஏற்படும்போது முறையாக பதவிகளில் நியமிக்கப்படுவதற்காக தமிழ் கல்வித் தகுதிகள் குறித்த விதிகள் தளர்த்தப்பட்டு வருகின்றன. மாநிலப் பணி சார்நிலைப் பணிகளுக்கு ஆள் தெரிந்தெடுப்பதற்கான தேர்வுக் கட்டணங்கள், விண்ணப்பக் கட்டணங்கள் ஆகியவற்றைச் செலுத்துவதினின்றும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அகதிகளின் சிறுவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. மாணவர் இல்லங்களில் தங்கியுள்ளவர்களுக்கு ரூ. 60-லிருந்து ரூ. 90வரையில் மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படுகிறது. படிக்கும் வகுப்பிற்கேற்ப ரூ. 15-லிருந்து ரூ. 150 வரையில் ஆண்டு புத்தக மானியம் வழங்கப்படுகிறது. அரசு நடத்தும் தொழில் பயிற்சிப் பள்ளிகளில் உள்ள இடங்களில் 5 சதவீதம் தாயகம் திரும்பியோருக்காக ஒதுக்கப்படுகிறது. இம்மாநிலத் தில் உள்ள அரசுக் கல்லூரிகள் அனைத்திலும் பட்டப்படிப்பு வகுப்புகளில் அகதிகளுக்காக இரண்டு இடங்கள் ஒதுக்கப்படுகின்றன, இம்மாநிலத்திலுள்ள மருத்துவ, பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் கீழே குறிப்பிட்டவாறு இடங்கள் ஒதுக்கப்படுகின்றன:

| | பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள். | ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மருத்துவம் | 4 | 2 |
| பொறியியல் | 1 | 2 |
| வேளாண்மை | 2 | 2 |
| கால்நடை மருத்துவம் | 2 | 1 |

### பயிற்சியும் வேலை வாய்ப்பும்.

வேலை வாய்ப்பிற்குத் தகுந்தவர்களாகச் செய்யும் வகையில், பல்வேறு வணிகத்திலும், தொழில்களிலும் அகதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின்போது, அகதிக் குடும்பத்திற்கு

6 மாத கால அளவிற்குப் பராமரிப்பும் படியும், உதவித் தொகையும் கொடுக்கப்படுகிறது. அகதி சிறுவர்களும், சிறுமியர்களும் வேலை கிடைக்க இயலும் வகையிலும் அல்லது சொந்தத் தொழிலில் ஈடுபட இயலும் வகையிலும் பல்வேறு பாடமுறைகளிலும், தொழில்களிலும் அவர்களுக்குப் பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு இலவசக் கல்வி, உதவித் தொகை, அவர்களுக்கு மாணவர் இல்லத்தில் இட வசதி செய்து கொடுத்தால் மாணவர் இல்லக் கட்டணம், மாணவர் இல்லத்தில் அவர்களுக்கு இட வசதி செய்து கொடுக்கப்படாவிட்டால் அறை வாடகை, புத்தக மானியம், காப்பு முன் பணம் வைப்புத் தொகை முதலியவை கொடுக்கப்படுகின்றன. பயிற்சியை முடித்தப் பின்னர், பல்வேறு நிறுவனங்களில், கம்பெனிகளில் அவர்கள் வேலையில் அமர்த்தப்படுகின்றனர் அல்லது சொந்தத்தில் வேலை தேடிக்கொள்கின்றனர்.

மலைத் தோட்டத் திட்டங்கள் :

ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பி வந்தோர்களில் பெரும்பாலானோர் மலைத்தோட்டத் தொழிலாளர்களே ஆவர். அவர்களை மலைத் தோட்டங்களில் குடியமர்த்துவதற்காகத் தனியாகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மலைத் தோட்டங்களில் அவர்களுக்கு இலவசமாக இடவசதி அளிக்கப்பட்டு தொழிலாளர்களாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். ஏனைய எல்லா வசதிகளும் அவர்களுக்குச் செய்துக்கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடும்பத்தினரும இரண்டு பேர் முறையான பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியா திரும்பி வந்தோர் கூட்டுறவு நிதியுதவி—வளர்ச்சி வங்கி :

இந்தியா திரும்பி வந்தோர் வியாபாரம் செய்வதற்கும், வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இயலும் வண்ணம் அவர்களுக்குக் கடன் வழங்குவதற்காக மத்திய அரசும், தென் மாநில அரசுகள் நான்கும் பங்குத் தொகை செலுத்தியதன் மூலம் சென்னையில் இந்தியா திரும்பிவந்தோர் கூட்டுறவு நிதி உதவி-வளர்ச்சி வங்கி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வங்கித் திட்டங்களின்கீழ், தாயகம் திரும்பி வந்தோருக்கு பலவேறு தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

இதுவரையில் 96,223 இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்கள் கீழ்க்கண்ட மறுவாழ்வுத் திட்டங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர் ;—





| | திட்டத்தின் பெயர். | குடியமர்த்தப் பட்ட குடும்பங்கள். |
|---|---|---|
| 1 | தேயிலை மலைத் தோட்டம் .. | 2,325 |
| 2 | இரப்பர் மலைத் தோட்டம் .. .. | 285 |
| 3 | சின்கோனா மலைத் தோட்டம் . | 125 |
| 4 | மாநிலப் பண்ணைக் கழகம் . . | 791 |
| 5 | நிலக் காலனித் திட்டம் . . | 2,161 |
| 6 | விவசாய நிலம் வாங்கக் கடன் .. | 149 |
| 7 | கூக்கல் விவசாயத் திட்டம் (திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம்) .. | 174 |
| 8 | கூட்டுறவு நூற்பாலையில் வேலை . | 3,880 |
| 9 | தாயகம் திரும்பியோர் வங்கித் திட்டம் மூலம் வேலை . . . | 4,918 |
| 10 | வணிகக் கடன் . . . | 75,858 |
| 11 | சுயவேலை வாய்ப்புக் கடன் திட்டம் . | 526 |
| 12 | வெளி மாநிலங்களில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் . . | 5,031 |
| | மொத்தம் . | 96,223 |

(ஆ) ஸ்ரீலங்கா அகதிகள்.

இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் 24–7–1983ஆம் தேதி முதல் சுமார் 1.34 இலட்சம் அகதிகள் இந்தியா வந்துள்ளனர். இவர்களில் ஆதரவற்ற அகதிகளாக பல்வேறு முகாம்களில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 40,000 ஆகும்.

முதலில் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் முகாமிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் கொட்டப்பட்டு முகாமிலும் மட்டுமே அகதிகள் முகாம் இருந்தது. அகதிகள் வருகை அதிகரித்ததால் தற்காலிக முகாம்கள் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டன. 172 அகதிகள் முகாம் பல மாவட்டங்களில் பல இடங்களில் தற்காலிகமாக அமைக்கப்பட்டன. மதுரை மாவட்டத்தில் விளாங்குடி கிராமத்தில் வீட்டு வசதி வாரியத்திடமிருந்து 792 வீடுகள் உரசினரால் விலைக்கு வாங்கப்பட்டது. மைய அரசின் உதவியுடன் மண்டபம் முகாமில் கூடுதலாக 1,400 வீடுகளும், கொட்டப்பட்டு முகாமில் 100 வீடுகளும், சிதம்பரனார் மாவட்டம் மாப்பிள்ளை ஊரணியில் 100 வீடுகளும் கட்டப்பட்டன. 24–12–1987ஆம் தேதியிலிருந்து இலங்கைக்கு அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டதால் மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட தற்காலிக முகாம்கள் கலைக்கப்பட்டன.

[1989 ஏப்ரல் 26

அகதி குடும்பங்கள் தங்குவதற்காக கீழ்க்கண்ட முகாம்களில் மொத்தம் 3,607 குடியிருப்புகள் உள்ளன :—

| | |
|---|---|
| மண்டபம் (இராமநாதபுரம் மாவட்டம்) .. | 2,227 |
| கொட்டப்பட்டு (திருச்சி மாவட்டம்) .. | 488 |
| விளாங்குடி (மதுரை மாவட்டம்) . | 792 |
| மாப்பிள்ளை ஊரணி (சிதம்பரனார் மாவட்டம்) | 100 |
| மொத்தம் . | 3,607 |

தற்போது மண்டபம் மற்றும் கொட்டப்பட்டு முகாம்களில் 396 குடும்பங்களில் அடங்கிய 1,513 ஆதரவற்ற அகதிகள் தங்கியிருக்கின்றனர். மேலும், மாவட்ட அதிகாரிகளால் அகதி அடையாளச் சான்றுகள் வழங்கப்பட்ட 267 நபர்கள அடங்கிய 144 குடும்பங்களும் மண்டபம் முகாமில் தங்கியிருக்கின்றன. இவர்களும் ஸ்ரீலங்காவிற்கு திருப்பி அனுப்பிவைக்கப்படுவார்கள்.

இலங்கை அகதிகளுக்குக் கீழ்க்கண்டவாறு துயர்தணிப்பு உதவிகள் வழங்கப்படுகின்றன :—

1. இலவசத் தங்குமிடம்.

2. பணக்கொடை குடும்பத் தலைவருக்கு மாதத்துக்கு ரூ. 110ம் மற்றப் பெரியவர்களுக்கு ரூ. 82.50 வீதமும், முதல் குழந்தைக்கு ரூ. 55ம் அடுத்தக் குழந்தைக்கு ரூ. 27.50 வீதமும் வழங்கப்படுகிறது.

3. மலிவு விலை அரிசி ஒரு கிலோ 0.57 பைசா வீதம் பெரியவர்களுக்கு நாளொன்றுக்கு 400 கிராமும் சிறியவர்களுக்கு 200 கிராமும் வழங்கப்படுகிறது.

4. ஒவ்வொரு நபருக்கும் ஒரு ஜதைத் துணிகள்.

5. எல்லா பெரிய நபர்களுக்கும் போர்வை மற்றும் பாய்கள்.

6. ஒவ்வொரு குடும்பத்துக்கும், சமைக்கும் பாத்திரங்கள், ரூ. 55 மதிப்புள்ளது வழங்கப்படுகிறது.

மைய அரசு முகாம்களில் இரண்டு வருடங்களுக்கு மேல் தங்கியிருப்பவர்களுக்கு பாத்திரங்களும், போர்வையும், ஒரு வருடத்திற்கு மேல் தங்கியுள்ளவர்களுக்கு பாயும், துணிகளும் முதலில் கொடுத்துள்ளதுபோக அதிகப்படியாக அளிக்க அனுமதித்துள்ளது.



1989 ஏப்ரல் 26]

இத்தகைய துயர் துடைப்புக்காக 31–12–1988 வரை ரூ. 1,092.04 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. கூடுதலாகக் குடியிருப்புகள் எழுப்புவதற்கு ரூ. 366.33 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மைய அரசு, எல்லா அகதிகளையும் விரைவில் இலங்கைக்குத் திருப்பி அனுப்ப தீர்மானித்துள்ளது. மத்திய அரசு ஏற்பாடு செய்யும் இந்திய ஷிப்பிங் கார்ப்பரேஷனைச் சேர்ந்த கப்பல்கள் மூலம் இலங்கை அகதிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றனர். இதுவரை (31–1–1989ஆம் தேதிபபடி) 25,065 நபர்கள் அடங்கிய 7,984 குடும்பங்கள் இலங்கைக்கு திரும்ப அனுப்பப்பட்டனர்.

தாயகம் திரும்பியோர் மற்றும் அகதிகள் ஆகியோரின் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு செலவினம் முழுவதும் மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

[1989 ஏப்ரல் 26

இது ஒரு கூட்டுக் கோரிக்கையாகும். இதில், பொதுவான உதவி மானியங்கள், முன்னாள் சமஸ்தான மன்னவர்களுக்கு அளிக்கப்படும் அரசியல் ஓய்வூதியங்கள், உள்ளாட்சி மன்றங்கள், மின்வாரியம், சிறு நிறுவனங்கள் முதலியவற்றுக்குக் கொடுக்கப்படும் உதவித் தொகை போன்ற பல்வேறு துறைகள் தொடர்பான செலவினங்கள் அடங்கியுள்ளன. இலங்கை, பர்மா அகதிகள், கொத்தடிமைகள் மறுவாழ்வுத் திட்டம் முதலியவை குறித்த செலவுகளும், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சிறு சேமிப்புத் திட்டம் முதலியவை தொடர்பான செலவுகளும் இக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. குறிப்பான வேறு மானியக் கோரிக்கை எதிலும் சேர்க்க இயலாத ஏனைய பல்வகை இனங்களும் இதில் சேர்க்கப் பட்டுள்ளன.

மேற்குறித்த கோரிக்கையில் அடங்கிய பல்வேறு கணக்குத் தலைப்புகளின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள் பின்வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்)

| | | 1988–89 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1988–89 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு. | 1989–90 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 2047— | ஏனைய நிதி திரட்டும் பணிகள். | 55 | 72 | 95 |
| 2049 | வட்டி கொடுத்தல் | 2 | 5 | |
| 2070 | ஏனைய நிருவாகப் பணிகள். | 25 | 24 | 25 |
| 2075 | பல்வகை பொதுவான பணிகள். | 21,08 | 14,69 | 1,96,14 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும். | 15,35 | 59,94 | 13,89 |
| 2252 | ஏனைய சமூகப் பணிகள் | 22 | 20 | 23 |
| 2801 | மின்விசை | 3,20,25 | 3,29,10 | 2,01,75 |
| 3053 | பொதுமக்கள் விமானப் போக்குவரத்து. | 7 | 7 | 9 |



1989 ஏப்ரல் 26]

இந்த மானியக் கோரிக்கையில் இடம் பெறும் முக்கியமான திட்டங்கள் மற்றும் அவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகள் பின்வருமாறு :—

2047. ஏனைய நிதி திரட்டும் பணிகள்.

தமிழ்நாடு சிறு சேமிப்புத் துறை குறித்த செலவினங்கள் இக் கணக்குத் தலைப்பின்கீழ் காட்டப்பட்டுள்ளன. மத்திய அரசின் நிதி அமைச்சகத்தைச் சேர்ந்த பொருளாதார விவகாரங்கள் துறை வகுத்துள்ள பல்வேறு சிறு சேமிப்புத் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் பொருட்டு சிறு சேமிப்புத் துறை உருவாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் செய்யப்படுகின்ற நிகர சிறு சேமிப்புகளின் அடிப்படையில் 75 சதவீதம் நீண்டகால கடன்களாக மாநில அரசுக்கு மத்திய அரசால் வழங்கப்படுகின்றது. இந்த கடன் தொகை இருபத்தைந்து ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த இக்கடன் பயன்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் சிறு சேமிப்பு வசூலுக்கான இலக்கை சென்னை மாநகர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், அந்தந்த பகுதிகளில் காணும் சேமிப்புத் திறனை கருத்தில் கொண்டு அரசு நிர்ணயிக்கிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளும் அடைந்த சாதனைகளும் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| வருடம். | இலக்கு. | சாதனை. | |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்). | | |
| (1) | (2) | (3) | |
| 1983–84 | 7.10 | 87.40 | |
| 1984–85 | 105.00 | 172.65 | |
| 1985–86 | 175.00 | 184.06 | |
| 1986–87 | 240.00 | 133.70 | (த) |
| 1987–88 | 246.00 | 141.21 | (த) |
| 1988–89 | 225.00 | 145.23 | (த) |

(த)— தற்காலிகமானது.

[1989 ஏப்ரல் 26

சிறு சேமிப்புத் திட்டங்களில் முக்கியமானவை பின்வருமாறு:—

1. தேசிய சேமிப்புத் திட்டம்—1987.
(National Savings Scheme) 1987)

2. 10 ஆண்டு சமூகப் பாதுகாப்பு பத்திரங்கள்
(Ten years Social Security Certificates)

3. மாதாந்திர வருமானத் திட்டம்.
(Monthly Income Scheme)

4. 5-ஆண்டு அஞ்சலகத் தொடர் பயன் வைப்பீட்டுக் கணக்கு
(Five Years Post Office Recurring Deposit Account)

5. அஞ்சலகக் காலம் குறித்த வைப்பீட்டுக் கணக்கு 1, 2, 3 மற்றும் 5 ஆண்டு.
(One year, Two years Three years and Five Years Post Office Time Deposits)

6. 15—ஆண்டு பொது வருங்கால வைப்பு நிதிக் கணக்கு
(Fifteen years Public Provident Fund Account)

7. அஞ்சலக சேமிப்பு வங்கிக் கணக்கு
(Post Office Savings Bank)

8. சஞ்சயிகா திட்டம் (பள்ளி மாணவர்களுக்கானது)
(Sanchayika)

9. இந்திரா சேமிப்பு பத்திரங்கள்
(Indira vikas Patras)

10. கிஸான் விகாஸ் பத்திரங்கள்
(Kisan Vikas Patras)

மாநிலத்தில் சிறு சேமிப்பு இயக்கத்தை பரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்து அரசிற்கும், தேசிய சேமிப்பு நிறுவனத்திறகும் ஆலோசனை கூறும் பொருட்டு மாநில ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாண்பு மிகு முதலமைச்சர் இதன் தலைவர் ஆவார். அரசு அலுவலர் அல்லாத துணைத் தலைவர் ஒருவரும் மற்றும் பன்னிரெண்டு பேரும் அரசு அலுவலர் ஐந்து பேரும் மேற்படி குழுவில் இடம் பெற்றுள்ளனர். சிறு சேமிப்பு வசூலை அதிகப்படுத்தும் பொருட்டு பிரபல ஆங்கில நாளிதழ்கள், மற்றும் தமிழ் நாளிதழ் களில் விளம்பரப்படுத்தப்படுகின்றன. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் திரைப்படம் காட்டும் கருவியுடன் கூடிய, விளம்பர வேன் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. இவை தவிர



1989 ஏப்ரல் 26]

பொருட்காட்சிகளில் பங்கு கொள்ளும் வாயிலாகவும், திரையரங்குகளில் சிறு சேமிப்பின் அவசியத்தை விளக்கும் செய்திப் படங்களைக் காண்பிப்பதன் மூலமும் மக்களிடையே சிறு சேமிப்பின் பயன்களை எடுத்துரைக்க முடிகிறது.

**2075. பல்வகை பொதுவான பணிகள்.**

மேற்குறித்த கணக்குத் தலைப்பின் கீழ் குறிப்பாக தமிழ் நாடு அரசு பரிசுச் சீட்டுத் துறையின் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் 15–8–1968 ஆம் நாளன்று தொடங்கப்பட்டு இன்று வரை தொடர்ந்து நடந்து வருகிறது. நமது மாநிலத்தில் அடிப்படைத் தேவைகளான பல்வகை நலத் திட்டங்களுக்கு உதவுவதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும். பரிசுச் சீட்டுக் குலுக்கலின் நிகர வருமானம் நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. 1987–88 ஆம் ஆண்டு முடிய தமிழ் நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் மூலம் ரூ. 43.80 கோடி நிகர வரவு பெறப்பட்டது. இதில் ரூ. 32.74 கோடி பல்வகை நலத் திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டது. 1988–89 ஆம் ஆண்டிற்கு 1989 சனவரி வரை ரூ. 1.60 கோடி நிகர வருவாய் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டில் ரூ. 1.88 கோடி நிகர வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இக்கணக்குத் தலைப்பின் கீழ் இந்தியக் குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர், ஏனைய அமைச்சர்கள், வெளிநாட்டு பிரமுகர்கள் ஆகியோர் தமிழகத் திற்கு வருகை தரும் பொழுது அவர்களுக்காக செய்யப்படும் உணவு, உறைவிடம் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகிய வற்றுக்கான செலவினங்கள் காட்டப்படுகின்றன. அத்துடன் ஆளுநர், அமைச்சர் ஆகியோர் பதவி ஏற்பு விழாக்கள் மற்றும் மாநில அரசு விழாக்கள் சம்பந்தமான செலவினங்கள் யாவும் இத்தலைப்பின் கீழ் காட்டப்படுகின்றன. தேசிய மற்றும் உலக சிறப்பு வாய்ந்த சிறப்பு நாட்களைக் கொண்டாடுவதற்கான செலவினங்களும் இக்கணக்கின் தலைப்பின் கீழ் வருகின்றன. ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் ஏற்படக் கூடும் கூடுதல் ஊதியச் செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடும் செய் யப்பட்டுள்ளது.

**2235. சமூகப் பாதுகாப்பும் நலனும்.**

இக்கணக்குத்தலைப்பின் கீழ், பின்வரும் செலவினங்களுக் கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :

1. முஸ்லீம் கோஷா மகளிர் சங்கத்திற்கு நிதியுதவி.

2. முன்னாள் இராணுவத்தினர் நல இயக்ககம்
(ரூ. 18.96 இலட்சம்).

3. மாவட்ட முப்படை வீரர் வாரியம்.
(ரூ. 60.84 இலட்சம்).

4. போர்களத்தில் பாராட்டத்தக்க வீரச்செயல் புரிந்தமைக்காக படை வீரர்களுக்கு மானியங்கள்.
(ரூ. 0.75 இலட்சம்).

5. முன்னாள் படை வீரர் நல நிதி
(ரூ. 2.00 இலட்சம்).

6. இறந்துவிட்ட அரசு பணியாளர்களின் குடும்பங்களுக்கு கருணை நிதி வழங்குதல்
(ரூ. 5.80 கோடி).

7. தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்பு நிதி—பணிக் கொடை திட்டம்
(ரூ. 4.50 கோடி).

8. அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களுக்கான சிறப்பு வருங்கால வைப்பு நிதி—பணிக் கொடைத் திட்டம்
(ரூ. 1.17 கோடி).

9. பணியில் இறக்க நேரிடும் அரசுப் பணியாளர்களின் வீடுகட்டும் கடன்கள் ரத்து செய்வது சம்பந்தமான சிறப்பு நலத் திட்டம்.
(ரூ. 8.00 இலட்சம்).

**2801. மின்விசை.**

தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் அரசுத் தரப்பில இருந்து வாரியத்தின் ஆக்கப் பணிகளுக்கு கடனாகவும், மானியமாகவும் நிதி ஒதுக்கப்படுகிறது. மேலும், மின் வாரியம் குறைந்த கட்டணத்தில் விவசாயிகளுக்கு மின்சக்தி அளிப்பது மற்றும் குடிசைப் பகுதிகளுக்கு இலவச மின்வசதி வழங்குதல் போன்ற திட்டங்களைச் செயலாக்குவதால் ஏற்படும் நிதி இழப்பை சரி செய்யும் பொருட்டும், அவ்வாரியத்திற்கு நிதி ஒதுக்கப்படுகிறது. இந்த மானியக் கோரிக்கையில் ரூ. 90 கோடி



ஆக்கப் பணிக்காகவும், ரூ. 200 கோடி நிதி இழப்பைச் சரிக் கட்டும் பொருட்டும் ஒதுக்கப்பட்டுளளது. ரூ. 200 கோடியில் ரூ. 100 கோடி பணமாக அளிக்கவும், மீதமுள்ள ரூ. 100 கோடி ஏற்கெனவே மின் வாரியத்திற்கு வழங்கப்பட்ட 1985 ஆம் ஆண்டு வரையிலான வழிவகை முன் பணங்களைச் சரிக்கட்டவும் பயன்படுத்தப்படும்.

மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மின்வாரியம் சிறு புனல் மின்திட்டங்களை(Micro Hycel Schemes) நிறைவேற்றுவதற்காக ரூ. 175.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு IV.

### கோரிக்கை 58—பல்வகை மூலதனச் செலவு.

### கொள்கை விளக்கக் குறிப்பு 1989–90.

இது ஒரு கூட்டுக் கோரிக்கையாகும். இதில் பொதுவான துறைகளைக் குறித்த மூலதனச் செலவினங்கள் அடங்கியுள்ளன. இதில் எழுது பொருள் அச்சுத்துறை, கல்வி போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு, வீட்டு வசதி, ஆதி திராவிடர் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு நகர்ப் பகுதி வளர்ச்சி, செய்தி-விளம்பரம், கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை வளர்ச்சி, மீனளம், சுற்றுலா முதலியன குறித்த மூலதனச் செலவினங்கள் அடங்கும். குறிப்பான வேறு மானியக் கோரிக்கை எதிலும் சேர்க்க இயலாத ஏனைய பல்வகை மூலதனச் செலவினங்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழ் நாடு அரசு 1961 ஆம் ஆண்டு நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் இழப்பீட்டுப் பத்திரங்களின் பேரில் கொடுக்கப்பட்ட தொகை, பொதுத் துறை ஏனைய நிறுவனங்கள் முதலியவற்றில் முதலீடுகள் முதலியவை தொடர்பான செலவுகளும் இக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

இக் கோரிக்கையின் கீழ்க்கண்ட பெருந் தலைப்புகளில், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :

| (1) | 1988-89 வரவு செலவு திட்ட மதிப்பீடு. (2) | 1988-89. திருத்த மதிப்பீடு. (3) | 1989-90 வரவு செலவு திட்ட மதிப்பீடு (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 4058. எழுது பொருள் அச்சுத் துறை குறித்த மூலதனச் செலவு. | .. | 15 | 14 |
| 4225. ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு. | 672 | 468 | 657 |
| 4235. சமூகப் பாதுகாப்பு-நலன் குறித்த மூலதனச் செலவு. | 6 | .. | 1 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4250 ஏனைய சமூகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | 98 | 31 | 40 |
| 4404 பால் பண்ணை வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 5 | 1 | 4 |
| 4405 மீனளம் குறித்த மூலதனச் செலவு. | 161 | 71 | 81 |
| 4408 உணவுப் பொருள், சேமிப்பு கிடங்கு வசதி குறித்த மூலதனச் செலவு. | 15 | .. | 30 |
| 4425 கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு. | 6 | 275 | (—)120 |
| 4711 வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | 31 | 31 | 30 |
| 5054 சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. | 70 | 46 | 32 |
| 5452 சுற்றுலா குறித்த மூலதனச் செலவு. | 98 | 37 | 69 |
| 5475 ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனச் செலவு. | .. | 6 | —1 |

மேற்கண்ட கோரிக்கையின் கீழ் வரும் முக்கியமான திட்டங்களும் அவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகளும் பின்வருமாறு:—

**4058 எழுதுபொருள் அச்சுத்துறை குறித்த மூலதனச் செலவு :**

சென்னையிலுள்ள அரசு மைய அச்சகத்திற்கு தேவையான இயந்திரங்கள் வாங்க ரூ. 14 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4225. ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு :**

**1. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்:**

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்கு நூலகம் மற்றும் இதர வசதிகளுடன் கூடிய கட்டிடங்கள் கட்டுதல் என்ற திட்டம்

தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. இதற்காக 1989–90ஆம் ஆண்டில் ரூ. 95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மேலும், 1989–90 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டம்,. பேச்சிப்பாறையில் பழங்குடி மாணவர்களுக்கு கூடுதல் உறைவிடம், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதறகு ரூ. 10.35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. விடுதிகளுக்கான கட்டிடங்கள் கட்டுதல் :

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக நடத்தப்படும் 796 அரசு விடுதிகளில் (774 ஆதி திராவிடர்களுக்காகவும், 22 பழங்குடியினருக்காகவும்) 334 வ்விடுதிகளில் (317 ஆதி திராவிடர்களுக்காகவும், 17 பழங்குடியினருக்காகவும்) அரசு கட்டிடத்தில் இயக்குகின்றன. விடுதிகளுக்கு கட்டிடம் கட்டும் பணியினை ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டுள்ளது. மாணவர் மறறும் மாணவியர் விடுதிகள் கட்டும் பணிக்காக 1989–90 ஆம் ஆண்டில் ரூ. 3.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேறகு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பள்ளிகள், மாணவர் இல்லங்கள் முதலியவற்றைக் கட்டுவதறகென ரூ. 21 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாணவரில்லங்களும், உறைவிடப் பள்ளிகளும் கட்ட ரூ. 30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்திற்கு பங்கு மூலதன முதலீடு.

1989-90 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டிடுக் கழகத்திற்கு பங்கு மூலதன முதலீடாக ரூ. 2.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 4250. ஏனைய சமூகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு.

1989–90 ஆம் ஆண்டில் சங்கராபுரம் மறறும் கடலூரில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கட்டிடங்கள் கட்டி முடிப்ப தற்காக ரூ. 22.01 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் சில தொழிற பயிறசி நிலையங்களுக்குத் தேவையான இயந்திர சாதனங்கள் வாங்குவதற்கு ரூ. 3.77 இலட்சங்கள் ஒதுக்கப்பட் பட்டுள்ளன. தொழிற பயிறசி நிறுவனங்களின் சிறுபான்மை யினருக்காக உள்ள சுருக்கெழுத்து பாடத்திட்டத்திற்கான இயந்தி சாதனங்கள் வாங்குவதறகாகவும், உலகவங்கி உதவி திட்டத்தி தின் கீழ் நிறைவேறறப்படும் செயல் திறன் வளர்ச்சித் திட்டங் களுக்கான இயந்திர சாதனங்கள் வாங்குவதற்கு ரூ. 11.59 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.



### 4405. மீனளம் குறித்த மூலதனச் செலவு.

1. உள்நாட்டு மீனளம் :—உள்நாட்டு மீன்வளத் திட்டத்திற் கான பணிகளை நிறைவேற்ற மூலதனச் செலவாக ரூ. 43.65 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பவானிசாகரில் 10 ஹெக்டேர் மீன் பண்ணையை கட்டி முடிக்கவும், மற்றும் மணிமுத்தாறில் 10 ஹெக்டேர் பண்ணை கட்டுமானப் பணிக்காகவும் இந்த ஒதுக்கீடு பயன்படுத்தப்படும். மேலும் பாலார், பொறந்தவார் மற்றும் லால்பேட்டையில் சீனப் பொறிப்பகங்கள், ஓசூரில் மீன் பண்ணை, மற்றும் மேட்டூர் மீன் டண்ணையில் உற்பத்தித் திறனை ஊக்குவிப்பது ஆகிய பணிகளும் 1989–90-ல் [illegible] வேற்றப்படும். இவை தவிர, வைகை அணைக்கட்டுப் பகுதியில் ரூ. 2 இலட்சம் செலவில் மீன் நாற்றங்கால்கள் கட்டப்படும்.

2. கடல் மீனளம் :—1989–90 -ல் கடல்மீன் உற்பத்திப் பணிகளுக்கான மூலதனச் செலவிற்கு ரூ. 37.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சின்னமுட்டம், வாலிநோக்கம், தொண்டி, கோட்டைப் பட்டினம் ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் படகுத் துறைகள் கட்டுவது, வாலி நோக்கம், பழையாறு, ஏர்வாடி, தொண்டி ஆகிய இடங்களில் உள்ளமைப்பு வசதிகளை ஏறபடுத்துவது, தொண்டியில் கரை யோர வசதிகளை ஏற்படுத்துவது மற்றும் கடல் அளவை நிலை யங்களுக்கு மரம், மற்றும் கண்ணாடி இழையிலான படகுகளை வழங்குவது ஆகிய பணிகளுக்காக இந்த ஒதுக்கீடு பயன்படுத்தப் படும்.

### 4408. உணவுப் பொருள், சேமிப்பு கிடங்கு வசதி குறித்த மூலதனச் செலவு.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு பங்கு மூலதன தொகையாக ரூ. 30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4425. கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு.

மாநிலத்தில் உள்ள பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் விவ சாயிகளுக்கு நில மேம்பாட்டிற்காகவும், தோட்டப் பயிர் சாகுபடி செய்தல் மற்றும் விவசாய அடிப்படையிலான தொழில் களை நிறுவுதல் உள்ளிட்ட விவசாயத்திற்குத் துணையாக உள்ள தொழில்களில் ஈடுபடுதல் போன்ற பல தரப்பட்ட காரியங்களுக் காகவும், நீண்ட காலக் கடன்களை தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்த வங்கிகளுக்குத் தலைமைக் கூட்டுறவுச் சங்க மாகிய தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி, தேவை மாகியநிதி உதவியை கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடுவதன் மூலம் திரட்டுகிறது. மற்ற நிறுவனங்களோடு, மாநில அரசும் மாநில நிலவள வங்கி வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு சய்கிறது. 1988 டிசம்பர் 31-ல் நிலுவை நின் ற அரசு

முதலீடு செய்வதற்கான 22.43 கோடி ரூபாய் ஆகும். 1989–90-ல் முதலீடு செய்வதற்கான 1.25 கோடி ரூபாய் 1989–90 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. மாநிலத்தில் உள்ள கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் பயிர்ச் செலவிற்காக குறுகிய காலக் கடன்களையும்; விவசாயத்தைச் சார்ந்தத் துணைத் தொழில்களில் ஈடுபடுவதற் காக மத்திய காலக் கடன்களையும் விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றன. தற்போது தொடக்க கூட்டுறவு வங்கிகள் என பெயர் மாற்றம் செய்யப்பட்ட விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும், அவை இணைந்துள்ள மத்தியக் கூட்டுறவு வங்கி களும், தம்முடைய நிதி ஆதாரங்களைப் பெருக்க ஏதுவாக இருக்கும் பொருட்டு, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் தேசிய ஊரகக் கடனுதவி (நீண்ட காலச் செயல்முறைகள்) நிதியிலிருந்து அதற்காக வழங்கும் கடன் களைப் பெற்று, அரசு அச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்து வருகிறது. அரசு நிதியிலிருந்து செய்த முதலீடு கள் உட்பட, கடன் கூட்டுறவுச் சங்கங்களில் அரசின் மொத்த பங்கு முதலீடு 1988 மார்ச் 31-ல் 35.62 கோடி ரூபாயாக இருந் தது. நடப்பு நிதியாண்டில், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, அதன் நீண்டகாலக் கடன் நிதியிலிருந்து மாநில அரசுக்கு, கடன் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதற்காக 3.10 கோடி ரூபாய் கடனுதவி அனுமதி அளித்துள்ளது. 1989–90 ஆம் ஆண்டிலும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருநது கடன் பெற்று கடன் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதற் காக வரவு-செலவுத் திட்டத்தில் அடையாள ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

3. கூட்டுறவுச் சங்கங்கள் கிராம அளவில் ஊரக கிடங்கு களையும், மண்டி அளவில் விற்பனைக் கிடங்குகளையும் கட்டித் தருகின்றன. 1—4—1988லிருந்து அமுலிலுள்ள தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகம் முன்னின்று நடத்தும் திட்டத்தின் கீழ், கிடங்கு கட்ட அங்கீகரிக்கப்பட்ட மொதத தொகையில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகம் மாநில அரசுக்கு 75 சதவீதம் கட னாக வழங்குகின்றது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடம் பெற்ற நிதி உதவியுடன் தன்னுடைய பங்கையும் சேர்த்து, மாநில அரசு கிடங்கு கட்ட அங்கீகரிக்கப்பட்ட தொகையில் 50 சத வீதத்தை கடனாகவும், 45 சதவீதத்தை பங்கு மூலதனமாகவும், கிடங்கு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குகின்றன. 1989–90 ஆம் ஆண்டில் கூட்டுறவு சங்கங்களுக்கு 150 ஊரக கிடங்குகளையும், 2 விற்பனை கிடங்குகளையும், 2 நுகர்வோர் கிடங்குகளையும், கட்ட நிதியுதவி அளிக்க உத்தேசிக்கப்பட் டுள்ளது. மேற்கண்ட பங்கு மூலதன நிதியுதவிக்காக 1989–90-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 21.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



4. ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்துவதற்காக முதலீட்டுக் தொகை யாக ரூ. 50.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

5. மலைவாழ் மக்களின் நலனுக்காக 18 பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில், 16 சங்கங்கள் பழங்குடி பகுதிகளிலும், 2 சங்கங்கள் பழங்குடியினர் அல்லாத பகுதியிலும் துவக்கப் பட்டுள்ளன. இந்த பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு தொடர்ந்து நிதியுதவி அளித்து வருகின்றது. 1989–90 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் பங்கு மூலதன நிதியுதவிக்காக ரூ. 6.50 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளன.

6. கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்பட்ட பங்கு மூலதனம் பொதுவாக திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். இவ்வாறு திரும்பிக் கொடுக்கப்படும் பங்குத் தொகை இதே கோரிக்கையில் செலவைக் குறைக்கும் தொகையாக ( Deduct entry ) காண்பிக்கப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டில் ரூ. 3.35 கோடி அளவிற்கு இது எதிர்பார்க்கப்படுகிறது.

மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு நடைமுறை மூலதனம் வழங்கும் வழக்கமான திட்டத்தின் கீழ் 1989–90-ம் ஆண்டிற்கு ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு, முதலீட்டுத் தொகையாக ரூ. 1.76 இலட்சமும், தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியற் பணி கூட்டுறவு இணையத்தின் பங்கு மூலதனத்திற்கு முதலீட்டுத் தொகையாக ரூ. 4.80 இலட்சங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

### 4711. வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு.

கடலரிப்புக்கு இலக்காகும் மீனவ கிராமங்களின் கரை ஓரங் களில் பாறாங்கற்களைக் கொண்டு கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டும் முக்கியமான பணி இதுவரை மீன்துறையின் பொறியியல் பிரிவு நடைமுறைப்படுத்தி வந்தது. 1—2—1989 முதல் இப்பணியை நிறைவேற்றும் பொறுப்பு மீண்டும் பொதுப் பணித் துறைக்கே மாற்றப்பட்டுள்ளது. 1989–90-ம் ஆண்டுத் திட்டத் தில், இத்திட்டத்திற்காக ரூ. 30.49 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5054. சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

ஏழை மீனவர்களுக்கு நியாயமான வருவாய் கிட்டுவதற்கு அவர்கள் பிடித்த மீனை உடனுக்குடன் சந்தைகளுக்கு எடுத்துச் செல்ல ஏதுவாக, மீனவர் கிராமங்களை பிரதானச் சாலை களுடன் இணைப்பதற்கான, சாலைகளைப் போடும் திட்டத்தை

மீன்வளத் துறை செயல்படுத்தி வருகிறது. இப்பணியை இத்துறையைச் சார்ந்த பொறியியல் பிரிவு நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்த முக்கியத் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு 1989–90ம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 32.19 இலட்சத்திற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

5452. சுற்றுலா குறித்த மூலதனச் செலவு.

பூம்புகார் சுற்றுலா வளாக மேம்பாட்டிற்காக ரூ. 50 இலட்சமும், மற்றும் பூம்புகாரில் பார்வையாளர்கள் தங்கும் கூடத்தைக் கட்டுவதற்காக ரூ. 1.50 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. இவைத்தவிர, தரங்கம்பாடியிலுள்ள ஆளுநர் மாளிகையை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் அழகு படுத்துவதற்காக ரூ. 3 இலட்சமும் மற்றும் மதுரை, கொடைக்கானல், உதகமண்டலம், கன்னியாகுமரி ஆகிய இடங்களிலுள்ள '' ஹோட்டல் தமிழ்நாடு'' உணவகத்தை மேம்படுத்துவதற்காக ரூ. 5 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உதகமண்டலத்தில் சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு ரூ. 9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.





## இணைப்பு V.

### கொள்கை விளக்கக் குறிப்பு

மானியக் கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன் களும், முன்பணகளும்..

அரசு தரப்பில் இருந்து வழங்கும் கடன்கள், முன்பணங்கள்
குறித்த நிதி ஒதுக்கீடுகள் கோரிக்கை எண். 59–ல் சேர்க்கப்பட்
டுள்ளன. இந்தக் கடன்களும், முன்பணங்களும் அரசு வாரியங்
கள், நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலர் போன்ற தனியார்
களுக்கும் வழங்கப்படுகின்றன. பல கடன்கள் வழங்குவதற்கான
நோக்கங்கள் என்ன என்பது பற்றி வெவ்வேறு துறைகள் தத்தம்
மானியக் கோரிக்கைகளை அவைமுன் வைக்கும்போது எடுத்துக்
கூறியுள்ளன. உதாரணமாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடி
நீர் வழங்கல் துறையின் கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல்
திட்டம் பற்றி விளக்கும் கொள்கைக் குறிப்பில் சென்னை மாநக
ரில் 1989–90 ஆம் ஆண்டில் உலக வங்கி உதவியுடன் சென்னைப்
பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால்
நிறைவேற்றப்பட உள்ள திட்டங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.
அத்திட்டங்களுக்காக அக்கோரிக்கை எண். 49–ல் ரூ. 7.41
கோடி மான்யம் ஒதுக்கப்பட்டுள்ளது. இக்கோரிக்கையில் அத்
திட்டங்களுக்காக கடன் ரூ. 7.41 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

துறை வாரியான செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| வளர்ச்சித் துறை. | 1988–89 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1988–89 திருத்த மதிப்பீடு. | 1989–90 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| வேளாண்மை, சிறுபாசனம், மண்வளப்பாதுகாப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள். | 6,26.99 | 7,37.30 | 7,08.47 |
| மீனளம் .. .. .. .. .. .. | 6.43 | 72.88 | 0.02 |
| உணவுப் பொருள் சேமிப்பு மற்றும் கிடங்கு வசதி .. | 11,51.73 | 9,11.79 | 14,60.02 |
| கூட்டுறவு .. .. .. .. .. | 6,55.89 | 14,26.50 | 13,57.48 |
| தொழில்கள் .. .. .. .. .. | 19,09.93 | 14,99.60 | 16,19.42 |
| வீட்டுவசதி .. .. .. .. .. | 9,03.74 | 8,00.00 | 8,00.48 |
| நகர்ப்பகுதி வளர்ச்சி .. .. .. .. | 10,84.27 | 16,52.01 | 16,25.01 |
| மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம் .. .. | 0.15 | 3.00 | 3.10 |
| குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு .. .. | 49,87.85 | 49,74.65 | 52,78.01 |
| மின்சக்தி .. .. .. .. .. | 2,10,00.01 | 2,10,00.01 | 2,10,00.01 |
| பொதுக் கல்வி .. .. .. .. .. | 25.00 | 25.00 | 25.00 |
| தொழில் நுட்பக் கல்வி .. .. .. .. | 1.61 | 1.06 | 1.11 |
| ஆதி, திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்பட்ட வகுப்பினர் நலன். | 59.58 | 76.84 | 91.84 |
| மறுவாழ்வுத் திட்டங்கள் .. .. .. .. | 3,69.31 | 1,79.31 | 1,72.79 |
| சாலைகளும், பாலங்களும் .. .. .. .. | 1,10.02 | 2,15.02 | 1,10.02 |
| சாலைப் போக்குவரத்து—சுற்றுலா .. .. | 0.34 | 5,51.15 | 0.33 |
| அரசுப் பணியாளர்களுக்கு வழங்கும் கடன்கள் .. | 29,18.38 | 31,10.09 | 30,91.36 |
| ஏனைய கடன்கள் .. .. .. .. | 2,66.06 | 8,89.68 | 1,65.99 |
| மொத்தம் .. | 3,63,77.29 | 3,91,25.89 | 3,75,10.46 |

1. மின்வாரியம் : இந்தக் கோரிக்கையின் கீழ், 1989–90 ஆம் ஆண்டிற்காகச் செய்யும் நிதி ஒதுக்கீட்டில் பெரும் பகுதி, மின்சார வாரியத்தின் மின்விசைத் திட்டங்களுக்கு அளிக்கும் நிதி உதவியாகும். இந்நோக்கத்திற்காக ரூ. 210.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு : குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு திட்டங்களுக்காக 1989–90ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 52.78 கோடி ரூபாய் கடனாக ஒதுக்கப்பட்டுள்ளது.

(i) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் :

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 1989–90ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| 1. நகராட்சி வடிகால் திட்டம் .. .. | 2.33 |
| 2. நகராட்சி குடிநீர் வழங்குத் திட்டம் .. | 9.32 |
| 3. நகரப் பஞ்சாயத்துக்களுக்கு குடிநீர் வழங்கு திட்டம் | 3.86 |
| 4. கோவையுடன் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கு திட்டம். | 0.39 |
| மொத்தம் .. | 15.90 |

இச்செலவில் ரூ. 9.62 கோடியை இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடனாக வழங்கும். மீதமுள்ள தொகையில் ரூ. 4.04 கோடியை மாநில அரசு கடனாகவும், ரூ. 2.24 கோடியை மான்யமாகவும் வழங்கும்.

(ஆ) உலக வங்கி நிதி உதவியுடன் கோயம்புத்தூர், சேலம், மதுரை மாநகரங்களுக்கு நீர் வழங்குதல், 75 நடுத்தர மற்றும் சிறிய நகரங்களுக்குப் புதிய குடிநீர் வழங்கு திட்டங்கள், குறைந்த செலவில் நிறைவேற்றப்படும் துப்புரவுத் திட்டங்கள், போன்ற பணிகளுக்காக குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதற்காக, ரூ. 28.13 கோடி கடனும், ரூ. 9.37 கோடி மான்யமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) நகராட்சி மன்றங்களுக்குக் குடிநீர் வழங்குத் திட்டங்களின் செலவில் மூன்றில் ஒரு பகுதிச் செலவை (33 1/3 சதவீதம்) தமிழ்நாடு அரசுக் கடனாகக் கொடுக்கின்றது. ஏனைய மூன்றில் இரண்டு பகுதித் தொகையை (66 2/3 சதவீதம்) இந்திய ஆயுள்



ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கடனுதவியாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பெற்றுக் கொள்கிறது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திற்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தொகையை முதற்கண் மாநில அரசு கொடுத்துவிட்டு, பின்னர் உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து வசூலித்துக் கொள்கிறது. இவ்வாண்டு இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திற்குக் கொடுப்பதற்காக ரூ. 9.20 கோடி கடனாக ஒதுக்கப்பட்டுள்ளது.

(ii) சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் :

சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றல் பணிகளை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம் நிறைவேற்றி வருகின்றது. குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்தவரையில் நீண்டகால நடவடிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் அருகிலுள்ள ஆதார வாயில்களை பயன்படுத்துவதற்கானத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு உலக வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டில் கீழ்ப்பாக்கத்தில்லுள்ள குடிநீர்ப்பணிகள் அமைப்பின் நீரிறைக்கும் திறனை ரூ. 175 இலட்சம் செலவில் அதிகரித்தல், வில்லிவாக்கம், கொளத்தூர் பகுதியில் புதிதாக வளர்ச்சியடைந்துள்ள பகுதிகளுக்கு ரூ. 189.30 இலட்சம் செலவில் சுமார் 50 கிலோ மீட்டர் நீளமுள்ள குடிநீர் வழங்கும் பெருங்குழாய்களை அமைத்தல், மகரலிலிருந்து செங்குன்றம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்லும் வழியில் ஒரு தடுப்பு அணையும், நீர் எடுத்துச் செல்லும் பெருங்குழாயும் அமைத்தல்—(உலக வங்கி உதவி பெறும் திட்டம்), ரூ. 398.30 இலட்சம் செலவில் கோட்டூர், பள்ளிப்பட்டு பகுதிகளில் 2ஆம் நிலைப் பகுதிகளுக்காக கழிவு நீரகற்றும் திட்டம், பெரியார் நகர் அரும்பாக்கம் மேற்கு ஆகிய பகுதிகளில் மொத்தம் ரூ. 505 இலட்சம் செலவிலான கழிவு நீரகற்றும் திட்டம், உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூ. 521 இலட்சம் செலவில் சாலிகிராமத்திற்கான கழிவு நீரகற்றும் திட்டம் ஆகியவைகளை நிறைவேற்ற உள்ளது. இத்திட்டங்களை நிறைவேற்ற ரூ. 9.83 கோடி கடனாகவும், ரூ.10.48 கோடி மான்யமாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

3. தொழில் வளர்ச்சி.— தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தமிழ்நாட்டில பிற்பட்ட மற்றும் வளர்ச்சியடையாத இடங்களில் அமைந்துள்ள நடுத்தர மற்றும் பெருந்தொழிற்சாலைகளில் முன்னேற்றத்தின் பெரும பணி ஆற்றி வருகின்றது. இந்நிறுவனத்தின் தொழிற்கடன் வழங்கும் திட்டத்திற்கு உதவியாக அரசு தரப்பில் கடனாக ரூ. 2.75 கோடியும், விற்பனை வரி செலுத்தியதை கடனாக அளிக்கும் திட்டத்திற்காக ரூ. 8 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டிக்) தொழில் நிறுவனங்களுக்கு அளித்து வரும் கடன் திட்டத்திற்கு உதவியாக ரூ. 3.5 கோடியை

அந்நிறுவனத்திற்கு கடனாக ஒதுக்கப்பட்டு உள்ளது. மாவட்ட
தொழில் நிலையங்களுக்கு கடனாக ரூ. 72 இலட்சமும், நலிந்த
சிறு தொழில் நிறுவனங்களுக்குப் புத்துயிர் அளிக்க தொடக்க
நிதி உதவி வழங்கக் கடனாக ரூ. 50 இலட்சமும் சென்னையில்
நவீன இறைச்சி வெட்டுகளம் ஒன்று கட்ட ரூ. 60 இலட்சமும்
ஒதுக்கப்பட்டுள்ளன.

4. கூட்டுறவு :

(அ) தஞ்சாவூர் மற்றும் நீலகிரி மாவட்டம் நீங்கலாக
அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை
இணையமும், தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர் கூட்டுறவு
விற்பனை இணையமும், நீலகிரி மாவட்டத்தில் நீலகிரி கூட்
டுறவு விற்பனைச் சங்கமும், இரசாயன உரம் வாங்கி 4,000-க்கு
மேற்பட்ட தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் கூட்
டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாகவும் விநியோகம் செய்யப்
பட்டு வருகிறது. அவைகள், இரசாயன உரங்களை உறுப்பினர்
களுக்குப் பயிர்க்கடன்களின் ஒரு பகுதியாகவும் உறுப்பினர்கள்
மற்றும் உறுப்பினர்கள் அல்லாதவர்களுக்கு ரொக்கத்திற்கும் விநி
யோகித்து வருகின்றன. மத்திய அரசிடமிருந்து பெறப்படும்
நிதியுதவியின் மூலம் அரசு தொடர்ந்து இவ்வகைச் சங்கங்களுக்கு
ஆண்டு தோறும் இரசாயன உரம், விதைகள் மற்றும் பூச்சிக்
கொல்லி மருந்துகள் போன்ற வேளாண்மை இடு பொருட்களை
வாங்கி விநியோகம் செய்வதற்காக குறுகிய காலக் கடனாக
வழங்கி வருகிறது. 1989–90 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்
டத்தின் கீழ் 14.60 கோடி ரூபாய் கடனுதவியாக ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது.

(ஆ) கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டதால் நிறுவன
அமைப்பிலலாத தனியார் நிறுவனங்களிடமிருந்து கடன் கிடைப்
பது அரிதாகிய நிலையில், கடன் கூட்டுறவுச் சங்கங்கள் நகை
யீட்டின் பேரில், மாநிலம் முழுவதும் கடன வழங்கி, கடன்
தேவையினை நிறைவு செய்வதில் குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றி
வருகின்றன. 2,686 தொடக்கக் கூட்டுறவு வங்கிகளும், மத்திய
கூட்டுறவு வங்கிகளின் 496 கிளைகளும், 129 நகர கூட்டுறவு
வங்கிகளுமாக 3,311 கூட்டுறவு அமைப்புகள தற்போது நகை
யீட்டுக் கடன் வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. கிராமப்புறங்களி
லுள்ள மக்கள் பயனடைவதற்காக தொடக்கக் கூட்டுறவு வங்கி
கள் நகைக் கடன் வழங்கும் பணியினை ஊக்குவிக்கும்
பொருட்டு, அவைகளுக்கு இழுப்பறைகளுடன் கூடிய இரும்புப்
பெட்டகங்கள வாங்க கடனாக நிதியுதவி வழங்கப்படுகிறது.
1989–90 ஆம் ஆண்டில் இதுபோன்ற 100 சங்கங்களுக்கு நிதி
யுதவி அளிக்க உத்தேசிக்கப்பட்டு, 1989–90 ஆம் ஆண்டின்
வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் இதற்காக ரூ. 20 இலட்சம் நிதி
ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



(இ) கைத்தறித் துணித் தொழில் இயக்குநர் பொறுப்பில்
நிறைவேற்றப்படும் கீழ்க்கண்ட திட்டங்களுக்காக ரூ. 75.50
இலட்சம் கடன் ஒதுக்கப்பட்டுள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்கு மூலதன உதவி. | 15.00 |
| (2) பட்டு, நார்ப்பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடன். | 1.50 |
| (3) கைத்தறிகளை நவீனமயமாக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குக் கடன். | 14.00 |
| (4) சொந்தமாக தறி வைத்திராத பெண் கைத்தறி நெசவாளர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன்கள் வழங்க (பகுதி—2 திட்டம்). | 15.00 |
| (5) நெசவாளர் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள். | 30.00 |

(ஈ) 1989–90 ஆம் ஆண்டில் கூட்டுறவுத் துறையின் பொறுப்
பில் நிறைவேற்றப்படும் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின்
கீழ் அரசு நிர்ணயிக்கும் 5,000 வீடுகளுக்குக் கீழ்க்கண்ட விவரப்
படி ரூ. 1.02 கோடி தேவைப்படுகிறது.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) 4,900 வீடுகளுக்கு சமவெளிப்பரப்பில் (ஒரு வீட்டுக்கு ரூ. 2,000 வீதம்). | 98.00 |
| (2) 100 வீடுகளுக்கு மலைப்பகுதியில் (ஒரு வீட்டுக்கு ரூ. 3,500 வீதம்). | 3.50 |
| மொத்தம் .. | 101.50 |

அரசு உறுதியின்பேரில் கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ்
தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் ஹட்கோ மற்றும்
தேசிய வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களுக்காக 1989–90 ஆம்
ஆண்டில் திருப்பிச் செலுத்த வேண்டிய அசல் மற்றும் வட்டிக்
காக ரூ. 8.07 கோடி இணையத்திற்கு அரசின் வட்டியில்லாக்

கடனாக தேவைப்படுகிறது. இவ்விரு திட்டங்களுக்காக ரூ. 9.09
கோடி கடன் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு ஆண்
டும் பெருமளவு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் சுமார் 15,000
வீடுகள் கட்டுவதற்கு இந்த இணையத்தின் மூலமாக நிதி உதவி
அளிப்பதற்காக ரூ. 3 கோடி கடன் ஒதுக்கப்பட்டுள்ளது.

(உ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிறைவேற்றி வரும்
குறைந்த வருமானத் தொகுதியினர் வீட்டு வசதித் திட்டத்திற்
காக ரூ. 1 கோடியும், வாடகை வீட்டு வசதித் திட்டத்திற்காக
ரூ. 7 கோடியும் கடனாக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் நிலங்
களைக் கையகப்படுத்தல் மற்றும் நில மேம்பாட்டுத் திட்டங்
களுக்காக ரூ. 1.5 கோடி கடன ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (எம்.எம்.டி.ஏ.)
நிறைவேற்றிவரும் துணை நகரங்களை மேம்படுத்துதல், புற
நகர்ப் பகுதிகளை மேம்படுத்துதல் மற்றும் கோயம்பேட்டில்
அங்காடி வளாகம் அமைத்தல் ஆகிய திட்டங்களுக்கு ரூ. 2 கோடி
கடனுதவியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிலவள
—குடிசைப்பகுதி மேம்பாட்டு பணிகளை நிறைவேற்றும்
பொருட்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு ரூ. 7 கோடியும்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு ரூ. 50 இலட்சமும்
கடனாக ஒதுக்கப்பட்டுள்ளது.

நகர—நாட்டுப்புற அமைப்புத் திட்ட மேம்பாடு நிதிக்கு
மாற்றம் செய்வதற்காக ரூ. 3.25 கோடியும், தமிழ்நாடு நகர-
நாட்டுப்புற அமைப்புத் திட்ட வாரியத்திற்கு கடன்கள் வழங்க
ரூ. 2 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர், பழங்குடியினர் தொழில் முறைக் கல்வி
பயிலக் கடன்கள் வழங்க ரூ. 86.52 இலட்சமும், கிறிஸ்தவர்களாக
மாறிய ஆதி திராவிடர்கள் தொழில் முறைக் கல்வி பயிலக் கடன்
கள் வழங்க ரூ. 3.67 இலட்சமும், ஆதி திராவிடர்களுக்குச்
சலவைத்துறைகள் கட்டுவதற்கு கடன்கள் வழங்க ரூ. 10 ஆயிர
மும் ஒதுக்கப்பட்டுள்ளது. பர்மா மற்றும் இலங்கையிலிருந்து
திரும்பிய இந்தியர்களுக்கு வீடு, தொழில் மற்றும் விவசாயம்
செய்ய கடன்கள் வழங்கும் பொருட்டு ரூ. 1.73 கோடியும்
ஒதுக்கப்பட்டுள்ளது.

5. விவசாயம் :

விவசாயத் துறையில் மண், நீர், வளப்பாதுகாப்புத் திட்டத்
திற்காக செலவழிக்கப்படும் தொகையில் அவை நிறைவேற்றப்
படும் இடத்தைப் பொருத்து 50 விழுக்காடு முதல் 75 விழுக்கா
வரை கடனாக பாவித்து அதை பயன்பெறும் நபர்களிடமிருந்து
வசூலிக்கப்படுகிறது. இதன் அடிப்படையில், மண் வளப்பா



காப்பு திட்டத்திற்காக ரூ. 3.60 கோடியும், ஆயக்கட்டு மேம்
பாட்டுத் திட்டத்திற்கு கடன்களாக ரூ. 3.33 கோடியும் ஒதுக்கப்
பட்டுள்ளது. மேலும் நீலகிரி மாவட்டத்தில் மண்வளப்பாது
காப்புத் திட்டத்திற்காக ரூ. 52.82 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

6. நகராட்சிப் பணிகள் :

சென்னை மாநகராட்சிக்குச் சாலைகள், பாலங்கள் அமைக்க
கடன் ரூ. 55 இலட்சமும், அங்காடிகள், கட்டிடங்கள் கட்டுதல்
மின்சார விளக்கு வசதிகள் செய்வதற்காக ரூ. 20 இலட்சம்
கடனும், துப்புரவு லாரிகள், சாலை உருளைகள், டிப்பர்கள்,
டம்பர்கள் வாங்க கடன் ரூ. 8 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

நகராட்சி சாலைகளுக்காக ரூ. 30 இலட்சமும், சாலைகள்,
பாலங்கள் அமைத்தலுக்காக ரூ. 25 இலட்சமும் நகராட்சி மன்றங்
களின் பற்றாக்குறைத் தொகையை ஈடு செய்யக் கடன்களாக
ரூ. 6 இலட்சமும், வழிவகை முன்பணம் வழங்க ரூ. 10 இலட்சமும்
பேருந்து நிலையம், அங்காடி முதலியவை கட்ட கடன் ரூ. 10
இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சிக்குச் சாய்த்துக்கொட்டும் அமைப்புடன்
கூடிய லாரிகள் வாங்க கடன் ரூ. 6 இலட்சமும் சாலைப்பணி
களுக்காக ரூ. 10 இலட்சமும் திறந்தவெளி வடிகால்கள் கட்ட
ரூ. 9 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குச் சாலைகள் மேம்பாட்
டிற்காக ரூ. 25 இலட்சம் கடனாக ஒதுக்கப்பட்டுள்ளது.

7. அரசு அலுவலர்கள் :

அரசு அலுவலர்கள் வீடுகள் கட்டுவதற்கு முன்பணம் அளிக்கும்
பொருட்டு ரூ. 14.15 கோடியும், அவர்கள் மோட்டார்
வண்டிகள் வாங்குவதற்காக ரூ. 3 கோடியும், ஏனைய வண்டிகள்
வாங்குவதற்காக ரூ. 1 கோடியும், திருமணக்கடன், கைத்தறித்
துணி, கதர் துணி வாங்குதல் போன்றவற்றிற்கு முன்பணங்களாக
ரூ. 12.76 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

8. மானிய உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்
களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களுக்கும் வழங்கும்
பல்வகை முன்பணங்களுக்காக 8.25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம்
செய்யப்பட்டுள்ளது.

9. 1989-90 ஆம் ஆண்டில் மொத்தம் 375.10 கோடி ரூபாய்
வரை கடன் வழங்கப்படலாமென்று எதிர்பார்க்கையில் கடந்த
ஆண்டுகளில் கொடுத்த கடன் தொகையில் 156.13 கோடி
ரூபாய் வசூலாகுமென்றும் மதிப்பிடப்படுகிறது.

[1989 ஏப்ரல் 26

முக்கிய நிதி ஒதுக்கீடுகளின் பட்டியல் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

இணைப்பு.

1989–90 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.

(ரூபாய் இலட்சத்தில்.)

**1. வேளாண்மை :**

மண் வளப் பாதுகாப்பு .. .. .. 693.40

**2. பால் பண்ணை :**

கூட்டுறவு நிறுவனங்களுக்கும் வங்கிகளுக்கும் கடன்கள் .. .. .. .. 1.77

**3. தொழில்கள் :**

தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட்) .. .. .. .. 1,075.00

மாவட்டத் தொழில் மையங்கள் .. .. 72.00

தனியார் துறையில் சிறுதொழில் தொடங்குவதற்கு உதவியாக கடன்கள் .. .. 50.00

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்து .. 350.01

**4. கைத்தறி :**

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி 15.00

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சொந்தமாக தறி வைத்திராத பெண் நெசவாளர்களுக்குக் கடன்கள் .. .. .. .. 15.00

கைத்தறிகளை நவீனப்படுத்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன்கள் .. 14.00

நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் .. .. .. .. 30.00

கைத்தறித் துணிகளை வாங்க அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் முன்பணங்கள் 775.0



1989 ஏப்ரல் 26]

1989–90 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)

**5. கதர் :**

கடன் அடிப்படையில் கதர்த் துணிகளை வாங்க அரசுப் பணியாளர்களுக்கு முன்பணங்கள் .. 225.00

**6. வீட்டு வசதி—நகர்பகுதி வளர்ச்சி :**

வீடு கட்ட, அரசுப் பணியளார்களுக்கு கடன்கள் 1,415.00

தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகை வசதித் திட்டங்கள் .. .. .. 700.00

மொத்தமாக நில எடுப்பும் நில அபிவிருத்தியும் 150.00

குடிசை மாற்றுத் திட்டங்கள் .. .. 50.00

துணை நகரங்கள், பிற நகர்கள் ஏற்படுத்த, சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திற்குக் கடன்கள் .. .. 100.00

கோயம்பேடு அங்காடித் தொகுதி அமைக்க சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திற்குக் கடன்கள் .. .. .. 100.00

கிராம வீட்டு வசதிக்காகக் கடன்கள் .. 300.00

**7. மின் சக்தி :**

தமிழ்நாடு மின் வாரியத்திற்கு கடன்கள் .. 21,000.01

**8. கல்வி, கலை, பண்பாடு :**

தேசிய கடன்-படிப்புதவித் திட்டங்கள் .. 25.00

வீடுகட்ட முன்பணம் குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்குக் கடன்கள் .. .. .. 15.00

**9. ஆதி திராவிடர் நலன் :**

ஆதி திராவிடர்களுக்குச் சலவைத் துறைகள் கட்டுவதற்காகக் கடன்கள் .. .. 0.10

தொழில் படிப்பு பயில அளிக்கப்படும் கடன்கள். 26.52

1989 90 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.

(ரூபாய் இலட்சத்தில்).

| | |
|---|---|
| **10. மறுவாழ்வுத் திட்டங்கள் :** | |
| ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியோர் | |
| தொழில் கடன்கள் .. .. .. | 20.00 |
| வீட்டு வசதிக் கடன்கள் .. .. .. | 150.00 |
| **11. உள்ளாட்சி மன்றங்கள் (குடிநீர் வழங்கல்-வடிகால் திட்டங்கள் அல்லாத ஏனைய திட்டங்கள்)—நகராட்சிகள்.** | |
| நகராட்சிச் சாலைகள் .. .. | 30.00 |
| சாலைகள் போடுதலும், பாலங்கள் கட்டுதலும் | 25.00 |
| **12. கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பல்வகைக் கடன்கள் :** | |
| கிடங்குகள் கட்ட, கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் .. .. .. .. | 33.53 |
| **13. அரசுப் பணியாளர்களுக்கு வழங்கும் கடன்கள் :** | |
| மோட்டார் வண்டிகள் வாங்கக் கடன்கள் | 300.00 |
| ஏனைய வண்டிகள் வாங்கக் கடன்கள் .. | 100.00 |
| திருமணக் கடன்கள் .. .. .. | 85.00 |
| கல்லூரிகள்/பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் உயர் கல்வி பயிலக் கடன்கள் .. .. | 135.00 |
| வெப்ப (கம்பளி) உடைகள் வாங்கக் கடன்கள். | 43.00 |
| **14. சென்னை மாநகராட்சி :** | |
| வெள்ள நீர் வடிகால் (நகர்ப்பகுதி வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டம்) புதைக்கம்பிகளை மாற்றியமைத்தல் முதலியன .. .. | 150.00 |



1989–90 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் இலட்சத்தில்).

| | |
|---|---|
| **15. நகராட்சிகள் :** | |
| வடிகால் திட்டங்கள் .. .. .. | 100.00 |
| குடிநீர் வழங்கு திட்டங்கள் .. .. | 3,015.33 |
| **16. தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் :** | |
| வடிகால் திட்டங்களுக்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் வழங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன்கள் வழங்கல் .. .. .. | 87.87 |
| குடிநீர் வழங்கு திட்டங்களுக்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் வழங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்த உள்ளாட்சி மன்றங்களுக்கு கடன்கள் வழங்கல் .. .. | 832.00 |
| **17. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்று வாரியம் :—** | |
| கழிவு நீரகற்று திட்டங்கள் .. .. | 135.00 |
| கூடுதலாக குடிநீர் வழங்கு திட்டங்கள் .. | 848.25 |

144366
D
V211,31'N89
N89-1341